செ. யோகநாதன்



# அந்திப் பொழுதும் ஐந்தாறு கதைகளும்

செ. யோகநாதனின் சிறுகதைகளும் குறுநாவலும்

# அந்திப் பொழுதும் ஐந்தாறு கதைகளும்

செம்பியன் செல்வனுக்கு,
அன்புடன்,
செ. யோகநாதன்
5.3.86.

செ. யோகநாதனின் சிறுகதைகளும் குறுநாவலும்

முதற்பதிப்பு : டிசம்பர் 1985

உரிமைப்பதிவு

தமிழோசை—7

விலை ரூபா பதினாறு

PRICE Rs. 16

☐ ANTHI POZHUTHUM AIYNTHARU KATHAIKALUM—A story collection in Tamil By SE. YOGANATHAN ☐☐ First Edition : December 1985 ☐☐☐ Published by : Mrs. AANDAL B. A., B. L. THAMIZHOSAI PATHIPPAGAM, MADRAS-600 017 ☐ Printed at THAMIZHOSAI ATCHAGAM 84, Habibulla Road, T. Nagar, Madras-600 017 ☐ Pages 224.

**தமிழோசைப் பதிப்பகம்**
84, அபிபுல்லா சாலை,
தியாகராயநகர்,
சென்னை-600 017.

□

இருபதாண்டுகளுக்கு மேலாகவே தமிழில் எழுதி வருகின்ற யோகநாதனின் பதினான்காவது கதைத் தொகுதி இது. சிறுகதை, குறுநாவல்களில் தெளிந்த ஞானமுடையவர் களுக்கு தெரிந்தவராயிருக்கிறவர் இவர். இன்றைய மனித னின் வாழ்வினை மேம்படுத்த விளைகின்ற ஆவேசம் இவரது எழுத்திற்கான ஆதாரம்.

□

One must concede that the work is a brilliant achivement of a writer who is acutely sensitive to happenings around him and who wields his pen with extraordinary felicity. So effortlessly, so meticulously the scenes are sketched. You feel as if you are seeing the whole thing happening right before your eyes...

INDIAN EXPRESS

□

யோகநாதனின் பார்வை விசாலமாய்ப் பரவி, பல்வேறு மனிதர்களை இயல்போடு நமக்கு அறிமுகப்படுத்துகிறது. கதைகளின் கலைநயத்தில் நம்மையறியாமலே ஒன்றிப் போய் விடுகிறோம். இத்தகைய திறன் வாய்ந்த படைப் பாளிகள் இப்போது தமிழில் சிலரே.

அரும்பு

□

## செ. யோகநாதனின் ஏனைய எழுத்துக்கள் :

யோகநாதன் கதைகள். ஒளி நமக்கு வேண்டும்.
காவியத்தின் மறுபக்கம். கண்ணீர் விட்டே
வளர்த்தோம். இரவல் தாய்நாடு. தேடுதல்.
காணி நிலம் வேண்டும். கேட்டிருப்பாய் காற்றே.
தலைவர்கள். அண்மையில் ஒரு நட்சத்திரம்.
சுந்தரியின் முகங்கள். இனி வரும் வசந்தங்கள்.
இப்போது நீங்கள் படிக்கப் போகின்ற :
அந்திப் பொழுதும் ஐந்தாறு கதைகளும்.

சுந்தரலக்ஷ்மிக்கு

# மெய்யே பேசுகின்ற உண்மைகள்

நெல்லினைப் பொரிந்திட வைக்கின்ற அக்கினி வெய்யில். பேருந்துக்காக காத்து நிற்கின்றீர்கள். காத்து நிற்கையிலே கண்களும், மனமும் எரிகின்றன. எரிச்சலாக வருகின்றது. நேயமாகவே பேச வருகின்றவர்களோடுகூட சினக்கின்றீர்கள். ஒவ்வொரு உலகத்திற்குள்ளும் நிற்கின்ற ஒவ்வொருவரும் அடுத்தவரைப் பார்க்காமல், கேட்காமல் தொலைவிலே பார்த்துப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். தற்செயலாகப் பேருந்து வந்தால் முட்டியடித்துக் கொண்டே அதில் தொற்றிக் கொள்ளுகின்றீர்கள். சிலர் அவ்விதம். இன்னும் சிலர் மீண்டும் வெய்யிலிலே. மீண்டும் சினத்தோடு. கொதிப்போடு. சீற்றத்தினோடு. திரும்பவும் எதிர்பார்ப்போடு.

ஒரு பேருந்துத் தரிப்பினில் மட்டுமேதானா இது நிகழ்வது? கண்களைக் கொஞ்சம் மூடிக் கொள்ளுங்கள். வாழ்க்கை

யின் நிகழ்வுகளினை அடியாழத்தில் துளாவி நீந்தி
கொண்டு வாருங்கள். இன்னும் கொஞ்சம் கீழேபோய்
அந்தச் சுழிப்பினுக்கு விலகி கீழே பார்வையை எறியுங்கள்
பார்வை வளையத்தினுள்ளே இன்னும் அகப்படவில்லைய
அது. வெறும் அமைதியென்று நினைக்கின்ற இடமெ
லாம் அந்த மௌனத்தாலேயே உங்களை அச்சப்படுத்த
கின்றதா? இறங்கி இன்னும் பார்வையினை வீசுங்கள்..
ஞாபகம் வருகின்றதா, உங்களின் வாழ்க்கை இப்போது
நினைவுதனிலே.

வாழ்க்கையைப் பிரதிபலிப்பதும், மேம்படுத்துவதுமே கலை யின் இலக்குகளாகும் என்று சொல்லிக் கொண்டே அதனோடு முரண்பாடு கொண்டிருக்கிறோம் நாம். வாழ்க்கையில் நின்றுகொண்டே வாழ்க்கையை ஏமாற்றிக் கொண்டிருக்கிறவர்கள் கண் படுகின்ற இடமெல்லாம். கண் படுகின்ற இடமெல்லாம் அது அரசியலாயினும் சரி, பண்பாடாயினும் சரி இதனாலேயே வீழ்ந்துபட்டு இரண முற்று நோயுற்றிருப்பது யதார்த்தமாயுள்ளது. ஆனால் இதுவொரு விசித்திரம், இதனையே—நாம், ஆரோக்கிய மான போக்காகப் பிரகடனப்படுத்தியுள்ளதையும் பார்த்துப் பொறுத்துக் கொண்டிருக்கிறோம்.

இது எத்தனை நாளைக்கு?

இதனை நினைக்கிறபோதே வெறுப்பும், அச்சமும் தோன்று கின்றன. நூறு ஆண்டுகளாகவா இப்படி; இல்லை. பாரதிக்கு மட்டுந்தானா இப்படி. இன்றைய உண்மைக் கலை போலவேதான் அன்றைக்கும் பாரதி வாழ்ந்து முடித் திருக்கிறான். அதை இன்றைக்கும் சொல்லிக்கொண்டே அன்றுபோலவே இன்றும் நாமிருக்கின்றோம், இன்னும் அதைவிட அழுத்தமாக, குரூரமாக, வைராக்கியத்தோடு.

தற்செயலாகவே மொஸார்த் என்ற இசைக் கலைஞனை வீடியோ மூலம் அறியமுடிந்தது. இருநூறாண்டுகளுக்கு முன்னே இன்னிசைப் பிரளயமாய் பிரவகித்து நவீன சங்கீத உலகை உலுப்பியவன், பீத்தோவனோடும்,

நமது தியாகைய்யரோடும் முகமறியாமலே பாடிக்கொண் டிருந்தவன். அவனும் ஒரு பாரதியைப் போலவே வறுமை யின் கைகோர்ப்பை உதறியெறிய முடியாத மேதா விலாச மாய் பெயரெழுதிவிட்டுப் போய், இன்றைய இன்னிசையில் ஒப்பற்ற நாதமாய் நம்மையெல்லாம் மயக்கிக் கொண்டிருப் பவன். ஆயினும் அந்த வாழ்க்கையின் அவலங்கள்; அவனது போராட்டங்கள்; அவனது அவலமேயான சரிவுகள்; அவனுக்கு முன்னாலேயே ஒன்றுமில்லாதவை களே ஒன்றாய் நிமிர்ந்து பெருமிதங் கொண்டிருந்த பேதமைகள்...

இவையெல்லாம் எத்தனை ஆண்டாக : இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு?

இவற்றை நினைக்கின்ற போதுதான் சோர்வாகவே வரு கின்றது. ஆயினும் இவர்களை நினைக்கையிலேயோ சோர்வு நழுவிப் போய், பல்லாயிரம் சிகரங்களைத் தொட வேண்டுமென்ற பலமே உடலெல்லாம் நிறைகின்றது. நிறைகின்றது...

மனித வாழ்க்கையென்பது முடிவில்லாத போராட்டங் களையே விதியெனக் கொண்டது. ஒவ்வொரு போராட்ட மும் இறுதியில் வெற்றியினையே சூடிக் கொள்ளுகிறது தான். அவ்விதமே ஆகுமெனில் நாங்களும் வென்றே ஆவோம். மக்களை நேசிக்கின்ற கலைகள் யாவுமே வென்றே ஆகும். அந்த வேளையொன்றிலேயே இந்தப் பேருந்து தரிப்பில் நிற்கின்ற வாழ்வும், அவலங்களும்— பொய்யாய், கனவாய் மெல்லவே மறைந்து போகும்.

சென்னை-17

செ. யோகநாதன்

## உள்ளடக்கம்


9 அவளும் அவனும்
43 வளைவு
54 அவர்களின் மகன்
60 இருப்பிடம்
80 மூன்றாவது மனிதன்
100 அந்திப் பொழுது
209 மாயை



நன்றி

தமிழோசை அச்சகப் பணியாளர்கள்
ஓவியக் கவிஞர் அமுதோன்
திருமதி. மு. ஆண்டாள்
திரு. நர்மதா ராமலிங்கம்
திரு. பாலு மகேந்திரா

## அவளும் அவனும்

அவள் அழகாகவே இருந்தாள். பார்த்தவுடன் மனதை வசீகரிக்கின்ற புன்னகை. மல்லிகை மொட்டுகளாய் பல் வரிசை எப்போதுமே முகத்தினிலே மணக்கிறது. அந்தப் பளீச்சென்ற புன்னகை. கூரான மூக்கு. சீராயமைந்த ரோஜா உதடுகள். நடந்து வருகின்றபோதே மற்றவர்களிடமிருந்து தனியாகத் தெரிகின்ற கம்பீரம். எந்த வண்ணத்திற்கும் பொருந்திப் போகின்ற ஒருவித மஞ்சள் வண்ணமான உடல்நிறம். கண்ணுக்கு எப்போதுமே சற்று அதிகமாகத்தான் மையிட்டுக் கொள்வதால் புன்னகைக்கு அடுத்ததாயோ சமமாகவோ எவரையும் தொடுகின்ற கண்கள் அவளுக்கு.

பஸ்ஸிலிருந்து இறங்கி ஒவ்வொரு நாளும் அவள் ஐந்து நிமிஷ தூரத்திற்கு நடந்து சென்றே வேலை செய்கின்ற இடத்தை, அந்த 'டிப்பார்ட்மெண்டல் ஸ்டோரை' அடையவேண்டும். 'எலக்ரானிக்ஸ்'.சம்பந்தப்பட்ட விற்பனை நிலையம் அது. கடுமையான சட்ட திட்டங்கள் அங்கே. எல்லாவற்றையும் விட மிகவும் முக்கியமானது அங்கே மிக வசீகரமாகத் தோற்றங் கொடுக்க வேண்டுமென்பதுதான்.

கமலாதான் அவளிற்கு அந்த 'சேல்ஸ்கேர்ள்' வேலையினை வாங்கிக் கொடுத்தவள். தற்செயலாக ஒரு ஞாயிற்றுக்கிழமை பின்னேரம், கமலாவை தேவிகா சந்தித்தபோது பழைய நட்பின் தொடர்புகள் மீண்டும் அரும்பி மலர்ந்தன. தேவிகா தன்னுடைய அன்றாடக் கஷ்டங்களையும், எதிர்காலம் பற்றிய அச்சத்தையும் கமலாவிடம் விபரித்தாள். கமலா மிகப்பரிவோடு அவள் சொல்லியவற்றைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"இன்னும் கொஞ்சநாளைக்கு நீ பொறுத்துக்கொள்... எங்களுடைய ஸ்டோரில் சிலர் தேவைப்படுகிறார்கள். ஆனால் ஒன்று, சில கட்டுப்பாடுகள் அவர்களிடமுண்டு. மிகக் கச்சிதமாகத் தோற்றமளிக்கிறவர்களைத்தான் அவர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளுவார்கள். உன்னைப்பொறுத்தவரையில் அதிலொன்றும் பிரச்சினை இல்லை. நீ மிகவும் அழகானவள். ஆனால் முதல் சில மாதங்களிற்கு உனது 'டிரஸ்'சுக்கு நீ கொஞ்சம் அதிகம் செலவழிக்க வேண்டும். மற்றது உன்னை யாரும் வேலை நேரங்களில் இங்கே வந்து சந்திக்கக்கூடாது. அடிக்கடி நீ லீவு எடுக்கக்கூடாது. எந்நேரமும் வேலை செய்யத் தயாராயிருக்க வேண்டும். தொழிற்சங்கம் அது இதென்றால் உடனேயே டிஸ்மிஸ்..."

மூச்சை இழுத்துக் கொண்டே தொடர்ந்தாள் கமலா.

"ஆனால் தேவி...இன்றைக்கு நாங்கள் எங்கேதான் வேலை தேடிப்போனாலும், இதைவிட மோசமான நிலைமைகள்தான் உள்ளன. கையிலே சம்பளத்தை எங்களுக்கு தருகிற வேளையிலேயே, எங்களை தங்களுடைய அடிமைகள் போல நினைக்கிற நிலைமை தான் எங்குமே உள்ளது. அவற்றோடு ஒப்பிடுகிறபோது இங்கே நல்ல சுதந்திரம் இருப்பதாகவே எனக்குப் படுகின்றது...எதற்கும் யோசித்து உன்னுடைய முடிவைச் சொல்லு..."

தேவிகா தீர்மானமாக கமலாவைப் பார்த்தாள்.

"இல்லை கமலா...நீ சொன்னதற்குப் பிறகு நான் இதைப் பற்றி யோசிக்க ஒன்றுமில்லை. என்ன கஷ்டமான வேலையாக இருந்தாலுங்கூட, இப்போது எனக்குள்ள நிலைமையிலை அதை நான் ஏற்றுக்கொள்ளத் தான்வேண்டும்..."

கமலா நிறைவோடு அவளைப் பார்த்தாள்:"நல்லது... நீயும் என்னோடு வேலைக்கு வந்தாயானால் எனக்கு மிகச் சந்தோஷமாயிருக்கும். நான் உன்னை இன்னும் சில நாட்களுக்குப் பிறகு வந்து சந்திப்பேன்..."

சொல்லிவைத்து பத்து நாட்களின் பின்னர், ஞாயிற்கிழமை காலை—கமலா, தேவிகாவை அவளது வீட்டிலே வந்து சந்தித்தாள்... கமலாவைக் கண்டதும் திகைத்துப் போய்விட்டாள் தேவிகா. சாதாரண நேரத்திலேயே அவளது குடிசை அலங்கோலமாயிருக்கும். மூன்று தினங்களாய் பெய்த மழை குடிசையை இன்னும் மோசமாக்கியிருந்தது. முன்புறத்திலே ஆடுகள் குட்டிகளோடு எவ்வித இடையூறுமின்றிப்படுத்திருந்தன. அவற்றை "சூசூ" வென்று கலைத்தபடியே கமலாவை அழைத்து உள்ளே கூட்டிச் சென்றாள் தேவிகா.

"நிலமெல்லாம் தண்ணீர் ஊறிவிட்டது. இந்த சின்ன ஸ்டூலில் நீ உட்கார்ந்துகொள். உனது சேலை கசங்கிப்போய்விடும். சேலையைக் கொஞ்சம் உயர்த்திக் கொண்டு உட்கார்... நீ ஒரு 'கார்ட்' போட்டிருந்தால் நானே உன்னை வந்து சந்தித்திருப்பேன்... இங்கேயெல்லாம் நீ வந்து..."

தேவிகாவிடம் பரபரப்பு. வருத்தம். மெலிதான கோபம்.

புன்னகையோடு அவளை ஏறிட்டாள் தேவிகா.

"இப்போது என்ன?... நீ ஏன் இவ்வளவு பதட்டப் படுகிறாய்? எல்லா இடத்திலுந்தான் மழை பெய்திருக் கிறது. இப்படித்தானிருக்கும்... அதெல்லாம் சரி. இப்போது நீ என்னோடு புறப்பட்டு வரப்போகிருய்..."

கையிலிருந்த பார்சலைப் பிரித்தவாறே சொன்ன கமலாவை வியப்போடு பார்த்தாள் தேவிகா.

"எங்கே போக?"

"டெய்லர் கடைக்கு..." சொன்னவாறே பார்சலினுள் இருந்த மூன்று பிளவுஸ் துணிகளை வெளியே எடுத் தாள் கமலா. "உனக்கு பிளவுஸ் தைக்க வேண்டும். இந்தக் கலர்கள் உனக்குப் பிடித்திருக்கிறதா பார்?... உனக்கென்ன... உன்னுடைய நிறத்துக்கு என்ன 'கலரா'யிருந்தாலும் அது நன்றாக 'மாட்ச்' ஆகும்... ஏன் இப்பிடித் திகைத்துப்போய் நிற்கிறாய்? கையில் தான் வாங்கிப்பாரேன்... பிடி..."

திடீரென்று இதயத்துள் நெகிழ்வு பொங்கிற்று தேவிகாவுக்கு. தொண்டை அடைத்து வார்த்தைகள் நெஞ்சினுள்ளேயே அமுங்கிப்போயின. பொட்டென்று கண்களில் கண்ணீர் உடைந்தது. அந்தப் பிளவுஸ் துணிகளை கையில் வாங்கியபடியே கணங்களாய் பேச்சற்று நின்றாள்.

"என்ன கமலா... இதெல்லாம் எனக்கு; எனக்குத் தானா?..."

கமலா புன்னகை செய்தாள்.

"உனக்கே... இதோ... இந்த இரண்டு ஸாரிகள் கூட உனக்கே... ஏன் தெரியுமா? இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை இருபத்தெட்டாந்திகதி. நீ முதலாந் திகதியிலிருந்து என்னுடைய ஸ்டோருக்கு வேலை செய்ய வருகிறாய்... அதற்கான முன்னேற்பாடு இது...

இதையெல்லாம் பெரிதாக எடுக்காதே... இந்தப் பொருட்களுக்கான பணத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக எனக்கு நீ திருப்பித் தந்துவிடு... அதுவும் அவசரமா யில்லை... அதையெல்லாம் பிறகு பேசிக் கொள்ள லாம்... இப்போது நீ புறப்படு...''

தேவிகாவின் தாய் அப்போதுதான் தண்ணீர்க் குடத்துடன் அவசர அவசரமாக உள்ளே வந்தாள். எதிரே ஸ்டூலில் வண்ணப்பூவாய் உட்கார்ந்திருக்கிற கமலாவைக் கண்டதும் திடுக்கிட்டுப் போனாள். பின்னர் தன்னைச் சுதாரித்துக் கொண்டே தண்ணீர்க் குடத்தை குடிசை மூலையிலே வைத்துவிட்டு அவசர மாகவே வெளியே போனாள். வெளியே அவளுடைய இரண்டு பெண்களும் ஒதுக்கத்தில் நின்று பார்த்துக் கொண்டிருப்பதனைக் கண்ணுற்றாள். உள்ளே வெகு நேர்த்தியாக உடை உடுத்தி அழகாக உட்கார்ந்திருக் கின்ற அந்தப்பெண் யாரென்று அவர்களைப் பார்த்து மௌனத்தாலேயே வினவினாள் தாய்.

''அந்தப் பெண், அக்காவைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறாள். என்ன அழகான ஸாரி உடுத்திருக் கிறாள் பார்த்தாயா? அசப்பிலே பார்த்தால் ஸ்ரீதேவி மாதிரி இருக்கிறாள்..."

தாய்க்கு உள்ளே போவதா வெளியே நிற்பதா என்று முடிவினுக்கு வரமுடியவில்லை. தீர்மானத்துக்கு வர இயலாமல் நின்றவளை வெளியே வந்த தேவிகா சுய நினைவிற்கு கொண்டுவந்தாள். வந்திருந்தவள் யாரென் பதைக் கூறிவிட்டு, ''பின்பக்கத்திலே—காயப்போட்ட துணி அரைகுறையாகத் தான் காய்ந்திருக்குது. இப்போது கமலாவோடை வெளியே போகவேணும்... என்ன செய்கிறது இப்போது?" என்றாள் தேவிகா.

தாய் தெளிவோடு அவளைப் பார்த்தாள்: "உன்னுடைய சீலை ஒன்று பெட்டிக்குள்ளே இருக்க வேணும்... எனக்கு நன்றாக நினைப்பில் இருக்கிறது..."

தேவிகாவிற்கு தலையிலிருந்த குழப்பம் பாதி குறைந்தாற் போலிருந்தது. "அப்படியிருந்தாலும் அது கசங்கிப் போய்த்தானிருக்கும். அதுக்கு ஏற்ற பிளவுசும் வேணுமே..."

"நான் உள்ளே போய்ப் பார்க்கிறேன்... எதுக்கும் நீ முதலில் போய் அந்தப் பெண்ணோடு பேசிக் கொண்டிரு..."

பதினைந்து நிமிஷங்களில் மங்கிப்போன அந்த நீல நிற ஸாரியையும், பிளவ்சையும் இஸ்திரி போட்டுக் கொண்டு வந்துவிட்டாள் தாய். அவற்றை அணிந்து கொண்டு கமலாவோடு புறப்பட்டபோது தேவிகாவுக்கு கொஞ்சம் வெட்கமாகவே இருந்தது.

முதல் நாளன்று புதிய ஆடைகளை அணிந்து கொண்டு வேலைக்குப் புறப்பட்ட மகளைப் பார்த்ததும் திகைத்து ஸ்தம்பித்துப் போய் நின்றுவிட்டாள் தாய். மெல்லிய நீலவர்ணப் புடவையினுள் பளீச்சென்று தோன்றிய மகளின் அழகை அன்றுதான் கண்டாற்போல பரவசமடைந்தாள் அவள்.

"என்னுடைய கண்ணே பட்டுவிடும் போலிருக்குது... ராசாத்தி மாதிரி இருக்கிறாய்... வீட்டிலை இனி கொஞ்சம் பெரிய கண்ணாடியாய் வாங்கி வைக்கவேணும்..."

மகளின் அருகேபோய் அவளது நெற்றியிலே துளிர்த்திருந்த வியர்வையை மெல்லத் துடைத்து விட்டாள் தாய்.

தங்கள் பகுதியிலே வந்து குதித்த தேவதையைப் போல இப்போது தேவிகாவைப் பார்த்தார்கள் அந்தப்

பகுதிப் பெண்கள். அவளோடு வலிந்து பேசினார்கள். சிரித்தார்கள். நேயங்கொண்டார்கள். தங்களையும் அவளைப் போலவே வேலையில் சேர்த்துவிடும்படி மெல்லிய குரலிலே இறுதியாகக் கேட்டுக் கொண்டார்கள், தேவிகாவின் கைகளைப் பற்றியபடியே.

## 2

தேவிகா இரண்டுநாட்களாக அவனை அவதானித்திருக்கின்றாள். பஸ்ஸிலிருந்து இறங்கி அவள் நடக்கத் தொடங்கியதும் அவனும் சொல்லிவைத்தாற்போல அவளைப் பின்தொடர்கின்றான். திரும்பிப்பார்த்தால் வேறெங்கோ பார்வையைத் திருப்பிக் கொண்டு நடந்து வருகின்றான். காலையிலும் மாலையிலும் இப்படித்தான். ஸ்டோர்சிலிருந்து பஸ்நிலையம். பஸ்நிலையத்திலிருந்து ஸ்டோர்ஸ் வரை. சந்தேகமில்லாமலே தன்னை அவன் தொடர்கிறானென்பதனை தேவிகா நன்றாக உறுதிப்படுத்திக் கொண்டாள்.

மூன்றாவது நாளும் அவன் அப்படியே அவளைப் பின்தொடர்ந்து நடந்து வந்து கொண்டிருந்தபோது திடுமென அவனை அவள் திரும்பிப் பார்த்தாள். அவன் அதை எதிர்பார்த்திருக்கவில்லை என்பதனை அவனுடைய திகைத்துப்போன முகம் தெளிவாகவே எடுத்துச் சொல்லிற்று.

"என்ன விஷயம்? எந்தநாளுமே என்னைப் பின்தொடர்கிறாயே... உனக்கு வேறை எந்த வேலையும் இல்லையோ?..."

அந்த வார்த்தைகள் அவனை உதைத்த கடுமையில் என்ன செய்வதென்றே தெரியாமல் அவன் அசைவற்று

நின்றான். அந்தக் கணங்களிலேதான் அவனுடைய முகத்தினை அவள் நன்றாகவே கண்டு கொண்டாள்.

அவன் அழகாகவே இருந்தான். சுருள் முடி. பார்த்தாலே உடனே மனதில் பதிந்துவிடுகிற முக அமைப்பு. கம்பீரமான உடல்வாகு. பளிச்சென்று தோன்றினான்.

தேவிகா அதே வேகத்தில் திரும்பி, மீண்டும் நடக்க ஆரம்பித்தாள். கொஞ்சதூரம் நடந்தவளுக்கு திரும்பிப் பார்க்க வேண்டும் போல மனம் உன்னியது. திரும்பி னாள். ஆச்சரியமாயிருந்தது. இன்னமும் அவன் நின்ற இடத்திலேயே—அதே நிலையில் நின்றிருந்தான்.

தான் இவ்வளவு கடுமையாக யாரோடும் இதுவரை காலமும் நடந்ததில்லையே என்று நினைத்த போது இவளுடைய மனதில் இலேசான துயரம் கீறிட்டது. அவனை ஒருமுறை உறுத்துப் பார்த்ததோடு நிறுத்தி யிருக்கலாம். மிக ஆத்திரத்தோடு ஏக வசனத்திலே திட்டியிருக்கத் தேவையில்லையே என்று மனம் அங்கலாய்த்துக் கொண்டது.

ஸ்டோர்ஸில் ஆள் நடமாட்டம் குறைந்தபோது இவள் சாவகாசமாக நாற்காலியில் உட்கார்ந்து கொண் டாள். வெளியிலே இருந்து குளுகுளுவென்று காற்று வீசிக் கொண்டு உள்ளே நிறைகையில் உடலுக்கு மிகவும் இதமாயிருந்தது. எதிரேயுள்ள சடைத்துச் சிலிர்த்த வேப்பமரத்தின் உபயமே அந்தத் தென்றல். காற்றினைப் போலவே மனதினை நிறைக்கின்ற கரும் பச்சையான வேப்பிலைகளில் இப்போது துணுக்குகளாய் தலைநீட்டுகின்ற மஞ்சட் பூங்கொத்துகள். வெளியே சென்ற அவளது பார்வையிலே இப்போது மீண்டும் அவன் தோன்றினான் திடுமெனவே.

தேவிகா திகைத்துப் போனாள்.

இவன் வெய்யிலுக்காகத்தான் வேப்பமரத்தின் கீழே வந்து நிற்கின்றானா, அல்லது தன்னைப் பார்ப்பதற் காகவா?

தேவிகா யோசனையோடு பெருவிரலால் முன் பற்களை லேசாகத் தட்டியவாறே, வேப்பமரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவன் பார்வை இப்போது தன்னை நோக்கிப் பரவு வதை அவள் உணர்ந்தவறே நினைத்தாள். 'காலையில் இவனுக்கு கொடுத்த திட்டுதல் போதாமலிருந்தாலே தான் இப்படி இவன் வந்து நிற்கிறானா? இவனுக்காக இரக்கப்பட்டதே தவறுதான் போல இருக்கிறது...சரி. சரி...இனி அப்படி நடக்கட்டும், பார்ப்போம்...'

கமலா உலுப்பிய போதுதான் மீண்டும் சுய நினை விற்கு வந்தாள் தேவிகா: "என்ன தேவி... சாப்பாட்டைக் கூட மறந்து போய் உன் பாட்டுக்கு யோசனையிலே அப்படி மூழ்கிப் போய்விட்டாய்... என்ன விஷயம்? எனக்குச் சொல்லு... ஏதாவது அப்படி இப்படியா?..."

வெட்கமுற்ற பார்வையோடு தேவிகா அவளைப் பார்த்தாள்.

"இல்லை... அப்படியொன்றுமேயில்லை..."

கமலா அவளை ஊடுருவினாள்.

"இல்லை தேவி... நீ எதையோ எனக்கு மறைக்க நினைக்கிறாய்... ஆனால் அதைப் பற்றி ஒன்றுமில்லை... என்னவானாலும் நீ என்னிடம் சொல்லலாம். எதைப் பற்றியும் கூச்சப்படாதே...ஏன் உனது வீட்டில் ஏதேனும் கஷ்டமா?..."

தேவிகாவிற்கு மனதினுள் என்னவோ கனத்தது. நன்றியோடு கமலாவைப் பார்த்து, "இல்லை... அப்படி ஒன்றுமே இல்லை..." என்றாள். பிறகு இருவரும் சாப்பிடுவதற்காக டிபன் காரியர்களுடன் உள்ளே சென்றார்கள். போய்க் கொண்டிருக்கையில் தேவிகாவைப் பார்த்து இளவரசி ஆச்சரியமான குரலிலே, "என்ன தேவி... முகம் வாடிப்போயிருக்கிறாய்?" என்று கேட்டாள்.

கமலா அர்த்தபுஷ்டியோடு தேவிகாவைப் பார்த்து, "இதற்கு என்ன பதிலினைச் சொல்லப் போகிறாய்?" என்று கேட்டாள். தேவிகா எதையும் பேசாமலே டிபன் காரியரைத் திறந்தாள்.

மீண்டும் அதட்டுகிறாற்போல ஆனால் தணிந்த குரலிலே, "நீ ஏன் கையலம்பவில்லை?" என்று கேட்டாள் கமலா. அவளைப் பார்க்கவே சங்கட மாயிருந்தது தேவிகாவுக்கு இப்போது. கையை அலம்பிக் கொண்டே நினைத்தாள். 'நான் இதை அப்போதே கமலாவுக்கு சொல்லியிருக்கலாம்... இவன் என்னைப் பின் தொடர்ந்து வந்தானென்பதை சொல்ல நான் ஏன் தயங்கினேன்... அதுவும் இப்படியான ஒரு நல்ல சினேகிதிக்கு...'

சாப்பிட்டு முடிந்து 'கவுண்டர்' பக்கமாக வந்ததும் வேப்பமரத்தடிக்குத்தான் பார்வை சென்றது. இன்னும் அவன் நின்றிருந்தான். கவுண்டர் பக்கமாகவே பார்த்த படி நின்றிருந்தான். இவள் பார்த்ததும் அவசரமாக மறு பக்கமாகத் திரும்பி நின்று கொண்டான். இவளுக்கு சிரிக்க வேண்டும் போலிருந்தது அவனது அவசரத்தைப் பார்த்து. தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டாள்.

## 3

பஸ்ஸிலிருந்து இறங்கியதும் வழமையாகவே அவன் நிற்குமிடத்திலே தேவிகாவின் பார்வை விழுந்தது. கடந்த இருபது நாட்களிலும் இன்றுதான் அவன் அந்த இடத்திலே காணப்படவில்லை. எவ்வளவோ திட்டின பிறகும் அவளை அவன் தொடர்ந்து வந்து கொண்டே யிருந்தான்.

இன்றைக்கு அவன் எங்கே போயிருப்பான்? நேற்றும் அவனை அவள் திரும்பிப் பார்த்தாள். முகம் நன்றாகத் தானிருந்தது. ஆகையால் ஏதும் சுகவீனமாயிருக்க நியாயமில்லை. எங்காவது அவசரமாகப் போயிருக்க லாம். அவன் எங்கு போனால்தான் எனக்கென்ன என்று தன்னையே இப்போது கடிந்து கொண்டாள் தேவிகா. அவளைத் தாண்டிக்கொண்டு ஒருவன் வேகமாகச் சைக்கிளில் சென்றதைப் பார்த்தாள் தேவிகா. இது போல துளிர் நீல ஷேர்ட்டை அடிக்கடி அவன் அணிந்து வந்ததை அவள் கண்டிருக்கின்றாள். சைக்கிளில் போனவன் திரும்பிப் பார்க்காமலே வேகமாகப் போய்க் கொண்டிருந்தான். இவளையறியாமலே மனதினுள் ஏமாற்றம் பெருமூச்சு விட்டது.

அவனாயிருந்தால் நிச்சயம் திரும்பிப் பார்த்திருப் பான் என்று தேவிகாவின் மனம் கூறிற்று. பின்னர் அலுத்தும் கொண்டது. இன்றைக்கு அவளும் துளிர் நீலத்திலேதான் ஸாரி அணிந்திருந்தாள்.

தங்கச்சி பவளமணி, சம்பளம் எடுத்ததும் இதே போல ஸாரியொன்று தனக்கு வாங்கித் தரும்படி கேட்டி ருந்தாள். அது மட்டுமில்லை. ஒவ்வொருநாளும் அக்கா விற்கு அவள்தான் தேநீர் கலந்து கொடுப்பவள். அக்கா வின் துணிமணிகளை எல்லாம் அலம்பிப் போடுவது, இஸ்திரிக்கை போட்டு வந்து கொடுப்பது எல்லாமே அவள்தான். முன்பை விட இப்போது குடிசையையும் நல்ல துப்புரவாக அவளே கூட்டிப் பெருக்குகின்றாள்.

முந்தாநாள்க் காலையில் தேவிகாவுக்கு அருகாக வந்து காதோடு கிசுகிசுத்தாள் பவளமணி.

"அக்கா, எனக்கும் உன்னைப் போல வேலைக்குப் போக விருப்பமாயிருக்கிறது. என்னை உனது ஸ்டோரிலே சேர்த்து விடுகிறாயா?"

திகைத்துப் போய் அவளைப் பார்த்தாள் தேவிகா. பவளமணி அசப்பில் அப்படியே தேவிகாதான். நிறம் மட்டும் மங்கலாக.

"வீட்டுக்குள்ளேயே இருக்க அலுப்பாய் இருக்கிறது. வேலைக்குப் போனால் சந்தோஷமாயிருக்கலாம்... அக்கா, வேலைக்குப் போகத் தொடங்கினதுக்குப் பிறகு நீ எவ்வளவு அழகாகிவிட்டாய். உன்னைப் போல வர நான் ஆசைப்படுகிறதிலை என்ன தவறிருக்கிறது?"

தேவிகா திகைப்பிலிருந்து மீண்டாள்: "நீ என்னவோ நினைத்துக் கொண்டு என்னவோ பேசுகிறாய்..."

"இல்லை அக்கா...அம்மாவும் இதை உன்னோடு பேசும்படிதான் சொன்னவ..."

நிறுத்திவிட்டு, தேவிகாவைப் பார்த்தபடியே தொடர்ந்தாள் பவளமணி.

"அக்கா...நான் அதிகமாகப் பேசுகிறேன் என்று நினைக்க வேண்டாம். உண்மையாகச் சொன்னால் இந்தப் பக்கத்திலை உள்ள எல்லாப் பெண்களுமே உன்னைப் போல இருக்கவே விருப்பப்படுகிறார்கள். உன்னைப் பற்றி இதனாலே எங்களுக்கு எவ்வளவு பெருமையாக இருக்கிறது தெரியுமா? நீ வேலைக்குப் போனதுக்குப் பிறகு என்னென்ன பொருட்களை யெல்லாம் வாங்கித் தீரவேண்டுமென்று அம்மா கணக்குப் போட்டு வைத்திருக்கிறா என்று உனக்குத் தெரியுமா... உன்னோடை சேர்ந்து நானும் வேலைக்கு வரத் தொடங்கினால் இன்னும் எவ்வளவு நன்றாக நாங்கள் இருக்கலாம்..."

சொல்லிக் கொண்டிருக்கையிலேயே, பவளமணியின் முகத்தில் எல்லையில்லாத பரவசம்.

"சரி இதைப்பற்றி பிறகு பேசலாம்" என்று கதையினை அவ்வளவோடு முடித்தாள் தேவிகா. இந்த மாதம் சம்பளத்தை எடுத்ததும் என்னென்ன செய்ய வேண்டும் என்ற பட்டியலை முதன் முறையாக மனதினுள்ளே கொண்டு வந்தாள் தேவிகா. ஆயிரத்து இருபது ரூபாவுக்கு கணக்கு வந்தது. இவள் திகைத்தே போனாள், இவ்வளவுக்கும் அவளது மாதச்சம்பளம் முன்னூற்றி இருபத்தைந்து ரூபா.

திடீரென்று கேட்ட சைக்கிள் மணி ஓசை அவளது யோசனைகளை நிறுத்திற்று. எதிரே சைக்கிளில் அந்த துளிர்நீல ஷேர்ட்காரன் வந்துக்கொண்டிருந்தான். இவனை அவள் முதற்பார்வையிலேயே அறிமுகமில்லாதவனாகக் கண்டாள். இவன் ஏதோ அவசரத்திலே விரைந்து அவளைத்தாண்டிச் சென்றான். இப்போது மீண்டும் அவனைப் பற்றிய நினைவு தேவிகாவின் மனதிலே அடியெடுத்துவைத்தது.

அவனைப் பற்றி ஒருநாள் கமலாவும் அவளிடம் மிகவும் நாசுக்காகக் கேட்டிருக்கின்றாள்.

"என்ன தேவி... நானும் சிலநாளாக கவனித்துப் பார்த்தேன். யாரோ ஒருவன், நீ வேலை முடிந்து போகிற போது உன்னையே பின் தொடர்ந்து வருகிறான்..."

தேவிகா மனதினுள்ளே, உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டு சாதாரணமாகச் சொன்னாள்: "அப்படியோ... நான் கவனிக்கவில்லையே..."

அந்தப் பதில் கமலாவைத் திருப்திப்படுத்தவில்லை.

"என்னவோ எனக்குத் தெரியாது. இந்தக் காலத்திலை எங்களை இலேசாகவே ஏமாற்றி விடுவார்

கள். கவனமாக இருந்துகொள். அவசியம் ஏற்பட்டால் உன்னுடைய செருப்பையே நீ உபயோகித்துக் கொள்ள லாம்... அல்லாவிடில் பிறகு வருத்தப்படவேண்டி வரும்..."

தேவிகாவுக்கு கமலாவின் வார்த்தைகளிலுள்ள முரட்டுத்தனத்தைக் கேட்க என்னவோ போலிருந்தது. ஆனால் அப்போது அதையிட்டு எதுவும் சொல்லத் தோன்றவில்லை. புன்னகையோடு அவளைப் பார்த்தாள்.

"சரி கமலா...இனிமேல் நான் அவனைக் கவனித்துக் கொள்கிறேன்..." என்றாள் தேவிகா, "சும்மா தமாசுக் காகத்தான் கேட்கிறேன். அவன் எப்படியிருப்பான்?"

இப்போது கமலா சத்தம் போட்டுச் சிரித்தாள்.

"அவனா? அவன் அழகாகத்தான் தோற்றமளிக் கிறான். சினிமா நடிகனைப் போல... ஆனால் உள்ளுக் குள்ளை இப்படியானவர்களெல்லாம் பச்சை அயோக்கியன்களாகவே இருப்பார்கள்..."

சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவளையறியா மலே கமலாவின் குரல் உடைந்து தளும்பியதை அவதானித்தாள் தேவிகா. இருக்கலாம். இவளும் யாரிட மாவது ஏமாற்றமடைந்திருக்கலாம். தோல்வியடைந் திருக்கலாம்.

...நினைவுகளை உடைத்து வெளியேறியவாறு எதேச்சையாக பின்னே திரும்பிப் பார்த்தாள் தேவிகா.

அவளது நெஞ்சு திடீரென அதிர்ந்ததை உணர்ந் தாள். அப்படியே ஸ்தம்பித்துப் போய் நின்று விட்டாள் அவள்.

அவன் அவசர அவசரமாக நடந்து வந்து கொண்டிருந்தான். ஆனால், பாவம். நெற்றியில் பெரிய கட்டுப் போட்டிருந்தது.

தேவிகாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தன்னைச் சுதாரித்துக் கொண்டு சுற்று முற்றும் பார்த்தாள். நிறையப் பேர் இப்போது அவளின் கண்களிலே தோன்றினார்கள். ஒவ்வொருவரும் தன்னையும், அவனையும் விஷமத்தனமாகப் பார்த்துச் சிரிக்கிறாற்போல அவளுக்கு உணர்வு தட்டிற்று. குப்பென்று வியர்த்தது. முடிவுக்கு வராமலே திடீரென்று ஸ்டோர்சை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

'கவுண்டரி'ல் போய் உட்கார்ந்தவளுக்கு வேலையில் கவனம் வரவில்லை. *18* ரூபாவையும் *23*, ரூபாவையும் *31* ரூபா எனக் கூட்டினாள். *79* ரூபாவையும், *280* ரூபாவையும் *369* ரூபா எனக்கூட்டி ரஸீதை எழுதினாள் காஷியர் தன்னுடைய கவுண்டருக்கு அவளைக் கூப்பிட்டு கடுமையாக, மெதுவான குரலிலே திட்டினான். காஷ்யர் சிவசம்பு நல்ல மனிதன். சிவசம்பு வராமல் கணேசன் இன்று காஷியராக இருந்தால் விஷயம் அவ்வளவுதான். வீட்டிற்குப்போக வேண்டி வந்திருக்கும். தேவிகா தன்னைச்சுதாரித்துக் கொண்டு அவன் நிற்பதைப் பார்க்கமுடியாவண்ணம் சிறிது தள்ளியுள்ள 'கவுண்டர்' பக்கமாக நகர்ந்தாள்.

மாலையில் ஸ்டோர்ஸிலிருந்து அவள் புறப்பட்ட போது வேப்பமரப்பக்கமாகப் பார்த்தாள். அவன் இன்னொருவனுடன் எதையோ பேசிக் கொண்டு நின்றான். அவனிடமிருந்து கழன்று வர இவன் பகீரதப்பிரயத்தனம் செய்து கொண்டிருந்தானென்பதை, அவனது அலைந்த கண்கள் தெரிவித்தன. மற்றவன் தாடியும்

மீசையுமாய் கண்கள் சிவந்திருந்தான். சத்தம் போட்டுப் பேசிக் கொண்டிருந்தான்.

தேவிகா கொஞ்சத்தூரம் சென்ற பின்பு திரும்பிப் பார்த்தாள். இன்னமும் தாடிக்காரன் அவனோடு பேசிக் கொண்டிருந்தான். இப்போது மிகுந்த அந்நியோன்னியமாக அவனது கையைப் பற்றியவாறே பேசிக் கொண்டிருந்தான் அந்தத்தாடிக்காரன். இவளுக்கு மனதினுள்ளே லேசான எரிச்சல்.

பஸ்ஸில் ஏறி உட்கார்ந்து கொண்டே வீதியைப் பார்த்தாள். அவனைக் காணவில்லை. கீழே நின்ற ஒருவன் தன்னை உறுத்துப்பார்த்தவாறு நிற்பதனை அப்போதுதான் அவள் கண்டாள். தனது உடல் முழுவதிலும் அவனது பார்வை புரள்வதை உணர்ந்த போது மனம் அருவருப்புற்றாள். உள்ள எரிச்சல் முழுவதையும் ஒன்றாக்கி வெளியே காறித்துப்பினாள். பஸ் புறப்பட்டதும் மீண்டும் வீதியைப்பார்த்தாள். அவனைக் காணவேயில்லை. தேவிகாவுக்கு எரிச்சல் 'தாள' முடியாமல் போயிற்று.

## 4

அவன் அவளோடு இப்போதுதான் முதன் முதலாகப் பேசினான். குரலிலே கண்ணியம் தொனித்திட அன்போடு அவளை நோக்கியபடியே தயங்கித்தான் பேச்சைத் தொடங்கினான்.

"மிஸ்... ஒரு விஷயம்..."

அவன் தனக்குப் பின்னாலே வருவதை உணர்ந்தவாறே, அவன் குரலைக் கேட்டதும் உடனேயே திரும்பினாள் தேவிகா.

"என்ன?"

"இன்றைக்கு உங்களின் கடைப்பக்கம், எல்லாக் கடைகளும் பூட்டியிருக்கிறார்கள். ஏதோ போலீஸ் நடவடிக்கைக்கு எதிராக கடை அடைப்பாம். இன்னமும் நிலைமை சரிவரவில்லை... கல்லெறி, சோடா போத்தல் வீச்செல்லாம் நடந்திருக்குதாம்..."

அவள் அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

"உங்களுக்கு ஏதும் கஷ்டம் வராமல் இருக்க வேண்டுமென்றுதான் இதைச் சொல்ல வேண்டுமென்று இங்கேயே உங்களைப் பார்த்துக் கொண்டு நிற்கிறேன். தவறாக எடுக்க வேணாம்..."

அவளின் மனதிலே பயம் ஊர்ந்தது. சுற்று முற்றும் பார்த்தாள். அவளை யாருமே கவனிக்கவில்லை.

"நானும் இது போலதான் ஒரு கலாட்டாவுக்குள்ளை அகப்பட்டு தலையிலே நல்ல காயம். மூன்று இழை. தையலை அவிழ்க்க இரண்டு கிழமை ஆகுமாம்..."

அவள் தன்னை மறந்து பரபரப்போடு கேட்டாள்:

"மூன்று இழை... தையலா போட்டார்கள்?"

கேட்ட பின்னர்தான் அவளுக்கு மனதினுள் என்னவோ போலிருந்தது. மீண்டும் சுற்றுமுற்றும் பார்த்தாள். பரபரப்பு முகத்திலே பரபரத்தது.

"ரொம்ப தாங்ஸ்... நான் அடுத்த பஸ்ஸிலேயே வீட்டுக்குப் புறப்படுகிறேன்..."

ஏக்கத்துடன் நிற்கின்ற அவனைப் பார்க்காமல் மீண்டும் பஸ்ஸிலே ஏறி உட்கார்ந்து கொண்டாள் தேவிகா. யன்னல் வழியாக வெளியே பார்த்தாள்.

அவன் இன்னமும் நின்று கொண்டிருந்தான். அவனோடு இன்னும் கொஞ்சம் பேசியிருக்கலாமே என நினைத்து கழிவிரக்கப்பட்ட தேவிகா முதன் முறையாக அவனைப் பார்த்துப் புன்னகை செய்தாள்.

முதலில் அவன்தான் அவளுக்கு கடிதம் எழுதினான். புத்தகம் ஒன்றினுள் வைத்து அந்தக் கடிதத்தைக் கொடுத்தான். அந்தப் புத்தகத்தை அவனிடமிருந்து வாங்கிக் கொண்டபோது இவளின் கைகளும் உடம்பும் சட்டென நடுங்கிற்று.

அந்தக் கடிதத்தை அவள் எத்தனை முறை வாசித்திருப்பாள். எண்ணிக்கையிலடங்காது. புத்தகத்தினுள் வைத்து எத்தனை முறை வாசித்திருப்பாள். வாசிக்க வாசிக்க திகட்டவில்லை அந்தக்கடிதம். கடிதத்தை மெல்லிய நீலவண்ணத்தாளிலே அவன் எழுதியிருந்தான். என் இனிய அன்பே என்று தொடங்கி, உங்கள் பதிலை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஆருயிர்க் கண்ணன் என்று கடிதத்தை முடித்திருந்தான் அவன்.

அவனைப் போலவே அவனது பெயரும் வசீகரமாயிருந்தது தேவிகாவுக்கு. தனது பெயரையும் அவனது பெயரையும் சேர்த்து மனதினுள்ளே சொல்லிப் பார்த்தாள். அதுவும் கவர்ச்சியாயும் இனிமையாகவுமிருந்தது. ஐந்தாறு தடவைகள் சொல்லிப் பார்த்துவிட்டு மனதினுள்ளே சந்தோஷம் பூத்து மலர்ந்திடச் சிரித்தாள்.

அடுத்து இரண்டு நாட்களாக அவள் மிகவும் கவனமாக தன்னை அலங்கரித்துக் கொண்டாள். கண்ணாடியின் முன்பு நெடுநேரமாக நின்று பார்த்து விதம்விதமாகச் சிரித்துக் கொண்டாள். பாயினில் கிடந்தவாறு கண்களை மூடிக்கொண்டு அவனைப் பார்த்தாள். ஓரக் கண்ணால் பார்க்காது நேராகவே நோக்கினாள். மானசீகமாக அவனது கன்னத்தில் தொட்டபோதே தனது உடல் சிலிர்ப்பதை உணர்ந்தாள்.

"என்னக்கா நித்திரையிலேயே சிரித்துக் கொண்டிருக்கிறாய்?" என்று பவளமணி கையிலே தொட்டதும் உடனேயே பாயிலிருந்து எழுந்தாள் தேவிகா.

மறுநாள் அவன் தேவிகாவுக்கு பக்கத்திலே வந்து, "எனது லெட்டருக்கு பதில் தரமாட்டீர்களா?" என்றாள். இவளுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. சுற்று முற்றும் பார்த்தாள். அவனை முந்திநடந்தவாறே, "ஆட்கள் பார்க்கிறார்கள்... நாளைக்கு" என்றாள் பதறுகிற குரலில்.

இப்படி ஒரு மாதம் போக அவளிடமும் இவனிடமும் நாற்பது கடிதங்கள் சேர்ந்தன. சிலவேளை காலையிலும் மாலையிலும்கூட கடிதங்கள் பரிமாற்றமாயின. ஒவ்வொருநாளும் எத்தனை விதமான சாக்லெட்டுகள்.

கடைசிக்கடிதத்திலே தேவிகாவை மிகவும் அன்போடு வேண்டி, சினிமாப் படம் பார்க்க அவன் அழைத்திருந்தான்.

'...உங்களோடு தனியாக நிறையப் பேச விரும்புகிறேன். ஞாயிற்றுக்கிழமை பகல்காட்சிக்கு கட்டாயம் நீங்கள் என்னோடு வரவேண்டும். பஸ் நிலையத்தில் உங்களை எதிர்பார்த்துக் காத்திருப்பேன். என்மீது நீங்கள் வைத்துள்ள அன்பை இதன் மூலமே நான் அறிந்து கொள்ளுவேன்... ஆசை......ளுடன் கண்ணன்...'

தேவிகாவுக்கு மனதினுள் நடுங்கிற்று. கடிதத்தை திரும்பவும் படித்தாள்...அவனே இப்போது எதிரே வந்து நின்று கெஞ்சுகிறாற்போல உணர்ந்தாள். மீண்டும் அந்தக் கடிதத்தைப் படித்துவிட்டு மடித்து பத்திரமாக வைத்தாள். அவனது வார்த்தைகள் நெஞ்சுக்குள் கெஞ்சுகிறாற்போல மீண்டும் ஒலித்தன.

பின்பக்கமாகப் போனாள். அணிற்பிள்ளைகள் அங்குமிங்குமாய் விளையாடிக் கொண்டிருந்தன. ஒரு அணில், பழமொன்றைக் கொறித்து வாலை ஆட்டிக் கொண்டிருந்தது. தேவிகா அவைகளைப் பார்த்தவாறே, 'கண்ணா... கட்டாயம் சினிமாவுக்கு நான் வருகின்றேன்...' என்று மனதினுள்ளே முணுமுணுத்துக் கொண்டாள்.

## 5

தேவிகாவுக்கு அவன் தன்னுடைய வீட்டு முகவரியைக் கேட்டதும் மிகுந்த சங்கடமாகி விட்டது. தன்னுடைய குடிசையை, அதன் சுற்றுப்புற அலங்கோலங்களை உடனேயே மனம் நினைத்துக் கொண்டே அருவருப்பும் வெட்கமும் அடைந்தது. தன்னுடைய வீட்டுக்கு அவன் வந்தால் எப்படி வரவேற்பது, யாரென்று அறிமுகப் படுத்துவது...அது பெரிய சங்கடமாகி விடும். அவை யெல்லாவற்றையும் விட அந்த அயலில் உள்ளவர்கள், வாயினாலேயே அவளுக்கும் அவனுக்கும் திருமணம் செய்து வைத்து விட்டுத்தான் அடுத்த வேலை பார்க்கப் போவார்கள்.

"என்ன...பேச்சு மூச்சையே காணேல்லை...?"

கண்ணன் அவளது சிந்தனையைக் கலைத்தான்.

"இல்லை... ஒன்றுமில்லை..." புன்னகையை வருவித்துக் கொண்டே பதில் கூறினாள் தேவிகா. "அட்ரஸ் தானே கேட்டீங்க?"

"ஆ... அதேதான்..."

"ஒவ்வொரு நாளுமே சந்திக்கிறோம்... பிறகேன் உங்களுக்கு அட்ரஸ்?"

அவன் அவளை வசீகரமாகப் பார்த்தான்.

"இல்லை, தேவி...நான் உங்கள் வீட்டுப் பக்கமாக ஒரு முறை வந்து பார்க்க வேணும்...அதுதான். ப்ளீஸ்..."

தேவிகாவுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. ஏதோ சொல்ல அவள் வாயெடுத்த போது, அவளைப் பேசவிடாமல் குறுக்கிட்டான் கண்ணன்.

"ஞாயிற்றுக்கிழமை தேவியைப் பார்க்காமல் இருக்கிறபோது பைத்தியமே பிடித்து விடும் போல இருக்கிறது. அந்த ஒரு நாளைக்கு மட்டும் உங்கள் வீட்டுப் பக்கமாக வந்து பார்க்க வேணும் போல இருக்கிறது தேவி..."

வாஞ்சை பொங்க அவளைப் பார்த்தான் கண்ணன். தேவிகாவுக்கு நெஞ்சினுள் வாத்ஸல்யம் தளும்பிற்று. ஆர்வத்தோடு அவனையே கண்களினுள்ளே பார்த்தாள்.

"அதெல்லாம் இப்போதைக்கு வேண்டாம் "

"தேவி என்ன கல்நெஞ்சு உமக்கு? நான் எவ்வளவு சொன்னாலும் கேட்கவே மறுக்கிறீர்? என்னுடைய என்ன விருப்பத்தைத்தான்..." அவன் வார்த்தைகளை தொடராமல் நிறுத்தினான். பின்னர் அவளுடைய சம்மதமான பதிலிற்காக தேவிகாவை உறுத்துப் பார்த்தான்.

"என்ன நீங்க? யாராவது கண்டால் என்ன நடக்கும் என்று யோசித்துப் பாருங்க..."

"ஓ!" கொஞ்சம் மிகைப்படுத்தலோடு சிரித்தான் அவன். "யார், என்ன நினைக்கப் போகிறார்கள்? அதுவும் நாளைக்கு கல்யாணம் ஆகப்போகிற எங்களைப் பற்றி..."

தேவிகாவுக்கு அவனது வார்த்தைகளில் அவ்வளவு ஈடுபாட்டோடு மனம் படியவில்லை. இதற்கு முன்னர், அவன் அவளிடம் எறிந்த வார்த்தைகள் முட்களாய்

அவளது நெஞ்சினில் விழுந்து உறுத்திக் கொண் டிருந்தன.

'...என்னுடைய என்ன விருப்பத்தைத்தான் ... என்னுடைய என்ன வி ரு ப் ப த் தை த் த ா ன் ... என்னுடைய...'

அவனது வார்த்தைகள் திரும்பத்திரும்ப தேவிகாவின் மனதிலே உழுது புரண்டு கொண்டிருந்தன.

அன்றைக்கு சினிமாத் தியேட்டரில் நடந்த சம்பவத்தை வெவ்வேறு வார்த்தைகளில், வெவ்வேறு விதங்களில் எத்தனை தரங்கள் இவன் கூறிவிட்டான். அப்படியானால் அதை இன்னமும் இவன் தவறென்று உணரவில்லைத்தானே...'ஐ ஆம் ஸோ ஸாரி' என்று சொன்னதெல்லாம் ஒப்புக்குத்தானே, பொய்க்குத்தானே, பாசாங்கிற்குத்தானே...

தேவிகாவின் நெஞ்சினுள் என்னவோ உடைந்தாற் போல உணர்ந்தாள். மனந்தளும்பிட அவனைப் பார்த்தாள்.

"என்ன தேவி...'மூட்' டாகி விட்டீங்க..."

தலையை அசைத்தவாறே "ஒன்றுமில்லை..." என்றாள் தேவிகா. "எனக்குள்ள கஷ்டங்களை நீங்கள் கொஞ்சம் புரிந்து கொள்ள வேண்டும்..."

அவள் நிறுத்திவிட்டு அவனைப் பார்த்தாள்.

"கொஞ்சம் யோசித்துப் பாருங்க... நான் வேலை யிலே சேர்ந்து இன்னமும் இரண்டு மாதங்கள் கூட ஆகவில்லை. அதற்குள்ளே இப்படியெல்லாம் என்றால் வீட்டிலை என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்? அதை விட எனக்கென்றும் கொஞ்சம் கடமைகளும் உண்டல்லவா?... என்ன, சொன்ன உடனேயே உங்களுக்கு முகம் இப்படிச் சுருங்கிப் போச்சுது?..."

அவன் வலிந்து புன்னகை செய்தான்.

"தேவி... அப்படியொன்றுமில்லை. உமக்கு இஷ்டமில்லை என்றால் விட்டு விடுகிறேன். நீர் அட்ரஸ் தரவேணாம்..."

"ஏன் அதை நல்லாகச் சிரித்துக் கொண்டு சொல்ல வேண்டியது தானே... "என்று தேவிகா சிரித்தவாறே அவனைப் பார்த்துக் கூறினாள். கண்ணன் அவள் சொன்னதைப் பற்றி அக்கறைப்படாமல் எதையோ யோசித்துக் கொண்டிருந்தான்.

பாயில் படுத்திருந்தபடியே அவன் சொன்ன வார்த்தைகளைப் பற்றித் திரும்பத்திரும்ப யோசித்துக் கொண்டிருந்தாள் தேவிகா. அவனைப்பற்றி யோசிக்கின்றபோது இப்போது மனதினுள் லேசானதோர் அவநம்பிக்கை முளைகொண்டெழுவதனை அவள் உணர்ந்துக் கொண்டாள்.

...சினிமாத் தியேட்டருக்குள் இருவருமே ஒருவருக்கொருவர் தெரியாதவர்போல தலையைக் குனிந்தவாறு ஒருவர் பின்னொருவராய் சென்று அருகருகாக உட்கார்ந்து கொண்டனர். தலையைச்சாய்த்து அவளையே பார்த்துக் கொண்டிருந்த கண்ணனைப் பார்த்து முணுமுணுத்தாள் தேவிகா:

"இப்படிப் பார்த்துக் கொண்டிருக்காதீங்க... என்ன அப்படி இதுவரையுமில்லாத பார்வை...? நிறையக் கதைக்க வேண்டுமென்றுதானே கூட்டிக் கொண்டு வந்தீங்க..."

அவன் பதிலே சொல்லாமல் மெல்லிய புன்முறுவலோடு, அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"நான் சொன்னதொன்றும் உங்களுக்கு காதிலை விழவில்லையா?"

அவன் அப்படியே பார்த்தவாறு பதில் சொன்னான்.

"கோபம் வருகிறபோது கூட ;தேவிகா...நீர் அழகாக, நல்ல அழகாக இருக்கிறீர்...சுவீட் லிப்ஸ்..."

இப்போது தேவிகாவுக்கு முகம் சிவந்தது. எரிச்சலோடு அவனைப் பார்த்தாள். அவன் பார்வையைத் திருப்பிக் கொண்டபோது விளக்குகள் அணைந்து சினிமா தொடங்கிற்று.

காதல் கதை.

கதாநாயகன், நாயகியை பாட்டுப் பாடியபடியே பூந்தோட்டத்தினுள் விட்டுத் துரத்திக் கொண்டிருந்தான்.

"தேவீ..."

அவன் குரல், தேவிகாவின் அருகே தளதளத்தது.

"ஸ்ஸ்...தேவீ..."

அவள் தன் அருகே அவனது மூச்சுக் காற்றை உணர்ந்ததும் சங்கடத்துடன் கழுத்தை அசைத்தாள்.

"என்ன நீங்க?..."

அவளது கையை திடீரென அவனது விரல்கள் தகிப்போடு தொட்டதும் இவள் மூளையினுள் எரிச்சல் அவிழ்ந்தது. கையை விலக்கிக் கொண்ட போது பின்னாலிருந்து 'க்ளுக்' என்ற பெண் சிரிப்பு மெல்ல எழுந்து கரைந்தது. இவளுக்கு உடலெல்லாம் கூசிற்று.

கண்ணனின் பெருமூச்சு இவளின் மனதை ஏதோ செய்தது. பிறகு அவளால் படம் பார்க்க முடியவில்லை. தனக்கு அருகே திரும்பினாள். இருளிற்குப் பார்வை பழகியதும் அவனும் தன்னைப் பார்த்துக் கொண்டிருப்

பதனை அறிந்தவளாய் மீண்டும் படத்தைப் பார்த்தாள். கதாநாயகியை வில்லன் துகிலுரியத் தொடங்கியிருந்தான். அதைப் பார்க்க அருவருப்புற்ற போது இடைவேளை வந்து விளக்குகள் எரிந்தன.

வெளிச்சத்தில்—பின்னே திரும்பிப் பார்க்கவோ, கண்ணனை நோக்கிடவே இவளுக்கு சங்கடமாயிருந்தது. சில கணங்கள் தனது கால்களைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு தன்னைச் சுதாரித்துக் கொண்டே கண்ணனைப் பார்த்தாள்: ''எதையாவது பேசலாந் தானே...''

அவளை வெறுமையாகப் பார்த்தான் கண்ணன்.

''என்ன கோபமா?''

''.........''

''இதற்காகத்தான் சினிமாவுக்கு கூட்டிக் கொண்டு வந்தீர்களா?...''

அவன் மௌனமாகவே உட்கார்ந்திருந்தான். முகம் வாடியிருந்தது. அவனைப் பார்க்க தேவிகாவுக்கு இரக்கமாயிருந்தது. மெதுவாக அவனது கையைத் தொட்டாள். அப்போதும் பேசாமலிருந்தான். பின்னர் அவனது கையில் மெல்லக் கிள்ளினுள் தேவிகா.

''என்ன பேசமாட்டீங்களா?''

மெதுவாக விளக்குகள் அணைய மீண்டும் படந் தொடங்கிற்று. அவனிடமிருந்து பேச்சுக் குரலே இல்லை. மனதிற்குள் சிரித்துக்கொண்டே அவன் கையிலே இறுக்கிக் கிள்ளினாள் தேவிகா.

''என்ன வேணும் உங்களுக்கு?''

அவ்வளவுதான்.

தன் தோளிலே படர்ந்த அவனது ஒரு கையை அவள் மெதுவாக தட்டிவிட்ட போது, மறுகை முரட்டுத் தனமாக அவளது கழுத்தடியைத் தொட்டது. பின்னர் உடனே இவளின் குரல் கோபத்தோடு உலுக்கிற்று அவனை.

''கைகளை எடுங்க. அல்லாவிட்டால் இங்கிருந்து போய் விடுவேன். எடுங்க கையை...''

அவன் அதிர்ந்து போய் விட்டான்.

படம் முடிந்த பின், அவனைப் பார்க்க முடியாமலிருந்தது தேவிகாவுக்கு. தலைவலித்துக் கொண்டிருந்தது. எரிச்சல் மனதிலும் முகத்திலும்.

''ஸாரி...ஐ ஆம் ஸோ...''

அவளது பார்வை அவனை வார்த்தைகளை விழுங்க வைத்தன. மௌனமானான்.

வெய்யில் இவளின் கன்னத்தில் சுரீரிட்டது.

மறுநாள் அவனோடு அவள் எதுவுமே பேசவில்லை. அதற்கு மறுநாள் அவன் கொடுத்த புத்தகத்தை வாங்கினாள். ஏழுபக்கத்தில் கடிதம் எழுதியிருந்தான். எழுபத்திரெண்டு முறை, 'அன்பே, நீர் என்னை மன்னித்தேன் என்று சொன்னால்தான் நான் நிம்மதியடைவேன்' என்று அக்கடிதத்திலே எழுதி அடிக்கோடு இழுத்திருந்தான்.

'கவுண்டரி'ல் இருந்து வெளியே பார்த்தாள். அவன் நின்றிருந்தான். அவனைப் பார்க்க தேவிகாவுக்கு இரக்கமாயிருந்தது. அவனோடு, தான் முரட்டுத்தனமாக நடந்து விட்டேனோ என்று கூட வருந்தினாள்.

மாலையில் அவனை மன்னித்தாள். தனது மனதிலிருந்து அந்தச் சம்பவத்தை உரித்தெடுக்க முயன்றாள்.

ஆனால் அவன் மறுபடியும் மறுபடியும் அதை நினைவூட்டிக் கொண்டேயிருக்கின்றானா?...

அவனை நினைத்துக்கொண்டே கண்ணயர்ந்து போனாள் தேவிகா.

## 6

மீண்டும் அவளை அவன் சினிமாவுக்கு வரும்படி அழைத்தான். அவன் உடனேயே பதில் சொல்லாமல் தட்டிக் கழித்தாள்.

"நான் கேட்கிற எல்லாவற்றையும் ஏன்தான் நீர் மறுக்கிறீரோ தெரியவில்லை...ஏன் இப்படி?..."

"என்னவோ எனக்கு சினிமாவுக்கு போகவே பிடிக்கவில்லை. சின்ன வயதிலேயிருந்து அப்படித்தான். வேறையொரு காரணமும் இல்லை...நீங்கள் வீணாக ஒன்றுக்குள்ளை இன்னுமொன்றை தொடர்புபடுத்தி குழப்பாதீங்க..."

"என்னுடைய விருப்பத்திற்காக ஒரே முறை, ஒரேயொருமுறை சினிமாவுக்கு வரக்கூடாதோ?..."

அவன் குரல், அவளது கால்களில் மண்டியிட்டது. இரங்கினாள். பின்னர் புன்முறுவல் செய்தாள்.

"என்ன படம்?"

"ஹேமாவின் காதலர்கள்?..."

"என்ன?"—குரலிலும் கண்களிலும் அதிசயம் மலர்ந்திடக்கேட்டாள் அவள்: "ஹேமாவின் காதலர்கள்?... ஹேமா, காதலர்கள்?...ஒரு மாதிரியான படமோ?"

''இல்லை...அப்படியான படமாயிருக்காது. தியேட்டரில் கூட்டமே இல்லை. யாரும் காணாமல் இருந்து பார்க்கலாம். நிறையவே பேசலாம்...''

''பேசலாம்?...'' விஷமமாகச் சிரித்தாள் தேவிகா. பின்பு அதே விஷமக்குரலில் தொடர்ந்தாள். "ஒரு நிபந்தனையோடுதான் வருவேன். பிராமிஸ் செய்ய வேண்டும்...''

"என்ன?"

"இரண்டு கைகளையும் இறுக்கிக் கட்டிக் கொண்டிருக்க வேண்டும்—படம் முடியும்வரை. முடியுமா?"

''முடியும்..."

''என்ன நிபந்தனை; திருப்பிச் சொல்லுங்க..."

அவனும் விஷமமாகச் சிரித்தான்.

''இரண்டு கைகளையும் இறுக்கிக் கட்டிக் கொண்டிருக்க வேண்டும். அவ்வளவேதான்....பேச்சு மாறக் கூடாது..."

ஹேமா கீழ் நடுத்தரவர்க்கப் பெண். அம்மா. டிராபிக் கான்ஸ்டபிளான அண்ணன். மனைவி. வீணையோடு வாழ்கின்ற தங்கை. எதற்கும் அடிவாங்கவுள்ள கண்ணாடி அணிந்த தம்பி. குடிகார அப்பா. ஹேமா கஷ்டப்பட்டு வேலை தேடிக் கொள்கிறாள். அலுவலகத்திலே வேலை செய்கிற தடிப்பயல் ஒருத்தன் இவளைத் துரத்தோ துரத்து என்று துரத்துகிறான். அவளைப் புகழுகிறான். நம்பிக்கை கொடுக்கிறான். கடைசியில் அவள் அண்ணனின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் வீட்டை விட்டு ஓடி வந்து அவனோடு வாழ்க்கையைத் தொடங்குகிறாள். திருமணமானதும் அவளை வேலையிலிருந்து நிறுத்தி விடுகிறான் அவன். இவளுக்குரிய

சுதந்திரங்களைப் பறித்தெடுக்கிறான். குடித்து விட்டு வந்து திட்டுகிறான். இவளுக்கு ஆறுதல் கூறுகிற தொழிற் சங்கவாதியான நண்பரோடு சேர்த்துப் பேசுகிறான். இவளோடு வேலை செய்த இன்னொருவன்—இவள்மேல் மனதினுள் ஆசைப்பட்டுக் கொண்டிருந்தவன் மீண்டும் இவளோடு தொடர்பு கொள்ள விரும்புகிறான். தொழிற் சங்கவாதியிடம் இவள் தனது கஷ்டங்களைக் கூறிய போது, கிராமத்திற்குப் போய் ஏழைகளின் நல்வாழ் விற்குப் பணியாற்ற இவளை அழைக்கின்றான். ஒருநாள் இரவு கணவனால் சந்தேகப்பட்டு முரட்டுத்தனமாகத் தாக்கப்பட்ட அவள் வீட்டிலிருந்து தப்பியோடி தொழிற் சங்கவாதியின் அறைக்குள் அடைக்கலமாகிறாள். இரவு, தொழிற்சங்கவாதி சிலரால் கொலை செய்யப்பட்டதாய் செய்தி வருகிறது. அவளைப் பற்றிய சந்தேகத்தை மாற்றிக் கொண்டு கணவன் தன்னோடு வாழ அழைக் கிறான். இவள் மறுக்கின்றாள். மனதுக்குள் ஆசைப் பட்டுக் கொண்டிருந்த இன்னொருவன், மிகச் சாதாரண 'தொழிற்சங்கவாதிக்கும் இவளுக்கு ம்தொடர்பு இருந்ததா இல்லையா என்பதை அறிந்து கொண்டு அவளை திருமணம் செய்து கொள்ள விரும்புகிறான். இவள் குமுறிக் குமுறி அழுகிறாள். ஆண் மேலாதிக்க சுபாவங்களை வெறுத்து அங்கிருந்து வெளியேறி கிராமத்திற்குப் புறப்படுகின்றாள்....

ஹேமாவிற்காக பலமுறை அவளையறியாமலே தேவிகா கண்களைத் துடைத்துக் கொண்டாள். தன்னை ஹேமாவில் கண்டு கொண்டாள் அவள். இப்போதுதான் காதலைப் பற்றிய சந்தேகங்கள் அவளின் மனந்தனிலே அரும்பத் தொடங்கின...வெறும் உடற் பசியைத் தீர்த்துக் கொள்வதற்குத்தானா பெரும் பாலான ஆண்கள் பெண்களைத் துரத்திக் கொண்டு திரிகிறார்கள்? அது, அது ஒன்றிற்காகத்தானா காதல்

என்ற போர்வையை இவர்கள் போர்த்திக் கொள்கிறார்கள்? சீ...

படத்தில் இவள் ஒன்றிப்போயிருந்தபோது தன்னுடைய காலை அவனது கால் தொட்டவுடன் இவள் அருவருப்போடு இரண்டு மூன்று முறை தனது கால்களை தள்ளி வைத்து ஒதுங்கியிருந்தாள்.

"லூஸ் படம், நல்லதாக ஒரு பாட்டுக்கூட இல்லை. அறு அறு என்று அறுத்து விட்டார்கள். தேவி இல்லாவிட்டால் நான் முதல் சீனிலியே எழுந்து போயிருப்பேன்..." என்றான் வெறுப்போடு கண்ணன்.

தேவிகா பதில் சொல்லவில்லை.

"என்ன தேவி, பேச்சையே காணவில்லை. நான் தான் கைகளைக் கட்டிக் கொண்டிருந்தேனே. அது எவ்வளவு சங்கடமான வேலை தெரியுமோ?"

தேவிகா மௌனமாக அவனைப் பார்த்தாள்.

"என்ன... எதையாவது பேச வேண்டியதுதானே..."

"எனக்கு படம் நல்லாகவே பிடித்திருக்கிறது..." —சொல்லிவிட்டு அவனைப் பார்த்தாள் தேவிகா. "ஹேமாவைப் போல ஒரு நிலைமை நிச்சயமாக இன்னொரு பெண்ணுக்கு வரக் கூடாது..."

## 7

'ஹேமாவின் காதலர்களை'ப் பற்றி கமலாவிடம்சொன்ன போது அவள் கொஞ்ச நேரம் பேசாமலிருந்தாள். கவலை முகத்திலே படர அவளைப் பார்த்தாள் கமலா. விரக்தியோடு சிரித்தாள்.

“நீ திருமணமான ஹேமாக்களைப் பற்றிக் கவலைப் படுகிறாய். ஆனால் திருமணமாகாமலே துயரப்படுகிற ஹேமாக்களை நீ அறிய மாட்டாய்...”

“என்ன கமலா, புரியும்படி சொல்லேன்...”

“படத்திலே அவன் ஹேமாவைத் திருமணம் செய்து கொண்டு கொடுமைப்படுத்தினான். ஆனால் காதலித்து விட்டு திருமணம் செய்யாமல் ஏமாற்றப்பட்டு எத்தனை ஹேமாக்கள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் தெரியுமா?...”

தேவிகா மௌனமாயிருந்தாள்.

“தேவி உனக்கு நான் சொல்வது அதிர்ச்சியையும் சில வேளை என் மீது வெறுப்பையும் தரக்கூடும்... அதனாலென்ன?... நானும் அப்படியொரு ஹேமா தான்...”

“.........”

திகைத்துப்போன தேவிகாவின் கையை வாஞ்சை யோடு பற்றிக் கொண்டாள் கமலா.

“அதெல்லாம் முடிந்துபோன கதை. அதனால்தான் நான் அடிக்கடி உம்மை எச்சரிக்கை செய்துகொண்டி ருப்பேன்...”

தேவிகாவின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

அன்று மாலை அவனைப் பார்த்தபோது தேவிகாவுக்கு நெஞ்சு கனத்தது. இயல்பாகச் சிரிக்க முடியவில்லை.

அவன் அவளின் அருகாகவந்தான். புன்னகையோடு அவளைப் பார்த்தான்: “தேவிக்கு இரண்டு செய்திகள் நான் சொல்லப் போகிறேன்... அவை ஆச்சரியமான செய்திகள்...”

தேவிகா இலேசாகப் புன்னகை செய்தாள்.

''எனக்கு அப்பா ஒரு ஸ்கூட்டர் வாங்கித் தந்திருக்கிறார்...''

சொல்லிக் கொண்டே அவளைப் பார்த்தான் கண்ணன்.

''மற்றது?''

''வருகிற ஞாயிற்றுக்கிழமை-தேவியும், நானும் இதே ஸ்கூட்டரிலே மகாபலிபுரம் போகிறோம்...''

''என்ன?'' அதிர்ந்து போய் நின்றாள் தேவிகா: ''என்ன சொன்னீங்கள்?''

அவளது அதிர்வில் இவன் திடுக்கிட்ட போதும், மறுநிமிஷமே அவன் சுதாரித்துக் கொண்டான்.

''மகாபலிபுரத்துக்கு இருவரும் போகலாம் என்றேன். இதிலென்ன தப்பு? எல்லா இளசுகளும் இப்படித்தான் செய்கிறார்கள்...''

வெடுக்கென்று பதில் சொன்னாள் தேவிகா: ''நான் ஒன்றும் அப்படியான பெண்ணில்லை...''

அவனது முகம் சுருங்கிற்று. அழுந்திய, கோபம் தொனிக்கின்ற குரலினிலே, அவளைப் பார்த்து, ''நன்றாக யோசித்து எனக்கு நாளைக்குப் பதிலைச் சொல்ல வேணும்...'' என்று கூறிவிட்டு விடுவிடுவென்று அவளைப் பாராமலே திரும்பி நடந்தான்.

அவன் அப்படி நடந்து கொள்வானென்று தேவிகா எதிர்பார்த்திருக்கவில்லை. திரும்பிப் பார்த்தாள். அவன் வேகமாக நடந்து போய்க் கொண்டிருந்தான்.

இரண்டு நாட்களாய் மகாபலிபுரம் போவது பற்றி அவளிடம் அவன் கேட்டான், வற்புறுத்தலோடு கேட்டான், திரும்பத் திரும்பக் கேட்டான்.

''இப்போதைக்கு வேண்டாம் இன்னொரு நாளைக்கு...''

அவள் சொன்னதுதான் தாமதம் அவன் கோபம் சீற அங்கிருந்து திரும்பிப் போய் விட்டான்.

மறுநாள் ஒரு கடிதத்தை அவளிடம் கொடுத்து விட்டு உடனேயே அங்கிருந்து போய் விட்டான் கண்ணன்.

## 8

பஸ்ஸிலிருந்து இறங்கியவள் பழக்கதோஷம் காரணமாக அயலெல்லாம் பார்வையால் தடவினாள். அவன் இல்லை. அவன் இனி வரமாட்டான் என்று தெரிந்திருந்தும் திரும்பிப் பார்த்தமைக்காக தன்னைத்தானே கடிந்து கொண்டாள். மனதிலிருந்த கவலையை உதறித் தள்ளியவாறு அமைதியாக நடந்து கொண்டிருந்தாள்.

அவன் தந்த கடிதம் மீண்டும் நினைவிலே வந்து தொற்றிக் கொண்டது.

'தேவி, எனது உணர்ச்சிகளை கொஞ்சமும் உன்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. என்னைப் புண்படுத்துகிறாய். உனது வீட்டுப்பக்கம், உனக்கு தெரியாமலே நான் வந்திருக்கிறேன். நீ குடிசையிலிருந்தாலும் உன்னைக் கோபுரத்தில் வைக்க நினைத்தேன். நீ அதற்கு அருகதையற்றவள். நான் உன்னை மறப்பதற்கு முடிவு செய்து விட்டேன். மறந்தும் விட்டேன் இனி மேல் உனக்குப் பின்னாலே நான் எக் காரணங் கொண்டும் வரமாட்டேன். இது உறுதி. உன்னை மறந்து விட்ட கண்ணன்.'

அ.—3

அந்தக் கடிதத்தை இப்போதும் கைப்பையினுள் வைத்திருப்பது நினைவிற்கு வந்தது. எடுத்தாள், சுக்கல் சுக்கலாகக் கிழித்தாள். நடுவீதியிலேயே அதை வீசியெறிந்தவாறு நடந்தாள் தேவிகா.

அவளுக்கு ஓவென்று அழவேண்டும் போல தோன்றிற்று. தன்னைச் சமாளித்துக் கொண்டாள். கமலாவை நினைத்தாள். கமலாவோடு பேசிய ஒவ்வொரு வார்த்தைகளும் நினைவிலே வந்தன. யோசிக்க வைத்தன. வாழ்க்கையில் எத்தனை ஏ மா ற் ற ங் க ள் வந்து போகின்றன. அது போலவேதான் இதுவும் ஒன்று. இதற்காக அழுவதே தனக்கு ஒரு அவமானமென்ற எண்ணம் மனதிலே அரும்பிற்று. லேசான சந்தோஷமும் உண்டாயிற்று. முழுமையாகவே இவனிடம் ஏமாந்திருந்தால்?...அந்த நினைவே இவளுக்கு புதியதான தொரு தெம்பினையும் கொடுத்தது. நிம்மதியாகவே பெருமூச்சு விட்டுக்கொண்டாள்.

பின்னால் மணிச்சத்தம் கேட்டது. திரும்பினாள். சைக்கிளில் ஒருவன் வந்து கொண்டிருந்தான். இவள் திரும்பியதும், சொல்லி வைத்தாற் போலச் சிரித்தான். தேவிகாவுக்கு எரிச்சல் தாள முடியவில்லை. அவனுக்கு எதிரிலேயே காறித்துப்பினாள். அவனுக்கு கேட்கின்ற குரலிலே, "பொம்பிளைப் பொறுக்கிகள்" என்று கூறியவாறு மீண்டும் காறித்துப்பினாள். ☐

(1985)

## வளைவு

முதன் முதலிலே அந்தப் பஸ்தரிப்பிடத்திற்கு ரகுதான் வந்தான். அவனுக்கு அந்தப் பாதையிலே வருகின்ற எல்லா பஸ்களையும், அதன் இலக்கம்—நேரங்களையும் நன்றாகவே தெரியும். சரியாக பன்னிரெண்டு பத்திற்கு அவன் அங்கே வந்தான். பஸ், வழமையாகவே அந்த இடத்திற்கு பன்னிரெண்டு இருபதுக்கு வந்துவிடுவது வழக்கம். எப்படியிருந்தாலும் பத்து நிமிடங்கள் முன்ன தாக வருவதை அவன் எப்போதுமே வழக்கப்படுத்திக் கொண்டிருக்கின்றான்.

ஊமை வெய்யில். வயிற்றைக் குமட்டவைக்கிற அழுக்கெல்லாம் ஒன்றாய்க் கலந்த கூவம், நாற்றத்தை மெல்ல வீசிய காற்றினிலே சேர்த்துக் கொண்டிருந்தது. இவன், கூவம் பக்கமாக திரும்பிப் பார்க்க மனமின்றி எதிரே உயர்ந்து தெரிகின்ற கட்டிடத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். ஐந்து நிமிஷத்திற்கு மேலே கட்டிடங் களையும், எதிரே சுவரில் ஒட்டப்பட்டிருந்த சினிமாப் போஸ்டர்களையும் பார்க்க இயலவில்லை. எரிச்சலாய் வந்தது அவனுக்கு. காலில் வேறு ஏதோ கடிப்பது

போலிருந்தது. ஆத்திரத்தோடு உதறினான். பின்னர் கணுக்காலடியிலே இலேசாகச் சுரண்டினான்.

எதிரே பஸ் ஒன்று வருவது தெரிந்தது. ஆனால் ஜனநெரிசல் காணப்படவில்லை. நேரம் பிந்தி வருகிறதோ இல்லையோ எந்த நேரத்திலும் '27-ஈ' பிதுங்கிக்கொண்டுதான் வருவது வழக்கம். சந்தேகத்தோடு அந்த பஸ்ஸையே பார்த்துக்கொண்டிருந்தான். மூன்று பேர்தான் பஸ்ஸில் உட்கார்ந்திருந்தார்கள். 4வது இலக்க பஸ். மூலைப்பக்கமாக உட்கார்ந்திருந்த சடைத் தலையன் ரகுவைப் பார்த்து ஏளனமாகச் சிரித்த போது அவனுக்கு மிகுந்த எரிச்சல் உண்டாயிற்று. காலடியில் கிடக்கிற கல்லை எடுத்து சரியாக அவனது நெற்றியில் அடிக்க வேண்டும் போலத் தோன்றியது. அவனை அடிப்பதற்குப் பதிலாக கல்லை காலினால் எற்றி விட்டான்.

"ஸார் '27-ஈ'...." என்று இளைஞனொருவன் கேட்கத் தொடங்கியதுமே இவன் உடனேயே அவனைத் தொடர விடாமல் பதிலினைக் கூறினான்: "இல்லை...இன்னும் வரவேயில்லை..."

"மணி என்ன ஆச்சு ஸார்...?"

சொன்னான்.

"பன்னிரெண்டு இருபத்தொன்றா? ஐயையோ பன்னிரெண்டரைக்கெல்லாம் 'இன்டர்வியூ' ஸார்..."

இளைஞனின் குரலிலே பதட்டம். ஃபைலை கைமாற்றியவாறு வீதியைப் பார்த்தான். அவசரமென்றால் ஆட்டோரிக்ஷாவில் போவதுதானே என்று அவனுக்குச் சொல்லத் தோன்றிற்று, பிறகு அவனது தோற்றத்தைப் பார்த்ததும் அப்படிக் கூறுவதற்கு மனம் வரவில்லை.

"மணி என்ன ஆச்சு ஸார்...?"

லேசான வெறுப்போடு அவனைப் பார்த்தான் ரகு.

"பன்னிரெண்டு இருபத்தேழு..."

சொல்லி முடித்த போது, புன்னகை குலுங்கிட ஸல்வார் கமிஸ் அணிந்த பெண்ணொருத்தியும், மழுமழுப்பான முகத்தோடான இளைஞனும் அவ்விடத்திற்கு வந்தனர்.

ஆங்கிலத்திலேயே '27-ஈ' யைப் பற்றி ரகுவிடம் அந்த இளைஞன் கேட்டான். ரகு பதில் சொன்னதும் அந்தப் பெண், மெதுவான குரலிலே, ஆங்கிலத்திலேயே, "பஸ் வருகிற நேரம் வரட்டும். வா...அந்த ஓரமாகப் போய் பேசிக் கொண்டு நிற்கலாம்...பஸ் வராவிட்டால் கூட நல்லதுதான்" என்றாள். பிறகு அவனுக்கு அணைத்தாற் போல ஓரமாகப் போனாள்.

இளைஞன் ரகுவைப் பார்த்தான்.

"மணி பன்னிரெண்டரை ஆச்சா ஸார்..."

"பன்னிரெண்டு முப்பத்தைந்து" என்று கூறியவாறு அந்த இடத்திலிருந்து கொஞ்சம் தள்ளிப்போய் நின்றான் ரகு. "சும்மா அறுத்துக் கொண்டே நிற்கிறான். பாழாய்ப் போன பஸ் வந்த பாடாயில்லை..."

களுக்கென்று அந்தப் பெண் சிரித்தாள். ஜலதரங்கம் போல தொடர்ந்த சிரிப்பு. ரகு அவர்களைப் பார்த்தான். நந்தவனமொன்றிலே ஏகாந்தமாய் நிற்கிற உணர்விலே அவர்கள். அதே சூழலுக்கான சிரிப்பு. பார்வை. நளினங்கள்.

இளைஞன் மெதுவாக ரவிக்கு அருகே வந்தான். அவன் வாயைத் திறக்க முன், ரவியே கூறினான்.

"பன்னிரெண்டு முப்பத்தேழு... அதோ ஓர் ஆட்டோ...இதிலே போனாலும் 'இன்டர்வியூ'வுக்குப் போய் விடலாம்..."

இளைஞன் நெற்றி வியர்வையை உள்ளங் கையினால் அழுத்தித் தேய்த்தவாறே வாடிய சிரிப் பொன்றினை உதிர்த்தினான்.

"என்ன தமாஸ் பண்ணுறீங்களா ஸார்?..."

ரகுவுக்கு அவன் சொன்ன வார்த்தைகளின் அர்த்தத்தினை புரிந்து கொள்ள முடியவில்லை. புரிய வும் முயலவில்லை அவன்.

தடித்த பெண்ணொருத்தி உஸ் உஸ்ஸென்று ஊதிய வாறே பஸ்தரிப்பு நிழற்குடைக்குள் ஒதுங்கினாள். பின்னர் மாராப்பை உதறி கழுத்துப் பக்கம் அழுத்தித் துடைத்தவாறே ரகுவின் பக்கமாய் திரும்பினாள்.

அவள் வாயைத் திறக்கமுன் இளைஞன் முந்திக் கொண்டான்: " '27-ஈ' யா? இன்னும் வரவில்லை..."

அவன் சொன்னதையே கவனியாதவன் போல ரகுவைப் பார்த்து, "என்ன டைம் ஸார்?" என்று கேட்டாள் அந்தத் தடிச்சி.

"பன்னிரெண்டு நாற்பது..."

"இப்போது 'இன்டர்வியூ' தொடங்கியிருக்கும். இரண்டாவது ஆள் உள்ளே போயிருப்பான்..."

ரகு மீண்டும் விலகிப்போனான். காலில் சுள்ளென ஏதோ கடிக்கவே எரிச்சலோடு உதறினான்.

தடித்த பெண் வெற்றிலையை எடுத்து வாய்க்குள் அதக்கிக் கொண்டாள். அவளுடைய பெண்ணைப் பிரசவத்திற்காக மருத்துவமனையில் கொண்டுபோய்

விட்டிருந்தாள். தலைப்பிரசவம். பெண், பயந்து எந் நேரமும் யாராவது பக்கத்திலிருக்க வேண்டும் என்று கெஞ்சிக் கொண்டிருந்தாள். மாறி மாறி தடிச்சியும், அவளது தங்கச்சியும் மருத்துவமனையில் அவளுக்குப் பக்கத்திலிருந்தார்கள். இவள் போய் தங்கச்சியை வீட்டிற்கு சாப்பிடப் போவதற்கு அனுப்ப வேண்டும். எரிச்சலோடு வெற்றிலையை 'புளிச்' சென்று துப்பினாள் அந்தத் தடித்த பெண்.

கைத்தாங்கலாக இளவயதுப் பெண் ஒருத்தியோடு அந்த நிழற்குடைக்குள் வந்த இன்னொரு பெண், இருப்பதற்காக அவளை நிழற்குடை ஓரத்திற்குக் கூட்டிப் போனாள். கைத்தாங்கலாக வந்தவளிடம் மற்ற பெண் கருணையான குரலிலே கேட்டாள்:

''ராணி வலிக்குதா அம்மா?...''

முனகலோடு ராணி சொன்னாள்: ''தாங்கவே முடியவில்லை அக்கா... ஊ ஊ...''

ராணியின் காலில் பலத்த வெட்டுக்காயம். ஏற்கனவே மருந்து கட்டியது. ஆனாலும் ரணம் மாறவேயில்லை. சீழ்பிடித்திருக்க வேண்டும். வலியினால் துடித்துக் கொண்டிருந்தாள்.

ரகுவுக்கு வயிற்றுள் நோவாயிருந்தது. காலையிலே வெறும் காப்பி மட்டுமே குடித்துவிட்டுத்தான் புறப்பட்டான். அலையோ அலையென்று ஒரே அலைச்சல். அறைக்குப் போய் குளித்துவிட்டுச் சாப்பிடலாம் என்று நினைத்துத்தான் பஸ் தரிப்புக்கு வந்தான். இரண்டு மணிக்கு மணிவாசகரிடம் கடனைத் திருப்பி வாங்க வேறு போக வேண்டும். மணியைப் பார்த்தான். ஒன்று. சரியாக ஒன்று.

"ஒரு மணி ஆகியிருக்குமா ஸார்...?"

அந்த இளைஞன் சோர்வான குரலிலே ரகுவைப் பார்த்துக் கேட்டான். பின்னர், "என் பெயர் மதுசூதனன். எம். ஏ. இகனாமிக்ஸ்" என்றான். ரகுவின் முகத்தைப் பார்த்த மதுசூதனனுக்கு தொடர்ந்து பேச அச்சமாயிருந்தது. திரும்பி ஓரமாகப் பார்த்தான். சல்வார் கமிஸ், மழுமழுப்பான முகமுடைய இளைஞனுடன் ஆங்கிலத்தில் சண்டை போட்டுக் கொண்டிருந்தாள். இன்னும் இரண்டொரு கணங்களில் அழுதே விடுவாள் போலத் தோன்றியது.

"முதல் பேப்பர் இரண்டரை மணிக்குத்தானே ஆரம்பமாகும் என்று நீ சொன்னாய்... அதுவரைக்கும் இங்கே நின்று பேசலாம் என்றுதானே சொன்னாய்... இப்போதென்ன... ஒன்றரைமணிதான். இன்னும் அரை மணி நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுப் போகலாம்..."

அவள் சிணுங்குவதை நிறுத்தினாள்.

"நிச்சயமாக பஸ் வருமா?..."

"வரும்..."

"அப்படியானால் சரி. இதைச் சாப்பிடு. எனது கோபத்தை மறந்து விடு..." அவள் கைப்பையைத் திறந்து 'பபிள்கம்'மை எடுத்து அவனிடம் கொடுத்து விட்டு தனக்கு அருகாக வந்த இரண்டு பெண்களைப் பார்த்தாள். அழகான, நீண்ட கூந்தலையுடைய சிவப்பான மெலிந்த பெண், சல்வார் கமிஸிடம் உடனேயே கேட்டாள்.

"இப்பத்தேழு ஈ நம்பரின பஸ்சு எல்டு ஹொத்திகே வருத்ததே...?"

சல்வார் கமிஸ் ஒன்றும் புரியாமல் அவனைப் பார்த்தாள். அவனுக்கு புன்னகை அரும்பிற்று. அந்தப் பெண் இப்போது அவனை நோக்கினாள்.

''ஸார் கண்டே எஸ்டாயித்து?...''

''இதென்னடா கஷ்டம்... என்ன பாஷையில் எதை இவர்கள் கேட்கிறார்கள்...? கொஞ்ச நேரம் பேசலாம் என்றால் இவர்கள் விடவே மாட்டார்கள்போல இருக்கிறது... வா அந்தப் பக்கம் போகலாம்...'' என்றவாறு சல்வார் கமிஸ் அவனைப் பார்த்தாள்.

மற்றப் பெண் சிரித்தாள். அதே சிரிப்போடேயே ஆங்கிலத்திலே கேட்டாள்:

''ஸார் '27-ஈ' பஸ் இந்த இடத்திற்கு எத்தனை மணிக்கு வரும்...?''

சொன்னான். பின்னர் சல்வார் கமிஸின் பின்னே தொடர்ந்து போய் ஓரமாக நின்று பேசத் தொடங்கினான்.

தடிப்பான பெண் தாறுமாறாக யாரையோ ஏசிக் கொண்டிருந்தாள். கெட்டவார்த்தைகளில் ஆக்ரோஷமாகத் திட்டியவளின் ரௌத்ரம் எல்லோரையுமே திடுக்கிட வைத்தது. அவளின் பால் கவனம் செலுத்தினார்கள். அவளை நேருக்கு நேராகப் பார்க்கவே பயமாயிருந்தது. பேசிய வார்த்தைகளில் கெட்ட வார்த்தைகளை நீக்கி விட்டு நல்ல வார்த்தைகளை எண்ணினால் ஐந்து சொற்கள் தேறும். பஸ்சை நேரத்துக்கு விடத் தவறிய அரசைத்தான் திட்டிக் கொண்டிருந்தாள். எல்லோருக்கும் சுவாரஸ்யம் விட்டுப் போயிற்று. மீண்டும் தங்களின் யோசனையினுள் மூழ்கிப் போயினர்.

''நான் ஒரு மடையன்... வேகமாக நடந்து போயிருந்தாலும் இன்டர்வியூவுக்குப் போய்ச் சேர்ந்திருக்கலாம்... இந்த ஏழாவது 'இன்டர்வியூ'வை அநியாயமாகத் தவற விட்டு விட்டேன்...''

மதுசூதனன் சொன்னதைக் கேளாதவன் போல ரகு வீதியையே பார்த்துக் கொண்டு நின்றான். பஸ்தான் வரவில்லை. ஓர் ஆட்டோ கூட இந்தப் பக்கம் வராதது அவனுக்கு அளவற்ற எரிச்சலை மூட்டியிருந்தது. எவ்வளவு அலுவல்கள் வீணாகிப் போய் விட்டன. 12.20க்கு வர வேண்டிய பஸ்தான் பிரேக்டவுன் என்று வைத்துக் கொண்டாலும் 1 மணி, 1.30 வரவேண்டிய பஸ்களுக்கு என்ன நடந்தது? அதை விட 4-சி, 23... இன்னும் மூன்று பஸ்கள். ஒன்றுகூட ஒருமணி நேரமாக இந்தப் பக்கமே வரவில்லை. ரகு நேரத்தைப் பார்த்தான். ஒன்று முப்பத்தியெட்டு. ரகு இப்படி ஒரு நாளுமே பஸ்ஸிற்காகக் காத்திருந்ததில்லை. சுற்று முற்றும் பார்த்தான். எதிரே தெரிகின்ற வீதி, சுற்றுப்புறமெல்லாம் நடமாட்டம் குறைந்திருந்தது. இவனுக்கு எல்லையில்லாத ஆச்சரியம். ஆட்டோ ரிக்ஷா, கார், சைக்கிள் எதுவுமே இல்லாமல் இதென்ன இப்படியொரு போக்குவரத்துத் தடங்கல். அதுவும் இந்தப் பரபரப்பான நேரத்திலே. அல்லா விடில் வழியில் ஏதாவது பெரிய விபத்து நேர்ந்திருக்குமோ?

பஸ் வரும் திசைக்கு எதிரிலிருந்து இப்போது ஒரு பஸ் டிரைவர், இன்னொருவருடன் சைக்கிளில் வந்து இறங்கினார். தன்னுடைய கைக்கடிகாரத்தைப் பார்த்தவாறு மனதிற்குள் முணுமுணுத்தார். "இரண்டு மணிக்குத் தானே '27-ஈ' வரவேணும். நல்ல காலம் 1. 58 க்கு வந்து விட்டேன்..."

திடீரென்று குரலொன்று வீரிட்டது.

காயத்தோடு, இன்னொரு பெண்ணின் துணையோடு அங்கே வந்த பெண்—புண்ணின் நோவு தாங்காது வீரிட்டு அழத் தொடங்கினாள். துடிதுடித்து அழுது கொண்டிருந்தாள். தடித்த பெண் அவளுக்கு அருகாகப் போய் பரிவோடு அவளது கையைத் தொட்டு,

''அழாதே... பாழாய்ப் போன பஸ் வந்து விடும் அழாதே..." என்று தேற்றினாள். பின்னர் அவளிடம், "களைப்பாயிருக்கும்... கொஞ்சம் காப்பி சாப்பிடு " என்றவாறு கையிலிருந்த பைக்குள்ளிருந்து பிளாஸ்கை எடுத்து டம்ளருள் காப்பியை ஊற்றினாள்.

"என்ன நீ? நான் எப்படி பரீட்சை எழுதப் போவது?... நீதானே இரண்டு மணி வரை இங்கிருந்து போகலாம் என்றாய்... இப்போது நேரமென்ன பார்... இரண்டு ஐந்து..." அவள் தாறுமாறாக ஆங்கிலத்திலே அவனைத் திட்டத் தொடங்கினாள். சல்வாரால் கண்ணீரைத் துடைத்தவாறே விம்மத் தொடங்கினாள். இவன் மெதுவாக அவளிற்கு அருகாக ஏதோ சொல்லப் போனான். அவள் சல்வாரை உதறிக் கொண்டே உரத்த குரலிலே, "எனக்குக் கிட்ட வராதே போ.." என்று சத்தம் போட்டாள்.

தடியூன்றிக் கொண்டு, அப்போதுதான் பஸ்தரிப்பிற்கு வந்த கிழவர் ஒருவர், இருமியவாறே பஸ்டிரைவரை கண்களைக் கூசிக் கொண்டே பார்த்தார். இமைக்கு மேலே, விரல்களைக் குடையாக்கிப் பார்த்தபடியே, ''யார் இது, நம்ம வெங்கடேசனா?'' என்று கேட்டு அடுத்த கணமே இருமத் தொடங்கினார்.

பஸ் டிரைவர், தான் வெங்கடேசன் இல்லை என்று சொன்னபோதும் கிழவர் விடவில்லை. பஸ் டிரைவரின் கையை தனது நடுங்குகிற ஒற்றைக் கையால் பற்றிய படியே, ''ஐயா... 27-ஈ பஸ்ஸில் என்னைக் கொஞ்சம் ஏற்றிவிடு. கைகாலெல்லாம் வலிக்குது'' என்று கெஞ்சிய குரலில் கேட்டார். பஸ் டிரைவரும் ''சரி'' என்றார்.

தடித்த பெண் ஏதோ யோசித்து தீர்மானத்திற்கு வந்தவள் போல பஸ் டிரைவருக்கு அருகே வந்தாள். பஸ் எப்போது வருமென்று கேட்டாள். பஸ் டிரைவர்

மிகுந்த சலிப்போடு, ''எனக்குத் தெரியாதம்மா...'' என்றார். உடனே அவளுக்கு ஆத்திரம் வந்து விட்டது. காறித்துப்பிவிட்டு பஸ் டிரைவர்கள் எல்லோரையும் திட்டத் தொடங்கி விட்டாள்.

மதுசூதனன் தனது வயிறு நோவதனை உணர்ந்து கொண்டான். காலையில் அவன் பட்டினி. நேற்று இரவு அரை வயிறு. தலை சுற்றுவதாகத் தோன்றிற்று. ஓரடி எடுத்து நடப்பதே சிரமமாகத் தெரிந்தது. பரிதாப மாக ரகுவைப்பார்த்தான். ரகுவுக்கு அவன் மேல் இரக்கம் தோன்றிற்று. கைக்கடிகாரத்தைப் பார்த்தவாறே, ''இரண்டரை ஆகிவிட்டது'' என்றான்.

பஸ் டிரைவரின் முகத்திலே எதிரே சைக்கிளில் வந்து கொண்டிருந்தவனைக் கண்டதும் சந்தோஷம் மலர்ந்தது

வந்தவர் சைக்கிளை நிறுத்தினார்.

''என்ன அண்ணே நிக்கிறீங்க...''

பஸ் டிரைவர் புன்னகை செய்தார்.

"27-ஈ'க்கு. நல்லா கேட்டாய். பஸ் ஸ்டாப்பிலை எதுக்கு நிற்பார்கள். நல்ல தமாஸ் கேள்வி....''

சைக்கிள்காரர்,பஸ்டிரைவரை ஏளனமாகப்பார்த்தார்.

''அண்ணே... இந்தப் பக்கம் பஸ்ஸே வரா தண்ணே..."

''என்ன?'' பஸ் டிரைவர் அதிர்ந்தார். ''நான் டியூட்டிக்குப் போகணுமே...''

''நீங்க போக முடியாதண்ணே....''

''ஏன்...?"

"அதுதான் அண்ணே...நம்ம மினிஸ்டருக்கு பெரிய வரவேற்பு ஒன்று நாளைக்கு இருக்குதண்ணே...

மினிஸ்டர் ஃபாரின் போய் வெற்றியோடை திரும்பி வாரதாலை—இந்த ரோடு முனையிலை பெரிய வளைவு வைச்சு மக்களெல்லாம் வரவேற்கிறாங்க... வளைவைப் பார்த்தா... அடேயப்பா ரோடுமுனை முழுதிலும் என்ன ஜோடனை அண்ணே... தேவலோகம் மாதிரி... நம்ம மினிஸ்டருக்குத்தான் என்ன செல்வாக்கு... அட அட...''

சைக்கிள்காரர் சந்தோஷத்தில் மிதந்தார்.

மதுசூதனன் ஆத்திரத்தோடு சைக்கிள்காரனைப் பார்த்தான்.

''பஸ் அப்போ வராதா?''

''இதென்ன ஸார் இது?'' சைக்கிள்காரன் ஏளனமாக மதுசூதனனைப் பார்த்தான்: ''நம்ம மினிஸ்டர் ஃபாரினெல்லாம் போய் வெற்றியோடு வந்திருக்கிறார்... இது போல வளைவு யாருக்குமே வைத்ததில்லை என்ற மாதிரி நாங்க வளைவு வைக்கிறம். எவ்வளவு செலவு தெரியுமா...? எட்டு ரூபாவுக்கு மேலே... அந்த வளைவு போடத் தொடங்கினோமா—உடனே, பதினொன்றரை மணிக்கே இந்த ரோடை மூடி விட்டோம் தெரியுமா... இனி, நாளைக்கு மத்தியானந்தான் இந்த 'ரூட்டு'க்குப் பஸ் வரும்...''

பஸ் டிரைவர் தன்னையறியாமலே தடித்த பெண்ணைப் பார்த்து விட்டு, ''சரி நானும் உன்னோடேயே வாரேன்...புறப்படு...'' என்றவாறே-புறப்பட்ட சைக்கிள்காரரைப் பின்தொடர்ந்து அவசரமாய் செல்லத் தொடங்கினார்.

பஸ்தரிப்பில் நின்ற எல்லோரும் திகைத்துப் போய் சைக்கிளில் போய்க் கொண்டிருக்கும் அவர்களையே பார்த்துக் கொண்டு நின்றனர். □

(1985)

## அவர்களின் மகன்

தங்கம்மாவுக்கு அச்செய்தியைக் கேட்டதும் உலகமே திடீரென்று உடைந்து போனாற் போல அதிர்ச்சியுற்றாள். நிலைகுலைந்து போய் அப்படியே தள்ளாடியவளாய் திண்ணையிலே சரிந்தாள். வாயின் நடுக்கத்தை மீறிக் கொண்டு விசும்பல் ஒலித்தது. செல்லம், தங்கம்மாவிற்கு அருகாக வந்து, வாஞ்சை ததும்பி அவளின் முதுகிலே ஆதரவோடு தொட்டாள்.

"அக்கா......ஆறுதல் சொல்லித் தீராத விஷயந்தான். ஆனாலும் என்ன செய்ய? இதைத் தாங்கிக் கொண்டு தான் ஆகவேணும் அ...க்கா..."

ஆறுதல் கூற வந்தவளுக்கே குரல் உடைந்தது. உடைந்த குரல் புலம்பலாய் இரைந்தது. தங்கம்மாவைக் கட்டிக் கொண்டே செல்லம் இப்போது விசும்பினாள்.

"அக்கா... கணேசன் உங்களுக்கு மட்டும் பிள்ளை யில்லை...இந்த ஊரிலே இருக்கிற ஒவ்வொரு தாய்க்குந் தான் மகன்...என்ன அருமையான பிள்ளை அவன். ஒழுக்கமும் துணிவுமுள்ள அவனுக்கு இப்படியொரு

முடிவு வருமென்று யார்தான் எதிர்பார்த்திருக்க முடியும்?...... கடவுளுக்குக் கூட கண்ணில்லாமல் போச்சுது?..." தலைதலையாய் அடித்துக் கொண்டாள் செல்லம்.

"அந்தப் பிஞ்சு உடம்பை எப்படியெல்லாம் சித்திரவதை பண்ணியிருக்கிறான்கள்... ராட்சதன்கள்... மிருக வெறி பிடித்த அசுரன்கள்... இவங்களுக்கு என்றைக்குத்தான் ‹அழிவு வருமோ? அயோக்கிய நாய்கள்..."

தங்கம்மா கேட்டாள்; உடலே தொய்ந்து, அந்தக் கம்பீரமான குரல் தளும்பிக் கலங்கிடக் கேட்டாள்;

"கணேசுவை எங்கை போட்டிருக்கிறாங்கள்? நான் போய்அவனை எடுத்துக் கொண்டு வர வேணும்"

சொல்லிக் கொண்டிருக்கையில் வெளியே ஆளரவச் சத்தம் கேட்டது. செல்லம் வெளிக்கதவைப் பார்த்தாள்.

மூன்று நான்கு இளைஞர்கள் கதவுப் பக்கமாக வந்து கொண்டிருந்தனர். அவர்களிடையே கணேசனின் தம்பி சுகுமாரனும் நின்றான். சுகுமாரனைக் கண்டதும் துடித்து அலறிக் கொண்டு எழுந்து போய் அவனைக் கட்டிக் கொண்டாள் தங்கம்மா. அவனுடைய விரிந்த மார்பில் மோதி மோதிப் புலம்பினாள்.

"அண்ணனைச் சுட்டிட்டாங்களாமடா... ஐயோ என்னுடைய அருமந்த செல்வத்தை இப்படி நாய்களும், நரிகளும் வேட்டையாட நான் விட்டிட்டேனடா ... சுகு. என்ரை ராசாவை இப்படி அனாதையாகச் செத்துப்போக விட்டிட்டமே..."

இளைஞர்களில் உயர்ந்த தோற்றத்தோடு நின்றவன் தங்கம்மாவிற்கு அருகாக வந்தான். தணிந்த குரலோடு

அவளின் தோளிலே கையினால் தொட்டு ஆறுதல் படுத்தினான்.

"அம்மா... ஆறுதலாயிருங்க, கணேசனுடைய நண்பர்கள் நாங்கள். கணேசன் அனாதையைப் போலவோ, கோழையாகவோ செத்துப் போகவில்லை. பெரிய வீரனாக, லட்சியமொன்றிற்காக கடைசிவரை போராடி, இரண்டு சிப்பாய்களினுடைய கதையை முடித்து விட்டு ஒரு வீரனாகத்தான் அவன் செத்துப் போயிருக்கிறான். கடைசிவரை அவன் எதிரிகளுக்குச் சிம்ம சொப்பனமாயிருந்தவன்..."

தங்கம்மா கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். கண்ணீர் மல்குகிற கண்களிலே அந்த இளைஞன் தெளிவாக வந்து நின்றான். அவன் அங்கு அடிக்கடி வந்திருக்கிறான். அவளோடு வாஞ்சை ததும்ப "அம்மா அம்மா..." என்று கதைத்திருக்கின்றான் அந்த இளைஞனான ரத்னா. ஒரு நாள் அவனைப் பார்த்து தங்கம்மா கேட்டாள்.

"உனக்கு சகோதரர்கள் இல்லையா தம்பி...?" அவன் சிரித்தான்.

"உங்களுடைய மகனும் எனக்குச் சகோதரன்தான். என்னைப் போல உள்ள எல்லோருமே எனக்குச் சகோதரர்கள் தான்..."

தங்கம்மாவிற்கு சிரிப்பாய் வந்தது. இதேபோலத் தான் சிலவேளைகளில் கணேசனும் சொல்லுவான்.

"அது போலத்தான் எனக்கு நீங்களும் அம்மா தான்..."

தங்கம்மாவின் இதயத்தினுள் பெருமிதமும், வாஞ்சையும் அவ்வேளையிலே ஆவேசத்தோடு பொங்கிற்று. மௌனமாகவே உணர்வு கொந்தளிப்புற அவனைப் பார்த்தாள்...

"எடே ரத்னா. நீ எப்பவும் எனக்கு மகன்தானடா...'

...தங்கம்மா கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அந்த இளைஞனையே மௌனமாகப் பார்த்தவாறு நின்றாள்.

"அம்மா கணேசனைப் பொறுத்தவரை அவனுடைய வாழ்க்கை மிகப்பெருமையானது. என்றும் அவன் மறக்க முடியாதவன்...இதைத் தவிர இன்னொரு விஷயமும் இப்ப உள்ளது. கணேசனை வைத்து மற்ற எல்லோரையும் பிடிக்கிறதுக்கு இராணுவ அதிகாரிகளும், சி. ஐ. டிகளும் திட்டம் போட்டிருக்கிறார்கள்—கணேசன் உயிரோடை இருக்கும் வரை அதுக்கு கொஞ்சமும் இடங் கொடுக்கவில்லை... நாங்களும் இனி அதுக்கு இடங் கொடுக்கக் கூடாது..."

ரத்னா கொஞ்சநேரம் யோசித்துவிட்டு, தாழ்ப்பாள் போட்டு முடியபின் மீண்டும் அவ்விடத்திற்கு வந்தான்.

"கணேசனை இந்தக் கிராமத்து எல்லையில் வைத்துத்தான் இராணுவம் சுற்றி வளைத்தது. ஆனபடியால் இந்தக் கிராமத்தில் அவனுடைய பிணத்தைக் கொண்டு வந்து போட்டு, தாங்களே இராணுவத்தினர் கொளுத்துவார்கள்... அப்படிக் கொளுத்துகிற போது அவன் எந்தக் குடும்பத்துக்குரியவன் என்பதை அவர்கள் தெரிந்து கொள்ள முடியும் என நினைக்கிறார்கள்..."

ரத்னா சுகுமாரனை அர்த்தத்தோடு பார்த்தான்.

"...அடித்தோ மிரட்டியோ இந்தக் கிராம மக்களிடமிருந்து உண்மையை வரவழைக்க முடியாதென இராணுவத்தினர் அனுபவ ரீதியாகத் தெரிந்து வைத்திருக்

கிறார்கள். அதோடு பயங்கரவாதத் தடுப்புச் சட்டப்படி இராணுவம் சுட்டுக் கொல்கிற எவரையும், எவ்விதமான விசாரணை இன்றியும் சுட்ட இடத்திலேயே தீயிட்டுக் கொளுத்தும் உரிமையும் இராணுவத்திற்கு வழங்கப் பட்டிருக்கிறது...''

தங்கம்மா சுகுமாரனை இப்போது நோக்கினாள். தனது இறந்த மகனுக்காக, அவனது சடலம் எரிக்கப் படுகையிலே கடைசிமுறையாக அழுவதற்குக் கூட உரிமையில்லாமற் போய்விட்டதே என்று நினைக்கை யிலே இவளுக்கு அழுகை பொங்கிக் கொண்டு வந்தது. குமுறிக் குமுறி அழ ஆரம்பித்து விட்டாள்.

கணேசன் வீரனாகவே இறந்தான். அவன் இறந்த பின்னர்தான் அவனது சடலத்தை தமது ஆயுதங் களால் குத்திக் கொதறியிருந்தனர் இராணுவத்தினர்.

அந்த மைதானத்திலே அவனது சடலம் வீசப்பட்டி ருந்தது. அவனது சடலத்தைச் சுற்றி துப்பாக்கிகளோடு இராணுவம். மைதானத்தைச் சுற்றி நிறையச் சனக் கூட்டம். அதிகமானோர் தாய்மார். தாய்மாரின் முகத்தையே ஊடுருவிப் பார்த்துக் கொண்டு நிற்கிற சி. ஐ. டி அதிகாரிகள்.

ஏளனமாகச் சிரித்தபடியே கணேசனின் சடலத்தின் மீது டயர்களைத் தூக்கிப் போட்டு பெற்றோலை ஊற்றிக்கொண்டிருந்தனர் இராணுவச் சிப்பாய்கள்.

மைதானத்தைச் சுற்றி நின்ற எல்லோரது கண்களிலும் கண்ணீர் மல்கிற்று. விசும்பலை அடக்கிக் கொண்டே அசைவற்று நின்றார்கள். கைகளைப் பிசைந்து கொண்டார்கள்.

சிப்பாய் தீக்குச்சியைத் தட்டிவைத்தான்.

செந்நெருப்பு, டயரின் பொசுங்கிய மணத்தோடு சுழன்று எழுந்தது.

"ஐயோ மகனே..."

தீனஸ்வரமாக எழுந்தது அந்த ஒற்றைக்குரல்.

சி. ஐ. டி அதிகாரிகள் மிகுந்த சந்தோஷத்தோடு அந்த ஒற்றைக்குரல் வந்த திசைக்கு விரைய...

மறுகணமே,

"ஐயோ மகனே..." என்ற குரல்கள் ஒன்றாய், பத்தாய், நூறாய் அந்த மைதானமெங்கும் சீறிக் கொண்டே எழுந்தன. மைதானத்தில் நின்ற ஒவ்வொரு தாயும் அலறிய அந்தக் குரல் பேரொலியாய்த் தெறித்துக் கொண்டிருக்க சி. ஐ. டிக்களும், இராணுவ அதிகாரிகளும் அவசரமாக அங்கிருந்து குழப்பமும் அச்சமும் கலக்கப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். □

*(1985)*

# இருப்பிடம்

ஐந்து வருஷங்களுக்கு முன்னே, கடற்கரைக்கு எதிரே யுள்ள அந்தப் பெரிய காணிநிலத்தை கணேசன் வாங்கிய போது எல்லோரும் அவரை ஒரு மாதிரித் தான் பார்த்தார்கள். ஓவென்று அலறி அலைகள் விழுகிற கடற்கரையிலே தனித்து வெறுமையாய் பரந் திருந்தது அந்தக் காணி. தென்புறத்தில் பதினைந்து தென்னை மரங்கள். காணி வாங்கியதும் காணியைச் சுற்றிச் சதுரமான உயர்ந்த மதிலினைக் கட்டிவிட்டார் கணேசன்.

கணேசன் ஐம்பது வயதிற்குள் வளர்முக நாடு களிலேயுள்ள இஞ்சினியர்கள் வட்டாரத்திலே பிரபல்யம் பெற்ற நபராகி விட்டார். அனேகமாக வெளிநாடு களுக்குப் பறந்து கொண்டிருப்பவர். ஜெனிவாவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய நகருக்கான அமைப்பினை வரைந்து திட்டமிட்டவர் அவர். கட்டிடக்கலையில் மிக நவீனத்துவமான வடிவமைப்புகளை எவ்வளவு நேர்த்தியாக இவரால் உருவாக்க முடிகிறது என்பதை வியக்கிறவர்களுக்கு புன்னகையினாலேயே பதில் சொல்கிற கணேசன், எல்லா அரசியல்வாதிகளுக்கும்

செல்லப்பிள்ளை. இரண்டு மக்கள். இருவரும் ஆக்ஸ் போர்ட் பல்கலைக்கழகத்தில் அப்பாவின் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இளையவன் ரமணன், உள்துறை அமைச்சரின் ஒரே மகளைக் காதலித்துக் கொண்டிருப்பவன். மூத்தவன் ஆனந்த். இந்திய தத்துவ ஞானத்தில் பிரியங்கொண்டு, ஹரே கிருஷ்ணா ஹரே ராமா இயக்கத்தவரோடு தொடர்பு வைத்திருப்பவன். கிழக்கின் ஆன்மீக ஒளியை முன்னெடுத்துச் செல்வதற் கான ஆற்றலும், திறமையும் தன்னிடம் நிறைந்தி ருப்பதாய் எண்ணுபவன். படிப்பை முடித்துக் கொண்டு தாயகத்தில் சீக்கிரமாக காலடி எடுத்து வைக்கத் துடித்தபடியே இருக்கிற ஆனந்த்தை மனதில் வைத்தே கணேசன் இந்தப் பெரிய காணி நிலத்தை வாங்கி விட்டிருக்கின்றார்.

வியன்னாவில் மூன்று மாத காலம் தங்கியிருந்த கணேசன் தனக்குக் கிடைத்த ஐந்துநாள் ஓய்விலே காணியைப் பார்க்கிற எண்ணத்தோடு தாய்நாடு வந்தி ருந்தார் அவருடைய நண்பர்கள் மூவர் மூத்த அமைச்சர்கள். விமான நிலையத்தில் அவர் இறங்கிய போதே விசுவம் கண்டுவிட்டார்.

"வேறெங்குமே நீ போவதற்கு நான் விட மாட்டேன்...என்னுடைய வீட்டிற்கு உன்னை அழைத்துப் போகிற பெருமை எனக்குத் தந்துவிடு. நகரத்திலே எனக்கு இரண்டு பங்களாக்கள் உண்டு. அதில் எது உனக்கு இஷ்டமோ அதில் இருந்துகொள். உன்னை டி.வி. காரர்களும் பத்திரிகைக்காரர்களும் வந்து சந்திக்க ஏற்பாடு செய்கிறேன்...உனக்காக மேனாட்டு சமையல் செய்வதில் திறமையுள்ள சமையல் காரர்களை எனது ஐந்து நட்சத்திர ஹோட்டலில் இருந்தே அனுப்பி வைத்துவிடுகிறேன்...என்ன நான் சொல்லுகிறேன், பேசாமலே நின்றுவிட்டாய்..."

நண்பரின் உரிமை கணேசனைத் திணற வைத்தது. ஆங்கிலத்தில் சொல்லிக் கொண்டிருந்தவர் அதே வேகத்தில் தமிழுக்கு மாறினார்.

''கணேஷ்...எங்களுக்குள் என்ன பார்மாலிட்டிஸ்... எது உங்களுக்குப் பிரியமோ அதை என்னிடம் கேட்டுக்கொள்ளலாம்...அது எதுவானாலும் சரி...''

விசுவம் கணேசனின் கைகளைப் பாசத்தோடு பற்றிக் குலுக்கிக் கொண்டார். பின்னர் கஸ்டம்ஸ் அதிகாரியைப் பார்த்தார். ஐந்து நிமிஷத்திலே இருவரும் விமான நிலையத்திலிருந்து வீட்டுக்குப் புறப்பட்டனர்.

## 2

மறுநாள் காலையில் விசுவத்தையும் கூட்டிக் கொண்டு கடற்கரைப் பக்கமாகச் சென்ற கணேசன் தனது காணியின் அருகே முளைத்திருந்த குடிசைகளைக் கண்டதும் திகைத்து அதிர்ந்து போய் விட்டார்.

குடிசைகளுக்கு அருகே செல்வதற்கு கணேசனுக்கு மிகவும் அருவருப்பாயிருந்தது. தற்செயலாக அந்தக் குடிசைவாசிகளிலிருந்து துணுக்களவு காற்று தன் மேலே சிதறிவிட்டால் அவ்வளவுதான்; நோய்ப் படுக்கை தான். அவரின் ஒவ்வொரு நிமிஷமும் எவ்வளவு டாலர் மதிப்பிற்குரியது. அந்த நினைவு வந்ததும் கணேசன் இரண்டு அடிகள் பின் வாங்கினார்.

இங்கிருந்து அவர் கடைசியாகப் புறப்பட்ட போதும் இந்தக் காணியை வந்து பார்த்து விட்டுத்தான் சென்றார். எவ்வளவு சுகாதாரமான, இயற்கைச்சூழல் மாசடையாத சூழ்நிலையிலே அவருடைய காணி

அமைந்திருந்தது. இந்தப் பத்துப் பதினைந்து குடிசைகள் இவ்வளவோடு நின்று விடுமா? இல்லை. இவை ஆயிரம் காற்சிலந்திகளாய் இந்தக் காணியின் எல்லாத் திசைகளிலும் பரவிப் பெருகி விடும். இவருக்கு மூளை வெடித்து விடும் போலத் தகித்தது. தலையைப் பிடித்துக் கொண்டார்.

அமைச்சர் தொலைபேசியில் கணேசனோடு தொடர்பு கொண்டபோது கணேசனின் குரலில் தொனித்த அசிரத்தையினைக் கவனித்து விட்டு எதையும் அவரிடம் கேட்காமல், உடனேயே அவரது பங்களாவுக்குப் புறப்பட்டுவிட்டார்.

கணேசன் விஷயத்தைச் சொல்லி முடிக்கு முன்னர் அமைச்சர் ஆத்திரத்தோடு படபடத்தார்.

"இந்த விஷயத்தை நீங்கள் என்னிடம் எப்போதோ சொல்லியிருக்க வேண்டுமல்லவா? ஒரு சொல்லுச் சொல்லியிருப்பீர்களாயின் உங்கள் காணியையும் அதன் சுற்றுச் சூழலையும் பாதுகாப்பதற்காக நான் ஒரு விசேட போலீஸ் படையையே இதற்காக நியமித்திருப்பேனே... சரி, சரி அதைப் பற்றி ஒன்றுமில்லை. இப்போது கூட காலமொன்றும் கடந்து போய் விடவில்லை...நான் இப்போது ஐ. ஜிக்கே போன் செய்கிறேன்..."

தொலைபேசியை எடுத்தார்.

"நீங்கள் இவற்றையெல்லாம் கொஞ்சமும் கவனிப்பதில்லையா? இயற்கையை மாசுபடுத்துதல் என்பது எவ்வளவு பயங்கரமான குற்றம் என்பதை நான் சொல்லித்தான் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமா?... என்ன செய்வீர்களோ, எப்படிச் செய்வீர்களோ என்பதைப் பற்றி எனக்கு கொஞ்சமும் அக்கறையில்லை. நாளைக்கு காலையிலே உதயமாகின்ற

சூரியனின் கதிர்கள் சுத்தமான சூழலில் தான் இந்தக் கடற்கரைப் பரப்பிலே விழ வேண்டும்..."

அமைச்சர் கொஞ்ச நேரம் நிறுத்தி விட்டு கணேசனைப் பார்த்தவாறே தொடர்ந்தார்:

"உண்மையாகச் சொல்லப் போனால் எனது நண்பர் இதனால் மிகவும் கவலையடைந்திருக்கிறார். கடற்கரையின் எதிரே ஓர் அழகும் கலைத்திறனும் வாய்ந்த பங்களாவைக் கட்டியெழுப்ப வேண்டு மென்பது அவரின் வெகுநாளைய இலட்சியம். அவரை உங்களுக்குத் தெரியுமா? உலகப் பிரசித்தி வாய்ந்த இஞ்சினியர்...ஆ...தெரியுமா...அவரேதான்..."

அமைச்சர் திருப்தியோடு கணேசனைப் பார்த்தார்.

"நீங்கள் இனி இதைப் பற்றியெல்லாம் கவலைப் படத் தேவையில்லை. நாளைக் காலையிலே உங்கள் காணிப்பக்கமாகப் போய்ப் பாருங்கள். ஒரு துளி கெட்ட காற்றுக் கூட அதைச் சுற்றி இருக்க மாட்டாது... எல்லாம் சுத்தமாகவே இருக்கும். ஆனாலும் நீங்கள் இனியும் காலந் தாழ்த்துவது அவ் வளவு நல்லதல்ல. குடிசையிலுள்ளவர்கள்தான், இப்போதெல்லாம் நிறையவே அரசியல் பேசுகிறார்கள். அவர்களிடம் நிறைய வோட்டுகள் இருப்பதால் அவர் களை எப்போதும் நமது கட்சியில் வைத்திருக்க வேண்டியுள்ளது. நீங்கள் ஒன்று செய்தால் என்ன?..."

"சொல்லுங்கள்..." —கணேசன் பரபரத்தார். நான் இங்கே இன்னும் நான்கு நாட்கள்தான் நிற்க முடியும். அதற்குள் எது செய்ய வேண்டுமோ செய்து விடுகிறேன். பின்னர் திரும்பிவர ஏழு மாதகாலம் ஆகும்..."

"உங்கள் பங்களாவுக்கு 'பிளான்' வரைந்து விட்டீர்களா?"

திருப்தியோடு புன்னகை செய்தார் கணேசன்:

"அது எப்போதோ முடிந்து விட்டது. ஆனந்த் மட்டும்தான் இங்கே வந்திருக்கப் போகிறான். அவனும் சம்மதித்து விட்டான்...இதோ பிளானை எடுத்துக் காட்டு கிறேன்..."

கணேசன் 'பிளான்' படங்களை விரித்தார்.

எல்லாமாக எட்டு படுக்கையறைகள், கழிப்பறை இணைப்போடு. அலுவலக அறைகள் நான்கு. நூலக அறை. இரண்டு சாமி அறைகள். சமையலறை இரண்டு. வரவேற்புக் கூடம். விருந்தாளிகளுக்கு பன்னிரெண்டு அறை, கழிப்பறை இணைப்போடு. மூன்று சாப்பாட்டுக் கூடம். பின் பக்கத்தில் தனியாக அவுட் ஹவுஸ் நீச்சல் குளம், நீச்சல் குளத்துக்கு அருகே பணியாளர்களுக்கு இரண்டு சிறிய அறைகள். முன்புறம் மிக நவீன வடிவில் அமைந்தது. கூம்பு வடிவக் கூரை. எந்தக் காற்றையும், புயலையும் சாமர்த்தியமாகவும் தைரியமாகவும் சமாளிக்க தக்கதான மேலமைப்பு. எப்படியும் முப்பத்தைந்து லட்சம் ரூபாவுக்குள் கட்டி முடித்து விடலாம்.

அமைச்சர் திகைத்துப் போயிருந்தார்.

"இதை நின்று கட்டி முடிக்க எனக்கு எங்கே நேரம் வரப்போகிறது... ஆனந்த் கூட என்னோடுதான் மறுபடியும் இங்கு வருவான்..."

கணேசன் பெருமூச்சு விட்டார். அமைச்சருக்கு கணேசனைப் பார்க்கக் கவலையாயிருந்தது.

"இதற்கெல்லாம் ஏன் வீணாக யோசிக்கிறீர்கள்? நாங்கள் உங்களுக்கு இல்லையா?... எனக்குத் தெரிந்த கட்டிட அமைப்பு நிறுவனம் ஒன்று இருக்கிறது. என் அரசாங்க கட்டிட வேலை செய்பவர்கள் நேர்மையானவர் கள். அதன் டைரக்டரை மாலையிலே இங்கு கூப்பிடு

கிறேன். நீங்கள் அவரோடு பேசிக் கொள்ளுங்கள். உங்களைப் போன்ற உலகப் பிரசித்தி வாய்ந்த ஒருவரின் பிளானை நிர்மாணிப்பதற்கு அவர்கள் மிகவும் விரும்பு வார்கள். எல்லாவற்றையும் விட அடுத்த தேர்தலில் போட்டியிடுவதற்கு அவர் கட்சி டிக்கட்டை என் மூலம் தான் கேட்கவிருக்கிறார்... ஆகையால் நான் சொல்கிற எந்த விஷயத்தையும் அவர் ஒப்புக் கொண்டு செய்து தருவார்...''

"ஓ...நீங்கள் எவ்வளவு அ;ன்புள்ள மனிதர்...இந்த உதவியை நான் என்றுமே மறக்க மாட்டேன். மறக்க முடியாது..."

கணேசனின் அந்த நெகிழ்வு அமைச்சரைப் பரவசப் படுத்தியது.

''ஒரு அறிவான, பணக்காரரான நண்பருக்கு இந்த உதவியைக் கூடச் செய்யவில்லை என்றால் நான் ஒரு அமைச்சர் என்று சொல்லி என்ன பெருமையிருக்கப் போகின்றது?...''

''மிக்க நன்றி'' — கணேசன் அன்பு மிதக்க அமைச்சரின் கைகளைப் பற்றிக் கொண்டார்: ''எப்படி யும் ஆறு மாதத்திற்குள் இந்த பங்களாவைக் கட்டிமுடித்து விட்டால் பெரிய பாரம் நீங்கின மாதிரி இருக்கும்... ஆனந்த் இங்கே வந்து விடுவான். அவனுக்கும் இனிமேல்தான் திருமணம் செய்து வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்....''

''அப்படியா?'' அமைச்சரின் மனதில் அவரது மகளான நீலலோசனி இப்போது நடந்து வந்தாள். இலேசான புன்முறுவலோடு அவர் அமைச்சரைப் பார்த் தார். ''திருமண விஷயம் தானே... அதைப் பற்றி யெல்லாம் நீங்கள் கவலைப்படத் தேவையில்லை.

அதற்கான ஏற்பாடுகளையும் நானே பார்த்துக் கொள்ளு வேன்...நான் எந்த வேளையிலும் உங்களுக்குப் பக்கத்திலேயே துணை நிற்பேன்...நட்பென்றால் பிறகு என்ன? இக்கட்டான நிலைகளில் உதவுவதுதானே..."

3

உண்மையாகவே அந்தக் கடற்கரைப் பகுதிக்கு அவர்கள் புதிதாக குடியிருக்க வந்தவர்களல்ல. கிட்டத்தட்ட முப்பது வருஷ காலமாக அந்த இடத்திலிருந்து கொஞ்ச தூரம் தள்ளி அவர்களின் குடிசைகள் இருந்தன. 'பஞ்சம் பிழைக்க வந்து' கடலிடம் தஞ்சம் புகுந்தவர்கள் அவர்கள். குடிசைகள் பெருகியதும் வேறிடத்துக்குப் போய் சிலர் வாழ வேண்டியிருந்தது. அங்குள்ளவர்களில் ஓரளவுக்கு விஷயம் தெரிந்தவன் தணிகைமலை. தேர்தல் காலங்களில் அந்தக் குடிசைப் பகுதியில் கட்சிக் கொடிக் கம்பம் அமைப்பவன் அவன்தான். தங்கள் இட நெருக் கடி பற்றி 'அண்ணன்' கோவிந்தனிடம் சொன்னபோது உடனே பதில் வரவில்லை அண்ணனிடமிருந்து. இரண்டு மூன்று முறை வற்புறுத்தியதின் பிறகு அண்ணன் வாயைத் திறந்தார்.

"அதற்கோசரம் நெறையப் பணம் செலவாகுமே..."

அண்ணன் தணிகைமலையை ஊடுருவினார்.

"நெறையவா...?"

"ஆமா நெறைய... அது முடியுமா சொல்லு..."

"நூறு நூத்தைம்பது..."

அண்ணன் விழுந்து விழுந்து சிரித்தார். இயல் பாகவே இரத்தமாகச் சிவந்திருந்த அண்ணனின் கண் களிலே நீர் துளிர்த்தது. கடாமீசையை லேசாக பெரு

விரலால் வருடிக் கொண்டார். நிலத்தோடு தொட்ட துண்டினை ஒற்றைக்கையால் தூக்கியவாறே சொன்னார்.

"டியூப் லைட் மாதிரியெலலாம் பேசாதை... காதும் காதும் வைத்தாப் போல மேலிடத்தாரிடம் பேசிடலாம். ஆயிரம் ரூபா ரெடி பண்ணிக்கோ. அதுவும் சீக்கிரமா..."

"அண்ணன்..." —தணிகைமலை வார்த்தைகளை விழுங்கிக்கொண்டே பரிதாபகரமாக அண்ணனைப் பார்த்தான். அழுதுவிடுவான் போலிருந்தது. இரண்டு கைகளையும் கட்டிக் கொண்டே மௌனமாய் நின்றான்.

"சொல்லப்பா..."

"ஆயிரம் ரூபா...?"

"ஆமா... ஆயிரம் ரூபா கண்டிப்பா ஆயிரம் ரூபா வேணும். அப்புறம் என்னைத் தப்பாப் பேசப்படாது..."

"அண்ணனை நானே வந்து பார்த்துடறேன்..."

இதைச் சொன்னதும் எல்லோரும் ஆவென்று வாயைப் பிளந்து விட்டார்கள். ஆயிரம் ரூபாவென்றால் என்ன சாதாரண தொகையா? அந்தத் தொகையை ஒரே நேரத்தில் அவர்கள் யாருமே கண்டதில்லை. ஆனாலும் பதுங்கிக் கொண்டிருக்கிற அந்தப் பகுதியிலிருந்து அவர்கள் வேறெங்காவது சென்றாகவே வேண்டும். எங்கே செல்வது? அண்ணன் முயற்சி செய்தால் நிச்சயமாக அவர்களுக்குக் குடியிருப்புக்கு இடம் கிடைத்துவிடும், அண்ணனுக்கு போலீஸில் நல்ல செல்வாக்கு. அரசாங்க அதிகாரிகளோடு சுமுகமான பரிச்சயம். அண்ணனுக்கு விஷயத்தையும் சொல்லியாகி விட்டது. இந்தப் பிரச்சினையை இனி அண்ணனே தீர்த்து வைக்கவேண்டும். வேறு யாரிடமாவது இந்த விஷயம் போகுமானால் அவ்வளவுதான். சைக்கிள்

செயின், சோடா பாட்டில், திருக்கைவால் போன்ற ஆயுதங்களைத் தரித்த 'அதிரடிப்படை'யினருக்கு பதில் சொல்லியாக வேண்டும். தவிரவும் அண்ணன் தொட்ட விஷயத்தை எக்காரணங் கொண்டும் வேறெவரும் செயற்படுத்த முன் வரவே மாட்டார்கள். அது சின்னண்ணனாயினும் சரி, பெரியண்ணனாயினும் சரி.

கடைசியில் எப்படியோ அந்த ஆயிரம் ரூபாவை சேர்த்து அண்ணனிடம் கொடுத்துவிட்டான் தணிகைமலை. மறுநாளே இரண்டு அதிகாரிகளோடு வந்து அண்ணன் இந்த இடத்தை அவர்களுக்கு காட்டிவிட்டார். குடியிருப்புக்கு ஒரு பெயரை வையுங்கள் என்று அண்ணன் கூற, தணிகைமலை அண்ணனின் பெயரையே அந்தக் குடியிருப்புக்கு வைக்க வேண்டுமென்று முன்மொழிய அவர்களின் அன்புக் கட்டளையை அண்ணன் மறுப்பின்றி ஏற்றுக் கொண்டார். இவ்விதமே கணேசனின் காணிக்குப் பக்கத்திலே இந்தக் குடியிருப்பு உருவாயிற்று.

போலீஸ் அதிகாரிகள் ஜீப் வண்டிகளில் வந்து இறங்கியதும் அந்தக் குடியிருப்பிலுள்ள பெண்களும் குழந்தைகளும் கதி கலங்கிப் போய் விட்டார்கள். தொழிலுக்குப் போன ஆண்கள் இன்னமும் திரும்பி வரவில்லை. போலீஸ் அதிகாரி உரத்த குரலில், அந்த இடத்தை விட்டு மறுநாள் காலைக்குள் அவர்கள் வெளியேறாவிட்டால் எல்லாக் குடிசைகளையும் தீ மூட்டி விடுவதாகப் பயமுறுத்தினார். வள்ளியம்மை மட்டும் துணிவாக முன்னே வந்து, தலைவர்தான் அந்த இடத்திலே தங்களை வந்து குடியேறும்படி சொன்னார் என்று கூறினாள்.

இன்ஸ்பெக்டருக்கு 'பயங்கரக் கோபம்' வந்து விட்டது. தடியடிப் பிரயோகம் செய்தாலென்ன என்று நினைத்துக் கொண்டார். பிறகு தனக்குப் பின்னால்

இப்போது போதிய போலிஸார் இல்லாமையினால் அந்த முடிவினை மாற்றிக் கொண்டு கெட்ட வார்த்தையால் அவளை அதட்டினார்.

வள்ளியம்மை அதற்குப் பிறகு எதையும் பேசவியலா மல் தலையைக் குனிந்து கொண்டாள்.

"பன்னிரெண்டு மணி டயம்... அவ்வளவுதான்..." தொடர்ந்து எதையும் கூறாமல் ஜீப்பில் ஏறிக் கொண்டார் இன்ஸ்பெக்டர்.

அன்று அமைச்சர்கள் இருவர் அந்த இடத்திற்கு அதிகாரிகளோடு வந்தனர். கணேசனின் பெரிய காணியின் ஓரமாக அமைக்கப்பட்டிருந்த அந்தக் குடிசை கள் அவர்களுக்கும் மிகுந்த எரிச்சலை உண்டாக்கின. அதிகாலையில் 'வாக்' வருபவர்களுக்கு கூட அந்தக் குடிசைகள் இடைஞ்சல் தரலாம் என ஒருவர் யூகமாகக் கூறினார். மற்றவர் அமைச்சருக்கு கேட்கும் படியாகக் கூறினார்:

"கடற்கரைக்கு அதிகாலையில் எவ்வளவோ முக்கியஸ்தர்கள் 'வாக்' வருகிறார்கள். மாலையில் அப்படியே. இந்தக் குடிசைப் பகுதிகளிலே நிறைய சமூகவிரோதிகள் இருப்பார்கள். அவர்கள் நிச்சயமாக இந்த முக்கியஸ்தர்களுக்கு இடையூறாக இருப்பார்கள்... இவர்களை முளையிலேயே கிள்ளாவிட்டால் இந்தப் பகுதி அராஜகங்களின் கோட்டையாகி விடும்..."

ஆங்கிலத்திலே கூறிக் கொண்டு போன அதிகாரியை மிகவும் சந்தோஷத்தோடு பார்த்தார் அமைச்சர். எதிர்க் கட்சியினர் ஏதாவது இந்த விடயத்தைப் பற்றிப் புகார் எழுப்பினால் சொல்லதக்க சரியான பதில் இது என அவர் நினைத்துக் கொண்டார்.

"உண்மைதான். பொதுமக்களின் அடிப்படை உரிமைகளையும், பாதுகாப்பையும் காத்திடுவதை மனத்திலே கொண்டு, இந்தக் குடிசைகளை நாங்கள் அகற்றித் தான் ஆக வேண்டும்... இதனால் சில அசௌகரியங்கள் உண்டாகத்தான் செய்யும். பொது நன்மையைக் கருதி மக்கள் அதனைப் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்..."

மூத்த அமைச்சர் இளையவரைப் பார்த்தார்.

"நீங்கள் சொல்வது சரிதான். ஏதாவது பிரச்சினை வருவதற்கு முன்னர் இதனைப் பற்றி நாங்கள் மந்திரி சபைக் கூட்டத்தில் விரிவாக விளக்கிவிட வேண்டும். கணேசனின் பொருட்டு இதனை நாங்கள் செய்தே ஆக வேண்டும்... என்ன சொல்கிறீர்கள் நீங்கள்?"

இளையவர் உறுதியான குரலிலே கூறினார்:

"நீங்கள் சொல்வது சரியே... இந்தக் கடற்கரையின் அமைதியையும் தூய்மையையும் நாங்கள் பாதுகாத்தே ஆகவேண்டும்..."

## 4

தணிகைமலை படகைவிட்டு இறங்கிக் கரைக்கு வந்ததும் வயதான பெண்கள் எல்லோரும் வந்து அவனைச் சூழ்ந்து கொண்டு ஒவென்று பிரலாபிக்கத் தொடங்கினார்கள். தணிகைமலை அதிர்ச்சியால் வாயடைத்துப் போய் நின்றான். போலீஸைக் கண்டாலே அவனுக்குப் பேயைக் கண்ட பயம்.

"சரி...அண்ணனைப் பார்த்துப் பேசிடலாம்..."

தன்னைச் சுதாரித்துக் கொண்டான் தணிகைமலை. அவசர அவசரமாகப் புறப்பட்டு அண்ணன் வீட்டினை

நோக்கி நடந்தான். வீட்டிலே அண்ணன் இல்லை. அண்ணியும் எரிச்சலோடு பிள்ளைகளைத் திட்டிக் கொண்டிருந்தாள். தணிகைமலை புறப்படும் போதே இரண்டு கொழுத்த சுறாக்களைப் பெரிய பார்சலில் கட்டிக் கொண்டு வந்திருந்தான். அண்ணியாருக்கு 'சுறாப் புட்டு' என்றால் உயிர். பார்சலைப் பற்றிச் சொன்னதும் அண்ணியார் புன்னகையானாள். அண்ணன் இடைத்தேர்தல் பிரசாரத்துக்கு சென்றிருப்பதை சொல்லியவள், "ஏன் ஏதாவது பிரச்னையா? சொல்லப்பா" என்றாள்.

சொன்னான்.

அண்ணியார், தான் இதைப்பற்றி உடனேயே பெருஞ்சேரல் இரும்பொறையோடு பேசுவதாகவும், கவலையின்றி குடிசைக்குப் போகும் படியும் கூறினாள். பெருஞ்சேரல் இரும்பொறை அண்ணனின் வலது கரம்.

மீண்டும் குடிசைப் பக்கமாக வத்தபோது, ஐந்தாறு பெண்கள் நிற்பதைக் கண்டான் தணிகைமலை. தணிகைமலையைத்தான் தேடிக் கொண்டு அவர்கள் வந்திருந்தனர். மூன்றாவது மீன்பிடிக் குடியிருப்பிலேயுள்ள 'பெண்கள் சங்க'த்தின் உறுப்பினர்கள்.

அவர்களை தனது குடிசைக்குள் அழைத்துச் சென்றான்.

மூலையிலே சாம்பலுங் கரியுமாய் மூளியாய் உடைந்திருக்கின்ற அடுப்பு. பானை சட்டிகள். கிழிந்த பெட்டி. இடது புற மூலையிலே அரைகுறையாய் சுற்றி வைக்கப்பட்டிருக்கின்ற பாய். கிழிந்த கோணிகள். வடபுற மூலைப் பக்கச் சுவரிலே பொத்தல் விழுந்திருந்ததை தென்னங்கீற்றாலும் மறைக்கமுடியவில்லை. கூரையை கிழிந்த பாலித்தீன், கரும்புச் சோகை மேலும்

பாதுகாப்பாய் மூடியிருந்தன. காரை பூசிய தரையில் நடுப்பகுதி குண்டும் குழியுமாயிருந்தது.

"உட்காருங்க..."

பாயை இழுத்துப் போட்டான் தணிகைமலை. விர்ரென்று நான்கைந்து கரப்பான் பூச்சிகள் அங்குமிங்குமாய் சிதறின.

அவர்கள் உட்கார்ந்து கொண்டார்கள்.

"இப்ப என்ன செய்யப் போறீங்க?..."

கறுப்பான பெண் கேட்டாள்.

"அதுதான் ஒண்ணுமே புரியல்லீங்க..."

"வள்ளியம்மை அக்கா எல்லாமே சொன்னாங்க... போலீஸ் அப்படித்தான் பயமுறுத்துவாங்க. லத்தி சார்ஜ் பண்ணுவாங்க. ஈவிரமில்லாம ஒதைப்பாங்க... அவங்க வெறும் ஏவல் நாய்களாத்தான் இருப்பாங்க, நாங்க அதுக்கெல்லாம் பயப்படத் தேவையில்லீங்க..."

"அதெப்படிங்க... அவுங்க குடிசையைக் கொளுத்துறதா சொல்லியிட்டுப் போயிருக்காங்க...அ வ ங் க சொன்னபடியே செய்யக் கூடியவங்க... கவண்மென்ட் வேறே ஆர்டர் போட்டிருக்குங்க..."

மெலிந்த பெண் ஆதரவோடு அவனைப் பார்த்தாள்.

"நீங்க எதுக்குமே பயந்திடாதீங்க. நாங்க கடைசி வரை உங்களுக்கு உதவியாயிருப்பம்... உழைப்புக்கான இடத்திலே குடியிருப்பது மனிதனுக்குள்ள அடிப்படை உரிமையுங்க.... இதை யாருமே மறுக்க முடியாதுங்க... மீன்பிடிக்கிறவங்க கடற்கரையிலே இல்லாம கிராமப்புறத்திலையா கு டி சை கட்டி

இருப்பாங்க...நாங்க எல்லாமே ஒண்ணாச் சேந்தா யாருக்குப் பயப்படணும்?..."

அவளின் வார்த்தைகள் அவளைப் படித்தவளாக தணிகைமலைக்குத் தெரிவித்தன. அவளின் தீட்சண்யமான பார்வையும் உறுதியான குரலும் அவளது வார்த்தைகளிலே, தணிகைமலையை நம்பிக்கை கொள்ளச் செய்தன. மெலிந்த அவளையே பார்த்துக் கொண்டு யோசனையில் ஆழ்ந்திருந்தான் அவன். எவ்வளவுதான் துணிவு கொள்ள நினைத்தாலும் போலீஸ்காரரை நினைக்கவே தணிகைமலைக்கு வயிறு கலங்கிற்று.

"சாயந்தரத்துக்குள்ளே குடிசை எல்லாம் காலி பண்ணனும். காலி பண்ணேல்லையெண்ணா நெருப்பு வைப்போமெண்ணு போலீஸ் சொல்லியிருக்கிறாங்க... அதாங்க ஒரே பயமாயிருக்கு. அவங்க சொன்னாச் செய்வாங்க...பாருங்க எத்தினை ஆளுக இந்தக் குடிசையில இருக்கிறம்..."

வெளியே குடிசைவாசலில் நிறைந்திருக்கிற ஆண், பெண் குழந்தைகளை அவர்களுக்குக் காட்டினான் தணிகைமலை. பயம் பிதுங்கிய முகங்களாய் வெளியே நிற்கிற அவர்களை அந்தப் பெண்கள் அனுதாபத்தோடும் பரிவோடும் பார்த்தார்கள்.

"நீங்க ஒண்ணுக்கும் பயப்படாதீங்க... நாங்க இன்னும் கொஞ்ச நேரத்திலை இங்கை வந்திடுவம்..."

## 5

அமைச்சருக்கு ஆத்திரம் தாளமுடியவில்லை. கவலையோடு தன்னெதிரே உட்கார்ந்திருக்கின்ற கணேசனைப் பார்த்துக் கொண்டே அழைப்புமணியை அலறச் செய்தார்.

"முட்டாள் பயல்கள். மூன்று அமைச்சர்கள் இந்த விஷயத்தில் அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்த பின்னும் எவ்வளவு நேரம் கொடுத்து இந்த நடவடிக்கையில் இறங்கியிருக்கிறார்கள். குடிசையைக் கொளுத்தி இடத்தைக் காலிபண்ணு என்றால் உடனே செய்யவேண்டியதுதானே...பிறகென்ன அந்தப் பிச்சைக் காரப் பயல்களுக்கு கால அவகாசம்?...கால அவகாசம் கொடுத்ததால்தானே இப்படி போராட்டம்—அது, இது என்று தொடங்கியிருக்கிறார்கள்..."

சிறிது ஓய்ந்தார்.

"இந்த விஷயங்களையெல்லாம் காதோடை காது வைத்தாற் போல முடித்துவிட வேண்டுமென்று எவ்வளவு தரம் இந்த ஐ. ஜி.க்கு சொல்லியிருப்பேன். இந்த விஷயத்தை அறிந்தால் எதிர்க்கட்சிக்காரர்கள் சும்மா இருப்பார்களா? போராடுவதற்கே விஷயமில் லாமல் இருக்கிற அவர்களுக்கு இப்படியொரு குழப்பம் கிடைத்தால் எவ்வளவு உற்சாகமாகி விடுவார்கள்..."

நேர்முக உதவியாளர் கைகளைப் பிசைந்தவாறே அமைச்சரின் முன்னால் வந்து நின்றார்.

"எங்கேயிருந்தாலும் சரி, உடனே போன் பண்ணி ஐ. ஜியை என்னை வந்து பார்க்கச் சொல்ல வேண்டும்..."

"சரி ஸார்..."

பிறகு சிறிது நேரத்தில் தணிந்து போனார் அமைச்சர்.

"இதைப் பற்றியெல்லாம் நீங்கள் ஒன்றும் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. வருகிற புதன்கிழமையே நீங்கள் உங்கள் பங்களாவுக்கு அத்திவாரம் போட்டு விடலாம். அதற்கான ஏற்பாடுகளெல்லாம் செய்தாகி

விட்டது. டெலிபோனை உடனேயே பொருத்தமுடியும். ஒவ்வொரு அறைக்கும் 'இன்டர் காம்' வைத்து விடுங்கள்..."

கணேசன் நன்றியோடு அமைச்சரைப் பார்த்தார்.

"உங்களைக் கேட்க வேண்டும் கேட்க வேண்டும் என்று அடிக்கடி ஒரு காரியத்தை நினைப்பேன். பிறகு மறந்து போய்விடுவேன்... ஆனந்த் என்ன நட்சத்திரம் என்று சொல்லுவீர்களா?"

வியப்போடு அமைச்சரைப் பார்த்தார் கணேசன்.

"மூலநட்சத்திரம். தனுராசி..."

அமைச்சர் பரவசமானார்.

"ஆண்மூலம் அரசாளும். நல்ல நட்சத்திரம்... ஆனந்த்தின் திருமண ஒழுங்குகளை வேறு சீக்கிரமே செய்தாக வேண்டும்... நீங்களும் ஆனந்தும் இங்கே திரும்பிவருகிறபோது நான் அதைப் பேசி முடித்து விடுவேன்..."

கணேசன் சிரித்தார்: "அதை உங்களுடைய பொறுப்பிலே நான் எப்போதோ விட்டுவிட்டேன்..."

இன்ஸ்பெக்டர் சூடாகவே நின்றார். தன்னைச் சந்திக்க வந்த பெண்களுக்கு உட்கார அனுமதி கொடுத்ததே மிகத் தவறான செயல் என்ற முடிவினுக்கு இப்போது அவர் வந்திருந்தார்.

"உங்களுக்குத் தெரியுமா? எத்தனை அமைச்சர்கள் அந்த அத்துமீறல் குடிசைகளைப் பற்றி எங்களுக்கு முறைப்பாடு செய்திருக்கிறார்களென்று. இன்று காலையில் கூட அமைச்சர் தனது நாயோடு 'வாக்' போயிருக்கிறார்... அது ஆயிரம் ரூபா விலையுள்ள அல்சேஷன் நாய். அந்த நாயை சேரி நாய்கள் திடீரென்று பாய்ந்து

கடித்துவிட்டன. இப்போது அந்த நாய் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கிறது... போய்ப் பாருங்கள்... எவ்வளவு பேர் அங்கே கவலையோடு நிற்கிறார்கள்... அப்படியொரு நாய் இந்த 'சிட்டி' யிலேயே அமைச்சர் ஒருவரிடம் மட்டுமே நிற்கிறது தெரியுமா...?"

மெல்லிய பெண் புன்னகை செய்தாள்.

"ஸார்... அதைப் பற்றியதல்ல இப்போ பிரச்னை. இந்தக் குடிசையை விட்டு அந்த மக்களை எப்படி நீங்க துரத்தியடிக்க முடியும்? அவர்களுக்கு உள்ள தெல்லாமே இந்தக் குடிசைதான். அவர்கள் எவ்வளவு கஷ்டமான நிலைமையிலை இருந்து கொண்டு இந்த மீன் பிடித் தொழிலைச் செய்கிறார்களென்று கொஞ்சம் யோசித்துப் பாருங்க..."

கறுப்பான பெண் தீட்சண்யமாக அவரைப் பார்த்தாள்.

"உல்லாசமாக வாழுறதுக்காக இந்தக் குடிசைகளை அவர்கள் போடவில்லை ஸார். அவர்களுக்கு ஒரு கூரை தேவைப் படுகிறது. அவ்வளவுதான்..."

இன்ஸ்பெக்டர் சடாரென்று எழுந்தார்.

"அவர் அவர் வேலையை, பிரச்சினைகளை அவர்களே பார்த்துக் கொள்ளுவார்கள்... உங்களுக்கு இதிலென்ன அக்கறை? பேசாமல் போய் விடுங்கள்..."

மெல்லியவள் இப்போதும் சிரித்தாள்.

"நாங்க இந்தக் குடிசைகளைப் பற்றி மட்டும் பேசுகிறவர்களில்லை ஸார்... சராசரி ஐந்துபேர் ஒரு சின்னக்குடிசையையும், முன்னூற்றி இருபது பேர் ஒரு குழாயையும், முன்னூறுபேர் கழிப்பறை ஒன்றையுமே சொந்தமாகக் கொண்டிருக்கிற அவலப்பட்ட மக்கள்

எல்லாரைப் பற்றியுந்தான் நாங்க அக்கறைப் படுகிற வர்கள்... உங்களோடை பேசி நியாயம் கிடைக்கு மென்று நாங்க நம்பி வந்தோம் என்று மட்டும் நீங்க நினைச்சிடாதீங்க... மாலா... வா நாங்கள் போய் வருவோம்...''

இன்ஸ்பெக்டர் 846 ஐ உரத்துக் கூப்பிட்டார்.

"இந்தத் தேவடியாளுகளை வெளியிலை பிடித்துத் தள்ளய்யா..." என்றவர் கெட்டவார்த்தைகளை சத்த மிட்டுச் சொன்னார்.

பெண்கள் இருவரும் 846 வருமுன்னர் விறுவிறு வென்று போலீஸ் ஸ்டேஷனை விட்டு வெளியே போய் விட்டனர். அவர்களைப் பிடித்து ஏதாவது ஒரு குற்றச் சாட்டின் பேரில். 'ரிமாண்ட்' பண்ணமுடியவில்லையே என்று எஸ். ஐ. மிகவும் கவலைப்பட்டுக் கொண்டார்.

## 6

ஒரு மணி நேரத்தினுள் பூகம்பம் தாக்கினாற் போல அந்தக் குடிசைப் பிரதேசம் சிதறிச் சின்னாபின்னப் பட்டிருந்தது. துண்டான மீன்பிடி வலைகள். கரும்பு சோகை. கிழிந்த தார்ப்பாய்கள். துண்டு துண்டான பாலிதீன் காகிதங்கள். தகரங்கள். வைக்கோல் சிதறல் கள். பழைய பாய்கள். தூரிகள்...துணிமணிகள்.

கடற்கரை மணலில் இரத்தம் சிதறலாயிருந்தது.

போலீஸாரை கடமை செய்ய விடாமல் தடுத்தவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்ததில் இரண்டு பேர் செத்துப் போய், மூன்று பேர் உயிருக்குப் போராடிய படி, நாற்பத்தேழு பேர் மருத்துவமனையில். பாதுகாப்பு கருதி முப்பத்திரெண்டு பேர் போலீஸ் காவலில்.

எதிர்க்கட்சிகள், இறந்துபோன உதயணனும், ராஜனும் எங்கள் கட்சித் தொண்டர்களே என்று சண்டையிட்டு கடைசியில் இரண்டு பேரையும் ஆளுக்கொரு கட்சியாய் பங்கு போட்டுக் கொண்டனர். அவர்களின் மரண ஊர்வலத்தை எந்தெந்த வழியால் கொண்டு செல்வது என்பது பற்றிப் பேச கட்சியின் செயலாளர்கள் ஐ. ஜி. அலுவலகத்திற்குப் புறப்பட்டு கொண்டிருந்தனர். ஐ. ஜி. அலுவலகத்தில் இதைப் பற்றி பேசி முடித்த பின்னரே' 'இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்குப் பொறுப்பான போலீசார் மீது உடன் நீதி விசாரணை மேற்கொள்ள வேண்டும்' என்ற கட்சியின் காரசாரமான அறிக்கையினை பத்திரிகைகளுக்கு கொடுக்க வேண்டுமென்பதில் இரு எதிர்க் கட்சித் தலைவர்களும் ஒருமித்த தீர்மானமாயிருந்தனர். □

(1985)

# மூன்றாவது மனிதன்

கிராமத்திலிருந்து வந்த ஒரு கிழமைக்குள்ளேயே திணறிப் போய் விட்டான், சுப்பிரமணி என்ற வினைதீர்த்த முருகேச சுப்பிரமணியன். மாமா கழுகாசலந்தான் அவனை சென்னைக்குக் கூட்டிக் கொண்டுவந்து திருவல்லிக்கேணி அருணாசலம் தெருவில் ரூம் ஒன்றில் குடியமர்த்தியது. சிலருடைய பெயரைக் கேட்டுவிட்டு அவருக்கும் பெயருக்குமுள்ள தொடர்பை நினைத்தால் விழுந்து விழுந்து சிரிக்கத் தோன்றும். ஆனால் பெயரைப் போல அர்த்தமுள்ளவர் கழுகாசலம்.

"ஆபீஸ்... ரூம்... சாப்பாட்டுக்கு ஹோட்டல்... அவ்வளவுதான்... அப்புறம் எனக்கு திருட்டு சமாசாரம் பிடிக்காதப்பா... தோளுக்கு மிஞ்சினால் தோழன் என்ற பழமொழியெல்லாம் நான் நம்புறதில்லை..."

"சரிங்க, மாமா..."

"என்ன சரிங்க...?"

கழுகாசலம் பளபளவென்று மின்னுகிற வழுக்கைத் தலையைத் தடவியபடியே சுப்பிரமணியை நேருக்கு நேராகப் பார்த்தார்.

''அதுதாங்க... நீங்க சொன்னது...''

''அப்புறம் பீடி, சிகரெட் பழக்கமுண்டா?"

கூச்சமாக அவரைப் பார்த்தான்: ''இல்லிங்க மாமா..."

''என்கிட்ட பொய் பேசக் கூடாது... அப்புறம் எனக்கு நெறைய கோபம் வரும்... உன்னோட அம்மா காலைப் பார்த்திருக்கியா?''

சுப்பிரமணி விழித்தான்.

''இனிப் பார்த்துக்கோ கணுக்கால்ல பெரிய வடு இருக்கும்... பொய் சொன்னா... அதுக்கு நான் அடிச்ச அடி...''

கழுகாசலம் பயங்கரமாகச் சிரித்தார். உருண்டையான முகம் இப்போது மேலும் விரிந்து பெருகிற்று. சதைக்குள்ளே கண்கள் கொஞ்ச நேரம் இடுங்கிப் போய் பின்னர் மெல்ல வெளித்தெரிந்தன.

''சினிமா பார்ப்பியா?"

''இல்லிங்க மாமா...''

"இல்லை?''— ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்தார் கழுகாசலம். அந்தத் தீட்சண்யமான பார்வை, அவனது நெஞ்சினுள்ளே மூலை முடுக்கெல்லாம் துருவித் துருவி ஆராய்வதை அவன் உணர்ந்து கொண்டான்.

''சுப்ரமணி...''

''மாமா...''

''எனக்குப் பொய் பிடிக்காதப்பா. முதல்லே சொன்னேன் இல்ல..."

''சரிங்க...''

''என்னோட பொய் பேசாதை...''

''சரிங்க மாமா...''

அவர், அந்த அறையிலிருந்து வெளியே போனவுடனே தன் மேல் அழுத்தியிருந்த பெரிய பாறாங்கல்லொன்று கீழே உருண்டு போனாற் போல ஆசுவாசமடைந்தான் சுப்பிரமணி. அப்படியே கட்டிலிலே துள்ளி விழுந்து படுத்துக் கொண்டான். பிறகு எழுந்து ஜன்னல் வழியாக வெளியே பார்த்தான். கழுகாசலம் பறந்து கொண்டிருந்தது. கையைத் தூக்கி கழுகாசலத்தின் பிடரியில் ஓங்கிக் குத்துவதுபோல பாவனை செய்து மிகுந்த சந்தோஷத்துடன் உரக்க சிரித்துக் கொண்டான். அதே சந்தோஷத்துடன் கட்டிலின் கீழே பாதுகாப்பாக வைத்திருந்த சார்மினாரையும் தீப்பெட்டியையும் எடுத்தான். ஸ்டைலாக சிகரெட்டை வாயில் பொருத்தினான்.

புகை வளையங்கள் விரிந்து மிதந்து அழிந்து மணமாய் அறையெங்கும் மிஞ்சிக் கொண்டிருந்தன.

"மை டியர் கழுகு... பாத்தியா நம்ம பயல் என்ன ஜோரா புகை விட்றான்... ஹூப்... ''எங்க அம்மாவை அடிச்சிருக்கிறாயா.... பார்ரா ஒரு நாளைக்கு உன் மொட்டையிலை நான் மத்தளம் வாசிக்கிறன். கழுகு... கழுகு...''

ஜன்னலருகே மீண்டும் போனான்.

''கழுகு... என்ன கேட்டே... சினிமா பார்ப்பியான்னா...பார்ரா இண்ணைக்கு மூணு ஷோவும் பார்க்கிறன்..."

சுப்பிரமணி கண்ணாடியின் முன்னே தனது முகத்தைப் பார்த்துச் சிரித்தான். பின்னர் இஸ்திரி போட்டிருந்த ஆடைகளை அணிந்து கொண்டு அங்கிருந்து புறப்பட்டான்.

தெருவெல்லாம் நிறைந்து பெருகி வழிகின்ற ஜனக் கூட்டம். ஜோல்னாப் பையைப் பத்திரமாகப் பிடித்துக் கொண்டே நடந்து கொண்டிருந்தான் சுப்பிரமணி. வீதிமருங்கிலே பிரமாண்டமாய்த் தெரிகிற சினிமாப் பட கட்—அவுட்டுகளை இடையிடை வேடிக்கை பார்த்தான். அதிலே அரைகுறை ஆடைகளோடு நிற்கிற பெண்களை நேராக நிமிர்ந்து பார்க்கவே வெட்கமாயிருந்தது. ஆனாலும் கட்டிடங்களைப் பார்ப்பது போல திருட்டுத் தனமாகப் பார்த்துக் கொண்டான். பார்த்து விட்டு ஓரமாக மீண்டும் நடந்து கொண்டிருந்தபோது தனக்குப் பக்கத்திலேயே ஒருவன் தொடர்ந்து வந்தபடியிருப்பதை கவனித்தான். சந்தேகத்தோடும் இலேசான அச்சத் தோடும் அவனைத் திரும்பிப் பார்த்தான். அவனுக்கு ஐம்பது வயதிருக்கலாம். கருகருவென்று அடர்ந்த தலை மயிரை வாரி விட்டிருந்தான். பூனைக்கண்கள். ஹிட்லர் மீசை. கசங்கிப் போயிருந்த கட்டம் போட்ட சர்ட். அது போலவே கசங்கிய பழுப்புநிற பாண்ட். இவன் பார்த்ததும் பவ்வியமாகச் சிரித்தான் ஹிட்லர் மீசை.

"என்ன?" —துணிச்சலை வரவழைத்துக் கொண்டே கேட்டான் சுப்பிரமணி.

ஹிட்லர் மீசை மீண்டும் இளித்தான். பின்னர் மிக உரிமையோடு சுப்பிரமணிக்கு அருகாக வந்தான். குரல் கிசுகிசுத்தது.

"வாங்க சார் போகலாம்... பக்கம் தான்..."

இவனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்தான்: "என்ன...என்ன விஷயம் இது?"

ஹிட்லர் மீசையின் வாயெல்லாம் பல்லாகியது.

"காலேஜ் கேர்ள்ஸ் சார். சிகப்பா லட்டாட்டம் இருக்கும். பயப்பட ஒண்ணுமில்லே...வாங்க சார்..."

சுப்பிரமணியின் பிடரியில் ஓங்கி அறை விழுந்தாற் போல அதிர்ந்து போனான். கணங்களின் பின்னரே ஹிட்லர் மீசை கூறியது மனதினுள் அர்த்தமாயிற்று, பயமும் எரிச்சலும் பிதுங்க அவனை முறைத்துப் பார்த் தான். ஹிட்லர் மீசை அதே இளிப்போடு தலையைச் சொறிந்து கொண்டான்.

''ஸ்டுடண்ட் லேடீசும் உண்டு சார்.... பக்கம்தான்...''

சுப்பிரமணி சுற்றுமுற்றும் பார்த்தான். அவர்களைக் கவனியாமலே ஜனவெள்ளம் பிரவகித்தோடிக் கொண்டி ருந்தது. தைரியத்தை வரவழைத்துக் கொண்டே அதட்டுகிற குரலில், ''நானெல்லாம் அப்படியான ஆளில்லை. போய்யா'' என்று விட்டு சுப்பிரமணி விறு விறுவென்று அங்கிருந்து அவனை முந்திக் கொண்டே நடந்து போய் ஜனத்திரளில் மறைந்து போனான். சினிமாவுக்கு போகிற எண்ணம் மறைந்து போய் விட்டது. ஒரு ஞாயிற்றுக்கிழமை இப்படி வீணாகிப் போய் விட்டதே என்று மனதினுள் குமைந்து கொண்டான்.

## 2

சுப்பிரமணிக்கு தூக்கமே வரவில்லை. ஹிட்லர் மீசையே மாறி மாறி மனந்தனிலே தோன்றிக் கொண்டிருந்தான். தன்னைப் பார்த்து என்ன தைரியத்திலே அவன் அப்படிக் கேட்டானென்று நினைத்துக் குழம்பிக் கொண்டிருந்தான். தன்னைப் பார்த்தால் பெண்வெறி பிடித்து அலைகிறவன் போலவா தெரிகிறது என நினைத்தவாறே எழுந்து கண்ணாடியில் தனது முகத் தைப் பார்த்துக் கொண்டான். அவன் முகத்திலே இன்னமும் குழந்தைத்தனமிருந்தது. இப்போதுதான்

மீசை அரும்பியிருந்தது- ஷேவ் கூட எடுத்ததில்லை இன்னமும். அந்த ஹிட்லர் மீசை தன்னை 'அப்படியான ஒரு ஆளாக' நினைத்து விட்டானே என நினைத்தபோது கவலையும் ஆத்திரமும் மனதிலே பெருகிப் புரண்டன.

மீண்டும் கட்டிலில் படுத்தான். கழுகாசல மாமா தற்செயலாய் மனதிலே வந்தார். ஹிட்லர் மீசை தன்னிடம் கேட்டதை அவர் அறிந்தால் என்ன நடக்குமென்று கற்பனை செய்து பார்த்தான். ஹிட்லர் மீசையின் மீசையையே பிடுங்கியெடுத்துவிட்டு போலீஸில் அவனை ஒப்படைத்திருப்பார். சுப்பிரமணிக்கு சிரிப்பு வந்தது. மத்தியானம் கழுகாசலமாமாவை கிண்டல் பண்ணியமைக்காக அவனையறியாமலே இப்போது கவலைப்பட்டான். என்ன இருந்தாலும் அவர் சொன்னதெல்லாம் எனது நன்மைக்காகத்தானே என நினைத்துக் கழிவிரக்கப்பட்டுக் கொண்டான். ஆனால் அவரின் அதட்டலுக்காக சிகரெட்டையும் சினிமாவையும் இழந்து விட அவன் தயாராக இல்லை.

கட்டிலிலிருந்து எழுந்து கட்டிலினடியிலிருந்த சார்மினாரை எடுத்தான். சிகரெட்டை வாயில் பொருத்திக் கொண்டே கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்தான். கிராமத்திலே தென்னந்தோப்புக்குள் திருட்டுத்தனமாயிருந்து அவனும் கிருஷ்ணனும் ஒவ்வொருநாள் அந்திக் கருக்கலிலும் சிகரெட் பிடிப்பார்கள். என்ன ஆனந்தமான சுகம், பரவசம், சந்தோஷம் அந்தப் பொழுதினிலே கிருஷ்ணன் வெகு அழகாக வளையங்கள் விடுவான். சின்னச்சின்ன வளையங்கள் அடுக்கடுக்காக மிதக்கும். மூக்கால் புகை விடுவான். அப்போதெல்லாம் சுப்பிரமணி அவ்வளவாக புகை வளையங்கள் விடமாட்டான். பாதி பயம். இங்கே வந்து மூன்று நாட்களில் என்னமாய் வளையங்களை மிதக்க விடுகின்றான். ஆனாலும் தென்னைமர மறைவிலிருந்து சிகரெட் பிடித்தபோது

உண்டான இன்பமும், த்ரில்லும் இங்கே கொஞ்சமும் கிடைக்கவில்லை என அவனது மனம் உணர்ந்தது. திருட்டுத்தனமாகக் கிடைக்கிற சுகத்தில் தனியான இன்பமிருப்பதாய் நினைத்தான்.

நகரத்திற்கு 'பாங்க்'கில் வேலை கிடைத்துப் புறப் படு முன் ஒரு வாரமாக கிருஷ்ணன் அவனை இணை பிரியாமலே இருந்தான். பத்தொன்பது வயது வரை அவர்களிருவரும் ஒருவரை ஒருவர் பிரிந்திருந்ததில்லை. இதுதான் முதற்தடவை. கிருஷ்ணன் மிகவும் கவலை யோடு காணப்பட்டான். கருஷ்ணனின் தங்கை வேணி யும் அப்படித்தானிருந்தாள்.

கிருஷ்ணன் இப்போது என்ன செய்து கொண்டிருப் பான்? அக்கா வனஜா வாங்கிக் கொடுத்த கைக்கடிகாரத்தை எடுத்து நேரத்தைப் பார்த்தான் சுப்பிரமணி. சரியாக நாலரை மணி. நாலரை மணிக்கு வழக்கமாக ஏரிக்கரையில்தான் அவனும் கிருஷ்ணனும் நிற்பார்கள். ஏரிக்கரையில் எப்போதும் மோகனமான தொருசூழ்நிலைகைகளை விரித்துப் பாடிக் கொண்டிருப் பதாய் அவன் எண்ணுவதுண்டு. மௌனமான ஏகாந்தம். எப்போதாவது இடையிட்டு 'கூக்கூ குக்கூ' என்கிற குயில் பேச்சு. தென்னைமரங்களில் அங்குமிங்குமாய் விளையாடுகிற அணில்கள். ஒன்றுடன் ஒன்று அலகு கோதி ஓய்வாயிருக்கின்ற ஜோடிக்காகங்கள்... வெய்யி லிலே சின்னச்சின்ன அலைகளைச் சிலிர்த்து பரவசமுற்று மினுமினுக்கிற ஏரியிலே மீனைத்தேடி ஒற்றைக் காலில் தவமிருக்கிற வெள்ளைவெளேர் கொக்குகள். கடைசி நாளன்று அந்தக் கொக்குகளைப் பார்த்துக் கொண்டே சுப்பிரமணியிடம் கிருஷ்ணன், "மணி... பட்டணம் போனாலும் கெட்டிராதாடா... ஜாக்கிரதை..." என்று அடங்கிய குரலிலே கூறினான். உடனேயே சுப்பிரமணி

புன்னகை செய்தான். "அப்படி ஆகமாட்டேண்டா. சத்தியமாடா" என்றான்.

திடீரென்று கிருஷ்ணனை பட்டண வாழ்க்கைக்குள் பொருத்திப் பார்த்தான் சுப்பிரமணி. இந்த நெருக்கடியான பட்டண வாழ்க்கைக்குள் கிருஷ்ணன் வெகு நிச்சயமாகத் திணறியே போயிருப்பான். எவ்வளவு ஜனங்கள். எத்தனை விதமான பெண்கள். விதவிதமான சினிமாக்கள். கிராமத்திலிருந்து எவ்வளவு தூரம் தள்ளிப்போய் சினிமா பார்க்க வேண்டியிருந்தது. அதுவும் ஆடிக்கொருநாள், அமாவாசைக்கொருநாள். எவ்வளவு கெஞ்ச வேண்டும். கிருஷ்ணனுக்கு சினிமா என்றால் மிகப்பிரியம். காதல் காட்சிகளில் மெய்மறந்து போயிருக்கிற அவனது பிடரியிலே இவன்தான் மெல்லத் தட்டுவது வழக்கம். இங்கே அவன் இருந்தால் தன்னைப்போல பெரிய மனிதனாய் எவ்வித அச்சமுமின்றி 'அடல்ஸ் ஒன்லி' சினிமா பார்ப்பான். அதெல்லாம் சரி. ஹிட்லர் மீசையோடு அவன் எப்படி நடந்து கொண்டிருப்பான்...?

சுப்பிரமணிக்கு சரியாகக் கற்பனை வரவில்லை.

சுப்பிரமணிக்கு பெண்களைக் கண்டாலே கூச்சம். வலிந்து வந்து, வேணி எவ்வளவோ பேசுவாள். ஆனால் மனதிலே நிறைய ஆசை இருந்தாலும் சுப்பிரமணி கூச்சப்பட்டு ஒன்றிரெண்டு வார்த்தைகளே பேசுவான். அவள் போன பின்னர் நிறையப் பேசியிருக்கலாமே என்று ஏக்கங் கொள்ளுவான். கிருஷ்ணனோ பெண்களோடு வசீகரமாகவும், சிரித்துச் சிரித்தும் பேசுவான். அவர்களுக்கு என்ன உதவி தேவையோ அவற்றையெல்லாம் வலிந்து போய் செய்து கொடுப்பான். அவனை எல்லோரும் 'கன்னிராசிக்காரன்' என்று செல்லமாகச் சீண்டுவார்கள். என்னவாயிருந்தாலும் பெண்களைக்

கெட்டதனமாகப் பேசினால் கிருஷ்ணனுக்கு முரட்டுக் கோபம் வந்து விடும். அறைந்து விடுவான்.

ஆகையால் அப்படி ஒரு அறையைத்தான் கிருஷ்ணன், ஹிட்லர் மீசைக்கு வெகு ஆத்திரத்தோடு வீசியிருப்பான்.

இரவு வெகு நேரத்திற்குப் பின்னரே சுப்பிரமணிக்குத் தூக்கம் வந்தது. உடனேயே ஹிட்லர் மீசையும் வந்தான். ''போலாமா? சிகப்பா லட்டாட்டம் லேடீஸ் சார்...பக்கந்தான்...'' என்றவாறே தலையைச் சொறிந்து கொண்டு பற்கள் தெரியச் சிரித்தான்.

## 3

'பாங்கில்'கில் வேலை முடிந்ததும் 'உடுப்பி ஹோட்ட'லில் காப்பி சாப்பிட்டான். உடம்பில் புதியதொரு உற்சாகம் ஏறிற்று. வெளியே வந்து சார்மினார் பாக்கட் ஒன்று வாங்கியவாறு பெருகிப்போகிற ஜனங்களைப் பார்த்தான். பார்த்துக் கொண்டே நிற்கலாம் போலத் தோன்றியது. சிகரெட் ஒன்றைப் பற்ற வைக்கலாமா என நினைத்தான். கழுகாசல மாமா அட்டகாசமாகச் சிரித்தார். எண்ணத்தை மாற்றிக் கொண்டே நடக்க ஆரம்பித்தான்.

பழைய புத்தகங்கள் பிளாட்பாரத்தில் நிறைத்து வைக்கப்பட்டிருந்தன. ஏதாவது வாங்கலாம் போலத் தோன்றியது. அடுத்த பக்கத்தில் பார்த்து விட்டு வாங்கி விடலாம் என நினைத்தவாறே நகர்ந்தான். பையனொருவன் சூடாகப் புத்தகங்களை விற்றுக் கொண்டிருந்தான். அட்டைகளில் பெண்கள் அம்மணமாயும், அம்மணத்தின் மேல் ஒரு துண்டோடும். இவனுக்கு தொண்டை அடைத்தது. உடம்பு நடுங்கியது. இலேசாக

வியர்வை. தலையங்கங்களை வாசித்தான், பச்சை பச்சையாகப் பேசிக் கொண்டிருந்தன. அங்குமிங்கு மாகப் பார்த்து விட்டு, "குப்புற விழுந்த குமுதினி'யைத் தூக்கினான். "வாங்றியா சார். பன்னிரண்டரை ரூபா" என்று அவன் கையிலிருந்த புத்தகத்தை பிடுங்குகிறாற் போல கேட்டான் பையன்.

இவன் புத்தகத்தை அப்படியே வைத்து விட்டு அங்கிருந்து புறப்பட்டான். இப்போது தன்னை யாரோ பின் தொடர்வதை உணர்ந்தவாறே திரும்பினான். ஹிட்லர் மீசை. இளித்தவாறே அருகில் வந்தான். இவன் வெகு சாதாரணமாக அவனைப் பார்த்து, "என்ன?" என்றான்.

ஹிட்லர் மீசை மீண்டும் சிரித்தான்.

"என்னைத் தெரியுமா?" என்று அவனைப் பார்த்து விஷமத்தனமாகச் சிரித்தான் சுப்பிரமணி. ஹிட்லர் மீசை மீண்டும் தலையைச் சொறிந்தவாறே, "ஆ... தெரியுமே... போன வாட்டி சாரை நான்தானே..." என்று தொடங்கினான். சுப்பிரமணிக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டது. முகத்துக்கு நேராகப் பார்த்து "வாயை மூடுய்யா... என்று அவனை அதட்டினான்.

ஹிட்லர் மீசையின் முகம் சுருங்கிப் போயிற்று.

"என்ன சொல்லு?" என்றான் மீண்டும்.

"ஐயா சூடாயிட்டீங்க" என்றவாறே, "அழகான காலேஜ் பொண்ணுங்க... வாங்க சார், பக்கந்தான்..." என மெல்லக் கூறினான் அவன். சுப்பிரமணி சுற்று முற்றும் பார்த்தான். அவரவர் அவர் பாட்டிலே இயங்கிக் கொண்டிருந்தனர். பரபரப்பான வேளை.

சுப்பிரமணி மெல்லச் சொன்னான்; "என் பின்னால வாப்பா..."

ஹிட்லரின் முகத்தில் துளிரிடுகிற சந்தோஷம்.

"சரிங்க..."

"உன் பேரென்ன?"

"வைத்தியநாதனுங்க. வைத்தி என்று கூப்பிடு வாங்க..."

"என்ன தொழில் செய்யிற?"

"........."

"ஆ இதுதானா தொழில்..."

வைத்தி பரிதாபகரமாகச் சிரித்தான்.

"ஆமாங்க..."

"குடும்பம் இல்லியா?"

"இல்லிங்க..."

"ஏன்?..."

"அது பெரிய கதைங்க..."

சுப்பிரமணி திடீரென நின்றான். எதிரே வருகின்ற குண்டான வழுக்கைத்தலை அவனைத் திகைக்க வைத்தது. அசப்பில் அந்த ஆள் கழுகாசல மாமாவைப் போல நிம்மதியாகத் திரும்பி வைத்தியைப் பார்த்தான். வைத்தியின் முகம் வாடிப்போய் கவலை தெரிந்தது. சுப்பிரமணி சட்டைப்பைக்குள் கையை விட்டான். பணமிருந்தது. அவனது மனதுள் திட்டமொன்று உருவாகி யிருந்தது.

எதிரே தெரிந்த ஓட்டலினுள் போனான்.

வைத்தி தயங்கிக் கொண்டு வாசலிலேயே நின்றான்.

அதட்டுகிறாற் போல கூறினான் சுப்பிரமணி:

"பின்னால வாப்பா..."

"சரிங்க சார்..."

இருவரும் எதிரெதிராக உட்கார்ந்து கொண்டனர். வைத்தி கூசிக் குறுகியவாறே அவதிப்படுவதை முகம் தெட்டந் தெளிவாகக் கூறிற்று.

"என்ன சாப்புடுற?"

அவன் தயக்கத்தோடு நிமிர்ந்தான்.

"ஏதாச்சும், சார் இஷ்டம்..."

"மத்யானம் சாப்பிட்டியா?"

"இல்லிங்க..."

"ஏன்?"

வேதனையோடு சிரித்தான் வைத்தி.

"கிராக்கி கெடச்சாத்தான் சாப்பிடலாமுங்க ..."

சுப்பிரமணிக்கு சிரிப்பு வந்தது.

"அப்ப நான்தான் உன்னோட முதல் கிராக்கி..."

வைத்தியால் அவனை நிமிர்ந்து பார்க்க முடி வில்லை.

"பிரியாணி சாப்பிடறியா?..."

"வேணாங்க..."

"இல்லை சாப்பிடு..."

"சரிங்க..."

"மட்டனா, சிக்கனா?"

"சார் இஷ்டம்..."

சர்வரிடம் ஒரு சிக்கன் பிரியாணிக்கும், சமோசாவுக்கும் ஆர்டர் கொடுத்தான் சுப்பிரமணி. "சமோசா சாப்பிட்ட பிறகு காப்பி"

வைத்தி சாப்பிடுவதையே பார்த்துக் கொண்டிருந்த சுப்பிரமணியின் மனதிலே இனிமேல் வைத்தி தான் கிழித்த எந்தக் கோட்டையும் தாண்ட மாட்டானென்று நம்பிக்கை உருவாயிற்று. மறுகணமே மனதினுள் சந்தோஷம் கிளுகிளுத்தது. கிராமத்திலே இருக்கையில் மனதினுள் உறங்கியிருந்த ஆசைகளெல்லாம் மெதுமெதுவாய் இப்போது உயிர்ப்புற்றுக் கொண்டிருந்தன.

காப்பியை உறிஞ்சியபடியே வைத்திக்கு மட்டுமே கேட்கும்படி மெதுவாகக் கிசுகிசுத்தான் சுப்பிரமணி.

"எத்தனை பொண்ணுங்க இருக்காங்க..."

சாப்பிடுவதை நிறுத்திவிட்டு இறங்கிய குரலிலே பதில் சொன்னான் வைத்தி.

"ஒரு பதினைஞ்சு வருங்க..."

"ஆ... அவ்வளவா?"

"ஆமாங்க. கேரளா, ஆந்திரா பொண்ணுகளும் உண்டு சார். நீங்க வாங்க. 'ரேட்' டெல்லாம் கம்மிதான். நீங்களே பார்த்து 'செலட்' பண்ணுங்க சார்..."

காப்பிக் கோப்பையை மேஜையில் வைத்து விட்டு வைத்தியையே கொஞ்சநேரம் உறுத்துப் பார்த்தான் சுப்பிரமணி. களைத்திருந்த வைத்தியின் முகத்தில் இப்போது பிரகாசம், உற்சாகம்.

சார்மினார் பாக்கெட்டை எடுத்து ஒரு சிகரெட்டை உருவி எடுத்தான் சுப்பிரமணி: "சிகரெட் பிடிப்பியா?"

கூச்சத்தோடு அவனைப் பார்த்தான் வைத்தி.

"இப்படி என்னோட ஆருமே அன்பா பழகினதில்லை சார்..."

அவனது வார்த்தைகள் தளதளத்தன.

"ஐஸ் வைக்காத. சிகரெட் பிடிப்பியா?"

சிகரெட்டை வாங்கிக் கொண்டே, "நான் பொய்யே சொல்லல்ல சார். நிஜமா என்னோட நீங்கதான் இப்படி அன்பா நடந்திருக்கிறீங்க..."

சிகரெட்டை ஊதியவாறே அவனைப் பார்த்தான் சுப்பிரமணி.

"அப்படியா? எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கு வைத்தி..."

பரவசமானான் வைத்தி: "டாங்சுங்க"

"என்ன?" நையாண்டியாக அவனைப் பார்த்தான் சுப்பிரமணி.

"இல்லைங்க. ரொம்ப நன்றிங்க..."

"ஆ..."

பில்லுக்குரிய பணமாக இருபது ரூபாவை தட்டிலே வைத்துவிட்டு, தட்டிலிருந்த குச்சியை எடுத்துப் பல்லு குத்தினான் சுப்பிரமணி.

வைத்தி திடுமெனக் கேட்டான்.

"சாருக்குப் பூர்விகம் எதுங்க?"

"சோழவந்தான்..."— அக்கறையின்றிப் பதில் சொன்னான் சுப்பிரமணி.

"சோழவந்தானா?"— வைத்தி அதிர்ச்சி கலந்த ஆனந்தத்தோடு சுப்பிரமணியைப் பார்த்தான். இப்போது அவனது முகத்திலே மரியாதையும், பயபக்தியும் புலப்பட்டது. கண்களிலே இனந்தெரியாத கனிவொன்று தெரிவதனை உணர்ந்து கொண்டான் சுப்பிரமணி. சிறிது நேரம் கழிய முன், வைத்தி பணிவான குரலிலே கேட்டான்.

"சாருக்கு மகாலிங்க பாகவதரை தெரியுங்களா?"

சுப்பிரமணிக்கு அவனது மாற்றங்கள் அதிசயமாயிருந்தன. வைத்தியோடு சற்று விளையாட வேண்டும் போலத் தோன்றியது. சிரிப்பை மனதினுள் விழுங்கிக் கொண்டு வெகு இயல்பாக வைத்தியை நோக்கினான்.

''மகாலிங்க பாகவதரா? அவர் எனக்குப் பெரியப்பா வேணும்...''

அந்த வார்த்தைகள் முடிய முன் நாற்காலியிலிருந்து திடுமென எழுந்தான் வைத்தி. சிலிர்த்துப் போய், எல்லை மீறிய பரவசத்தோடு கைகளைக் கூப்பியவாறு தளுதளுத்தான்.

''சார்... நீங்க பெரிய ஆளுங்க சார்... என்னை மன்னிச்சுடுங்க சார்...''

சுப்பிரமணி திகைத்துப் போய் விட்டான். இந்த மகாலிங்க பாகவதருக்கு இப்படியொரு ரசிகனா என வியந்தவாறே சுற்று முற்றும் பார்த்து விட்டு கடிகிறாற் போல, ''வைத்தி, ஆரும் பார்த்தா சிரிப்பாங்க. பேசாம உட்காரு'' என்றான்.

வைத்தி உட்கார்ந்து கொண்டான்.

''எனக்கு சாருக்கு முன்னாலே உட்காரவே உடம்பு சிலிர்க்கிறாப் போல இருக்குதுங்க...''

அவன் வார்த்தைகளில் உண்மையே தொனித்தது. சுப்பிரமணி மனதினுள் சிரித்தவாறே, ''பெரியப்பாவுக்கு என் மேலதான் ரொம்பவும் இஷ்டம்'' என்று கூறிவிட்டு வைத்தியைப் பார்த்தான்.

''அப்டீங்களா? அவர் எவள பெரிய பாகவதர் சார். அவர் பாடினா சோறு தண்ணியே இல்லாம நாள் கணக்கா கேட்டிட்டிருக்கலாம் சார். கிட்டப்பாவையே கலங்கடிச்சவர் சார் அவர். நீங்க வேதாள உலகம் பார்த்திருக்கீங்களா சார். ஆதித்தன் கனவு, ஞான சௌந்தரி,

நாமிருவர் எல்லாம் பார்த்திருக்கீங்களா? நிஜமாகவே ஆளைப் பார்த்தா பாகவதர் ஒரு ராஜா மாதிரி இருப்பார். இந்த ரெண்டு கண்ணாலயும் அவரை நான் பார்த்திருக் கிறன் சார்...சே அவரோட ஆக்டிங் என்ன...வாய்ஸ் என்ன... அவர் போனதுக்கப்புறம் நான் சினிமாவே பார்க்கிறதில்ல சார்... இப்ப எல்லாம் இன்னா சார் பாட்டுப் பாடுறானுங்க..."

தன்னை மீறிய பரவசத்தில் மிதந்து முகமே மாறிப் போய் விட்ட அவனை அதிசயத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான் சுப்பிரமணி. இதுவரையும், தான் கண்டிருந்த வைத்தி மாறிப்போய் இப்போது வேறொரு வன் அவ்விடத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பது போலொரு பிரமை. இவனது முகம் மிகவும் தெளிவாயிருக் கின்றது. இயல்பாகவே புன்னகை செய்கிறான். உணர்ச் சிமயமாகிப் பேசிக் கொண்டிருக்கின்றான்.

"அவர் பாடின பாட்டெல்லாம் எனக்கு தலை கீழ்ப் பாடமுங்க...' லைலா மஜ்னுவிலை ஒரு பாட்டுப் பாடியி ருக்கிறார்ங்க... என்னது... பறந்து செல்லுதே என் பைங் கிளியதே... சே! என்ன பாட்டுங்க அது... பாட்டைக் கேட்டால கண்லே குடம் குடமாக தண்ணி ஓடுங்க..."

கொஞ்சநேரம் அவனது முகத்திலே கவலை பரவியது. சோகம் பொதிந்திட தன்னை மறந்தவனாகக் கூறினான்:

"அதல்லாம் ஒரு காலமுங்க..."

'பில்' பணம் கொடுத்துவிட்டு சுப்பிரமணி எழுந்ததும் வைத்தி அவனைப் பார்த்துக் கேட்டான்.

"நீங்க என்ன வேலை பார்க்கிறீங்க சார்?..."

சொன்னான்.

"அப்ப பெரிய ஆபீசராக்கும்..."

வெறுமனே சிரித்தான் சுப்பிரமணி.

"வைத்தி நான் மறுபடியும் பார்க்கிறன்... பணம் ஏதாச்சும் வேணுமா?"

"வேண்டாங்க, ரொம்ப டாங்சுங்க..."— அவன் நெகிழ்ந்து போனான்.

மரியாதையோடு சிரித்துவிட்டு அங்கிருந்து நடந்தான் வைத்தி. சுப்பிரமணி அவன் நடந்து செல்வதையே பார்த்துக் கொண்டு நின்றான். நாளைக்கு தான் கேட்கிறதை அவன் எத்தகைய மனோநிலையோடு ஏற்றுக் கொள்வான் என்பதை கற்பனை செய்து பார்த்தான். ஸ்டூடன்ஸ்தான் வேண்டுமென்று சுப்பிரமணி கேட்டால் எவ்வித மறுப்புமின்றி"சரி போலாம் வாங்க. லட்டாட்டம் இருக்கும்" என்று வைத்தி சொல்வதை நினைத்தபோதே சுப்பிரமணிக்கு உடலில் இனந்தெரியாத கிளுகிளுப்பும், அவனை மீறிய புன்னகையும் உண்டாயிற்று.

இரவு முழுவதும் சுப்பிரமணிக்கு ஒரே கனவுகள்.

அழகழகான பெண்கள். ஸ்டூடன்ஸ், நர்ஸ், கேரளம், கன்னடம், ஆந்திரா. சிந்தி...கடைசியில் வேணி. இன்னும் பல கிராமத்துப் பெண்கள், இவனுக்குப் பரவசமாயிருந்தது. பார்த்துக் கொண்டிருக்கையிலே கிருஷ்ணன் வந்து 'கெட்டுப் போயிராதடா... கெட்டுப் போயிராதடா' என்று கெஞ்சினான். இவன் அவனை நையாண்டி பண்ணி விரட்டுகிறான். வைத்தி, மகாலிங்க பாகவதரின் பாட்டைப் பாடிக்கொண்டே வருகிறான். இவனுக்கு அரைகுறையாக இப்போது ஞாபகத்தில் வருகிறது. டி. ஆர். மகாலிங்கம் நடித்த 'திருவிளையாடல்' படத்தை அவன் டூரிங் தியேட்டரில் பார்த்திருக்கிறான். மனிதன் நன்றாகத்தான் பாடுகிறார். அந்தக் காட்சி தோன்றுகிற போதே இடிச்சிரிப்புடன் கழுகாசலம். ஹொஹ் ஹொஹ் ஹோ...

திடீரென்று படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து கொண்டான் சுப்பிரமணி. பிறகு அவனுக்குத் தூக்கமே வரவில்லை.

## 4

சாயந்தரம் வீட்டுக்குப் போய் குளித்தான். நன்றாகத் தலை வாரிக் கொண்டு பவுடர் பூசியவாறு கண்ணாடி முன் நீண்ட நேரமாக நின்று பார்த்தான். மீசையின் பூனைமயிர்களுக்கு கருமை போதவில்லை. கொஞ்ச நேரம் யோசித்து விட்டு தீப்பெட்டியை எடுத்து இரண்டு மூன்று குச்சிகளைப் பற்றவைத்தான். சிறிது எரிந்ததும் அவற்றை அணைத்தான். அந்தக் கரிக் குச்சியால் அப்படியே மீசையில் கருமையாய் இழுத்து இழுத்துப் பூசினான். இப்போது மீசை பளபளவென்று கருமையாய் தெரிந்தது. சந்தோஷத்துடன் விசிலடித்துக் கொண்டான். ஷேர்ட் கைகளை மடித்துவிடவில்லை. இரண்டு மூன்று வயது அதிகரித்தாற் போன்ற தோற்றம் தனக்கு கிடைத்தமையையிட்டு மிகவும் மனத் திருப்தி அவனுக்கு.

ஜன்னல் பக்கமாகச் சென்றான்.

பால்கார முனியம்மா, துளசி, கற்பகம், பூக்காரிகள், காய்கறிக்காரி, சல்வார் கமிஸ், பாவாடை தாவணி. அக்ரகாரத்து மாமிகள். எல்லாமே பெண்கள். பெண்கள். இதோ ஒரே ஒரு ஆணாக வருகிற உச்சிக்குடுமியோடான சிவப்பான ராமானுஜ ஐயங்கார். எந்த நேரமும் 'இந்து'ப் பேப்பரையே துளாவிக் கொண்டிருக்கிறமையால் அப் பகுதி 'இந்தையங்கர்' என்ற பெயராலேயே அவர் அறியப்படுவர். லொக் லொக்கென்று இருமிக்கொண்டே இவன் நின்ற ஜன்னல் பக்கமாகப் பார்த்தார். இவன்

நைஸாக அங்கிருந்து நழுவி உள்ளே வந்துவிட்டான். இந்தையங்கர் கண்டால் கழுகாசலத்தைப் பற்றி விசாரிப் பார். 'இந்து'வின் அன்றைய ஆசிரிய தலையங்கத்தை வியப்பார். ஜி. என். ரெட்டியின் 'ரிப்போர்ட்டிங்' பற்றி 'ச்த்ச்'கத்தை கொட்டுவார்... இவன் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான். அவரின் முதுகு தொலைவில் தெரிந்தது. வெளியே வந்து கதவைத் தாளிட்டுக் கொண்டான்.

பாக்கட்டைப் பார்த்தான். பத்துப் பத்து ரூபா நோட்டாக ஏழு. தனியாக நாலு பத்து ரூபா நோட்டு களை 'பாண்ட்' பாக்கட்டுள் வைத்திருந்தான். அதை விடச் சில்லறையாக பதினேழு ரூபா அறுபது காசு.

பஸ் உடனேயே கிடைத்தது.

இறங்கியதும் தலையை வாரிக் கொண்டான்.

நடந்தான்.

கண்களில் வைத்தி இப்போது தெரிந்தான். யாரோ ஒரு இளைஞனோடு தனியாகப் பேசிக்கொண்டு நின்றான். சுப்பிரமணிக்கு சிரிப்பாக வந்தது. 'கிராக்கி பிடிச்சுட்டான் வைத்தி...'

ஓரமாக ஒதுங்கி நின்று ஓரக்கண்ணால். வைத்தியைப் பார்த்தவாறே சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டு நின்றான்சுப்பிரமணி. வைத்தி தன்னை இரண்டு மூன்று முறை பார்த்ததைக் கவனித்தான். ஆனால்,தான் வந்ததை யிட்டு வைத்தி அக்கறையேயின்றி நிற்பது உடனேயே இவனது மனதில் எரிச்சலை ஊட்டிற்று. வாய்க்குள் திட்டிக் கொண்டே முன்னே போய் வைத்திக்கு நேராக நடந்து சென்றான். வைத்தியின் முகத்தில் எவ்வித மாற்றமுமில்லை. இளைஞனுடன் தீவிரமாகப் பேசிக் கொண்டிருப்பதைப் போல பாவனை செய்தான்.

'உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்கிற நாய்' என்று மனதிற்குள் திட்டிக் கொண்டே அவனைப் பார்த்துக் கொண்டு நின்றான். இரவு கண்ட கனவுகளெல்லாம் மெதுமெதுவாக கலைகிறாற் போல மனம் துணுக்குற்றது. வைத்திக்கு அருகே சென்றதும் அவன், "கொஞ்சம் நில்லுங்க சார்..." என்று அந்த இளைஞனிடம் சொல்லிவிட்டு சுப்பிரமணிக்குப் பக்கத்தில் வந்தான்.

"எங்க சார் வந்தீங்க?" என்றான்.

சுப்பிரமணிக்கு எரிச்சல் வந்தது. எனினும் தன்னைச் சமாளித்துக் கொண்டு முகத்தை இயல்புக்கு கொண்டு வந்தான். பின்னர் புன்னகையோடு "போலாமா?..." என்று வைத்தியிடம் கேட்டான்.

வைத்தியின் முகம் மாற்றம் கண்டது. தலையைச் சொறிந்துவிட்டு சுப்பிரமணியை நிமிர்ந்து பார்த்தான்

"வேணாங்க..."

மனதுக்குள் கோபம் பெருகிற்று சுப்பிரமணிக்கு.

"என்ன வைத்தி... ஏன் வேணாம்?"

வைத்தி தெளிந்த முகத்தோடு அவனைப் பார்த்தான்.

"இல்லிங்க சார் ..நீங்க போயிடுங்க. நீங்கல்லாம் இப்படிக் கெட்டுப் போயிடாதிங்க. ஊருக்குப் போயி நல்ல பொண்ணாப் பார்த்து கல்யாணம் கட்டிக்குங்க. நீங்கல்லாம் நல்ல ஆளுக சார். நான் பாகவதருக்கு துரோகம் பணணமாட்டன் சார்... என்னைக்காவது ஒரு நாள் பாகவதர் பொறந்த இடத்துக்குப் போய் அந்த மண்ணை மிதிக்கணுமின்னு எனக்கு ஆசை இருக்குது சார்...".

அவன் சொல்லி முடித்த உடனே அங்கிருந்து புறப்பட்டு விட்டான். சுப்பிரமணி வாயடைத்து திகைத்துப் போய் நின்றான். அவனுக்கு எதுவுமே புரியவில்லை.

☐ (1985)

# அந்திப்பொழுது

அந்தக் கொழுத்த உடும்பு தன்னிடமிருந்து தப்பிப் போனது ஐயனுக்கு எல்லை மீறிய கவலையினைக் கொடுத்தது. மிகவும் கொழுத்த, முற்றிய மரவள்ளிக் கிழங்கு போல உடல் திரண்ட நல்ல இரை.

காயான் மரத்துக்கு அருகே அந்த உடும்பினைக் கண்டதும் மெதுவாகப் பதுங்கியவாறு கும்முனைச் செடிகளின் மேலே தவழ்ந்து சென்றும் அந்த உடும்பினைப் பிடிக்க முடியவில்லை. அது அரவமறிந்து சரசரவென்று செடிகளை மிதத்தி முதுகு நிமிர்ந்திருந்த கருங்கற்பாறையின் மேலே ஏறி அப்படியே நாவல் மரத்திற்கு அருகிலுள்ள பற்றைச் செடிகளின் பசுமைக்குள் வேகமாகக் கரைந்து போயிற்று.

ஐயனுக்கு இது மிகவும் கவலை. காட்டுக்குப் புறப்படவென்று எண்ணியிருக்கவில்லை அவன். அதனாலே தனது இரு சகபாடிகளையும் கூட்டிவரவில்லை. வெறுமனே சுரைக்குடுவையினை மட்டும் எடுத்துக் கொண்டு புறப்பட்ட அவனுக்கு, அன்றைக்கு அந்தக் காட்டுக் கத்தியைக் கூட எடுத்துக் கொள்ளத்தோன்றா

தது மிகவும் எரிச்சலையூட்டுகின்றது. அல்லாவிட்டால் அந்தக் காட்டுக் கத்தியை வீசியெறிந்தே அந்த உடும்பினைச் செயற்படாமற் செய்திருப்பான்.

உடும்பைப் பிடிப்பதற்குள்ள சுகமான வழி அதனைக் காயமடையச் செய்வதுதான். அதுவும் பின்னங்காலினை ஊனப்படுத்தி விட்டால் எப்படியும் அது கைக்கு எட்டியதற்குச் சரி. மற்றப்படி அதனை ஒரே தாக்கில் கொல்வதென்பது மிகவும் சிரமமான காரியமே. கடைசி மூச்சு வரையில் அது திடமாகப் போராடிக் கொண்டே தப்பித்து விடும். பிடிவாதமான மிருகம்.

உடும்பு வறுவல் என்றால் ஐயனுக்கு மட்டுமல்ல எல்லோருக்கும்தான் நன்றாகப் பிடிக்கும். கட்டியான சதை. அந்த இறைச்சியைச் சாப்பிட்டவுடன் உடலிலே உடனே சேர்ந்து விடுகின்றது. உடலிலேயுள்ள எந்த முறிவு நெரிவையும் உடும்பு இறைச்சி நேர்ப்படுத்தி விடுகின்றது. அதனைத் தோல் உரித்து, குடல் முதலிய வற்றை வீசிவிட்டு செந்தணலிலே வாட்டி எடுத்துத் தின்பது தனியான ருசி. அதுவும் புதிதாக இறக்கப்பட்ட தென்னங்கள்ளும், சாமிப்பிட்டும் இருந்து விட்டால் அதற்கு நிகரான விருந்தாக எதைக்கூற முடியும்?

ஐயனின் வீட்டிலே சாமித் தானியத்தை நன்றாகக் குற்றி மாவாக்கி வைத்திருக்கிறாள் கிட்டி. குடிசையின் பின்புறத்திலேயுள்ள பதினான்கு தென்னைகளிலே முட்டி கட்டியிருக்கிறான் ஐயன். அந்த அயலிலே அவனோடு மூவருக்கு மட்டுந்தான் இப்படியான தென்னைகள் கிடைத்திருக்கின்றன. ஏறுபட்டி, தளநாரோடு ஐயன் புறப்பட்டானென்றால் அந்தப் பகுதி முழுவதுமே அன்று ஆனந்தமடையும். எல்லாக் கலயங்களிலும் கள் நிறைகிறபோது எவருடைய மனந்தான் ஆனந்த மடைவதில்லை?

நேற்றுத்தான் கள் இறக்கினான் ஐயன். இன்றைக்கு லேசாகப் புளித்திருந்தாலும் உடும்பு இறைச்சியோடு அதைக் குடிப்பதென்றால் நல்ல ருசியாக இருக்கும். கிட்டி கூட கொஞ்சம் கூடுதலாகக் கள் குடிக்க விரும்பு வாள்.

வெகு தூரம் வரை பன்புற்கள் பரவி நின்றன. இடையிடையே சீறி எழுந்து நிற்கிற பாலைமரங்கள் பிணைபட்ட கொடிகளால் மூடுண்டு, கொடிப் பூக்கள் சோம்பலோடு இதழ் விரித்து நிழலினுள் அடங்கியிருந் தன; மிருகங்களிற்கும், குருவிகளுக்கும் அடைக்கல மளித்திருந்தன. வயதான நாவல் மரங்கள் நிரையிட்டு, அடர்காட்டிற்குத் தொடக்கம் காட்டியிருந்தன. அந்த எல்லையைத் தாண்டி விட்டால் திடீரெனச் சூழ்நிலையே மாறிவிடும். சில்வண்டுகளும், கானாக்குருவிகளும் பரபரத்து ஓசையிடும். இடையிடையே மஞ்சள் வாற் குருவி ஒரு நீளத்திற்குக் கூவிக்கொண்டு இறகை யடித்துக் கொண்டு அந்த அடர்காட்டினைச் சிலிர்க்க வைக்கும். குளத்தில் விழுந்த கல், வளையங்களை மிதக்க விடுவது போல இந்தக் குருவியின் ஆர்ப்பரிப்பு எல்லாக் காட்டினையும் அதிரச் செய்யும். குரங்குகள் கொடிகளிலே தாவிக் குருவிகளை எழுந்து பறக்க வைக்கும். பிறகு தாமே பரபரப்பைத் தோற்றுவித்துக் கீச்சிடும்.

இவையெல்லாம் ஐயன் வழமையாகவே காணுகின்ற காட்சிகள் தான். ஆனால் சரிந்திருக்கின்ற விண்ணாங்கு மரத்திலேயிருந்தபடி யோசனையில் ஆழ்ந்திருக்கிற போது, இன்று இவையெல்லாம் தனக்கு அந்நியப்பட்டி வக்கின்றதெனப் பிரமை கொண்டான் ஐயன். எல்லாம் இந்த உடும்பை இழந்ததால் வந்த வெற்றுணர்வுதான்.

முசுறுகள், காய்ந்த இலையொன்றோடு வந்து அவனது முதுகிலே சிதறின. இவன் அவற்றை முதுகிலேயே வைத்து நசுக்கிக் கொன்றான். வழமையாகவெனில் முசுறுகளை அவன் கொல்லாமல், வெகு அவதானமாக அவற்றைத் தூக்கிப் பாதுகாப்பாகத் தூர விட்டு விடுவான்.

முசுறுகள் அறிவுகெட்ட பிராணிகள். சிவபெருமானை நோக்கி எல்லா முசுறுகளும் தவம் இருந்தனவாம். அகோர தவம். அவற்றின் மனதிலே தாங்கள் உலகில் மனிதனைவிடப் பலம் பெற வேண்டுமென்ற எண்ணம் முளைத்து விட்டதாம். மனிதனைத் தாங்கள் கடித்தால் மனிதன் இறந்துவிட வேண்டுமென்று கடவுளைக் கேட்க அவை நினைத்து விட்டன இதைக் கடவுள் அறிந்து விட்டார். முசுறுகளின் தவம் உச்ச நிலைமையினை அடைந்தபோது, கடவுள் அவற்றின் முன்னே தோன்றி உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். உடனே முசுறுகள் தாங்கள் கடித்தால் மனிதன் செத்துவிட வேண்டும் என்று வரம் பெறுவதற்கு நினைத்தவாறு கேட்க முனைந்த போது, கடவுள் அவர்களின் நாக்கினிலே மனிதன் என்ற சொல்லை வராமற் தடுத்து விட்டார். உடனே முசுறுகள் 'நாங்கள் கடித்தால் செத்துவிட வேண்டும்' என்று கடவுளிடம் வரங் கேட்க, கடவுள் 'அப்படியே ஆகட்டும்' என்று சொல்ல அன்றிலிருந்து முசுறுகள் யாரைக் கடித்தாலும் உடனே தாமே செத்துப்போய் விடுகின்றனவாம். இதைப் பட்டங் கட்டி சின்னையாதான் ஐயனுக்குச் சொன்னார்.

பட்டங்கட்டி சின்னையா உண்மை சொல்கிற மனிதன். முசுறுகளின் கதை உண்மையானது என்று ஐயன் உறுதியாக நம்பினான். அந்தத் துர்ப்பாக்கியமான பிராணிகளை சாதாரண நேரங்களிலே இதனாலே தான் அவன் கொல்வதில்லை. முசுறுகளைப் போலவே

உடும்புகளுக்கும் கடவுள் ஏதாவது வரம் கொடுத்திருக்க லாம். தந்திரமான, திடகாத்திரமான பிராணி. இன்றைக்கு மட்டும் அந்தக் கொழுத்த உடும்பு ஐயனின் கைகளுக்கு அகப்பட்டிருந்தால் அவன் இந்நேரம் வீட்டிலே மகிழ்ச்சிப் பரபரப்பில் திளைத்துப் போயிருந் திருப்பான்.

பட்டங்கட்டி சின்னையாவுக்கு ஐயனின் மேல் நல்ல அபிமானமிருந்ததால், குருவிக்கல் கிராமத்திலே வாழு கின்ற எல்லாக் குடும்பங்களுக்கும் ஐயனின் மேல் மதிப் பும் மரியாதையுமிருந்தது. என்ன பிரச்சினை ஏற்பட்டா லும் அதனைத் தீர்த்து வைக்கும் உரிமையும் ஐயனுக்குத் தான் இருந்தது. ஐயனை மீறினால் அல்லது ஐயனே தானுக முன்வந்து ஏதாவது பிரச்சினையைப் பட்டங் கட்டி சின்னையாவிடம் கொண்டு போனால்தான் உண்டு. ஐயனின் குரலுக்கு உள்ள மரியாதை இது.

"எடே ஐயா, உங்கடை உலகம் காடுதானடா... மிருகசாதியை வேட்டையாடுகிற வேடுவன்களுக்குத் தங்களுக்குள்ளை சண்டையிருக்கப்படாதடா... நான் சொல்லுகிறது கேட்டதாடா... இப்படித்தானடா முந்தி யொரு காலத்திலே சிவபெருமான்..."

இப்படிப் பட்டம் கட்டி சின்னையா கூறத்தொடங் கியதும், ஐயன் அவருக்கு முன்னேவெகு மரியாதையாக சம்மாளமிட்டு உட்கார்ந்து அவர் கூறுகிறதை நிறைந்த கவனிப்போடு கேட்கத் தொடங்கி விடுவான்.

## 2

கிட்டி, காவல் கொட்டிலின் அருகாக நின்று சோளஞ் சேனையைப் பார்த்துக் கொண்டு நின்றாள். கண்தூரத் திற்குச் சோளஞ்செடிகள் பசும் அலையாய்த் தெரிந்தன.

இடையிடையே எரிந்து கருகிய மரங்களின் கிளைகள் அபயங் கோரி நிற்பன போலத் துருத்திக் கொண்டு தெரிகின்றன. வாலாட்டிக் குருவிகள் கூட வந்திருக்க முடியாத அளவிற்கு அம் மரங்களின் கிளைகள் கருகிக் கூர்மையடைந்திருந்தன.

இந்த மரங்களைப் போல விறைப்பாகத்தான் சேனைக்காவல் காக்க வேண்டும். கிட்டியும் ஒரு விதத்தில் இம் மரங்களைப் போலத்தான்; சேனைக் காவலில் அவ்வளவு கவனமானவள். அவள் காவல் காத்துக் கொண்டு நிற்பதைப் பார்க்கின்ற எவருமே, அவள் வடிவழகில் லயிக்கவே செய்வார்கள். நீரோடையருகே செழித்த வாழை மரம் அவள். இன்னுமின்னும் குட்டிகளை ஈன்று பார்வைக்கு ரம்மியமளிக்கிற வாழை போலவே, பதினொரு பிள்ளைகளைப் பெற்றும் இன்னும் இளமையின் வேகமாய் பொலிவாய், சிலிர்ப்பாய், உற்சாகமாய் நிற்கிறவள் கிட்டி. நீண்ட கழுத்திலே ஆண்மயிலின் கம்பீரம், பளீரிடுகிற கறுப்பு நிறம், வெற்றிலை போட்டே சிவந்தஉதடுகள். தழையும், மடலுமவிழ்ந்து நிற்கிற சோளம் பொத்திபோலவே அச்சேனையில் அவள். இந்தப் பருவத்திலே, சேனைக் காவல் நிற்கையில்தான், இளமை உணர்வுகளைக் கிளர்ந்தெழ வைத்து ஐயன் அவளைப் பெண்ணாக்கிக் கொண்டான். இப்பொழுது அவற்றை நினைத்தாலும் கிட்டிக்கு உடல் சிலிர்த்து அந்தரங்கமாய்ப் புன்னகை மலரும்.

சோளம் பொத்திகளை இன்னும் ஒரு மாதத்திலே முறித்துவிடலாம். இப்போது அவை பழுத்துக் கொண்டு வருகின்றதை சோளஞ் செடிகளின் சரிவு அறிவிக்கின்றது. இந்த மார்கழி மாதத்திலே குருவிக்கல்லிலே யாரும் கண்ணோடு கண் மூடமுடியாது. மிருகங்கள் அழிவு

வேலையைத் தொடங்கிவிடும். பன்றிகளும், கிளிக் கூட்டமும், அணில்களும் தொகை தொகையாகச் சேனைக்குள் புகுந்து பெரும் நாசம் செய்யத் தொடங்கி விடும். அது அழிவுமல்ல துவம்சம். சோளன் குலைகளை அரைகுறையாகக் கொத்தி, வேரை அறுத்து நடுநடுவே கோதி அவை செய்கின்ற அட்டூழியங்களை ஒருவர் இருவரால் மட்டும் தடுத்து விடமுடியாது. அங்குள்ள குஞ்சு குருமான்களிலிருந்து, முதியோர் வரை ஓயாமல் கூவிக் கலைத்துக் கொண்டிருப்பார்கள். தகரப் பேணி களினை உலுப்புகின்ற போது ஏற்படும் முரட்டுக் கிணுகிணுப்பு கிளிகளையும், அணில்களையுமே துரத்த முடியும். பன்றிகள், இரவிலே—அதுவும் எல்லோரும் கண்ணயர்ந்து போகின்ற தளர்ச்சியினையடைகின்ற அதிகாலையின் போதுதான் சருகுகளை மிதித்துக் கொண்டு உர்உர்ரென்ற ரகசியத்தோடு சோளஞ் சேனையினுள்ளே பிரவேசிக்கும். தன் முரட்டு மூஞ்சை யினால் வேர்களை அகழ்ந்து, கால்களால் ஆவேசத் தோடு செடிகளைப் பிய்த்தெறியும். அவற்றை விரட்ட வேட்டை நாய்களால்தான் முடியும்.

ஒவ்வொரு சோளஞ் சேனைகளுக்கும் இருபதடி வரை உயரமான நெடும்பரண் காட்டுத்தடிகளினால் கட்டப்பட்டிருக்கும். அதிலே நின்றுதான் அந்தப் பிராணிகளை நோட்டம் இட முடியும். ஒவ்வொரு சேனையைச் சுற்றியும் காட்டுத்தடியாலும், கிளாக் கொடி யினாலும் பிணைத்த வேலிகள் கட்டப்பட்டிருக்கும்.

சென்ற ஆண்டிலே அறுவடையின்போது கிட்டி நிறைமாதப் பிள்ளைத்தாய்ச்சி. அவளின் மகள் கண்ணாத்தைதான் எல்லா வேலைகளையும் கவனித் தாள். அவள் அணில்பிள்ளை போல சுறுசுறுப்பானவள். தாயைப் போலவே ஆகிருதி. ஒரு பகல் முழுவதும் சோளனைப் போட்டுக் களைப்பின்றிக் குற்றி மாவாக்கு

வாள். பளீரிட்டுச் சிரிக்கிற போது அவள்பால் ஐயனுக்கு மிகுந்த பரவசம் ஏற்படும். இரண்டு ஆண்டுகளே அவள் பூப்பெய்தி. இந்தப் பொங்கலோடு அவளுக்கு 'சோறு கொடுக்க' வேண்டும். அவளுக்குச் சோறு கொடுத்தாலும் அவள் தனது புருஷனோடு இதே சேனையில்தான் இருப்பாள். புதிதாகக் காடழித்துச் சேனையினை உண்டாக்குகிறபோது அந்த ஆண்டிலே அவருக்கும் ஒரு பகுதியைக் கொடுக்க வேண்டும். எல்லாமாக ஐயனுக்கும், கிட்டிக்கும் பதினொரு பிள்ளைகள். ஒருவன் மட்டும் அதிலே தவறிப்போய் விட்டான்.

கிட்டிக்குத் தனது பிள்ளைகள் எல்லாரிலும் நிறையப் பெருமையுண்டு. நாலு பெட்டைக்குட்டிகளும், ஆறு பொடியன்களும் தேக்கமரக்கன்று போலச் செழித்துக் கொழுத்தவர்கள். தாயைப்போல எல்லோருக்குமே மரைபோல நெடுங்கழுத்துக்கள். சிறிது பிளந்த உதடுகள். பெண்கள் எல்லோருக்கும் தகப்பனைப் போலவே சுருட்டை முடி. வைரனுக்கு மட்டுந்தான் ஆண்களில் தகப்பனைப் போன்ற சுருண்ட கேசம். எல்லோருக்கும் பெரிய கண்கள். பார்ப்பதற்கு வசீகரமான ஒளிமிக்க கண்கள். கண்ணாத்தைக்கு மட்டும் அபூர்வமாக அங்குள்ள எல்லோரையும் விடக் கருகருத்து அடர்ந்த புருவங்கள். அந்தக் கருமையான முகத்திலே அப் புருவங்கள் வெகு அழகாகத் திகழ்வதாக கண்ணாத்தையின் சினேகிதிகள் சொல்கின்றபோது கிட்டிக்கு மனதினுள்ளே பெருமிதம் பொலிந்து பூவெனச் சிலிர்க்கும். கண்ணாத்தையைக் காணுகின்ற போதெல்லாம், கரப்புக்குள் நிற்கிற சிவப்பு நிறமான கன்னிக்கோழியின் நினைவுதான் கிட்டிக்கு வரும். கன்னிக்கோழிக்கு, சம்பன் தமக்கையினுடைய பெயரைச் சூட்டியே அழைப்பான். சம்பனுக்குத்தான் எல்லோரையும்விடத் தமக்கை மீது வாத்ஸல்யமும் பாசமும்.

பத்து வயதான சம்பனுக்கு மயில்களைத் தேடித் திரிவதிலேதான் பிரியம். மயில்குடும்பத்தைப் பற்றிய விவரங்களெல்லாவற்றையும் நன்றாக அறிந்து வைத்திருக்கிற அவனுக்கு பட்டம்கட்டி சின்னையாவைக் கண்டால் முற்றாகவே பிடிப்பதில்லை. நகரத்தில் வாழ்கிற பறங்கி ஒருவனுக்கு ஈழை நோயென்று இரண்டு மயில்களைப் பட்டங்கட்டி சின்னையா சுட்டுக் கொன்று சென்றதை மனதிலே மாறிடாத புண்ணென நினைவிலே வைத்திருக்கிறான் சம்பன்!

என்ன பரிதாபகரமாக வீரிடலால் அக் காட்டினையே உலுப்பிக் கொண்டு அந்தத் துப்பாக்கியின் உரத்த ஓசையையும் மீறியவாறு அவை மடிந்து போயின. இரத்தம் சொட்டச் சொட்ட, அலகுகளால் பக்கத்திலிருந்து புற்றறைகளைக் கொத்தி, உடல் நெளிந்து, குஞ்சு இறகுகள் உதிர்ந்து புயலுக்குச் சிதறிய அழகிய காட்டுப் பூவெனச் சிதைந்து போய்க் கிடந்தன அந்த மயில்கள்... இனிமையான அகவுதலால் அக் காட்டினையே மகிழ்ச்சியில் ஆழ்த்துகிற அந்தமயில்கள் இறந்ததின் பிறகு, அந்த நாவல் மரத்தினைச் சுற்றி வாழ்ந்த ஏனைய மயில்கள் இடம் பெயர்ந்து போய் விட்டன.

நாவல் மரத்தினடியில் தூர்ந்திருந்த புற்றினுள்ளே இப்போது பாம்புகள் மீண்டும் குடிகொண்டதற்கு அடையாளமாக, அவை உரித்துப் போட்ட பாம்புச் சட்டைகள் நாயுருவிச் செடியோடு பின்னப்பட்டுக் கிடந்தன. அந்தச் செடிக்கு அருகாகப் போகின்ற போதெல்லாம் சம்பனின் மனம் எல்லையில்லாத துயருற்று மௌனமாகவே புலம்பிடும். அந்த நாயுருவிச் செடியை ஆத்திரத்தோடு கையிலே வைத்துள்ள காட்டுத் தடியினால் மாறி மாறி அடித்துவிட்டு, ஆவேசத்தோடு அந்தத் தடியினை அருகிலுள்ள பாம்புப் புற்றின் துவாரத்தினுள்ளே வெகு வேகமாகச் செருகுவான். பின்னர் சொல்லக்கூடாத

தூஷணை வார்த்தைகளைப் பட்டங்கட்டி சின்னையா வின் மீது அவன் பொழிந்து தள்ளியதன் பின்னரே தனது ஆத்திரம் அடங்கப்பெறுவான்.

இன்றும் அப்படித்தான் செய்துவிட்டு, கிளாக்கொடி வெட்டுவதற்காக அடர்ந்த காட்டினுள்ளே காலடி எடுத்து வைக்கிறபோது, காடு தொடங்குகிற இடத்திலுள்ள சிறிய குளத்தினருகே இரண்டு மயிலிறகுகள் கிடப்பதைக் கண்ட உடனே அவன் மனதிலுள்ளே பேரானந்தம் தோகை விரித்தாடிற்று. கானாக் குருவியின் மெல்லிய சோகக் கீரிடலை, வழிவிலக்கிக்கொண்டு அப்போதே அங்கு கேட்ட அகவுதற் குரல் அவனை மேலும் உற்சாகப்படுத்தி, அவனது நடையினைத் துரிதப்படுத்த, கிளாக் கொடியினையும் மறந்து காட்டினுள்ளே விரைந் தான் சம்பன். பாலைமரத்தின் பின்னே மறைந்து நின்ற ஓநாயொன்று அரவங்கேட்டதும் இடறியடித்துக் காட்டி லுள்ளே தறிகெட்டு ஓடிற்று. அந்த ஒலியின் சிதறலால் பறவைகள் கிறீச்சிட்டு சிறகடிக்க, காடு சினத்துடன் விழித்து உறுமுகிறாற்போல ஒலியெழுந்து சிறிது நேரத்தில் மீண்டும் மௌனத்துள் புகுந்து உறங் கலாயிற்று.

காட்டின் ஒற்றையடிப் பாதையினை விட்டு விலகி, மருக்காலை மரக்கூட்டப் பக்கமாக நடக்கின்றபோது, கொடிகளுக்கும், மரங்களுக்கும் இடையேயுள்ள வெளி யூடாக மெல்ல அடியெடுத்து வைக்கின்றமையினால் சிரிக்கின்ற வண்ணத் தோகையின் பின்புறத்தைக் கண்டான் சம்பன். இருபுறத்தையும் அசையவிட்டு தள்ளாடுகிறாற்போல நடக்கிற அம்மயிலின் முன்னே, பேடுகள் நான்கு புழுக்களைக் கொத்துவதும், இலேசாக அகவுவதுமாய் நின்றன. இன்னொன்று கூரிய சொண்டி னால் பாலைமரத்தைக் கொத்துவதும், கீறுவதுமாய் நின்றது. சிறு அசைவின் ஒலிவும் அந்த மயில்களை

அதிர்வுற்று எச்சரிக்கை அடையச் செய்துவிடுமென்பதை சம்பன் நன்கு அறிவானாதலால், மெதுவாகத் தவழ்ந்து போய் அடிபெருத்த தேக்கமரமொன்றின் பின்னாலே ஒளிந்துகொண்டான்.

மாட்டு இலையான்களும், முசுறுகளும் சாம்பனின் முதுகைப் பிய்த்தபோதிலும் அவனது கவனம், அம்மயில்களிடமிருந்து சிறிதேனும் பிசகவில்லை. அந்த மயில்களின் இடத்திற்குச் சிறிது தள்ளி இலைகளும், சருகுகளும் குவிந்துகிடந்தன. அவை சிதறிய இடத்திற்கு இன்னொரு மயில், தளர்ந்த நடையோடு வந்துகொண்டிருந்தது......

சம்பனின் உருண்டையான முகம் இப்போது பிரகாசத்தினால் சூரியகாந்திப் பூவைப் போல மலர்வுற்றது. வாய்க்குள் மெதுவாக முணுமுணுத்துக் கொண்டான். 'மயிற் பிள்ளையார், குஞ்சு பொரிக்கப் போறார்!' சம்பனின் முன்னால்—அம்மயில்களினைப் பார்த்திருக்கையிலேயே காட்சிகள் விரிந்தன. சிறிய குழிகளைத் தோண்டி, அவற்றினுள்ளே தமது முட்டைகளை ஒதுக்கி அதன் மேலே இலைகுழைகளால் மூடிக் காத்திருக்கிற மயில்...... பின்னர் மெதுவாகத் தத்துப்பித்தென்று சருகுகளால் வெளியேறுகிற சின்னச்சின்னக் குஞ்சுகள்... அவற்றில் எத்தனைக்கு கொண்டை அரும்பியிருக்குமோ? 'நுணுக் நுணுக்' என்று மயிலொன்று எச்சரிக்கைக் குரலிட்டதும் சம்பனின் கனவுகள் கலைந்தன. மயிலிற்கு மனித மணம் தெரியுமென்றுதான் அம்பலவி சொல்லியிருக்கிறான். ஆனால் சம்பனின் அனுபவத்தில் அது பொய்யாகவே அவனுக்குப் புலப்பட்டிருக்கின்றது. ஆயினும், மயில்களுக்குச் சீற்றம் வந்துவிட்டால் அவற்றின் தாக்குதலைச் சமாளிக்க முடியாது; சொண்டினாலும், நகங்களினாலும் எதிரியைக் கிழித்துக் கொதறிவிடும். சிலவேளை கண்களையே கொத்தி ரணமாக்கிய

பின்தான் அவற்றின் சீற்றம் தணிவதுண்டு. சம்பனின் இடது தோட்புறத்திலும் மயில் கொத்திய இடம் இப்போதும் ஆழமான தழும்பாகி, மிதந்து தெரிகின்றது.

## 3

இடுப்புவரை சுற்றியிருந்த சேலைத் தலைப்பை எடுத்து மார்பை மூடிக் குறுக்காகக் கட்டிக்கொண்டு புன்னகை பொலிகின்ற முகத்தோடு வந்து கொண்டிருக்கிற சம்பனையே பார்த்துக் கொண்டிருந்தாள் கிட்டி.

சம்பனுக்கு உருண்டு திரண்ட தேகக்கட்டு. சிறிது குள்ளமான அவனைப் பெற்றபோது மிகுந்த சிரமம் அடைந்தாள் கிட்டி. நல்ல கனத்தோடு பிறந்தான் அவன். வயிற்றுள்ளிருந்த போதும் உருண்டுபுரண்டு உதைத்து அவளை மூச்சிழக்க வைத்தவன் சம்பன்.

பச்சைச் சோளன் இலைகளிடையே கருகருவென்ற தோற்றத்தோடு வருகிற அவன், மிருகங்களையும், பறவைகளையும் விரட்டவென நீண்ட கயிற்றில் கோர்த்துக் கட்டியிருக்கின்ற வெற்றுத் தகரங்களை ஒலியெழுப்புமாறு உலுப்பிக்கொண்டே, 'ஞனஞன டட மண டட்டடம்' என்று சத்தமிட்டவனாய் காவற் கொட்டிலின் மிதிபலகையில் ஏறி விழுந்து, தாய் நின்ற இடத்திற்கு வந்தான். மூச்சுத்திணறத் திணற, மயில்களின் கதையைத் தாய்க்குச் சொல்லிய அவன், சிறிது எச்சரிக்கையான குரலிலே, 'அப்புவுக்கு மட்டும் இதைச் சொல்ல வேணாம். பிறகு பட்டங்கட்டி மயிலுகளைச் சுட்டுச் சாக்காட்டி விடுவான்' என்று கூறினான் சம்பன். தாய் புன்னகையோடு உள்ளே போய் மகனுக்கு சுட்ட மரவள்ளிக் கிழங்கு கொண்டு வந்து கொடுத்தாள்.

இன்னும் பசித்தால் சோளம் பொத்தி அவிந்து வைத்திருக்கிறேன், அதையும் எடுத்தித் தின் என்று கூறிவாறு, மீண்டும் காவற்கொட்டில் அருகே போய் நின்றாள் கிட்டி. நேரத்தோடு வெளியே போன, ஐயனை இன்னமும் காணாதது அவளுக்கு அதிசயமாயிருந்தது. ஐயன் ஒருபோதும் வெளியே இப்படித் தாமதிப்பதில்லை. அப்படியென்றாலும் பட்டங்கட்டியரோடு போனால் தான் தாமதம் ஏற்படும். இன்று அவன் பட்டங்கட்டியரோடு வெளியே போகவில்லை. சிலவேளை எங்காவது பொந்திலேயோ, உச்சிமரத்திலேயோ,கல்இடுக்கிலையோ தேன்கூட்டைக் கண்டுவிட்டாலோ அல்லது கொழுத்த உடும்பையோ, மானையோ வழியிலே போகையில் சந்தித்தாலோ ஐயன் அவற்றின் பின்னாலே போய் விடுவான்...... ஆயினும் அவற்றுக்கும் இவ்வளவு நேரத்திற்கு அவன் தாமதம் செய்யமாட்டானே!

காவற் கொட்டிலுக்கு அருகேயுள்ள நெடிய நாவல் மரம், இலைகளற்று ஒரு கிளையை மட்டும் ஆகாயத்தை நோக்கி விரலைச் சுட்டுகிறாற் போல நெடிதாய் உயர்த்தி சரிந்த வெய்யிலின் ஒளித்தெறிப்பால் காவற் கொட்டிலின் மேல் நிழல் விழுத்தியிருந்தது. இப்படி நிழல் விழுந்து, பொழுதுபோன நேரத்திற்கு அவன் சேனைக்குத் திரும்புவதில்லை. சூரியனும் காட்டு மரங்களிற்குள், கால்தடவி இறங்கி— ஆயத்தம் செய்து கொண்டிருந்தது.

கிளாயடிப் பக்கமாக மெலிதான குரல்கள் கேட்டன. கிட்டி ஆர்வத்தோடு பார்த்தாள். சுரைக் குடுவையொன்றைத் தூக்கியவாறு கண்ணாத்தை வைரனோடும், உம்மிணியோடும் வந்துகொண்டிருந்தாள். அவளைச் சுற்றிச்சுற்றி கறுவலும், முண்டனும் குரைத்து அட்டகாசமிட்டுக்கொண்டு வந்தன.

குருவிகள் இரைச்சலிடத் தொடங்கிவிட்டன. ஹ-ெய் ஹ-ெய் என்ற மனிதக் குரல் மாடுகளை பட்டிக்குள் ஒதுக்கிக்கொண்டு, குருவிக் கல்லின் மனதிலே அந்திநேர வேலைகளைத் துரிதப்படுத்தி ஒலித்தன. "ம்ம்மாஆ" என்ற பேரொலியை எழுப்பிய பசுவின் தீனமான குரல், இந்த ஒலிகளோடு ஒட்டாது தனித்துக் கேட்டது.

கிட்டி விறுவிறுவென்று காவற் கொட்டிலின் பக்கமாகப் போனாள். பிறகு மெதுவாகக் காவற் கொட்டிலின் ஏணியில் காலை வைத்து மேலே ஏறத்தொடங்கினாள்.

மிக உறுதியாகக் கட்டப்பட்டிருந்த அந்த காவற் கொட்டிலில் ஏறிப் பார்த்தால் குருவிக்கல்லு தெளிவாகவே தெரியும். எல்லையிலுள்ள அடர்க்காடு, எதையும் கூறவோ, காட்டவோ மாட்டேன் என்ற உறுதியோடு கரும்பச்சையால் தன்னை மூடி அசைவற்று உறைந்துபோய்க் கிடந்தது. முன்னாலுள்ள பிச்சன் குளமும், அதனருகே அசைபோட்டுக் கிடக்கிற மாட்டுக் கூட்டமும் புள்ளிகளாய்ச் சிதறியிருந்தன. இதே திசையால் பட்டி மாடுகளைச் சாய்த்துக்காட்டிவிட்டு அவளது பிள்ளைகள் இனித் திரும்பிவருவார்கள்.

கிட்டி பார்வையைத் திருப்பினாள்.

பெரும் புல்வெளியாய் நீண்டிருந்த மேய்ச்சல் தரையில் இடையிடையே பறட்டை மரங்கள் மாட்டுக் கூட்டங்கள் போல, நிலத்தோடு மண்டிப் புதைத்திருந்தன. மறுபுறத்திலே தென்னஞ் சோலை. கிட்டி, சிறிது உயர்ந்து விண்ணாக்கன் வாய்க்கால் பக்கமாகப் பார்த்தாள். சளசளத்துப் பரவி நிற்கும் அந்த நீளமான வாய்க்கால் தான், குருவிக்கல்லை ஏனைய பகுதிகளிலிருந்து தனியே பிரித்திருக்கிறது. பரவைக் கடலின் ஒரு பகுதியாக உள்ள அந்த வாய்க்காலைக் கடப்பதற்கு இரு பக்கத்திலும்

புணைகள் கட்டியிருக்கும். நீண்ட மரங்களைக் கோதி இரு புறங்களிலும் சவள் பொருந்தியும் அந்தப் புணைகளின் துணையோடுதான் வாய்க்காலைக் கடக்க முடியும். வாய்க்காலைத் தாண்டியே பட்டங்கட்டியரின் வீடும் உள்ளது.

கிட்டி, ஏமாற்றத்தோடும் இனத்தெரியாத எரிச்சலோடும் குறுக்காகக் கட்டியிருந்த முந்தானைச் சீலையை அவிழ்த்து உதறினாள். பின்னர் இடுப்பிலேயே சேலையை இறக்கிக் கட்டியவளாய், காவற் கொட்டிலின் உறுதியான பிடிமானப் பகுதியிற் சாய்ந்தவாறு எதிரே பசுங்கடலாய் கதிரலைக்கின்ற சோளஞ்செடிகளை துறுதுறுப்பாகப் பார்த்துக்கொண்டு, இம்முறை எவ்வளவு அவணம் சோளன் அடிக்கலாம் என்று யோசித்தபடியே நின்றபோதுதான் ஐயன் அவளைத் திருட்டுத்தனமாகச் சந்தித்தான். திரண்ட தோள்களும், சுருள் முடியும், சதைக்குள் புதைந்த கண்களும், வாட்டசாட்டமுமான தேகமுள்ள ஐயனைத் திடீரென்று கண்டதும், தன்னைச் சுதாரித்துக்கொண்டு திறந்திருந்த மார்பகங்களை முந்தானைச் சேலையால் அள்ளி மூடியவளாய், கோபம் தெறிக்க "என்ன நீ காட்டுப் பூனையாட்டம்" என்று சீறினாள். அவன் அதிராமல், அரவமெதுவுமின்றி இப்படித் திடீரென்று தோன்றியது அவளைக் குழப்பத்திற்குள்ளாக்கிவிட்டது. ஆனால் அவளின் சீற்றத்தையே கருத்திற் கொள்ளாதவன்போல, வெகு சாவதானமாக புன்னகை மிதக்கிற முகத்தோடு ஐயன் சொன்னான்...... "உன்னைத்தான் பார்க்க வந்தன். ஒருதருமில்லை. பெண்சாதியாக உன்னைத்தான் நான் எடுக்கப்போறன்" சொல்லி முடித்துவிட்டு அவளுடைய முகத்தையே ஊடுருவிப் பார்த்துக்கொண்டு நின்றான் ஐயன்.

'கருகருவென்று என்ன அழகாக இருக்கிறாள். சின்ன மூக்கு. பெரிய கண்கள். கொழுப்பான மானைப்போல

சதைப்பிடிப்பான தோற்றம். சேனை ஒன்றைக் கவனிக்க வும், எல்லா வேலைகளையும் செய்து சேனையின் விளைச்சலைக் கூட்டவும் வல்லமை உள்ள பொம்பிளை.'

அவளின் பெரிய பிளந்த உதடுகள் லேசாக நடுங்கு வதை அவதானித்த ஐயன், எட்டி அவனது கையைப் பற்றினான். மறுகணம் அவள் அவள் கையை உதறி விட்டு, ''என்னை விடு'' என்றவளாகக் கீழே இறங்கி மறைந்துவிட்டாள்.

மறுநாள், அவள் சோளம் எடுத்துப் பருப்பாக்கிக் கொண்டிருக்கையில் ஐயனின் நினைவு அடிக்கடி வந்து கொண்டிருந்தது. அவளது அப்பன் சுள்ளியன்,ஐயனைத் தான் புருஷனாக்கிக் கொள்ளுவதற்கு எதிர்ப்புச் சொல்ல மாட்டான் எனவே கிட்டி நினைத்திருந்தாள். ஐயனைப் பற்றி நல்ல பேச்சு அங்கே இருந்தது. அவன் சிறந்த வேட்டையாளி. எந்தக் கரடுமுரடான காட்டையும் தனியாக நின்று மரங்களைத் தறித்து விழுத்தி அவற்றைக் கொளுத்தி எரிந்து அதனை சிறந்த விளைச்சல் தரக் கூடிய சேனை நிலமாக ஆக்கக்கூடிய வல்லமை உள்ளவன் அவன். அதோடு சேனைக்குள்ளேயே பூசணை, வாழை, சுரை ஆகியனவற்றை நட்டு நல்ல விளைச்சலை இப்போதும் கண்டு கொண்டிருப்பவன் அவன். ஆளும் நாம்பன் மாடு போல உறுதியா யிருக்கிறான்.

அன்று, நிழல்கள் கிழக்குப் பக்கமாக படுக்கத் தொடங்கியபோதே அவள், காவற் கொட்டிலிலேறி பெரிய கண்களால் அங்குமிங்குமாகத் தேடிக்கொண்டி ருந்தாள். அவன் வந்தான். அவள் அதே இடத்தில் அவனுக்காக வந்தபோது அவளை ஏமாற்றாமல் மீண்டும் அவன் வந்தான். மறுநாளும் வந்தான். இப்படியே சில நாட்கள் வந்தான். பௌர்ணமி நாளன்று

சுள்ளியன் பரபரத்துக் கொண்டு நின்றான். நிறைந்து பொங்கி வழிகின்ற கள்ளோடு முட்டிகள் வந்தன. வெட்டியன் பெரிய மானொன்றை நெருப்பில் வதக்கிக் கொண்டு நின்றான். சாமிப் பிட்டவிப்பதிலே மூன்று கிழவிகள் ஈடுபட்டிருந்தனர்.

எல்லாம் இப்படி அல்லோலகல்லோலப் பட்டுக் கொண்டு இருக்கையில் சிலர் ஐயனை அவ்விடத்திற்கு அழைத்து வந்தனர். வெளியே பச்சைத் தென்னோலை யில் எல்லோருமாய் உட்கார்ந்திருக்க, சில பெண்கள் கிட்டியைக் குளிப்பாட்டிவிட்டு குடிசைக்குக் கொண்டு போய் விட்டனர்.

ஒரு வட்டிலில் சோறுகறியிட்டு அதைக் கொண்டு போய் அறையுள் பரப்பிவிட்டு வந்த ஐயைக் கிழவி ஆண்களுக்கு மத்தியிலே நின்ற ஐயனைப்போய் கையிலே பிடித்து இழுத்தவாறு கொட்டிலுக்குள் கொண்டு போய் விட்டுவந்து வெளிப்படலையை தென்னை நாரினால் இறுக்கிக் கட்டிவிட்டு ஆபாசமாக அவர்களை வாழ்த்திக்கொண்டு வெளியே வந்து நேரே கள்ளுக் கலையம் இருந்த இடத்திற்குச் சென்றாள். பின்னர் எங்கும் கூச்சலும் குரவைகளும் எழுந்தன. இவ்விதம் அன்று கிட்டியும் ஐயனும் புருசன் பெண்சாதி ஆகினர்.

## 4

தீப்பந்தத்தை ஐயன் காவற் கொட்டிலுக்கு அருகே உள்ள இரண்டு உரல்களுக்கு நடுவே செருகிக் கொண்டி ருந்தபோது, கறுவலும் முண்டனும் அவனைத் தாவிக் காலோடு அணைந்து மகிழ்ச்சிக்கறிகுறியாக ஊழை யிட்டபோது, கிட்டி திடுக்கிட்டு எழுந்து நித்திரை கலைந்து வெளியே வந்தாள்.

வெளியே இருள் அவ்விடம் முழுவதையும் மூடி மண்டிக்கிடந்தது. ஹூ...ஹூ... என்று கிளாயடிப் பக்கமாக யாரோ கூவிய குரலில் பன்றியைக் கலைத்துக் கொண்டிருந்தார்கள். அந்தச் சத்தத்தைக் கேட்ட கறுவலும் முண்டனும் அம்புகளாய்ச் சீறிச் சோளஞ் சேனையுள்ளே புகுந்து மறைந்தன

அலுப்போடு கொட்டாவி விட்ட கிட்டி, முதுகில் அவிழ்ந்து வழிந்திருக்கின்ற தலைமயிரை வாரி உச்சிக் கொண்டைகட்டியவாறு, "இவ்வளவு பொழுதும் எங்கை காடலைஞ்சு வந்திருக்கிறாய்.?" என்று தீப்பந்த ஒளியில் கருங்கல்லென ஒளிர்கிற தன்னையே பார்த்து நிற்கிற, ஐயனைப் பார்த்துக் கேட்டாள். ஐயன் வலக்கையில் வைத்திருக்கிற சுரைக்குடுவையை அவளுக்கு நேராக நீட்டி "இதைக் குடி. பிறகு சொல்லுனன்" என்றான். சொல்லியவாறு காவற்கொட்டிலுக்கு அருகாமையிலுள்ள பாலைக்குற்றியொன்றில் போய் அமர்ந்து கொண்டான். அவனிடமிருந்து கிட்டி வாங்கிய சுரைக் குடுகை நிறைய நுரை குமிளி தத்தளிக்கின்ற புதுக் கள் இருந்தது. புதுக் கள்ளின் மணம் லேசாக அவ்விடம் எங்கும் கமழ்ந்தது. அவள் அவனுக்குப் பக்கத்தில் குற்றிக்குக் கீழே குந்திய வாறு ஒரு மிடறு கள்ளை உறிஞ்சி விட்டு தலை நிமிர, அவன் தான் அன்று செய்த வேலைகளை விஸ்தாரமாக அவளுக்குக் கூறத் தொடங்கினான். காலையில் வெறுங் கையோடு போனமையினால் கொழுத்த உடும்பினை இழந்து போனமை பற்றிக் கூறிவிட்டு அதே எரிச்சலில் நின்ற தன்னிடம், நீலன் வந்து பட்டங்கட்டியர் அவசர மாக வரச் சொன்னதைக் குறிப்பிட்டபோது திடுக்கிட்ட குரலிலே கிட்டி கேட்டாள்... "என்ன வியளம்?".

மிகவும் கொழுத்த முற்றிய மரவள்ளிக்கிழங்கு போல உடல் திரண்ட அந்த உடும்பு கும்முனைச் செடிகளின் மேலே- தான் தவழ்ந்து சென்ற அரவம் கேட்டதும்,

செடிகளை மிதத்தி முதுகு நிமிர்ந்திருந்த கருங்கற்பாறையின் மேலே ஏறி அப்படியே நாவல் மரத்திற்கருகே உள்ள பற்றைச் செடிகளின் பசுமைக்குள் கரைந்து போனதன் பிறகு மிகுந்த ஆத்திரத்தோடு சிறிது தூரம் தள்ளி வந்து விண்ணாங்கு மரத்தடியிலே உட்கார்ந்திருந்தான் ஐயன். அவன் கையிலே மட்டும் அன்று வழமையாகவே கொண்டு செல்கிற காட்டுக்கத்தி இருந்திருக்குமேயானால், அந்தக் காட்டுக்கத்தியை வீசி எறிந்தே அந்த உடும்பின் பின்னங்கால்களை ஊனமடையச் செய்து அதனைத் தோற்கடித்திருக்கலாம். பிடிவாதமான அந்தப் பிராணியினைக் கொல்வதற்கு ஓர் சிறந்த வேட்டைக்காரன் கையாளுகின்ற வழி அதுதான். கள்ளிற்கும், உடும்பு வறுவலுக்கும், சாமிப் பிட்டிற்கும் என்ன ருசியான இணைப்பு இருந்திருக்கும்!

எரிச்சலோடு தன்முன்னே நின்ற வெள்ளெருக்கம் செடியை ஒரு வெறுப்புக்குரிய பகைவனைப் போல ஆத்திரத்தோடு பிடுங்கி வீசிவிட்டு இவையெல்லாவற்றையும் வேடிக்கை பார்த்து ரசிப்பது போலக் கல்லடியில் தலையாட்டிக் கொண்டிருந்த ஓணானைக் கெட்ட வார்த்தைகளால் வைது கொண்டு எட்டி உதைத்தான் ஐயன். அந்த வேளையிலேதான் அவனைத் தேடிக் கொண்டு வெற்றிலைச் சாறு கடவாய் வழியாக ஒழுக ஒழுக திக்குவாயானான நீலன் அவ்விடத்திற்கு வந்தான். ஆடொன்று தண்ணீர் குடித்து முடியும் பொழுதளவிற்கு இழுத்து திக்கியும் ஐயனை, பட்டங்கட்டி சின்னையர் அவசரமாக அழைத்து வரச்சொன்ன சேதியைச் சொல்லி முடித்தான். அந்த வார்த்தைகளைக் கேட்டதும், கவண் கல்லைக் கண்ட சேனைக் குருவிகள் போல ஏனைய கவலைகளெல்லாம் ஐயனின் மனதை விட்டு அந்தக் கணமே பறந்து விட்டன.

புணையிலேறியது, விரைந்தோடிப் போய் பட்டங் கட்டிச் சின்னையாவின் வீட்டுப் படியேறியது எல்லாமே

குருவி வேகத்திலே கழிந்தது. ஊமத்தங்கூகை போல எதையுமே இருவரும் பேசிக்கொள்ளாது பட்டங்கட்டி சின்னையா வீட்டுப் படியில் ஏறி மரியாதையோடு "ஐயா" என்று ஐயன் கூப்பிட்டபோது முதிய குரல் சிலிர்த்துக் கொண்டே கேட்டது... "ஐயன் வந்திட்டான். எடே ஐயா, கதவைத் திறந்து கொண்டு உள்ளுக்குள் வாடா."

சர்வாங்கமும் மரியாதை வடிவமிட கதவினைத் திறந்து கொண்டு ஐயன் உள்ளே போனதும் அவன் கண்களிலே மூன்று புதியவர்கள் எதிர்ப்பட்டார்கள். கதிரைகளில் அமர்ந்திருந்த மூவரும் வெள்ளை வெளே ரென்ற ஆடை அணிந்திருந்தனர். பட்டங்கட்டி சின்னையா பொதுபொதுத்த தேகத்தைச் சால்வையால் மூடிப் போர்த்திருந்தார். சாய்வு நாற்காலியில் வெகு ஆறுதலாக உட்கார்ந்திருந்த பட்டங்கட்டி, தான் இருந்த சாய்வு நாற்காலிக்கு அருகேயுள்ள சீமேந்துக் குந்தினைக் காட்டி, "எடே ஐயா, அப்பிடி இரடா... நீலா நீ போய் அளுங்கனிட்டை நான் சொன்னேனென்று இறால் வாங்கி வாடா...ஓடு" என்றதும் நீலன் அங்கிருந்து விரைந்து போக ஐயன் மட்டும் அதே மரியாதையோடு அவர் காட்டிய இடத்தில் நின்றவாறு "சொல்லுங்க ஐயா" என்றான். மீண்டும் பட்டங்கட்டி வற்புறுத்தவே, அந்தச் சீமேந்துத் தரையில் சம்மாளமிட்டு உட்கார்ந்து கொண்டான் ஐயா.

வந்திருந்தவர்கள் பட்டணத்தைச் சேர்ந்தவர்கள். குருவிக்கல்லுப் பக்கத்தில் உற்பத்தியாகின்ற சோளத் தானியம், தேன் ஆகியவற்றினை வாங்கிச் செல்வதற்காக வந்திருப்பவர்கள். சொந்தமாக லொறி வைத்திருக்கிறார்கள். இவர்களிடம் வாங்கும் பொருட்களுக்கு நேரடியாகவே அவர்கள் பணங் கொடுக்கச் சம்மதிப்பார்களென்று பட்டங்கட்டி சின்னையா சொன்ன

போது மட்டும், ஐயன் தலையைச் சொறிந்தவாறு அசடு வழிய அவனை ஏறிட்டான்.

"என்னடா ஐயா மனதில் உள்ளத்தைச் சொல்லு?."

ஐயன் முணுமுணுத்தான்.

"காசை வைத்து என்ன செய்யலாம்? வழக்கப் படியே இருக்கட்டும்." அவன் சொன்னதைக் கேட்டு பட்டங்கட்டி சின்னையா உரக்கச் சிரித்தார். வெற்றிலைக்காவி ஏறிய பற்கள் தெரியச் குலுங்கிச் சிரித்தவர், தானே தன்னை அடக்கிக்கொண்டு சடைத்த தனது நரை மீசையைத் தடவியவாறு, "ஐயன் நீ சொன்னது சரிதான்டா. காசை வைச்சு நீங்களெல்லாம் என்னடா செய்ய முடியும்? உங்கடை பொருளுக்குரிய காசை நான் வாங்கிக் கொண்டு உங்களுக்குத் தேவை யானதை எடுத்துத் தருவன்". என்று அவனுக்குப் பதில் சொன்னவர் தனக்கு எதிரே உட்கார்ந்திருந்த சிவப்பு நிறமான மழுமழுவென்று சவரம் செய்த மத்தியதர வயதானவரைப் பார்த்துக் கூறத் தொடங்கினார்: "இவங்களுக்குப் பணத்தினுடைய அருமை தெரியாது. வழமையாகவே இவங்களொட்டை சோளன், தேன் வாங்கிற வியாபாரிகள் அரிசி, புகையிலை, வெற்றிலை ஆகியவற்றைக் கொடுத்து விட்டுத் தங்களுக்குத் தேவை யானதை வாங்கிக் கொள்ளுவார்கள். எப்பவாவது ஒரு முறை உடுபிடவை கேட்பாங்கள்"

வந்திருந்தவர்களுன் முகம் வியப்புணர்வால் மாறுதல் கண்டது.

"சுப்பிரமணியம் ஐயா சொன்னதுக்காக நான் இதைச் செய்யிறன். ஐயனுக்கு மீறி எதுவும் நடக்காது. ஐயன், இந்த ஐயாமாருக்குத் தேவையானதை நீதான் கவனிக்க வேணும்... என்னடா?"

பட்டங்கட்டி சின்னையா வீட்டிலே நிகழ்ந்தவற்றை ஐயன் கூறக்கேட்ட கிட்டி "அது நல்லதுதான்" என்று அவனிடம் சம்மதம் கூறினாள்.

## 5

அந்தப் பரவைக் கடலைப் போர்த்திருந்த இருள் வலையைப் பிய்த்துக் கொண்டு துள்ளியெழுகின்ற ஜந்துக்களைப் போல, கணவாய் லாம்புகள் குபுக் குபுக் கென்று சுடர் கிளப்பி வெளிச்சம் வீசிக் கொண்டிருந்தன.

மார்கழி மாதம் வந்து விட்டால் கடல் நிறைய மட்டு இறால் வந்துவிடும். மட்டு இறால் ஒவ்வொன்றும் பிஞ்சுச் சோளம் பொத்தியளவிற்குப் பெரிதாயிருக்கும். குருவிக்கல்லிலிருந்து அரைவாசி ஆண்கள் இரவில் மட்டு இறால் பிடிக்க வந்துவிடுவார்கள். இறால் பிடிக்கப் போனால் சாராயம் நன்றாகக் குடிக்கலாம். இறாலை மொத்தமாக வாங்குகின்ற வியாபாரி, சாராயப் போத்தல் களையே அவர்களுக்கு முதலில் காண்பிப்பது வழக்கம். சாராயப் போத்தல்களைக் கண்டுவிட்டால், அந்தக் கடலில் ஆளைப் புதைக்கின்ற சுரியும், கிடுகிடுக்க வைக்கின்ற குளிரும் இறால் பிடிகாரருக்கு முற்றாகவே நிலையில் இருந்து நழுவி எங்கோ போய் மறைந்து விடுகின்றது...

முக்கோணமான மூடியுள்ள பாத்திரத்தின் வயிற்றுப் புறத்திலே, உருளை வடிவிலுள்ள தகரக்குளாய் பொருத்தியிருக்கும். அந்தக் குழாய்க்குள்ளாக வெளியே தெரிகின்ற திரியினைக் கொளுத்தலாம், பாத்திரம் நிறைய மண்ணெண்ணை நிரம்பியிருக்கும். பாத்திரத்தின் மிகுதிப்

புறத்திலே சிறிய பிடி பொருத்தியிருக்கும். இந்த அமைப்புப் பொருந்தியதுதான் கணவாய் லாம்பு. கடலில் வாழும் கணவாய் மீனைப் பிடிப்பதற்கு தயாரிக்கப்பட்ட இக் கணவாய் லாம்பு, இப்போது இறால் பிடிப்பதற்கு மிகவும் பொருத்தமுள்ளதாகி விட்டது. நாலைந்து இறால் சேர்ந்தால் ஒரு இறாத் தலுக்கு நிறை வந்துவிடும். கணவாய் லாம்பு சிணுங்கிக் கொண்டிருந்தால் இறால் பிடிப்பது வெகு கஷ்டம்.

ஐயன் தனக்குப் பின்னாலே கணவாய் லாம்பைப் பிடித்துக் கொண்டிருந்த உதுரனை அச்சுறுத்தினான். அந்தக் குளிரான காற்றும், சுரியின் சீதளமும் இருந்தும் கூட உதுரனுக்கு கண்களினுள் நித்திரை பொங்கிக் கொண்டிருந்தது. நின்ற இடத்திலே வரும் கண் ணயர்வை ஐயனின் அதட்டலே விரட்டிக் கொண்டிருந் தது. தன்னுடைய பெரிய உதட்டைக் கடித்துக் கொண்டே பொசுபொசுத்த சேற்றில் இருந்த கால்களை இடம் மாற்றினான் உதுரன். இன்றைக்கு நிறைய இறால் பிடிபட்டமையால், ஐயனின் மனம் மிகவும் புழுக மடைந்திருந்தது. அல்லாவிட்டால் சிறிது கண்ணயர்ந் தாற் கூட உதுரனுக்கு பிடரிப்புறம் கிண்ணென்று அறை விழுந்திருக்கும்.

இன்றைக்கு இறால் பிடித்த ஐயன் புறப்பட்ட போது உதுரன் அவரோடு கூடப் போகப் பிரியப்பட வில்லை. கிட்டிதான் அவனை தகப்பனோடு அனுப்பி வைத்தாள். அதற்குக் காரணமும் இருந்தது. உதுரன் முன்கோபி. கரடி போலக் கத்துவான். பிராண்டுவான். சேனையிலே இப்போது நல்ல காவல் வேண்டும். காவற்கொட்டில் காவலோடு மட்டும் பழுத்த சோளங் குலைகளைக் காப்பாற்ற முடியாது. சிறிய குடிசை போன்ற வடிவத்திலே வாடி கட்டி, நாய்களோடு காவலுக்குக் காத்திருக்க வேண்டும். கண்ணோடு கண்

மூடவே முடியாது. கிட்டியின் எல்லாப் பிள்ளைகளும் காவலுக்கு இருப்பார்கள். உதுரன் இவர்களோடு இருந்தால் ஏதாவது வாக்குவாதம் வந்துவிடும் என்பதால் கிட்டி அவனைத் தகப்பனோடு இறால் பிடிப்பதற்கு அனுப்பிவிட்டாள். இறால் கடலுக்குப் போனால் உதுரனால் நல்ல உழைப்பு வருமென்பதைத் தெரிந்து வைத்திருக்கின்ற ஐயன் கிட்டி கூறியதற்குச் சம்மதித்தான்.

இங்கே பிடிக்கப்படுகின்ற இறால்களில் பெரும் பாலானவை வியாபாரிகளால் உடனுடனே கொள்வனவு செய்யப்பட்டு ஐஸினாற் பதப்படுத்தப்பட்டு வெளியிடங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படும். சில வேளைகளில் இறால் பிடிகாரரின் தேவைக்குக் கூட இறால் கிடைக்காமற் போய்விடுகின்றது... இந்நாட்களும் அப்படித்தான். 'மார்கழி வந்துவிட்டால் மட்டு இறாலும் வந்துவிடும்' என்பது ஊர்ப்பழமொழி. இம் மாதங்களில் இறாலோடு சாராயப் போத்தல்களும் அப் பகுதியிலே தாராளமாகவே அகப்படும்...

பரவைக் கடலினை நடுவாகப் பிரித்து ஓடுகிற கற்பாதையிலே கலகலப்புச் சத்தம் கேட்டுக்கொண்டிருக்கிறது. யாராவது திருட்டுத்தனமாகத் தேங்காய் பறித்து அவசர அவசரமாகச் சந்தைக்குக் கொண்டு போய்க் கொண்டிருப்பார்கள். அல்லது கட்டாக்காலி மாடுகளைச் சிரமப்பட்டு கட்டியிழுத்து விடிவதற்கு முன் இறைச்சிக்கடையில் விற்பதற்கு முயற்சிகள் அவசரப்பட்டுக் கொண்டிருக்கும்.

கள்ளச் சின்னான் இருள் மங்கிக் கொண்டிருந்த பின்னேரம் போல மசிந்து சேனாதியோடு கள்ளுக் கொட்டிலிற் கதைத்துக் கொண்டிருந்தது ஐயனின் மனதிலே ஒரு நெருப்புப் பொறியாகி நினைவிலே ஒளிர்ந்தது. சேனாதி எப்படி மரியாதையீனப்பட்டாலும் திருந்து

கின்றவனாக இல்லையே என நினைத்து மனதினுள் வேதனை கலந்த அதிசயங்கொண்டான் ஐயன். யாருடைய மாட்டையோத் திருடிக் கொண்டுவந்து இறைச்சியடித்து நெருப்பினில் வதக்கிப் பதனிட்டு மானி றைச்சியென்று கூறி விற்றபோது பட்டங்கட்டியாரிடம் அவன் முறையாகப் பிடிபட்டான்.

பட்டங்கட்டியரிடம் பிடிபடும் எவராயினும் அவர் அவனுக்குத் தோலுரிக்காமல் விடமாட்டார். பலமுறை அடிபட்டும் திருந்தாது சேனாதி இனிமேற் பிடிபட்டால் புதுவிதமான தண்டனை கொடுக்க வேண்டுமெனக் கூறிக்கொண்டிருந்த பட்டங்கட்டியருக்குச் சேனாதியைக் கண்டதும் ஆத்திரம் பொருமிக்கொண்டு வந்தது. தனது எரிச்சல் முழுவதையும் வெளிக்காட்டும் விதத்தில் அட்ட காசமாகச் சிரித்துக்கொண்டார். பின்னர் சேனாதி இறைச்சியடித்த மாட்டுத்தோல், கொம்பு ஆகியவற்றை எடுத்து வரும்படி கூறி, மாட்டுத்தோலை அவனுக்கு மேலாகச் சுற்றிக்கட்டி, இரண்டு கொம்புகளையும் கயிற்றிலே பிணைத்துக் கழுத்தில் மாலையாக அணி வித்து "நான் மாட்டுக்கள்ளன்..நான் மாட்டுக்கள்ளன்..." என்று அந்தக் கிராமம் முழுவதும் சேனாதியைச் சுற்றி வரச் செய்தார் பட்டங்கட்டியர்.

அந்தச் சம்பவம் நடந்ததன் பிறகு இரவோடு இர வாக அங்கிருந்து தலைமறைவாகி விட்ட சேனாதியால் இனிமேல் எவ்விதமான கவலையுமில்லை என்று அந்தப் பகுதியில் நிம்மதி பரவியிருக்கிற வேளையில்......

காலிலே நெருடிய கடல் ஊரியை, கையால் அப் புறப்படுத்திய ஐயன் பரவைக் கடலின் மையப்பகுதியிற் திட்டுத்திட்டாகத் தோன்றிய ஒளிப் புள்ளிகளினைக் கண்டபோது தனது யூகமானது சரியானதே என்று உறுதிகொண்டவனாக உதிரனிடம் "உதுரா நீ இறாலைப் பிடி. இப்ப நான் வந்திடுவன்..." என்று கூறியபடியே

கடலினுள் மெதுவாக உழக்கிக்கொண்டு வெளிச்சப் புள்ளிகளை நோக்கி நடந்தான்......

எங்கோ கடற்குருவிகள் அமைதியைக் கீறி ஒலி எழுப்பின. க்ளக் க்ளக்... கடல் நீரினுள் சத்தம் அரும்பிச் சலசலத்து அழிந்துகொண்டிருந்தது. முகத்திலே மோதிய குளிர்காற்று ஐயனுக்கு இதமாயிருந்தது. இப்பொழுது ஒரு சுருட்டைப் பற்றினால் நெஞ்சுக்குக் காரமாயிருக்கும் என்று எண்ணிக்கொண்டான்.

அடிபட்டுச் செயலற்றுப்போன காட்டுப் பன்றியைப் போல, எதிரே கண்பார்வைக்கு அவனது சுற்றுப்புறம் இருளினுள் மௌனித்து வடிவமிட்டு உறக்கத்திற் கிடந்தது. அரவங் கேட்டதும் இருளினுள் இறுகிநின்ற காட்சிகள் லேசாகவே பாதையில் விலகி இழுபறிப்படுகின்ற ஓசை கேட்டது. நன்றாகக் கூர்ந்து பார்த்தவாறே பாதையிலே காலடி எடுத்து வைத்த ஐயன் மிகவும் அதிசயமுற்றான். மூன்று பிணைக்கப்பட்ட மாடுகள் அனாதரவாக நின்றன. அதற்குச் சற்றுப் பின்னே சிறிய வெளிச்சத்தோடு லோறி ஒன்று நின்றது. இரண்டொரு கணவாய் லாம்புகள் மெலிதான ஒளி சிந்தி, அங்கு நின்றோரை இலேசாக இனங்காட்டின. பட்டங்கட்டி சின்னையா வீட்டிலே ஏற்கனவே ஐயன் சந்தித்த வெள்ளை உடுப்பணிந்த மூவரோடு கரியன், வண்டன், செவ்வான் ஆகியோர் இனந்தெரிந்தனர். ஏதோ சொல்ல ஐயனின் வாய் உன்னியபோது, கரியனின் முரட்டுக் குரல் ஓங்கிக் கேட்டது; "ஐயா, சேனாதி பிறகும் திருகுதாளந்தொடங்கி விட்டான் பார்த்தியா? கள்ளமாடு கொண்டு வந்திருக்கிறான்... லொறி வெளிச்சத்தைக் கண்ட உடனே இந்த இடத்திலையும் நில்லாமல் ஓடி விட்டான்..."

ஐயன் மனமகிழ்ச்சி கொண்டான்; தன் யூகம் மெய்ப்பட்டது அவனிற்கு வார்த்தைகளில் பூரிப்பளித்தது.

“கடலுக்குள்ளே நின்றபோதே நான் நினைச்சன். சேனாதிதான் மாடு கொண்டு போறான் என்று. நல்லது, இப்பிடியொரு லொறி இந்தப் பகுதியிலை இரவு பகலாகத் திரியுமாயிருந்தால் எவ்வளவு நல்லாயிருக்கும்...”

ஐயன் சொல்லி முடித்தபோது, லொறியில் வந்தவர்களில் இளைஞனானவன், “நீங்க ஒத்துமையாய் எங்களோடை இருந்தது என்றால் நாங்க இந்தப்பக்கம் எந்நேரமும் வரி வந்து போவம்தானே...” என்று வித்தியாசமான உச்சரிப்பில் கூறியபடி, சிகரெட் ஒன்றை ஐயனுக்கு நீட்டினான். இதுவரையிலே தானே சுருட்டுகிற சுருட்டையே புகைக்கிற ஐயன் சிகரெட்டைப் பெற்றுக் கொள்வதற்குக் கூச்சப்பட்டபோது, அந்த இளைஞன், “பரவாயில்லை. பத்திப்பாருங்க” என்று ஐயனின் கையிலே சிகரெட்டைக் கொடுத்தான்.

அண்ண டே சின்னி வாறான்
அண்ண டே சிரிச்சு வாறான்
பூசணிக்காய் பழத்தைப் போல
புரையிலுள்ள பருப்புப் போல
அண்ண டே சின்னி வாறான்
அண்ண டே சிரிச்சு வாறான்.

பின்னிக் கிடந்த பூசணிக் கொடிகள் பெரிய பெரிய காய்களை ஈன்றிருந்தன. பிள்ளைகளின் தலையைத் தடவுவது போல, ஒவவொரு பூசணியையும் வருடியபடி மகிழ்ச்சி பொங்குகிற குரலிலே பாடிக்கொண்டிருந்தான் ஐயன். அலைந்து பறக்கும் பரட்டைத் தலைமயிரைப் படிய கைகளால் அடக்கியவனாக, ஓங்கிய குரலிலே பாடிக்கொண்டிருந்தவன், தலையிலே சுமையோடு அழகாக நடந்துவரும் கிட்டியைக் கண்டதும் குரலைக் குறைத்துக்கொண்டு அவளைப் பார்த்தான். தலையிலே சுமையோடு நின்ற அவள், ஐயனைப் பார்த்து, “என்ன

நீ, நெடும்பரண் மாதிரி நிற்கிறாய்? இந்தச் சுமையில் ஒரு கை பிடி" என்றாள், ஐயன், அவளின் சுமையை இறக்கினான். "மூண்டு அவுணம் பருப்பு இருக்குது..."

மார்புச் சீலையை விசிறி, வேர்வையைத் துடைத்தவாறே, சோளன் பருப்புகளை ஒரு கையினால் அள்ளிப் பார்த்தாள் கிட்டி. சிவப்பும், பழுப்பும், இளஞ்சிவப்புமாய் வண்ண வண்ணமான சோளன் பருப்புகள்! எவ்வளவு இரவுகள் கண் விழித்து, உடல் நொந்து காவல் காத்துப் பெற்றுக் கொண்ட பொருள் இது! வியர்வையும், இரத்தமும் சொரிந்திட்ட அந்தப் பாசனத்திலே அறுவடையான இச் சோளன் மணிகள் அவளுக்கு எல்லையில்லாத களைப்பினை அளித்தன. அந்த மக்களின் உழைப்பே தானிய மணிகளாய் அம் மண்ணிலே அறுவடையாயிருப்பதை அவர்களின் புன்னகை வெளிச்சமிட்டுக் கொண்டிருந்தது.

சோளன் முறித்தபின்னர் அங்கே அதனை அடித்து முதன் முதலிலே பருப்பாக்குகிற பெருமை கிட்டிக்குத்தான் உரியது. கிட்டத்தட்ட ஆளளவு உயரத்திலே புரை கட்டித்தான் பருப்படிப்பார்கள். புரையிலே மேற்புறம் வரிச்சுப்பரவி, சிறிது கீழே நெட்டிகட்டியிருக்கும். புரையின் அடிப்பாகத்திலே, சோளன் பருப்பு குவியும். புரையிலே சோளன் போட்டு பத்து நாட்களில் பிறகு தான் பருப்பை எடுக்கலாம்.

சோளன் முறிக்கிற காலம் எவ்வளவு சந்தோஷகரமானது! ஒரு ஆண்பிள்ளை பெறுவதைப் போல, நல்ல இறைச்சியைத் தின்று கள்ளையும் மாந்தி நிலைமறந்து கணவனோடு சுகித்திருப்பதைப் போல, பெண்பிள்ளைகளுக்கு நல்ல புருஷனைக் கொண்டாட்டங்களொடு, கட்டிக் கொடுப்பதைப் போல. போட்ட பயிரெல்லாம் பசுமையாய் செழித்து பூவும் பிஞ்சும் காயும் கனியு

மாய் செழித்துத் சிலிர்த்திருக்கிறதுக்கு நிகரான சந்தோஷ மாகவே இதுவுமிருக்கும்!

இப்பொழுது ஏறக்குறைய எல்லோருமே சோளன் முறித்துவிட்டார்கள். காவற் கொட்டில்களும், நெடும் பரண்களும் மந்தைகளற்ற மேய்ப்பன் போல, தமக் கெதிரே வெறும் சேனை நிலமாய், நெட்டிகள் துருத்தி நிற்கிற நிலமாகக் கிடக்கிற விரிந்த பரப்பினுள் தனித்து நின்றன. சிலரின் நிலங்களில் சுரையும், பூசணியும் பாம்புக் கூட்டங்களாய் பின்னி நிலத்தினை மூடி கொடிபடர்த்தியி ருந்தன.

கிட்டியின் நிலத்தினுள் பூசணிகள் இம்முறை நன்கு சிரித்திருந்தன. கொஞ்சநாளைக்கு கிளிகளையும், பன்றி களையும் விரட்டுகின்ற ஹூ ஹூ இசை இங்கே கேட்க மாட்டாது. பயிற்றம் பருப்பையும், வற்றகைப் பழங் களையும் கொத்தித் திருடவரும் கிளிக் கூட்டங்களுக்கு கவுண் வீசிக் கல்லெறியவேண்டும். வேறெதற்கும் கிளிகள் அஞ்சுவதில்லை.

கிட்டியின் கவனமெல்லாம் இம்முறை செய்யும் சடங் கிலேயே லயித்திருந்தது. சோளன் முறித்த பின் அதைச் சாமிக்குப் படைக்க வேண்டும். சோளன் மாவை, தேங் காய்ப் பாலோடு குழைத்து அப்பம் தட்டவேண்டும். சோளன் புக்கை செய்யவேண்டும். பெரிய வாழைக் குலை ஒன்றை மரத்தில் முற்றவிட்டிருக்கிறாள் அவள். நல்ல கறிவகைகளோடு இந்தச் சடங்கைச் செய்தால் தான் சாமி, இந்தச் சேனைக்கு மேலும் மேலும் நல்ல விளைவினைக் கொடுப்பார்... அல்லது சிறு நெருஞ்சியும் வெள்ளெருக்கும் இவ்விடமெல்லாம் படரும், பன்றியும், அணிலும், கிளியும் இரவும் பகலுமாய் எல்லாவற்றையும் துவம்சம் செய்து நாசமாக்கும். இந்தச் சடங்கினைச் சிறப்பாக முடித்தால், கண்ணாத்தைக்கும் மாப்பிள்ளை கிடைத்துவிடுவான்.' வரப்போகிற கண்ணாத்தையின்

புருஷனுக்காக இப்போதே சேனை நிலம் பார்த்து விட்டான் ஐயன்...... நல்ல செழித்த கன்னிலம்.

தனது ஆசைகளையெல்லாம் அவ்விடத்திலிருந்து ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொண்டிருந்தாள் கிட்டி. கண்களில் நிறைந்த எதிர்காலக் கனவுகளோடு கிட்டி சொல்லிக் கொண்டிருக்கையில் ஐயனுக்கு பெருமையும், மகிழ்வும் நெஞ்சினுள்ளே பிரவகித்துப் பொங்கிற்று. தன் பெண்சாதி எவ்வளவு அற்புதமானவள். இவளைத் தான் பற்றியதால் எவ்வளவு பெருமை பெற்றுவிட்டேன் என நெஞ்சு நெகிழ்ந்தான் அவன்.

கிட்டியின் வடிவழகில் லயிக்காதவர் அங்கு யாருமில்லை. சேனைக் காவலிலும், சோளஞ் செய்கையிலும் எல்லோருக்கும் முன்னுதாரணமான அவளின் பளீரிடுகின்ற கறுப்பு நிறமும், பளீச்சென்ற புன்னகையும், வெற்றிலை போட்டுச் சிவந்த உதடுகளும், கொழுத்த மானைப்போன்ற சதைப்பிடிப்பும் இதோ அன்று கண்ட அதே வடிவில் இன்னும் அதே வண்ணமாக......

"கிட்டீ"

அவனது குரலினிலே தழும்புகின்ற மோகமயக்கத்தின் அந்தரங்கத்தை அவள் அறிவாள். அவனது மௌனத்தின் அர்த்தம் எப்படியொரு விஸ்வரூபமெய்தும் என்பதை அறியாதவளா அவள்?

கிட்டி தன்னைச் சுதாரித்துக் கொண்டு எழுந்தாள்.

"சடங்கு முடிஞ்சதும் கண்ணாத்தைக்குச் சோறு கொடுக்க வேணும். அதைப் பற்றி நான் சொல்ல நீ எதை யோசித்துக் கொண்டிருக்கிறாய்..."

கிட்டியின் குரலில், சிறிது அதட்டலும் கலந்திருந்தது. பெரிய கண்களின் கண்டிப்பு ஐயனை என்னவோ செய்தது. அவளின் கண்டிப்பு கரடிப் பிடியைப் போல. "ஆரை நீ நினைச்சு வைச்சிருக்கிறாய்?"

கிட்டி ஒரு கணம் யோசித்தாள். கண்ணாத்தையின் உருவம் கண்களிலே வந்து நின்றது. கருமையான முகத்திலே, இன்னமும் கறுப்பாக அடர்ந்து தெரிகின்ற புருவங்கள். சிறிது பிளந்த, நாயுருவிப் பழத்தின் செந்நிறச் சொண்டுகள். சுறுசுறுப்பான மான் குட்டி. அவளிற்கு ஏற்றவனாக பொம்மன், பெரியான் என்ற இளைஞர்களிருவரையும் அவள் தனது மனதினுள்ளே தேர்ந்து வைத்திருக்கின்றாள். இவர்களில் ஒருவனைத் தான் கண்ணாத்தைக்குத் தேர்ந்தெடுக்க வேண்டும். நல்ல உழைப்பாளிகள். முறுக்கேறிய பன்றிக் குட்டிகள் போல சுறுசுறுப்பானவர்கள். இவர்களில் ஒருவனைத் தேர்ந்தெடுத்துச் சடங்கு வைக்கலாம்.

கண்ணாத்தையை அடைய எவருக்கும் பாக்கியம் செய்திருக்க வேண்டுமென்று நினைத்தவளாக தனது எண்ணத்தினை ஐயனிடம் சொன்னாள். ஐயன் சிறிது நேரத்திற்கு மௌனமாயிருந்து விட்டுத் தலையைச் சொறிந்து கொண்டான். மனதிலே அவனுக்குத் தெரிந்த ஒவ்வொருவரும் தெரிவாகிக் கொள்ள, ஆர்வத்தோடு "பெரியான்தான் சரி" என்று பதில் சொன்னான் ஐயன். பெரியான் நல்ல உழைப்பாளி; இறால் பிடியில் அதிக வல்லமையுள்ளவன்; சாராயம் குடித்தாலும் அசையாமல் நின்று வேலை செய்வான்.

## 7

சோளன் முறித்த பின்னர் அங்கு தனியானதொரு மகிழ்ச்சி எல்லோரது முகத்திலும் பொலிந்திருந்தது. நெட்டிகள் துருத்தி, கொடிகளே மேனிபுரட்டி, அங்கு மங்குமாய் தாராளமாக இடம் பிடித்து காய்களோடும், பூக்கள் பிஞ்சுகளோடும் நிம்மதியாகப் படுத்திருக்கின்ற

நாய்குட்டிகள் போல சேனை நிலங்களிலே செறிந்து கிடந்தன. பெரிய பூசணிப் பூக்களின் மலர்ச்சி இன்னொரு நிறைந்த விளைவிற்குக் கட்டியஞ் சொல்லி நின்றன. நன்றாக இரைவிழுங்கி உறங்கிக் கிடக்கின்ற வெங்கிணாந்திப் பாம்புகளை கல்லுக்கட்டி நீண்டு அசைகின்ற புடலங்காய்கள் நினைவூட்டின. சுரைக்காயொன்றினைக் காம்பை உடைத்து முறித்த கிட்டி, தன் பின்னே நின்ற கண்ணாத்தை கைகளிலே அதனைக் கொடுத்தாள். அந்தச் சுரைக்காயில் நல்லதொரு குடுவை செய்ய வேண்டுமென்று எப்போதோ நினைத்திருந்த அவள், அந்தச் சுரைக்குடுவை கண்ணாத்தை தேனெடுக்க மிகவும் தேவையான ஏனம் என அடிக்கடி மனதிலே நினைத்துக் கொண்டிருந்து, ஒவ்வொரு தருணமும் அதனை மிகவும் கவனமாகக் கவனித்து வந்து இன்றே பிடுங்குகிறாள். அங்கு வாழுகின்ற பெண்ணிற்கு மிக அத்தியாவசியமான பொருள் இது, ஆண் மகனுக்குக் காட்டுக்கத்தியைப் போல.

எல்லோரும் கிட்டத்தட்ட அங்கே சோளன் அடித்துப் பருப்பாக்கிப் புரையிலே போட்டு விட்டார்கள். சோளன் பத்து நாட்களுக்குப் புரையிலே கிடந்தாகவே வேண்டும். பின்னர்தான் மரைக்காலால் அளந்து எடுக்கலாம்.

எல்லாமாக ஐந்து ஏக்கர் நிலத்திலேயும் இருபது அவுணங்கள் அளவான சோளன் தானியம் ஐயனுக்குக் கிடைத்திருக்கிறது. இந்த விளைவின் ஆணிவேர் கிட்டியே என அவன் அறிவான். புரையிலிருந்து ஒன்றிரண்டு பருப்பை உள்ளங்கையிலே வைத்து நசுக்கியவாறு மனதினுள்ளே கிட்டி எண்ணிக்கொண்டாள்; 'நல்ல வீரியமான, கொழுத்த சோளன் இம்முறை சாமி தந்திருக்கிறார். அடேயப்பா என்ன மசமசப்பாய், பால்

கொண்டிருக்குது. சாதுக்கு நல்ல சடங்கு வைக்க வேணும்!'

கிட்டியின் மனதிலே இம்முறை நிறையக் கனவுகளிருப்பதனை ஐயனுக்கு அவள் அடிக்கடி சொல்லி வைத்திருக்கிறாள். அந்தக் கனவுகளையெல்லாம் நனவாக்குகிற மனத்தைரியமும், திடமும் அவளுக்கிருக்கிறது. அவளுடைய முக்கியமான மனத்துடிப்பு இது தான்; எல்லாவற்றையும் விட கண்ணாத்தைக்கு இம்முறை 'சோறு கொடுக்க வேண்டும்'. அதற்கு முன்னர் சோளன் குறித்த சடங்கையும் இவர்களின் இறந்துவிட்ட முன்னோர்களுக்கான உத்தியாக்களுக்கு வந்த சடங்கையும் வெகு தடபுடலாகச் செய்து முடித்துவிட வேண்டும். இவற்றைச் சரியாகவும், செம்மையாகவும் செய்து முடித்தால்தான் "சேனையும் முடியப் புட்டுப் பானையும் இறக்குவாங்க" என்ற பழமொழியை தாங்கள் பொய்யாக்கும் வாய்ப்பினையும் வலிமையையும் பெறமுடியும் என்று தனது அனுபவத்திலே தெரிந்து வைத்திருக்கின்றாள் கிட்டி.

சடங்கை குஞ்சு குருமானிலிருந்து, கண்மங்கி உடல் தளர்ந்த கிழங்கள் வரை எல்லோரும்தான் எதிர் பார்த்திருந்தார்கள். கண்ணாத்தை தனது எல்லாச் சகோதரங்களையும் கூப்பிட்டு தென்னோலை இழுத்தாள். இதுதான் அதற்கு நேரம். சின்னச் சின்னக் குடிசைகளெல்லாம் இப்போது புதிய கிடுகுகளால் முக்காடிட்டு தம்மைப் புதுப்பித்துக் கொண்டிருந்தன. மண்ணும் சாணமும் குழைத்து குந்துகளும், நிலமும் பூசி மெழுகப்பட்டு, கோழிக்கால்களிலும், மனிதக் கைகளிலும் சுண்ணாம்பு பூசி, சுவர்களிலே அவை சித்திரங்களாய் அழுத்தப்பட்டு அழகு கூறின. திண்ணையோரத்து சுவரிலே மான்கொம்பும், கொம்பையொட்டி மயிலிறகும் காட்டின் வனப்பை மெல்லிய

சித்திரமாக்கினாற் போலப் பொருத்தப்பட்டிருந்தன. கரும்பச்சை, சிவப்பு, இளஞ் சிவப்போடு குழைந்த மஞ்சள் வர்ணச் சோளங் குலைகள், வளை ஓரமாக நிரையிட்டு ஒரே வரிசையில் தொங்கி இக்குடிசையின் சேனை வளத்தினையும், உழைப்புத் திறனையும் உணர்த்தி நின்றன, இனியதொரு கவிதைபோல. சோளஞ் சேனையில் ஒவ்வொருவரும் கொஞ்சக் கொஞ்சம் கஞ்சாச் செடியும் நாட்டுவது வழிவழி வந்த வழக்கம். கஞ்சாவை உருவி சோளன் மாவோடு பிசைந்து அப்பம் தட்டி வைக்காத எந்தச் சடங்கும் சுத்தமானதில்லை.

சடங்கு வெகு கோலாகலமாகத் தொடங்கி விட்டது. தாராளமான கீற்றுக் கொட்டகையின் கீழே மொழுமொழுப்பான உருண்டைக் கல்லாக இருந்து சாமி, அங்குள்ள எல்லாப் பூக்களையும் அலங்காரமாகக் கொண்டிருந்தார். யாரோ, வெள்ளை வெளேரென்ற பெருங்கோடைப் பூக்களையும் செவ்வலரிப் புஷ்பக் கொத்துக்களையும் ஒன்றோடு ஒன்றாக இணைத்துப் பின்னணியிலே தொங்கவிட்டிருந்தமை மிகவும் அழகாயிருந்தது. எத்தனை வட்டில்கள் நிறைந்த அப்பங்கள். சோளம் புக்கை சுகந்த மணத்தினை அவ்விடமெல்லாம் வாரியிறைத்துக் கொண்டிருந்தது. கதலி, இரதை வாழைக்குலைகள் ஒவ்வொன்றும் சேனை நிலங்களின் வீரியமான வெளியீடுகள் நாங்களே என்று நிதர்சனப் படுத்திக் கொண்டிருந்தன. சற்று உடல் வளைந்த தென்னை மரத்தடியில் கட்டப்பட்டிருந்த இரண்டு ஆட்டுக் கிடாய்கள் மொச்சை மணந்தன. நாய்களெல்லாம் ஒன்றையொன்று பார்த்து உறுமுவதையும், சீறுவதுமாயிருக்க சிறு பையன்கள் அவற்றை அதட்டி ஒழுங்கிற்கு உட்படுத்திக் கொண்டிருந்தார்கள். ஐயன் இன்றைக்கு அங்கே மிக முக்கியமானவன். அவன்

ஒரு குட்டிச் சாமி போலவே தோற்றங்கொடுத்தான். இடுப்பிலே வேப்பிலையை மாலைபோலப் புனைந்து சுற்றிக் கட்டியிருந்தான். அவன்தான் சாமிக்கு சடங்கை ஒப்பேற்றுபவன். அதிகம் பேசாமலே, கட்டளையிட்டுக் கொண்டிருக்கிற அவன் முன்னாலே எல்லோரும் மிகவும் பயபக்தியோடு நின்று அவற்றை ஒப்பேற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

பனை வடலியருகே கண்களைக் கோணிக்கொண்டு நின்ற சேனாதியோடு எவரும் எதையுமே பேசவில்லை. என்ன குற்றங்கள் செய்திருந்தாலும் சடங்கின்போது எவருமே கலந்துகொள்ளலாம்; யாருமே தடைபோட மாட்டார்கள். பல விரோதங்கள் தீர்வதும், குடும்பங்கள் உருவாவதும் அந்த நாளின் களிப்பான பொழுதுகளின் போதுதான்!

கிட்டியின் கண்கள் இன்றைக்கு அலைபாய்ந்து கொண்டிருக்கின்றன. அவள் கண்கள் பெரியானையும் கண்ணாத்தையையுமே அடிக்கடி கவனித்துக்கொள் கின்றன. பெரியான் பார்வைக்கு நல்லாகவே இருக் கிறான். கறுத்துத் திரண்ட தோள்கள். நெஞ்சிலே வயதுக்கு மீறிப் புசுபுசுவென்று அடர்ந்திருக்கின்ற ரோமச் சிலிர்ப்பு. ஒடுங்கிய முகத்திலே எந்நேரமுமே சிரித் திருக்கிற பிரமையைத் தோற்றுவிக்கின்ற முகப்பொலிவு. கண்ணாத்தை தன்பாட்டிற்கு பன்புல் ஒன்றைப் பிய்த்துக் கொண்டு உதுரனுக்கு எதையோ சொல்லிக் கொண்டிருக் கிறாள். நாளிலும் பொழுதிலுமாய் கண்ணாத்தையின் உடலிலே பரிமளிக்கின்ற யௌவன மலர்ச்சியால், தாய் அடையும் பெருமிதம் கொஞ்ச நஞ்சமல்ல. அவ்விடத் திற்கு அவளே மயில்; அவளே மான்; அவளின் யௌவனக் கவர்ச்சியினால் மனதிலுள்ளே கனவுகளை வளர்க்காத இளைஞன் அங்கே யார்?

சடங்கு முடிந்து உணவினை ஒவ்வொருவரும் தனியாக எடுத்துக்கொண்டு செல்கையில் கிட்டியின் கண்கள் பெரியானைத் தேடின. அந்தத் தேடலின் முடிவில் அவளது பெரிய கண்கள் தரித்தபோது திடுக் காட்டமே விளைத்தது. யாரும் கவனிக்க வில்லை என்ற நினைப்பின் துணிவோடு பெரியான், மூலை மேம்படி யிலே பொன்னாளோடு சரஸம் செய்து கொண்டிருந்த தைக் கண்ட கிட்டி அடைந்த அதிர்ச்சியினுக்கு ஒரு அளவேயில்லை. கிட்டி அந்தக் கணமே மனமுடைந்து திகைத்துச் செயலற்ற நிலையினை அடைந்தாள்.

வீட்டுக்குப் போன அவள் நிம்மதியின்றி ஒரு மூலை யிலே உட்கார்ந்து பலவாறாக யோசித்தாள். அவளைக் கவனியாத ஐயன் மூக்கு முட்டிய வெறியிலே ஏதோ புசத்திக் கொண்டிருந்தபோது, கிட்டி தாங்கமுடியாத சினத்தோடு எழுந்து வெளியே போனாள். பசுமை செறிந்த சோளஞ் செடிகளில்லாத, சேனை நிலத்தைப் போலவே அவளது மனம் வெறுமையுற்றிருந்தது. சேனை நிலத்திலே தனித்து நிற்கிற காவற் கொட்டிலுக்குக்கூட உதுரன் தென்னோலைகளால் அலங்காரம் செய்திருப் பதனை அவளது கண்கள் கண்டன. இந்தச் சடங்கு முடிந்ததும் கண்ணாத்தைக்குச் சோறு கொடுக்கின்ற வைபவத்தினை மிகமிகச் சிறப்பாக நடத்துவதற்கு அவள் கொண்டிருந்த கனவுகள் எத்தனை! காவற் கொட்டிலின் கீழே முண்டன் உடும்புத் தோலொன்றோடு மல்லிட்டுக் கொண்டிருந்தது. பெரியான், பொன்னா ளோடு சரஸம் செய்கிற பெரியான்! கிட்டியின் மனம் ஆறுதலின்றி வேதனையுற்று சேனைப் புற்களைப் போல எரிந்து புகைந்து கொண்டிருந்தது......

## 8

காட்டின் ஒற்றையடிப் பாதையினை விட்டு விலகி, மருக்காலை மரக் கூட்டப் பக்கமாக நடந்து சென்று

கொண்டிருந்த ஐயனின் மனதிலே, கிட்டியே இப்போது நிறைந்திருந்தாள். வழமையாகவே கலகலப்பான சுபாவமுள்ளவளான அவள், சடங்கு காலத்திலே சுறுசுறுப்பான மைனா குருவிபோல ஓடியாடித் திரிவாள். புதுப் புதுக் கறிவகைகள் செய்வாள். நுரை தளும்புகிற கள்ளினை அவனுக்கு மொண்டு கொடுத்துவிட்டு இறைச்சி வறுவலை அவனுக்குத் திகட்டுமளவிற்கு ஊட்டுவாள், அவள். இக்காலமே அங்கு மனோகரமானது. புதுத் தளிர்களை உடலெங்கும் சுமந்து குலுங்குகின்ற கொடியினைப் போல மனமும் உடலும் களிப்பிலும், மோகமையலிலும் நிறைய, அவ்விடத்தே சொர்க்கலோகமொன்று விரிந்து போயிருக்கும். சேனாதிகூட அடைக்கோழி போல அங்கேயே தரித்து நல்ல மனிதனாய், தாழ்ந்த பார்வையோடு, மரியாதையைப் பாவனை செய்கிற புன்னகையோடு உலவிவருவான். ஐயன், சடங்கு முடிந்து, குடிசையின் பின்னே தலையெல்லாம் காய்கள் சுமந்திருக்கின்ற பலாமரத்தின் கீழேயிருந்த போது, கிட்டி அவ்விடம் வந்தாள். ஐயனுக்கு கொஞ்சம் கஞ்சா மயக்கமிருந்தது. அவள் மிதந்து வருகிறாற் போலவும், இடுப்புக்கு மேலே வெறுமையான மேனியோடு மோக அழைப்போடு வருகிறாற் போலவும், இன்னும் இன்னும் அழைக்கிற உடல் வாகினைத் தனக்கு சலியாது ஒப்படைக்க விழைகிற அழைப்பேயாகவும் தோற்றமொன்று நிழல் விரித்தது. வட்டிலோடு கொண்டு வந்த அப்பத்தை, அவனது அருகாக வைத்துவிட்டு நிமிர்ந்த கிட்டியின் கையினை குரல் தளதளக்கிற வாஞ்சையோடு பற்றினான் ஐயன். கிட்டி திரும்பி அவனைப் பார்த்துவிட்டு கையை உதறியவளாய் விறுக்கென்று அங்கிருந்து போய்விட்டாள்.

தன்னுடைய மகிழ்ச்சியினை எல்லாம் வேரோடு அவள் பறித்துக் செல்வது போல மனமுணர்ந்த ஐயன்,

மிகுந்த விரக்தியோடு அவ்விடத்திலிருந்து எழுந்து, பப்பாக் குழல் ஒன்றைக் கையில் எடுத்து சடக்மடக் கென்று முறித்தவாறு கிட்டியின் பெயரோடு தூஷணை அடைமொழியொன்றைச் சேர்த்துத் திட்டியவனாய் அங்கிருந்து காட்டை நோக்கி நடந்தான்.

கிட்டியின் போக்கு என்றுமே இப்படி இருந்ததில்லை என்பதினாலேயே இவ்வளவிற்கு விசனமடைகின்றான் ஐயன். 'இவள் மனதிலே என்ன வேதனை வந்ததினால் இப்படியாக என்னை மனம் நோகவைத்துச் சென்று விட்டாள்?'

கும்முனைச் செடிகளுக்கூடே முறுகிக் கிடக்கின்ற கிளாக்கொடிகள் இவ்வளவு தொகையாகப் படர்ந்திருக் கின்றதனை இப்போதே முதன்முறையாகத் தன் எதிரே கண்ட ஐயன் திடீரென்று உற்சாகம் வரப்பெற்றான். இந்த முறை கண்ணாத்தைக்கு எப்படியும் சோறு கொடுத்தே ஆகவேண்டும். அவளுக்கு ஏற்றவனையும் தெரிவு செய்தாகிவிட்டது. கண்ணாத்தைக்காக எத்தனை பேர் ஏங்கி நிற்கிறார்கள்; பெரியான் அதிர்ஷ்டக்காரனே என மனதிலுள்ளே சொல்லியவனாய், அவனுக்காகப் பார்த்து வைத்துள்ள சேனை நிலத்தையும், அதில் அமையவுள்ள காவற் கொட்டிலையும் கட்டுவதற்கு மிகச் சிறந்த, பலமான தேவையாக இக் கிளாக்கொடியே இருக்கும் என அவன் மனதினுள்ளே பேருவகை கொண்டான். இப்போது காட்டுக் கத்தி இருந்தால் எல்லாக் கிளாக் கொடிகளையுமே வெட்டிச் சரித்துவிடலாம். இருந்தாலும் என்ன இதனை அடையாளப்படுத்திவிட்டுச் சென்றால் யாருமே இதனைத் தொட மாட்டார்கள்; ஐயன் கொடிக்கு அருகாகச் சென்று அதனைப் பிடித்துப் பார்த்து, அதன் வைரிப்பினிலே மனம் திருப்தியடைந் தான்.

இனி நான்கைந்து மாதங்களுக்கு நிரந்தரமான தொழில் அங்கு ஆணுக்கோ பெண்ணுக்கோ இருக்க மாட்டாது. பெண்களுக்கு நல்ல ஓய்வு வாய்க்கிற காலங்களிலே பன்புற்களைப் பிடுங்கி உலர்த்திப் பாய் இழைப்பார்கள். ஏதாவது சிறு தானியங்களையோ, காய்கறிச் செடிகளையோ சேனை நிலத்தில் புதிது புதிதாக நடுவார்கள். ஒதுங்குப் புறத்தில் மரவள்ளி நாட்டிக் காப்பார்கள். ஆவணி மாதம் வந்துவிட்டால் அங்குள்ள எல்லோரது மனதிலே புது வேகம் பிரவாகம் எடுக்கத் தொடங்கி விடும். குடும்பம் குடும்பமாகக் காடு வெட்ட ஆரம்பிக்கிறார்கள். வண்ணாத்திப் பூச்சிகளாக பரட்டைக் காடுகளிலே அங்குமிங்குமாய்ச் சுறுசுறுப்பாக இயங்குவார்கள். பரட்டைக் காடுகளிலே சிலவேளைகளிற்தான் விசப்பூச்சிகள் வெளிப்படையாகவே ஊர்ந்து திரியும். பெரிய மரங்கள் அப்படியே பரட்டைக் காடுகளின் இடையிடையே வெட்டப்படாமல் நாகப்பாம்பு போலத் தலை நிமிர்த்தித் தனித்து நிற்கும். ஆவணி மாதத்தினில் அழிந்த காட்டிற்கு நெருப்புக் கொடுத்து எரியூட்டி விட்டால் இரண்டொரு நாட்கள் அணையாமலே தீ தன்னுடைய வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கும். காடு வெந்து தணிந்தபோது பொடியான சாம்பல் இள நிலத்தை அணைந்து இறுகிக் கொள்ளும். அவ் வேளையிலே லேசான மழை துமித்து அந்தச் சாம்பற் பசளை கலந்த நிலத்திலே கலந்து விடுமாயின் அதைப்போல மகிழ்ச்சிகரமென்ன. ஒரு மழைத் துமியின் பிறகு எவ்வித தயக்கமுமின்றி விதைகளை நாட்டலாம். கன்னி நிலத்தினில் சோளம் விதைகளை நாட்டுவதற்கு பயிற்சிமிக்க ஒரு லாவகம் வேண்டும்.

புதிய நிலத்திலே சோளன் பயிர்கள் பச்சைப் பசேலென்ற கதிர்களை சீறிக் கொண்டெழுவதைப் பார்ப்பதே அங்குள்ளவர்களுக்கு மிகப் பரவசமானதொரு அனுபவமாகவும் தொடர்ந்து வந்திருக்கிறது. ஆண்டு

தோறுமே இந்தச் சம்பவம் நிகழுகின்ற ஒன்றுதான். ஆனாலும் புதிதுபுதிதாக இது நிகழ்ந்து அறிமுகமாவது போல இங்குள்ளோரை இவை மனதினை நிறைவிக்கின்ற ஒரு நற்காரியமாக உள்ளது.

மண் நிலத்தை பீறிட்டு எழுகின்ற முதல் இரு மடல்களின் பசுமையான நிறத்தைப் பார்த்தால் அந்தப் பயிரின் ஆரோக்கியத்தை அங்குள்ள எவராலுமே கூறி விடமுடியும். ஒரு மாத காலத்திற்கு குறிக்காவல் என்ற பேருக்குள்ளாகி இந்தச் சிறு பயிர் காவலற்ற சிறு குழந்தையாகவே இவர்களாற் பராமரிக்கப்பட்டு நாற்பது நாட்களின் பிறகு வருகின்ற குடலைப் பருவக் காலத்தில் அங்குள்ள எல்லோரதும் கண்மூடிடாக் காவலுக்கு உரிமை பெற்றுவிடுகின்றது. சோளஞ் செடியில் பாளை வந்துவிட்டால் வாடி போட்டு காவலும் தொடங்கிவிடும். பிறகு அந்தச் சேனை எங்குமே உறக்கமென்பதே தொடர்பில்லாத ஒன்றாகிவிடும்...

கிளாக் கொடியினை தன் பலம் முழுவதையும் பிரயோகித்து இழுத்து முறித்துவிட்டு, தன்மேல் உதிர்ந்த முசுறுகளை மெதுவாகத் தட்டிக் கீழே வீழ்த்தினான் ஐயன். இப்போது அவனது கவனமும், சிந்தனையும் புதிதாகதான் வெட்டவுள்ள சேனை நிலத்தின் பரட்டைக் காடுகளிலேயே லயித்திருந்தது. எண்ணற்ற ரகசியங்களின் உறைவிடமான அந்த அடர்காட்டின் நடுவே ஒன்றிய சிந்தனையோடு நின்ற அவனது பலமான தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத கிளாக்கொடி தன் அவயவங்களை இழந்து சிதைந்து கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த செய்பகக் குருவி திடீரென்று அடைத்த குரலிற் கரைந்தவாறு அங்கிருந்து விறுக் கென்று பறந்து சென்றது.

## 9

சம்பன் உருண்டு திரண்ட தனது உடலால் அந்தக் குளத்தினுள்ளே துளாவிக் கும்மாளித்துக் கொண்டிருந்தான். குள்ள உருவமுடைய அவன் நன்றாக நீந்துவான். குளத்தினுள் அதிக நேரம் சுழியோடிச் சென்று தாமரைப் பூக்களையும், அல்லி மலர்களையும் பிடுங்கி வந்து கரையிலே நிற்கிற சிறுவர்களுக்கு மிகத் தாராளமாக அவன் பங்கிட்டுக் கொடுப்பான். இன்று தனியாக எருமைக்கன்று ஒன்றினைப் போல அவன் குளத்தினுள் அமுங்கிக் கிடந்தான். பத்து வயதான சம்பன், இந்தப் பிச்சன் குளத்திலே தனிமையிலே அச்சமின்றி நீந்துவதனை, குளத்திலிருந்து சிறிது தள்ளியுள்ள முதிர்ந்த பாலை மரத்தின் கீழே நின்று புதினம் போலப் பார்த்தவாறிருந்தான் குணசிங்கா.

குளத்துக்கு அருகாக பட்டிமாடுகள் அசை போட்டவாறு கிடந்தன. குளத்தினுள்ளே தாமரையும், செவ்வல்லிகளும் நிறையப் பூத்திருந்தன. தாமரைக் கிழங்குகளைத் தோண்டி எடுத்த இடத்திலே மட்டும் வெற்றிடமொன்று நீர்ப்பரப்பினைக் காட்டி நின்றது. தர்மதாவும், சுப்பிரமணியமும், குணசிங்காவும் இன்றைக்குத்தான் பணத்தையும் கொண்டு பட்டம்கட்டி சின்னையாவிடம் வந்திருக்கிறார்கள். இப்போது சோளனுக்கு வெளியிடங்களிலே நல்ல விற்பனை வசதி கிடைத்திட வாய்ப்புகளிருக்கின்றன. அதோடு இந்த மக்களிடம் கலப்படமற்ற சுத்தமான தானியத்தினை மலிவாகவே கொள்வனவு செய்ய முடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது. பட்டங்கட்டி சின்னையாவை, அவர்களுக்கு கொழும்பிலிருந்து இப்பகுதிக்கு வந்து மீன் கொள்வனவு செய்கிற வியாபாரியான பேதுருப்பிள்ளைதான் அறிமுகம் செய்திருந்தார்.

பட்டங்கட்டி சின்னையாவையும், ஐயனையும் சந்தித்த முதல் தரத்திலேயே அவர்களின் மேல் குணசிங்காவிற்கும் ஏனையோருக்கும் மிகுந்த நம்பிக்கை ஏற்பட்டு விட்டது.

குணசிங்காவிற்கு இப்போது வயது இருபத்தொன்று, அவன் கண்டியிலேயுள்ள ரஜவத்தையில் பிறந்தவன். சிவப்பு நிறமான, எவரையும் வசீகரிக்கக்கூடிய தோற்றமுள்ள அவனது நேர்மையான போக்கினை நன்றாக அவதானித்து மனதினுள்ளே குணசிங்காவைப் பற்றி நல்லபிப்பிராயத்தைத் தோற்றுவித்துக் கொண்ட விமல தர்மா என்ற பிரபல வியாபாரி தனது பெரிய விற்பனை நிறுவனத்திலே அவனுக்குப் பிரதான பொறுப்புகளைக் கொடுத்து வைத்திருக்கின்றார். அவருக்குப் பல வியாபார நிறுவனங்கள் நாடெங்குமுள்ளன. விலை குறைவான பகுதியிலேயிருந்து பொருட்களைக் கொள் முதல் செய்து விற்பதற்கு வசதியாக பல லொறிகளை அவர் சொந்தங்கொண்டிருந்தார். இப்படிக் கொள்வனவு செய்யப் போகின்ற இடங்களிற்கு விமலதர்மா மிக நம்பிக்கையோடு குணாசிங்காவை அனுப்பி வைப்பார். பணமும் அவனிடமேயிருக்கும். கண்டியிலும், கொழும்பு வியாபாரப் பகுதிகளிலும் சரளமாகவும், இதய சுத்தியாகவும் அவன் தமிழர்களோடு பழகிக் கொண்டதால் தெளிவாகத் தமிழிலே பேசிக் கொள்ளும் இயல்பினையும் உடையவனாகி விட்டான். இன்றைக்கு பட்டங்கட்டியர் சின்னையா வீட்டிற்கு வந்தபோது அவர்கள் மூவருக்கும் சிறப்பான விருந்து போடப் பட்டது. நல்ல பன்றி இறைச்சிக்கறி. பன்றி இறைச்சி யிலேயே வறுவலும் செய்து, பன்றிக் கருக்கலையும் வைத்திருந்தார் பட்டங்கட்டியார். பெரிய இறால்களைப் பொலித்து, தனித்தனியாக வெங்காயம் கருக்கிச் சேர்ந் திருந்தது. போதாக் குறைக்கு இரண்டு சாராயப் போத்தல் கள். குணசிங்கா சாராயம் குடிப்பதில்லை என்று

வெட்கத்தோடு சொன்ன போது, அவனை மிகுந்த அதியத்தோடு உலகிலேயே இப்போதுதான் சாராயம் குடியாத ஒருவனை எதிர்கொள்வது போன்ற பாவனையில் பார்த்து விட்டுப் பட்டங்கட்டி பெருமிதமாகச் சொன்னார்!

''உங்களினுடைய வயதிலை எவ்வளவு காரியம் செய்யவேணும் தெரியுமா? நான் உங்களினுடைய வயதிலை இருக்கிறபோது மணியகாரனுக்கும், உடையாருக்கும் பின்னாலேயே திரிந்திருக்கிறன்: நானில்லாமல் அவங்களாலை ஒன்றுமே செய்யமுடியாது. உடையார் தவசீலர் என்னை கிடாய் சின்னையன் என்று பட்சமாகக் கூப்பிடுவார். கிடாய் என்னமாதிரியானதென்று உங்களுக்குத் தெரியுந்தானே...(திடீரென்று இறந்த காலத்திலே கால்தரித்து நிகழ்காலத்திற்குத் திரும்பியமையினால் சின்னையாவுக்குள்ளிருந்து அவரையறியாமலே பெருமூச்சுச் சீறிற்று.) அதெல்லாம் இனித் திரும்பி வரவா போகுது?'' என்று கூறிமுடித்தவர் கதையிலிருந்து தடம் புரண்டு ''எடே, நீலா'' என்று சத்தம் வைத்தார். வாய்க்குள் திக்கித்திக்கி ஏதோ முணுமுணுத்தவாறு அவ்விடத்திற்கு வந்த நீலனைப் பார்த்து, ''எடே நீலா, கடவாயில் வெத்திலையைத் துடைத்துவிட்டு ஐயாவுக்குக் கட்டித் தயிருக்குள்ளை கொஞ்சம் தேனும் விட்டுக் கொண்டோடி வாடா'' என்று அதே குரலிலே கட்டளையிட்டார் பட்டங்கட்டியர்.

குணசிங்கா இப்படியான கட்டித்தயிரை இதுவரை சாப்பிட்டதில்லை. சுத்தமான வெண்தயிர், தயிரின் வெண்நிறத்தினை, செந்தேன் கண்ணாடியினைப் போல, கவர்ந்து மூடித் தளதளத்தது. சின்னக் கரண்டியினால் தயிரையும், தேனையும் குழப்பிக் கலக்கி ருசித்து ருசித்து குணசிங்கா அருந்திக் கொண்டிருந்தபோது, பொரியல்

களொடு சாராயத்தினை ஒரு பிடிபிடித்துக்கொண்டிருந் தனர் மற்றவர்கள். சாப்பிட்டு முடிந்தபோது, பட்டங் கட்டியர் எல்லோருக்கும் சிறிது கண்ணயர ஒழுங்குகள் செய்யும்படி நீலனுக்குக் கட்டளையிட்டபோது குணசிங்காதானே முன்வந்து கொஞ்சநேரம் இப்பகுதி யினை நடந்து சென்று பார்த்துவிட்டு வருவதாகக் கூறி இப்போது இங்கே வந்து நிற்கிறான்.

சம்பன் இன்னமும் நீராடி முடியவில்லை. பாலை மரத்தின் கீழே நின்று பார்த்தால் பிச்சன் குளம் நன்றாகவே தெரியும். குளத்தினுள்ளே நின்று பார்க் கின்ற எவருக்கும் பாலைமரத்தின் கீழே நிற்பவர்களைத் தெரியமாட்டாது. இப்போதும் அப்படித்தான். திடீரென்று சம்பனின் குரல் உற்சாகத்தோடு கூவியது;

"அக்கை, வா...மாடுகளை விட்டிட்டு வந்து தோய்.."

குணசிங்காவின் பார்வை, ஒரு கையிலே சுரைக் குடுவையோடும், மறு கையிலே நீண்ட விண்ணாங்குத் தடியோடும் நின்ற கண்ணாத்தையின் மேலே விழுந்தது. பார்வைக்கு இனிமையானவளாய், வசீகரத்தோடு இளமையின் கம்பீரமாக மதர்த்து நின்றாள் அவள். சுருண்டமுடி. வாரப்படாது அலைந்து கொண்டிருந்தது. உறுதியாகத் திரண்ட கால்கள் தெரியத்தக்கதாகப் பாவாடையை முழங்கால்வரை இழுத்துச் செருகியிருந் தாள். பெரிய கண்கள் படபடக்க, பளீரென்று சிரித்த வாறு சுரைக்குடுவையையும், விண்ணாங்குத் தடியையும் குளத்தருகேயுள்ள சிறுகல்லில் சார்த்தி வைத்தாள் கண்ணாத்தை. பின்னர் வெகு ஆறுதலாகக் குளத்துக்கு முதுகு காட்டியவளாய் மேற்சட்டையைக் கழற்ற ஆரம் பித்தாள்...

குணசிங்காவிற்குத் திடீரென்று நரம்புகள் சிலிர்த்தன. உடம்பு முழுவதும் நடுங்குகிற உணர்வு.தொண்டைக்குள்

என்னவோ செய்தது. என்ன செய்வதென்று புலப் படாதவனாய் அடித்து வைத்த சிலையாகி அவ்விடத் திலேயே நின்றான், அவளிலே விழுந்த பார்வையினைக் கழற்ற முடியாமலே.

கண்ணாத்தை இடைவரை வெறுமையாக நின்றாள். மேற்சட்டையைக் கல்லில் எறிந்து விட்டு, தோகையாக முழுகிலே வழிந்துகிடக்கின்ற தலைமயிரை இரு கைகளை யும் பின்புறமாக வைத்து அள்ளியெடுத்து உச்சிக் கொண்டையிட்டுக் கொண்டிருந்தாள் அவள். மினுமினுப் பான அவளது கறுப்பான தேகத்திலே இளமார்பகங்கள். இரு பியர்ஸ் கனிகளென திமிறி உயர்ந்து நின்றன. உச்சிக் கொண்டையை முடிந்ததும், தொப்புளடியி லிருந்த பருவொன்றினை நகத்தினால் சுரண்டிவிட்டு, பாவாடையை அவிழ்த்து, மார்பங்களினை மூடிக்குறுக் காகக் கட்டிவிட்டு கிறுகிறுவென்று குளத்தினுள்ளே இறங்கி நடந்து, குமுக்கென்று நீரினுள் மூழ்கி எழுந்தாள் கண்ணாத்தை.

இன்னமும் சுய நினைவு வரவில்லை குணசிங்கா வுக்கு. வெகு ஆறுதலாக, சுற்றஞ் சூழலைப்பற்றி அக் கறைப்படாத அப்பாவித்தனத்தோடு தன் இளமையின் அந்தரங்கத்தை அவனுக்குக் காட்டி, ஒரு தாமரை மலரெனவே குளத்தில் நீராடுகிற அவள், குணசிங்காவின் இளமனதிலே பொறியெனவே தனது நினைவினை அழுத்தலாகப் பதித்துவிட்டாள்...

## 10

பட்டங்கட்டி சின்னையா மகிழ்ச்சி பிடிபடாமல் அங்கு மிங்குமாக உலாவிக் கொண்டிருந்தார். குருவிக்கல்லன் முழுச் சோளனையும் நியாயமான விலைக்கு வாங்கு

வதற்கு வந்திருந்தவர்கள் சம்மதித்து பணமும் கணக்கிடப் பட்டுவிட்டது. அந்தக் கணக்கெல்லாம் அவரிடமே யுள்ளது. இந்தக் கருமம் வெற்றியானது ஐயனாலேதான் என்பதை நன்கு உணர்ந்தமையினால் அவனது கையிலே இரண்டு முழுப் போத்தல் சாராயத்தினை நேற்றுப் பின்னேரம் அவர் கொடுத்தபோது பூசணிப்பூவாய் அவனது முகம் மலர்வுற்றுப் பிரகாசித்ததை அவர் கண்ணுற்றார். இனி சோளனை அளந்து முட்டை கட்ட வேண்டியதுதான். பட்டங்கட்டி சின்னையாவின் கணக்குப்படி கிட்டத்தட்ட நூறு அவுணம் அளவிலான சோளன் தானியத்தினை இதுவரையிலும் ஐயன் சேகரித்துவிட்டான்.

கிட்டத்தட்ட இப்போதைய விலைக்கு இருபதிலி ருந்து முப்பதாயிரம் ரூபா வரையிலும் பணம் கிடைக்கக் கூடும். பேதுருப்பிள்ளை, குணசிங்கா பகுதியினரை அறிமுகபடுத்தியபோதே, "வியாபாரமென்பதல் நாண யத்தையும், நறுக்கையும் அப்படியே கைப்பிடிப்பவர்கள். நல்ல மனிதர்கள். இவர்களைக் கையுக்குள்ளை வைத் தருத்தால் நீ லட்சம் லட்சமாய் உழைக்கலாம். ஆனால் நேர்மை தப்பி நடவாதே..." என்று கூறியிருந்தார். அது இப்போழுதுதான் அர்த்தம் பெற்ற உண்மையாய் பட்டங்கட்டிக்குப் புலப்படுகின்றது. பின்னரும் ஒரு நாள் பேதுருப்பிள்ளை பட்டங்கட்டி சின்னையாவைக் கண்டபோது எல்லாவற்றையும் விசாரித்துவிட்டு, "வியா பாரி யாருக்கு நேர்மையில்லாமலிருந்தாலும் பரவா யில்லை. ஆனால் தன்னோடை தொடர்புள்ள மற்ற வியாபாரியோடை முழு நேர்மையாக இருக்கவேணும். அப்பதான் வியாபாரமும் செழிப்படையும்... நான் இன்றைக்கொரு பணக்காரனாயிருக்க சர்வேஸ்வரன் வழிதந்ததுக்கும் அதுதான் காரணம். என்ன, நான் சொல்லுறது விளங்கிச்சுதா பட்டங்கட்டி?..." என்ற

பொழுது, பொதுபொதுத்த தனது தேகத்தினைக் குறுக்கி வெகு பவ்வியமாகவே, "அப்படியே" என்று பதில் கூறினார் பட்டங்கட்டி சின்னையா.

பட்டங்கட்டி சின்னையாவின் தகப்பன் செல்லன் நல்ல கமக்காரனாயிருந்தவன். சிறிய கிராமப்பகுதி களுக்கு வருகின்ற அரசாங்க அதிகாரிகளுக்கு வேட்டைக்கு உதவி செய்வது, காய்கறி கொடுப்பது, தேனெடுத்துக் கொடுப்பது அவர்களின் நலன்களைக் கவனிப்பது ஆகியனவற்றை அந்தக் கிராமத்திலே செல்லனே மேற்கொண்டு வந்தால் எந்த அதிகாரி வந்தாலும் செல்லன் அங்கே கூப்பிடப்படுவான்.

ஒரு மந்தார நாளன்று செல்லனின் குடிசையின் முன்னே சத்தம் கேளாமல் வந்து நின்ற ஜீப் வண்டி யொன்று, பலத்த சத்தத்தோடு கோர்ண்ணலியை எழுப் பிற்று. சத்தத்தைக் கேட்டதும் பிள்ளைகளெல்லாம் பயந்து ஒடுங்கி மஞ்சமுன்னாப் பற்றைகளுக்குள்ளே ஒளிந்துவிட்டார்கள். ஒருவாறாக தன்னைச் சுதாரித்துக் கொண்டு செல்லன் வெளியே வந்தபோது முதலிலே உடையாரையே கண்டான். உடையாரின் பின்னாலே செம்பட்டை நிறத்தலை மயிரோடு உயர்ந்த தோற்ற முள்ள வெள்ளை மனிதனும், காற்சட்டை, சர்ட் போட்ட வேறு இருவரும் நின்றனர். ஏதோ கசுபுசு என்று அவர்கள் விளங்காத மொழியிலே பேசிக் கொண் டிருக்க, உடையார் செல்லனைப் பார்த்து அடங்கிய குரலிலே "டே, செல்லா வந்திருக்கிறது ஆரென்டு உனக்குத் தெரியுமோ? மணியகாரனும், ஏசண்டுத் துரையும் தானடா... உன்னட்டைத்தானடா வந்திருக் கனை..." என்றார். செல்லனுக்கு எதுவுமே விளங்க வில்லை. உடலெல்லாம் பதறி நடுங்கியது. உடையாரை விட மேலும் பதுக்கமான குரலிலே, "ஐயா, ஏசண்டுத் துரை ஆர்?" என்று கேட்க, உடையார் அவனுக்கே

விளங்கும் விதத்தினில் ஏஜண்டுத்துரையை அடையாளங் காட்டினார். பின்னர் அவனது காதிற்குள் ஏதோ குசுகுசுத்துவிட்டு ஒரு புறத்திலே ஒதுங்கி நிற்க, செல்லன் அந்த ஏஜண்டுத் துரையின் காலடியில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தான். பறங்கியரான அந்த அரசாங்க அதிபர், இந்த மரியாதை முறையினை அறிவாராயினும் திடீரென்று அவன் தனது காலடியிலே விழுந்ததும் நன்றாகவே திகைத்து விட்டார்.

பின்னர் தனது திகைப்பினைக் காண்பிக்காதவராய் உடையாரைப் பார்த்து ஆங்கிலத்தினில் எதையோ சொல்ல, உடையார் அதட்டலோடு, "செல்லா, நீ செய்தது ஐயாவுக்கு நல்ல சந்தோஷம். சரி, இனிப் போதும் எழுந்திரடா" என்றதும் உடம்பில் படிந்த மண்ணையும் தட்டாமல், வெகு மரியாதையோடு கைகளைக் கட்டிக்கொண்டு ஒதுங்கி நின்றான் செல்லன். அரசாங்க அதிபர் அங்கு வந்ததற்கான காரணத்தை உடையார் செல்லனுக்கு விளக்கினார். இப்பகுதியினைப் பார்வையிட்டுப் போக அவர் மணியகாரனோடு இப்பகுதிக்கு இன்று வந்து இரண்டு நாட்களுக்குத் தங்கியிருக்கப் போகின்றார். மக்கள் தங்களுக்கு ஏதேனும் கஷ்டங்கள் இருந்தால் உடையார் மூலமாக அதனை மணியகாரனுக்குத் தெரிவித்தால் மணியகாரன் ஏஜண்டுத்துரையின் கவனத்திற்குக் கொண்டுவருவார். இவை ஒரு புறமிருக்க, ஏஜண்டுத்துரை தங்கியிருக்கிற இரு நாட்களுக்கும் அவருக்கு இறைச்சிக்குரிய எல்லா ஒழுங்களையும் செல்லனே செய்யவேண்டும்.

செல்லனுக்கு மகிழ்ச்சியினால் கண்மண் தெரியவில்லை. எல்லை மீறிய புளுகத்தினால் இளித்துக் கொண்டு கைகளைப் பிசைந்தவாறிருந்தான். இரண்டு நாட்களாக அப்பகுதியின் அடர்காடுகள் கலங்கி அதிர்ந்தன. தோட்டாச் சத்தங்களில் அப்பகுதி

முழுவதுமே உறக்கம் குலைந்தது. ஏஜண்டுத்துரை அங்கிருந்து மிகவும் மகிழ்ச்சியுடனே புறப்பட்டுச் சென்றார். செல்லனைத் தனிப்பட்ட முறையிலே அவர் பாராட்டினார். உடையாருக்குத் தனது அதிகாரத்திற்குட் பட்ட எல்லாப் பகுதிகளையும் பரிபாலிப்பதற்குப் போதிய நேரமின்மையால் அவருக்கு உதவியாகச் செல்லனையே ஒரு 'பட்டங்கட்டி' யாக நியமிக்கலாம் என மணியகாரன் ஆலோசனை கூறியபோது சந்தோஷத்தோடு ஏஜண்டுத்துரை அதனை ஏற்றுக் கொண்டார். அவ்விடத்திலேயே அந்த நியமனத்திற்கு அங்கீகாரமும் வழங்கிவிட்டுப் புன்முறுவலோடு செல்லனை அவர் பார்த்தபோது, ஏஜண்டுத்துரை தன்னையும் பார்த்துவிடுவாரென்ற எண்ணத்திலே வாடி யிருந்த தனது முகத்தின் மேல் சிரிப்பு முகமூடியினை அணிந்துகொண்டார் உடையார்.

செல்லனுடைய மகன் சின்னையா ஐந்தாம் வகுப் போடு குழப்பிவிட்டு அதன் பின்னர் தகப்பனுக்குப் பின்னாலேயே திரியத் தொடங்கிவிட்டான். சின்னப் பையன்களுக்கிடையே அவர்களுக்கு அவன்தான் பட்டங்கட்டி. அவன் வைத்ததுவே சட்டம். செல்லன் இறந்தபின்னர் சின்னையாவே பட்டங்கட்டி யானான்.........

இவ்வளவு காலமும் பட்டங்கட்டியாயிருந்த போதி லும் இதுவரையும் நூறு, பத்து ரூபாய் நோட்டுக்களைத் தானும் ஒன்றாகவே கையில் வைத்துப் பார்த்திட வாய்ப்புக் கிடைக்காத தனக்கு இப்படியொரு ராஜ யோகம் வாய்த்ததை எண்ணிப் பற்கள் தெரியச் சிரித்துக் கொண்டே சாராயப் போத்தல் ஒன்றை மூடி திறந்து கிளாசினுள் சரித்தார் பட்டங்கட்டி. வாய் அவரையறி யாமலே முணுமுணுத்தது.

"ஐயனை இனிமேல்தான் நல்லாகக் கையுக்குள்ளை வைக்கவேணும். அவனை கவனித்து வைத்திருந்தால் தான் எல்லார்க் காரியங்களும் சிக்கலில்லாமல் நடக்க முடியும். அவனுடைய குடும்பத்திலை உள்ள எல்லாருக்கும் நல்ல உடுபிடவைகளை இரண்டொரு நாளைக்குள்ளை வாங்கிக் கொடுக்கவேணும். எப்பிடியிருந்தாலும் அவங்களுக்குள்ளை யார்தான் காசுக்கு ஆசைப்படப் போறாங்கள்? காசை வைத்து அவங்களாலை என்ன தான் செய்யமுடியும்?"

## 11

இன்னமும் ஐயனைக் காணாதது அளவுக்கு மீறின கவலையைக் கொடுத்திருந்தது. நேற்று மாலையும் களைத்து விழுந்துதான் ஐயன் வீட்டுக்கு வந்தான். இப்பொழுது ஐயன் மூக்கு முட்டவே சாராயம் குடிக்கிறான் என்ற கவலையும் கிட்டியின் மனதினுள்ளே விதையூன்றி அவளைச் சஞ்சலப்படுத்தியது. தான் குடித்த சாராயப் போத்தல்களின் தொகையை பகிரங்கப்படுத்துவது போல வெற்றுப் போத்தல்களைக் கையிலே கொண்டு ஏதேதோ கதைத்தவாறு அவன் அங்கே வருவதும் அசட்டுத்தனமாகக் கிட்டியைப் பார்த்து இளிப்பதுவும் கிட்டிக்கு மனம் சிணுக்கம் கொள்ளவைக்கின்ற செயலாகிவிட்டது.

அடிவானத்திலே கோழி முட்டையின் சிவப்புக் கருவாக நிலவு மெல்லவே எழுந்து கொண்டிருந்தது. காவற் கொட்டிற் பக்கமாக நின்றவாறு சுற்றுப்புறத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள் கிட்டி. கண்ணாத்தை வயிற்றுவலி என்று கூறிவிட்டு உள்ளே படுத்திருந்தாள். அவளுக்குக் கொஞ்சம் உள்ளியைத் தின்னக் கொடுத்து விட்டுத்தான் கிட்டி ஆறுதலாக வெளியே வந்திருக்கிறாள்.

சோளந் தானியத்தையும் இன்னும் புரையிலிருந்து எடுத்துத் துப்பரவாக்கவில்லை. நாளைக்கு எப்படியும் அந்த வேலையைச் செய்யத் தொடங்கிவிடவேண்டு மென்று தீர்மானித்துக்கொண்ட கிட்டி ஆராய்கின்ற கண் களினோடு காவற் கொட்டிலைப் பார்த்தாள்.

காவற் கொட்டிலின் ஓரத்து வளைந்த வேப்பமரத்தி லுள்ள சிறு கூண்டிற்குள் இருந்து இரண்டு மைனாக் குஞ்சுகள் கீச்சுமாச்சு என்று கத்திக் கொண்டிருந்தன. இது சம்பனின் வேலைதான். மைனாக் குஞ்சுகளுக்கு இரை சேகரிக்கத்தான் அவன் புல்வெளிப்பக்கமாகப் போயிருக்கிறான். நல்ல கொழுத்த தத்துவெட்டிகளை உள்ளங்கையாற் பொத்தி தலையை நசுக்கிவிட்டு அவன் கதை சொல்லிச் சொல்லி இரை தீத்துவான். நேற்று இரவு உதுரன் தனியாகத்தான் இறால் கடலுக்குப் போனான். அவன் கொண்டுவந்த இறாலைப் பொரித்து மிளகாய்த் தூளிலே புரட்டி சிரட்டைக்குள் பத்திரமாக ஐயனுக்காக வைத்திருக்கின்றாள் கிட்டி. ஆனால் பகல் பத்துமணிக்கு அங்கிருந்து பட்டங்கட்டி வீட்டுக்குப் புறப்பட்டுப்போன ஐயன் இன்னமும்தான் வீட்டுக்குத் திரும்பவில்லை. கிட்டிக்கும் இப்போது பசி இல்லை. மனம் எரிச்சலுறக் கிடு கிடுவெனக் காவற் கொட்டிலின் மேல் ஏறினாள்.

சேனைக் காடு எரிகையில் பரவித் தெரிகிற மஞ்சள் ஒளியைப்போல நிலவு அப்பிரதேசம் முழுவதும் பெய்து கொண்டிருந்தது. மிக அமைதியாக அவ் வெளிச்சம் தனில் குளித்துக்கிடந்தது அப்பகுதி. கிட்டியின் மன திலே இதுவரை காலமும் எண்ணற்ற கனவுகள் நிறைந்து கிடந்தன. அவளது ஒவ்வொரு கனவும் அவளது முயற்சி யாலும், உற்சாகத்தினாலும் சித்தரித்திருக்கின்றன. ஆனால், கண்ணாத்தையைப் பற்றிய கனவுகளோ...?

பிச்சன் குளம் சிறியதொரு உருவிலே அவளது கண் களிலே தெரிகின்றது. பிச்சன் குளத்திற்குப் பின்புறமுள்ள இளுப்பை மரத்தோப்பின் ஒற்றையடிப் பாதை வழியாகச் சென்று சிறிது மேலேறினால் கண்ணாத்தைக்கு ஐயன் பார்த்து வைத்துள்ள சேனை நிலத்தினை அடைந்து விட லாம். ஐயன் கிட்டிக்கு அந்தப் பகுதியைக் கூட்டிச் சென்று காட்டியபோது எல்லையில்லாத மகிழ்ச்சியினை அவள் எய்தினாள். என்ன நிம்மதியான சுற்றுப்புறப் பாதுகாப் புள்ள சேனை நிலம். இரு புறங்களுக்கு காட்டுத் தடி களாலும் கிளாக் கொடியாலும் வேலி அடைத்து விட்டால் பிறகு அந் நிலத்திற்கு நிகரென்ன. அந்த மண்ணைத் தொட்டுத் தடவி இலைகுலைகள் உக்கிக் கலந்த கலவையோடு கையிலே அள்ளிப் பார்த்துக் கிட்டிக்கெதிரே நீட்டியபடி "இதைப் போல மண் இந்தப் பகுதியில் எங்கேயுமில்லை. இதிலே என்ன போட்டாலும் பயிர் குவிஞ்சு விளையும்'' என்று மகிழ் வோடு சொன்னான். கிட்டியும் அந்த உண்மையை அறிவாள். அவன் வார்த்தையில் அவளை மீறிய பரவசம் கொண்ட கிட்டி "நீ நல்ல மனிசனையா'' என்றாள்.

பழைய அந்த நினைவு ஒரு மரக்கிளையிலிருந்து கீழிறங்கும் பாம்பினைப்போல நெஞ்சினுள்ளே ஊருகை யில் பெரியானின் நினைவும் அரும்பிற்று. என்ன திடம் வாய்ந்த உழைப்பாளி பெரியான். வடிவுள்ள கண்ணாத்தையை அவனெடுத்தானென்றால் எல்லா ருக்கும் தானே சந்தோசம். தானும் கிட்டியை பெண்ணெடுத்தபோது எல்லோரும் சந்தோசமடைந்தார் கள் என்பதை அந்தச் சடங்கே தீர்க்கமாகக் காட்டியது. நல்ல உழைப்பாளியான தனக்கு கட்டுறுதியும் சேனை யைச் செழிக்கச் செய்பவளுமான கிட்டி எல்லா விதத் திலும் மிகவும் பொருத்தமானவள் என்பதனை இன்று

வரை அத்தாட்சிப்படுத்திக் கொண்டு வருவதைப் போல கண்ணாத்தையைப் பெரியான் சேர்ந்து வாழ்ந்தால் தன்னுடைய பெருமை எவ்வளவு உயர்வடையும் என்பதை நினைத்துப் பார்க்கையிலே, அவனது நெஞ்சு விம்மிதமடைந்தது. எவ்வளவு சந்தோசமாகக் குரவைக் கூத்துகளோடும் அந்தச் சடங்கினை இரவு பகலாகக் கொண்டாடலாம், அத்தோடு ஐயனுக்கும் கிட்டிக்கும் இன்னுமின்னும் சிறப்பான பரம்பரையொன்று உண்டாகுமல்லவா? கண்ணாத்தை எப்படி வளர்ந்து விட்டாள். அவளுக்கு இனி எல்லாமே விளங்குகிற வயது. கிட்டி தன்னுடைய ஒரு வயதுக் குழந்தையை அவள் சீராட்டுவதை இரகசியமாக ஓரக்கண்ணாற் பார்த்து இவளும் அடுத்த வருஷம் இப்படி ஒரு குழந்தையை வைத்து பால் கொடுப்பாள் என நினைத்து இறும்பூதெய்தினாள் கிட்டி.

பொன்னாளோடு பெரியான் சரசமாடுவதனைக் கண்டதைப் பற்றி கிட்டி எதுவுமே ஐயனுக்குக் கூறவில்லை. ஐயனே அதன்பிறகு இரண்டு முறைகள் பெரியானைப் பற்றிய கதையினைத் தொடங்கிய போது மனதினுள்ளே ஆத்திரத்தை விழுங்கிக்கொண்டு அந்தக் கதையினை மழுப்பி மாற்றிவிட்டாள் கிட்டி. உத்தியாக்களுக்கான சடங்கு முடிந்ததன் பிறகு கண்ணாத்தைக்குச் சோறு கொடுப்பதை வைத்துக்கொள்ளலாமென்று ஒரே முடிவாகச் சொல்லி விட்டாள். ஐயனோ கண்ணாத்தைக்கு இங்கே பெரியானொருவனைத் தவிர வேறு யாருமே பொருத்தமில்லையென்று மனதினுள்ளே உறுதியான முடிவொன்றினைக் கொணடிருக்கின்றான்.

ஒரு கடுமையான உழைப்பாளி, வலிமை வாய்ந்த இளந்தாரி என்பதை விட ஒரு புருஷனுக்கு வேறு என்ன இருக்கவேண்டும் என்று கிட்டியின் தோளில்

ஐயன் தட்டிக்கொண்டு கேட்ட வேளையிலே கிட்டிக்கு உடனே பெரியானின் சரசம் நினைவினில் வந்து துருத்தியது.

கிட்டி பெரியானை இப்பொழுது மனசார வெறுக்கின்றாள். அந்த இடத்திலே கண்ணாத்தையின் வடிவை வியக்காதவர் யார்? அப்படியானவளைத் தேடி வருகிறதற்குப் பதிலாக அவளுக்காக இரந்து போய் பெரியானைச் சம்மதம் கேட்பதா? அவ்வளவு துணிவாகப் பொன்னாளோடு சரசம் செய்த பெரியான் கண்ணாத்தையை அவளுக்காகத் துன்புறுத்த மாட்டானா? சேனாதியைப் போலப் பெரியானும் கெட்ட மனிதனாகவே கிட்டிக்குப் புலப்படுகிறான்.

சேனாதிக்கு வல்லியைப் பெண்ணாக்கி விட்ட போதிலும் அவளோடு அவன் சில மாதங்களே ஒன்றாக இருந்தான். நல்ல உழைப்பாளியான வல்லி அவனுடைய தொந்தரவு பொறுக்காமலேயே நோய் வாய்ப்பட்டு இறந்து போனாள். பின்னர்தான் தெரிந்தது சேனாதிக்கு ஏற்கனவே ஒரு தொடுப்பு இருந்த கதை. இதனால் எல்லோரும் சேனாதியைத் தங்களோடு ஒட்டுறவற்றவனாகவே மதித்து வர அவனுமொரு மாட்டுக்கள்ளனாகிச் சில வேளைகளில் மிகவும் பரிதாபத்திற்குரியவனாகவும் பல சந்தர்ப்பங்களில் தாங்க முடியாத வெறுப்புக்குரியவனாகவும் அங்கே கருதப்பட்டு வருகின்றான். இது போன்றதொரு பரிதாபகரமான நிலைமையினை எக்காரணம் கொண்டும் தனது மகள் கண்ணாத்தைக்கு வரவிடுவதில்லை என்று உறுதியான முடிவெடுத்துக்கொண்டாள் கிட்டி.

நிலவு நட்சத்திரங்களோடு குஞ்சுகளின் நடுவே மெல்ல ஒரு பெட்டைக்கோழியாக வானிலே முகிற்

குவைகளை மேய்ந்தபடி மேலெழுந்து கொண்டிருந்தது. இன்னமும் ஐயனைக் காணவில்லை.

இராக்குருவியொன்று ஒரு நீளத்திற்கு கிர் என்று இரைந்தவாறு மாறி மாறி மரங்களில் உழன்று கொண்டிருந்தது. முண்டனின் குரைப்புச் சத்தம் திடீரென்று உச்சஸ்தாயில் எழுந்தது. கிட்டி வழியைக் கூர்ந்து பார்த்தாள். நிலவிலே உருவமொன்று சற்று வளைந்த நடையோடு வேகமாக வந்து கொண்டிருந்தது. காவற் கொட்டிலிலிருந்து கிட்டி கீழே இறங்க அவ்விடத்திற்கு முண்டனை "பொபொபொ...... பொறடா..." என்று திக்கியவாறு அடக்கியபடி நீலன் வந்து கொண்டிருந்தான். கடவாய் வழியாக வழிகின்ற வெற்றிலைச் சாற்றினைத் துடைத்தவாறு அன்று இரவு பட்டங்கட்டியாருடன் ஐயன் வேட்டைக்குப் போவதனால் இங்கு படுக்க வரமாட்டான் என்ற செய்தியை நீண்ட நேரத்திற்குத் திக்கித் திக்கிச் சொல்லி முடித்தான் நீலன்.

## 12

பட்டங்கட்டி சின்னையா இன்று போல என்றுமே தன்னோடு இவ்வளவு பட்சமாகவும், நெருக்கமாகவும் கதைத்ததை ஐயன் அறியவில்லை. தலைமயிரை ஒட்ட வெட்டி, கறுப்பு நிறமான நீளக்கை சுவெட்டருக்குள் பொதுபொதுத்த தேகத்தை அடக்கிய குண்டுக் கரடியாய் அவர் அட்டகாசமிட்டுச் சிரித்தார். பின்னர் ஐயனுக்கு சிகரெட் பக்கற் ஒன்றைக் கொடுத்து, "எடே ஐயா, இதைக் கொண்டு போய் அங்கை பத்தடா. மடக்கிப் போடாதை. சுருட்டை வாய்க்குள்ளை வைச்சுச் சூப்புறது போலை இதைச் செய்யப்படாது. இதெல்லாம்

வெள்ளைக்காறன்ரை விளையாட்டடா...இங்கை பார்..." என்று கூறியவராய் அதே சிகரட் பக்கற்றிலிருந்து சிகரட் ஒன்றை உருவியெடுத்து, கறுத்துத் தடித்த தனது உதடு களிடையே பொருத்திக் கொண்டு, வெகு அவதானத் தோடு நெருப்புக் குச்சியைப் பற்ற வைத்து இரு முறை உறிஞ்சி புகைவளையங்களை அவன் எதிரே ஊதி விட்டார் பட்டங்கட்டி. வளையங்கள்; புகைவளையங் கள்.....மெல்லிய அந்த மணத்தினை ஏற்கனவே நுகர்ந்து, பாலத்தடியிலே சிகரெட்டை வாயில் வைத்து உறிஞ்சி அப்புறத்தை நனைத்து அதைப் புகைக்கத் தெரியாமல், அந்தத் தூளையே புகையிலைக்குள் சேர்த்து கஞ்சாவைப் போலச் சுருட்டோடு சேர்த்துக் குடித்து ஏற்கனவே அனுபவங் கண்டவன் ஐயன். எனவே பட்டங்கட்டியரின் செய்கை முறையினை வெகு அவதானமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஐயா, இருந்து கொள்ளடா வாறன், ஒரு விசய மிருக்குது..."

கதிரைக்குள் கிடந்த உருவத்தைத் தூக்கிச் சுமப்பவர் போன்ற பாவனையோடு எழுந்து உள்ளே போன பட்டங்கட்டி சின்னையா நிமிசங்களில் வெளியே ஒரு பார்சலோடு வந்தார். அதனை நீட்டியவராய் "டே ஐயா சரையை விரித்துப் பாரடா?" என்று கட்டளையிடும் குரலிலே கூற ஐயன் அதனை வாங்கிக் கொண்டான்.

புதுக் கடதாசிப் பை சரசரத்தது. பையினுள் மூன்று நாலுமுழ வேட்டிகள். இரண்டு சிவப்புச் சேலைகள். நீலம், பச்சை, மஞ்சளில் தடித்த துணிகள்......ஐயனுக்கு வியப்புத் தாளவில்லை. ஆவென வாயைப் பிளந்து வெகுளித்தனமாகப் பட்டங்கட்டியைப் பார்த்தான். ஐயனின் பார்வையே குளறிக்குளறிப் பேசுவதைத் தனது சாமார்த்தியமான கண்களினால் கிரகித்துக்கொண்ட பட்டங்கட்டி அட்டகாசமிட்டுச் சிரித்தார்:

"டே ஐயா, இதெல்லாம் உனக்குத்தானடா... கொண்டுபோய் கிட்டியிட்டைக் குடடா."

"ஐயா..."

குந்திலே சம்மாளமிட்டவாறிருந்த ஐயன் மனநெகிழ் வோடு எழுந்து அந்தப் பையினை மார்போடு அணைத் துக்கொண்டவனாய் பணிந்த குரலிலே "ஐயா, இதென் னையா இதெல்லாம். எனக்கு காட்டுக்குள்ளை வழி தெரியாமல் நிக்கிறது போலை..." என்று தளதளத்தவன் "ஐயா, இதெல்லாம் நூறு, ஐந்நூறு ரூபாய் பெறுமே..." என அடங்கிய குரலினிற் கூறிமுடித்தான். மீண்டும் அட்டகாசமிட்டுச் சிரித்தார் பட்டங்கட்டி.

"உனக்கென்னடா கணக்குத் தெரியும்? ஐயா, பத்து விரலுக்குள்ளை தானடா உனக்குக் கணக்கு. நீ கணக்கு வழக்குகளை என்னோட விட்டுட்டு காரியத்தைப் பாரடா. எல்லாம் நன்மைக்குத்தான்."

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் சற்று வளைந்த வாறு நடந்து அவ்விடத்திற்கு வந்தான் நீலன். கண் களைக் கூசிப்பார்க்கின்ற, எந்நேரமும் வெற்றிலை போட்டுக் கடவாய் வழியாக சாறு ஒழுகின்ற அவனும் இன்றைக்குப் புதிய நாலுமுழத்தினைக் கட்டியிருந்தான். பட்டங்கட்டி சின்னையா நீலனைப் பார்த்து விட்டு பார்வையை இலேசாக ஐயனின் பக்கம் திரும்பி கண்ணைச் சிமிட்டினார்; வழமையாகத் தனது தரத்துக்குச் சமமானவரோடுதான் அவர் அப்படிக் கண் சிமிட்டுவது வழக்கமென்பதை அறிந்திருக்கிற ஐயனின் மனதிலே லேசான வியப்புணர்ச்சி சிறு நுரையாகி எழுந்தது.

"ஐயா, இவன் நீலனுக்கும் வயது போய்க்கொண்டி ருக்குதடா...ஒரு பொம்பிளை இவனுக்குத் தேவை யில்லையாடா...இந்தக் காலத்தோடை அதைப் பார்த்து முடிச்சிட வேணும்..."

நீலன் வாயைத் துடைத்தவாறு நாணினான். பட்டங் கட்டி சின்னையா பின்னர் குரலை மாற்றியவராய், ''டே நீலா, இவன் ஐயனுக்கு அதைக் கொண்டுவந்து குடடா'' என்றார். நீலன் உள்ளே போய் கலயமொன்றோடு வெளியே வந்தான்.

“நல்ல சாமிப் பிட்டும், இறைச்சியும் குடுவைக் குள்ளை இருக்குது. சாப்பிடப் போறியா அல்லது கொண்டு போகப்போறியா'' எனத் தொடங்கிய பட்டங் கட்டி சின்னையா ''வேணாம். இங்கேயே வைச்சு சாப்பிடு. உன்னோடை கொஞ்சக் கதையிருக்குது„ என்று கூறிமுடித்தார். ஐயன் தலையை ஆட்டியவாறு வெளியே போய் வேப்பமரத்தின் கீழ் உட்கார்ந்து சாப்பிடத் தொடங்கினான்.

பட்டங்கட்டி சின்னையாவுக்கு மூன்று பிள்ளைகள்— இரண்டு ஆண்கள். கடைசியாகப் பெண். மூவரையும் நகரத்திலேயே விடுதியிற் சேர்த்துப் படிக்கவைத்து வருகிறார் அவர். மனைவி இறந்ததன் பிறகு வீட்டிலே நீலன், பொன்னு என்ற இரண்டு பேருந்தான் எல்லா வேலைகளையும் செய்து வருகின்றார்கள். சில சமயங் களில் மட்டும் யாராவது விருந்தினர்கள் வந்துவிட்டால் நீலனுக்கும் பொன்னுவுக்கும் உதவியாக இரண்டொரு பெண்கள் அங்கு வேலை செய்ய வந்து நாட்கணக்கிற் தங்கியிருப்பார்கள்.

கணக்கு வழக்கற்ற வயல் நிலங்கள் அவருக்குச் சொந்தமாயுள்ளன. மேட்டு நிலப் பயிர் செய்வதற்காக நான்குபேரை முழு நேரப் பொறுப்பாக விட்டிருக்கிறார். பெரிய அறை நிறைய நெல் மூட்டைகளும், களஞ்சியத் தினுள் சோளமும் நிரம்பியுள்ளன. எந்நாளிலும் புத்தம் புது மரக்கறிகளும் இறைச்சிவகையும் சந்தோசமாகவே

அவருக்கு வந்துகொண்டிருக்கும். தினசரி ஒரு போத்தல் சாராயம் குடிக்காவிடில் உடம்பிலே நடுக்கம் தொட்டு விடும் அவருக்கு.

அந்தப் பகுதியிலே வசதிகள் நிறைந்த ஒரே வீடு பட்டங்கட்டி சின்னையாவுக்கே சொந்தமாயுள்ளது. அவரது வீடு ஒன்று மட்டுமே அங்கு ஓடு வேயப்பட்டு அங்குள்ள எல்லோரிலிருந்தும் அவர் வித்தியாசமானவர் என்பதைக் கூறிக்கொண்டிருந்தது. ஓரிருவர் சிறிய அளவிலாயினும் கல்வீடு கட்டவேண்டுமென்று முயற்சி களெடுத்த போதிலும் அந்த எத்தனத்திலே குறுக்கிட்டு அதனைத் தடுத்து விட்டார் சின்னையா...“அததுக்கும் தகுதி வேணுமடா. பட்டங்கட்டியை விட இங்கே பெரிய வனாராவது இருக்கிறானோ? இந்தப் புத்தி கெட்ட எண்ணத்தைக் கைவிட்டுப் பார்க்கிற முயற்சியைப் பாருங்கடா.” தன்னெதிரே பணிவாக நிற்கின்ற ஐயனின் உருவத்தைக் கண்டதும் சிந்தனை கலைந்த பட்டங் கட்டி சின்னையா “ஐயா, அந்தக் குந்திலை கொஞ்சத் திற்கு இரடா”...என்றார்.

ஐயன் வெகு பவ்வியமாக சம்மாளமிட்டு உட்கார்ந் தான்.

“ஐயா, இந்தக் கிழமைக்குள்ளை சோளன் முழுவதை யும் லொறியிலை ஏற்றி விட வேணுமடா. அதோடை ஆர் ஆருக்கு என்னென்ன விருப்பமோ அதையெல்லாம் நீ கேட்டு வந்து என்னட்டை சொன்னால் அதெல்லாத் தையும் நான் வாங்கித் தந்திடுவன்...”

ஐயன் தலையசைத்தான்.

கொஞ்சநேரம் கதிரைக்குள்ளே யோசனையோடு கிடந்த பட்டங்கட்டி பிறகு தயக்கம் குழைந்த குரலிலே,

"ஐயா, இந்தச் சோளன் வித்து, காசு தரவேணு மென்று யாராவது கேட்கக்கூடியவங்கள் இருக்கிறாங் களாடா...?" என்று கேட்டார்.

ஐயன் தன்னை மறந்து குபுக்கென்று சிரித்தான்: "ஐயா இதென்னையா சொல்லிறீங்கள்? காசை வைச்சு நாங்கள் என்ன செய்யிறது".

பட்டங்கட்டி சின்னையா திருப்தியோடு நிமிர்ந்து உட்கார்ந்து தலையினைத் தடவியவாறு சிரித்தார். கண்களிலே தீட்சண்யம் ஒளிர்ந்தது. மனதினுள்ளே இலக்கங்கள் ஒன்றையொன்று பெருக்கிக்கூட்டிக்கொண் டிருந்தன. நிம்மதியான பெருமூச்சினை, உறுதியான முடி வெடுத்தமைக்கு அடையாளமாக உதிர்த்தவாறே தலையைச் சொறிந்துகொண்டிருக்கிற ஐயனை உறுத்துப் பார்த்தார் பட்டங்கட்டி சின்னையா.

"ஐயன், குந்திலை இருக்கிற அந்த வெத்திலைத் தட்டத்தை இங்கே எடுத்துக் கொண்டு வாடா..."

துளிர் வெற்றிலைகள் நிறைந்த பளபளவென்று மினுக்கப்பட்ட தட்டத்தை ஐயன் எடுத்துக்கொண்டு வந்து அவருக்குப் பக்கத்திலே மிக மரியாதையோடு வைத்தான். பட்டங்கட்டி சின்னையா ஒரு வெற்றிலையை எடுத்து காம்பையும் நுனியையும் கிள்ளி எறிந்துவிட்டு வெற்றிலையின் முதுகிலே சுண்ணாம்பைத் தடவிக் கொண்டே "டே., ஐயா நீயும் வெத்திலை போடடா..." என்றார். ஐயன் மசிந்தவாறே அவரைப் பார்க்க மீண்டும் அதட்டுகின்ற குரலிலே "ஐயா, நான் சொல்லுறன் பிற கென்னடா" என்றார்.

ஐயன் அவருக்கு முன்னாலே சம்மாளமிட்டு உட்கார்ந்தவாறே, ஒரு வெற்றிலையையும் இரண்டொரு சீவற்பாக்கையும் எடுத்து வெற்றிலையினுள் வைத்து

மூடிக் கொண்டு வாய்க்குள் போடப் போகையில் பட்டங் கட்டி சின்னையாவின் குரல் ஓங்கிற்று.

"ஐயா டேட, கொஞ்சம் பொறடா..."

அந்தக் குரலால் ஐயன் அதிர்ந்துபோய் சுய நிலைக்கு வரமுன்னரே பட்டங்கட்டி சின்னையா "எடே ஐயா, அந்த வெத்திலையைக் காட்டடா" என்றார். ஐயன் கையை விரித்துக் காட்டியதும் கட்டளையிடுகின்ற குரலினிலே அவர் கூறினார்.

"அந்த வெத்திலையை வீசி எறிஞ்சு போட்டு நான் சொல்லுறதைக் கேளடா...ஒரு நாளும் வெத்திலை யின்ரை காம்பையும நுனியையும் பிடுங்கி வீசாமல் வெத்திலை போடப்படாதடா. வெத்திலைக் காம்பிலை யும் நுனியிலும் விசமிருக்கதடா. உனக்குத் தெரியு மன்டல்லவோ நான் நினைச்சிருந்தேன்..."

ஐயனின் முகத்திலே பயபக்தி மூடிக் கவிந்தது. வெற்றிலையை முற்றப் பக்கமாகச் சென்று வீசி எறிந்து விட்டு வந்தான். வந்ததும் வெகு மரியாதையாக அவரைப் பார்த்துக் கொண்டிருக்க பட்டங்கட்டி சின்னையா வெற்றிலை இந்தப் பூலோகத்திற்கு வந்த கதையினைக் கூறத் தொடங்கினார்:

முன்னாளிலே பூலோகத்திலே வெற்றிலையே இருக்க வில்லை. நாகலோகத்திலேயே வெற்றிலைச் செடி காணப்பட்டது. நாகலோகத்திலிருந்து வெற்றிலைச் செடியைச் பூலோகத்திற்கு கொண்டு வருவதற்கு எண்ணிய பாம்புகளின் அரசனாகிய நாகராசன் நாகலோ கத்திலேயிருந்து செடியிலிருந்த வெற்றிலையொன் றினைப் பறித்தது. நாகராஜன் வெற்றிலையை மடித்துக் காம்பையும் நுனியையும் பற்களினால் கவ்விக்கொண்டு நாகலோகத்திலிருந்து பூலோகத்திற்கு வந்து வெற்றி

லையை நாட்டியது. இப்படியே வெற்றிலைக் கொடி பூலோகமெங்கும் பரவிப் படர்ந்து மானிடர்கள் சாப்பிடும் பொருளாகி விட்டது. ஆனாலும் ஒரு பிழை பாடு நடந்துவிட்டது. காம்பையும், நுனி இலையையும் நாகராஜன் தனது பற்களிலே அழுத்திக் கொண்டு வந்த மையால் நாகராஜனின் விஷப் பற்களில் இருந்த விஷம் சிறிதளவு அப்பகுதிகளில் ஊறிவிட்டது. எனவே வெற்றிலை போடுகின்ற மானிடர்கள் அந்த விஷம் சேர்ந்த பகுதிகளைக் கிள்ளி எறிந்துவிட்டே வெற்றிலை போடவேண்டுமென நாகராஜன் விதித்திருக்கின்றான். அதைக் கடைப்பிடித்து வாழ்கிற மனிதர்கள் நாகராஜ னின் கோபத்திற்காளாகாமலும், நீண்ட ஆயுளோடும் இவ்வுலகிலே சந்தோசமாக வாழ்ந்து வருகின்றார்கள்.

ஒரு நாள் விண்ணாங்குத் தோட்டத்திலே களைப் போடு உட்கார்ந்து ஐயன் வெற்றிலை போட்டுக் கொண்டு இருக்கையிலே தனக்கு எதிரே நாகபாம் பொன்று தலைவிரித்து ஆடிக் கொண்டிருந்தது ஐயனின் நினைவில் வந்தது. நாகராஜன் தன்னை எச்சரிக்கை பண்ணத்தான் அப்படி வந்தானோ? இனிக் கவனமாயிருக்கவேண்டும்.

## 13

சேனாதியைப் பார்த்து விண்ணாங்கன் புன்முறுவல் பூத்ததை ஒரு அதிசயமாகவே மனங்கொண்டான் சேனாதி. விண்ணாங்கன் மிகவும் கனிவாகவே சேனாதியை அணுகிவந்து சுமுகமான குரலிலே "சேனாதி இந்தப் பகுதி மக்களுக்கு நல்ல காலம் வந்திட்டுது. நீயும் அங்கை இங்கையென்று போகாமல் பட்டங்கட்டிய ரோடை சேர்ந்தால் உனக்கொரு கரைச்சலும் வராது',

என்றான். சேனாதி புன்முறுவலும், ஆச்சரியமும் கலக்க "என்ன நீ சொல்கிறாய்" என்ற அர்த்தத்திலே விண்ணாங்கனை ஏறிட்டான். ஒல்லியனான விண்ணாங்கன், பன்றி முள்ளாகக் குத்திட்டு நிற்கின்ற தலைமயிரைக் கையினால் அழுத்தியவாறு சேனாதியைப் பார்த்தான்.

"நீ அங்குமிங்குமெனத் திரி. இப் பக்கத்தில் என்னவும் தெரியாது. இம்முறை இங்கு விளைஞ்ச சோளனெல்லாம் கட்டுப்படுகுது தெரியுமோ... அதை அளந்து ஏத்திறதுக்கு ஆளுகளெல்லாம் தேவை. சாராயப் போத்தல் நல்லாகத் தருவார் பட்டங்கட்டி".

"அப்படியோ"

சேனாதி கண்களைக் கூசியவாறு எதையோ நினைத்தவனாய் எதிரே தெரிகின்ற சடைத்துப் பரந்து இலைகளைச் சுமந்த புளியமரத்திலே தூங்கிக் கிடக்கின்ற காய்களைப் பார்வையினாற் தடவிக் கொண்டு முணுமுணுத்தான். பின்னர் முழங்கையைச் சலிப்போடு தடவி விறாண்டிக் கொண்டான்.

"என்ன மாதிரி ஏத்துப் படுகுது".

விண்ணாங்கன் முழு விபரத்தையும் விஸ்தாரமாகக் கூறிவிட்டு "சேனாதி நீ ஒன்றுக்கும் பயப்படாமல் என்னோடை வா. பட்டங்கட்டியருக்கு சடங்குக்கு நீ வந்தபிறகு உன்னிலை கோபமில்லை. சோளன் கட்டி லொறியிலை ஏத்திறதும் அவ்வளவுக்கு உடம்பு நோகிற வேலையில்லை. வா". அவனுடைய கரகரத்த குரலே சேனாதியைக் கைகளாக மாறி பட்டங்கட்டி சின்னையா வீட்டுக்கு தரதரவென்று இழுத்துச் சென்றது.

புரையடியிலிருந்து எடுத்துவந்த சோளனை லொறிக்காரர் எடுத்துவந்த பெரிய படங்குச் சாக்கிலே அளந்து

கொட்டித் துப்பரவாக்கிக் கொண்டிருந்தவர்களை அதட்டியவாறு அடிக்கடி கண்களின் மேலே கைவிரல்களைக் குவித்து பிரதானவீதிப் பக்கமாகப் பார்த்தவாறிருந்தார் பட்டங்கட்டி சின்னையா.

இப்படியான நீண்ட சாக்குப் படங்கிலே சோளன் மணிகள் இவ்வளவு தொகையாகக் குவிந்து கிடப்பதை இப்பொழுதான் முதற்தடவையாக ஐயனே காணுகின்றான். எத்தனை வர்ணங்கள் குழைந்த பளீரிடுகின்ற தானிய மணிகள்... இவைகளெல்லாம் நமது மண்ணிலே விளைந்தவையென பெருமிதமுற்ற ஐயனின் மனதின் ஒரு புறத்திலே அவனுக்கே தெரியாத சோகமென்று மெல்லவே பாதம் பதித்தது. இங்கே வெறுமையான புரைகள் என்பன என்றுமே இங்குள்ள மக்களால் அறியப் படாதிருந்தவை. எந்நேரமும் தானியங்கள் நிறைந்திருக்கின்ற குடிசைகளில் இனி அது சாத்தியமாகுமோ.... இந்தத் தானியங்களும் தனது வாழ்வோடு ஒன்றியிருந்த இன்று ஏதோ ஒரு தந்திரத்தினால் தன்னையும் தனது மக்களையும் விட்டுப் பிரித்தெடுக்கப்படுவது போல வெற்றுணர்வொன்று மனதினை அழுத்தித் துன்புறுத்தியது. ஒரு வெற்றாரவாரத்தோடு அங்குள்ள பலரும் சோளனைப் பட்டங்கட்டியர் வீட்டடிக்கு மூட்டை மூட்டையாகக் கொண்டு வந்தனர். சிலர் விதைக்குரிய சோளனையே போதியளவு கையிருப்பில் எடுத்து வைக்காமல் அவதியவதியாக கைவியளமாக வாங்கிய சாராயப் போத்தில்களை நினைத்துமுழுச் சோளனையும் கொண்டுவந்தபோது ஐயனுக்கு எல்லையில்லாத எரிச்சல் மனதிலுள்ளே குமிளி வெடித்துக் கெட்ட சொற்களாகப் பிரபலித்தது. அவனது எந்த நியாயத்தையும் மறுதலிக்காமலே பட்டங்கட்டி சின்னையா ஐயனைப் பார்த்து "ஐயா, நீயே எல்லாவற்றையும் பொறுப்பெடுத்துச் சரியாகச் செய்துகொள்" என்று நமுட்டுச்

சிரிப்பு முகத்திலே மெல்லத் தெரியச் சொல்லிக் கொண்டார். சாக்குப் படங்கிலே சோளன் அள்ளித் தூற்றிக் கொண்டிருக்கையிலே நெட்டிகளும், கஞ்சல் களும் காற்றுவாக்கிலே பறந்தவாறிருந்தன. பெண்கள் சிறு சிறு குவியல்களாக சோளத் தானிய மணிகளை ஒதுக்க, பறைகளில் தானிய மணிகளை நிரப்பி சாக்கு களிற் கொட்டி அளந்து கட்டிக் கொண்டிருந்தனர் ஆண்கள்.

பெரிய பாலைமரத்தின் கீழே உள்ள முதிரைக் குத்தியில் உட்கார்ந்து பட்டங்கட்டியர் சொல்லச் சொல்ல அப்பெயரை எழுதி பெயருக்கு நேரே எவ்வளவு அவுணம் சோளனை ஒவ்வொருவரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதென்பதனை வல்லியன் அப்பியாசக் கொப்பியில் எழுதிக் கொண்டிருந்தான். அவனுக்குப் பக்கத்திலே உதுரன், வன்னன், கம்பான் ஆகியோர் கொவ்வம் பழங்களைத் தின்றபடி களைப்பாறிக் கொண்டிருந்தார்கள்.

கிட்டியும் இங்கே நிற்கின்றாள். சுளகொன்றை வீசிக்கொண்டே அங்குமிங்குமாகந் திரிகின்ற கிட்டி கண்ணாத்தை அங்கிருத்து போவதைப் பார்த்து விட்டுப் பொன்னாளிருந்த இடத்திற்குச் சென்றாள். பொான்னாள் கலகலவென்று வேறு சில பெண்களோடு குலுங்கிச் சிரித்துக்கொண்டிருந்தவள் கிட்டியைக் கண்டதும் மௌனமாகி சோளன் தூற்றுவதிலே கவனமானாள். அலைந்து பறக்கின்ற செம்பரட்டைத் தலைமயிரும், சிறிது விரிந்த மூக்கும், ஒழுங்கில்லாத பல்வரிசையுமுடைய பொன்னாளையே ஒருகணம் வெறுப்போடு நோக்கி னாள் கிட்டி.

அழுக்கடைந்த பாவாடையும், தோள்மூட்டுக் கிழிந்த மேற் சட்டையும் பொன்னாளை எவ்வளவுக்கு

அவலட்சணமாக்குகின்றன. இவளிடம் எதைனைக் கண்டு பெரியான் சரசம் செய்யப் பின்னாலே திரிகிறான். வெறிபிடித்ததொரு நாயினைப் போல. கிட்டி அருவருப் போடு காறித் துப்பினாள்.

காற்று வெளியிலே மிதக்கின்ற நிறப்பூக்களாக வண்ணாத்திப் பூச்சிகளும், தும்பிகளும் அவ்விடத்திலே திரள் திரளாக பறந்து சுற்றின. சம்பன் காவிளாய்ச் செடியொன்றினை வேரோடு பிடுங்கி எடுத்து அங்கு மிங்குமாய் விசிறியடித்துத் தும்பிகளை வீழ்த்திக் கொண்டிருந்தான். அப்பகுதியில் உற்பத்தியான சோளனின் மூன்றிலொரு பங்குவரை இதுவரை சாக்குப் படங்கினிற் போட்டுச் சுத்திகரிக்கப்பட்டு மூட்டையாகக் கட்டப்பட்டுவிட்டது.

இன்று மாலை முதலாவது பகுதி சோளன் தானிய மூட்டைகள் லொறியினில் ஏற்றப்பட்டுவிடும். லொறி யின் வருகையையே பட்டங்கட்டி சின்னையா மிகவும் அக்கறையோடும், ஆவலோடும் எதிர்பார்த்துக் கொண்டி ருக்கிறார். பார்வையின் தீட்சண்யத்திலே அவசரம் சுடர்விடுகிறது. விண்ணாங்கனும், சேனாதிபதியும் அவ் விடத்திற்கு வந்த போது பட்டங்கட்டி சின்னையா வாய்க்குள் சிரித்தவாறு "ஆ சேனாதியும் வந்திட்டியோ வா வா" என்று கூறியவராய்க் கையாட்டினார். அந்த வார்த்தைகளின் சுமுகமான அழைப்பு சேனாதியின் மனதினுள்ளே கவிந்திருந்த மூட்டத்தினைக் கலைந்து போக வைத்துப் புன்னகையினையும், நம்பிக்கையினை யும் முகத்திலே தோற்றுவித்தது. "டே சேனாதிபதி அங்கே இங்கே கள்ளத் தொழில் பார்க்கிறதை விட்டிட்டு இங்கே கொஞ்ச நாளைக்கு இரடா. சரியான வேலை இருக்குது. தங்க இடமில்லாட்டில் விண்ணாங்கனோடே நிண்டுகொள். தேவையானதை என்னெட்டைக் கேள். இண்டைக்கு இந்த மூட்டைகளெல்லாம் லொறிக்குப்

போகவேணும்''. கூறிக்கொண்டு போனவர் எதிரே வந்த நீலனைக் கண்டதும் அவனை அழைத்து விண்ணாங் கனையும், சேனாதியையும் கூட்டிக்கொண்டு போய் சாராயமும், சோறும் கொடுக்கும்படி உத்தரவிட்டார்.

லொறி இன்றைக்கு முதன்முறையாக இங்கிருந்து தானிய மூட்டைகளை ஏற்றிச் செல்வதை முன்னிட்டு ஒரு சடங்கொன்றும் வைக்க வேண்டுமென்று ஐயன் ஆர்வம் ததும்ப விருப்பம் தெரிவித்தபோது பட்டங் கட்டி சின்னையா அதனை ஏற்றுக்கொண்டார். அத்தோடு தனது வீட்டின் முன்னாலேயே அன்று அங்கு வாழுகின்ற முழுப் பேரையும் கூட வேண்டு மென்றும், அவர்களுக்கு தான் சோறு கறியும் கொடுத்து வேறு சில பொருட்களும் வழங்க உள்ள தாய் அறிவித்தபோது எல்லோர் மனதிலும் பூரித்த மகிழ்வினை முகத்தின் மலர்ச்சி தெரியப்படுத்திற்று. நகரத்திலிருந்து வருகின்ற போது குணசிங்காவை சேலை, வேட்டி, சீத்தைத்துணி, வெற்றிலை, புகையிலை ஆகியனவற்றை அங்குள்ளவர்களுக்கு வாங்கி வரும்படி தானெல்லாவற்றையும் கணக்குப் பார்த்து அவற்றைச் சரி செய்வதாகவும் பட்டங்கட்டி சின்னையா ஏற்கனவே கூறியிருக்கிறார்.

ஐயன் சோளன் அளக்கிற வேலையை சிறிது நிறுத்திவிட்டு, சடங்குக்கான ஏற்பாடுகள் செய்வதிலே மும்முரமாய் ஈடுபட்டிருந்தான். கிட்டி அவனுக்குப் பின்னாலேயே சிற்றெறும்பின் சுறுசுறுப்போடு அலைந்து கொண்டிருந்தாள்.

தொலைவிலே பார்வை தரித்த பட்டங்கட்டி சின்னையாவின் வாய் அவரின் ஆனந்த பரவசத்தை வெளிப்படுத்திற்று, ''லொறி வந்திட்டுது."

## 14

கிட்டியின் மனதினுள்ளே பொங்கிய ஆனந்தத்திற்கு அளவுகணக்கே இல்லை. கண்ணாத்தை அந்தப் புதிய ஆடைகளினுள் சூரியகாந்திப் பூவைப் போல மலர்ந்து சிரித்தாள். அவளது எல்லாப் பிள்ளைகளும் ஒரே நேரத்தில் புத்தம்புதிய ஆடைகளணிந்து தோன்றியது இன்றைக்குத்தான் முதற்தடவை. புதிய சேலையையும், மேற்சட்டையையும் அணியும்படி ஐயன் தன்னை வற்புறுத்தின வேளை தன்னையறியாத நாணத்தோடு அவள் மறுத்தபோது, சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு ஐயன் அவளது சேலையைப் பற்றி இழுத்து நிர்வாண மாக்க முயன்றபோது...

ஏணையில் கிடந்த ஒரு வயதுக் குழந்தை நித்திரை குலைந்து "ம்மமா..." என்று அழத்தொடங்கிய போது கண்ணாத்தை திடுமென உள்ளே வர ஐயன் காட்டுக் கத்தியை எடுத்துக்கொண்டு வெளியே போனான். சேலையைச் சரி செய்தவாறு கிட்டி சுரைக்குடுவையை எடுத்து ஓரத்தில் வைத்துவிட்டு ஏணையிலிருந்த குழந்தையைத் தூக்கி மார்போடு அணைத்துக் கொண்டாள்.

இப்பகுதியிலுள்ள எல்லாப் பையன்களும் வாயினாற் சத்தமிட்டு இரு கைகளையும் லொறியின் ஸ்ரியறிங் வீலை அசைப்பது போல பாவனை செய்து ஓடித் திரிகின் றார்கள்... எங்குமே லொறிகள்.

அவர்களைப் பார்த்தவாறே அவர்களைப் பார்வை யிலிருந்து நழுவவிட்டவளாய் தன்னை மறந்து நினைவு களிலே தோய்ந்து கொண்டிருந்தாள், கண்ணாத்தை...

எல்லா மூட்டைகளையும் லொறியில் ஏற்றுவதற்கு முன் சடங்கு ஒன்றை மிகவும் பயபக்தியோடு நடத்திக்

கொண்டிருந்தான் ஐயன். முதன் முறையாகக் குருவிக் கல்லின் எல்லா மக்களும் பட்டங்கட்டிச் சின்னையாவின் வீட்டின் முன்னாலே இன்றுதான் குழுமி நிற்கின்றார்கள். லொறிக்கும் மூட்டைகளுக்கும் இடையே மடை பரப்பி பழங்கள் அடுக்கப்பட்டிருந்தன. பெரிய பெரிய பானைகள் மூன்றிலே அரிசிப் புக்கை பொங்கப்பட்டிருந்தது. சோளன் தானியத்திற் செய்யப்பட்ட அப்பங்கள் வாழையிலைகளில் நிரம்பி வருந்தது. சடங்கிலேயே மனமொன்றிப் போயிருந்த கண்ணாத்தைக்கு மனதினுள்ளூர திடீரெனத் தன்னை யாரோ உற்று நோக்குவது போன்ற மனப்பிரமை ஏற்பட்டது. எதேச்சையாக நேரெதிரே உற்றுப் பார்த்தாள். அவளது பார்வையினை திடீரென எதிர்கொள்ள முடியாத குணசிங்கா திணறித் தத்தளித்துவிட்டு சமாளித்துப் புன்னகையினை உதிர்த்தினான்.

அவனைப் பார்த்த அவளின் மனதிலே அவன் இவ்வளவு நேரமும் தன்னையே பார்த்துக் கொண்டிருந்தான் என்ற முடிவிற்கு வருவதிலே அவ்வளவு சிரமம் இருக்கவில்லை. என்னவென்று தெரியாமல் மனம் தடுமாறித் தத்தளித்தது. அவனைப் பார்க்க நினைத்த முகம் நிமிர்ந்தபோது பார்த்துக்கொண்டிருந்த அவன் வேறெங்கோ பார்ப்பதுபோலப் பார்க்கவும்... கடைசியில் இருவர் பார்வையும் சந்தித்தபோது சடங்கும் முடிவுற்றது. கிட்டி அன்று உலுப்பியதுபோல இன்றும் உலுப்பிய போதுதான் கண்ணாத்தை சுயநினைவுக்கு வந்தாள். பிரமையில் இருந்து விடுபட்ட கண்ணாத்தை சுறுசுறுப்போடு சாமித் தானியத்தை சிறு குட்டானில் அள்ளிக் கொண்டு உரலிருந்த பக்கமாகச் சென்றாள். ஐயனே முதிரை மரத்தைக் குடைந்து தயாரித்த பெரிய உரலினுள் சாமித் தானியத்தைக் கொட்டிவிட்டு உலக்கையை எடுத்துக் குற்றத்தொடங்கினாள் கண்ணாத்தை. இம்

முறை குற்றுகின்ற சாமித் தானியம் உமி குறைந்ததாய் மாத்தன்மை நிறைந்திருப்பதை அள்ளிப் பார்த்துத் தெரிந்து கொண்ட அவள் இன்றைக்கு ஐயன் சந்தோச மாகச் சாப்பிடுவான் என்பதை மனதினுள்ளே சித்திர மாகக் கண்டு புன்னகைத்தாள். இன்று நல்ல மானிறைச்சி வந்திருக்கின்றது. ஐயன் இறைச்சியையும், சாமிப் பிட்டை யும் மிகவும் விரும்புவான். காலையில் புறப்படுகின்ற போது இன்று கொஞ்சம் தாமதமாகவே திரும்பிவருவ தாகவும் சொல்லிப் போயிருக்கின்றான். இப்போது மிகவும் உற்சாகத்தோடும் கலகலப்போடும் திரிகின்ற ஐயனைப் பார்த்து மனதினுள்ளே பூரிப்புக் கொண்டிருக் கிறாள் கிட்டி. திடீரென்று முண்டனின் குரைப்புச் சத்தம் ஓங்கிக்கேட்டது. கிட்டி நெடும்பரண் பக்கமாகப் பார்த்து அவ்விடத்தை நோக்கிச் சென்று நெடும்பரணில் ஏறி நின்று எதிரே விரிந்து கிடக்கின்ற வழியைப் பார்த்தாள்.

நெட்டி துருத்தியுள்ள சோளஞ் சேனைகள், மொட்டை மரங்கள், கொடிகள் ஆகியவற்றிலே பார்வை விழுந்தது. பூக்கள் மூடிய வில்வ மரத்தின் அருகாக ஐயன் இன்னுமிருவரோடு நடந்து வந்து கொண்டிருந் தான். ஐயனுக்குப் பக்கத்தில் வளைந்து வளைந்து அவசரமாக வருபவன் நீலன். நீலனுக்கு அருகாக சுற்றுப் புறத்தினை வேடிக்கை பார்த்தவாறு வருபவனை கண் களை இடுக்கி உற்றுப் பார்க்கிறாள் கிட்டி. அந்த முகத் திற்குரியவன் குணசிங்கா. வெள்ளை உடையோடு ஐயனோடு வருகின்ற குணசிங்காவைக் கண்டதும் கிட்டியின் மனம் அந்தரமடைந்து பரபரத்தது. இந்தப் பெரியமனிதன் எங்கள் பகுதிக்கு வந்த பின்னர்தான் எவ்வளவு மாற்றங்கள் வந்துவிட்டன. பட்டங்கட்டி சின்னையாவின் வீட்டிலே சேகரிக்கப்பட்ட சோளந்

தானியம் மூன்று தடவைகளாக லொறிமூலம் ஏற்றி அனுப்பப்பட்டுவிட்டது. இந்தப் பகுதியின் வாழ்க்கை முறையிலே வித்தியாசங்கள் பூக்கத் தொடங்கியதைக் கண்முன்னாலேயே காணமுடிகின்றது.

“இங்கையுள்ள எல்லாருக்கும் சேலை சட்டைகளை அள்ளியள்ளி சாமி மாதிரிக் கொடுத்திருக்கின்றார்...நல்ல வெள்ளையான ஆள். இவரெதுக்காக இந்தப் பக்கமாக வரவேணும்!” மனம் துணுக்குற்றது. ‘ஒருவேளை இங்கை தான் வருகிறாரோ.’

நெடும்பரணில் நின்ற கிட்டி இப்பொழுது அவர்கள் தனது குடிசைக்கே வருகிறார்கள் என்பதனை உணர்ந்து கொண்டு விறுவிறுவென்று கீழே இறங்கிக் குடிசைக் குள்ளே சென்றாள். மனம் பரபரத்தது அவளுக்கு.

## 15

குணசிங்கா தலையை வாரிவிட்டு தன்னை யாரோ பார்க்கின்ற உணர்விலே பின்னே திரும்பிய பொழுது ஐயன் நிற்பதனைக் கண்டு பரபரப்புற்றவனாக என்ன விஷயம் வந்து நிற்கிறது என்று கேட்டான்.

நேற்று மாலையில் ஐயனின் குடிசைக்குச் சென்ற போது ஐயனின் மனைவியும், பிள்ளைகளும் அவன்மீது காட்டிய மரியாதை குணசிங்காவின் மனதினை பெரிதும் கவர்ந்திருந்தது. ஆயினும், கண்ணாத்தை தன் பாட்டிற்கு சின்னக் குழந்தையினைத் தூக்கிக் கொண்டு தன்னைக் கண்டதும் வெளியே போனது ஏதோ ஒரு ஏமாற்றத் தினை அவனது நெஞ்சினுள்ளே திடீரென நிறைவித்தது. ஆயினும் சமாளித்துக் கொண்டு சரளமாக அவர்களோடு பேசிவிட்டு கிட்டி மிகவும் வற்புறுத்திக் கொடுத்த

தேன் போத்தலையும் கொண்டு பட்டங்கட்டி சின்னையா வீட்டிற்குத் திரும்பினான் குணசிங்கா.

"நேற்றுச் சொன்ன விசயமாக வந்தனான். பட்டங் கட்டி ஐயாவும் வெளியிலை போயிட்டார். அதுதான் வந்திருக்கிறேன்."

தன்னைச் சுதாரித்துக் கொண்டே குணசிங்கா ஐயனைப் பார்த்தான்: "என்ன சொல்லுங்கோ?"

ஐயன் சொன்னான்:

"என்னோட சின்னவன் சம்பன் உங்க லொறியிலை வேலைக்கு வரவேணுமென்று அழுகிறான்... ஐயா அவனைச் சேர்க்க முடியுமோ... எனக்கு காசெல்லாம் தரத் தேவையில்லை... உங்களோடையே அவன் நிண்டிடட்டும்..."

குணசிங்கா கொஞ்ச நேரம் யோசித்தான்.

"இதைப்பற்றி நம்ம முதலாளியோடை கதைச்சுத் தான் சொல்ல முடியும். அடுத்த கிழமை சொல்லுவன்..."

"நல்லது ஐயா..."

குணசிங்கா சிகரட் பாக்கட் ஒன்றை எடுத்தான். ஐயனைப் பார்த்துப் புன்னகை செய்தான்.

"இது உங்களுக்குத்தான்..."

ஐயன் கூச்சப்பட்டு நெளிந்தான்.

"எனக்கு இதெல்லாம் எதுக்கு?"

"இல்லை... நீங்க கொண்டு போங்க..."

ஐயன் சிகரெட் பாக்கட்டை வாங்கிக் கொண்டான். பிறகு பணிவான குரலிலே குணசிங்காவைப் பார்த்துக் கூறினான்:

"ஐயா, சம்பனை நான் இங்கை அனுப்பிவைக் கட்டுமா?"

குணசிங்கா சற்று நேரம் எதையோ சிந்தித்து விட்டு இலேசான முகமலர்ச்சியுடன் அவனைப் பார்த்தான்.

"சரி அனுப்பி வையுங்க..."

மூன்று நான்கு முறை சம்பன் குணசிங்காவிடம் வந்து போய் விட்டான். உருண்டு திரண்ட தேகக்கட்டு டைய அவனைக் கண்டால் குணசிங்காவுக்கு ஒரே சிரிப்பாயிருக்கும். சம்பனோடு குணசிங்கா அதிகமாகப் பேசுவதெல்லாம் கண்ணாத்தையைப் பற்றித்தான். கண்ணாத்தையைப் பற்றி அவன் பேசத் தொடங்கி விட்டானென்றால் இலேசிலே நிறுத்திக் கொள்ளமாட் டான். கனவுலகில் சஞ்சரிப்பவன்போல முகம் தோற்றங் கொடுக்கும்.

சம்பனுக்கு என்னபிடிக்குமென்று ஒரு நாள் குணசிங்கா அவனிடம் கேட்டான். சம்பனுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. தலையைச் சொறிந் தான். அடுத்தமுறை சம்பனுக்கு குணசிங்கா விசில் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தான். அந்த விசில் மிகவும் அதிசயப்பொருளாக குருவிக்கல்லுக் கிராமத் தவரால் வியந்து புகழப்பட்டது.

இன்னொருநாள் மெல்லிய குரலிலே சம்பனைப் பார்த்துக் கேட்டான் குணசிங்கா:

"கண்ணாத்தா என்னைப் பற்றி எதுவும் பேசுற தில்லயோ?"

சம்பனின் உருண்ட முகத்திலே பிரகாசம் மலர்ந்தது. சிரித்துக் கொண்டே சொன்னான்: "அவ பேசமாட்டா. ஆனால் என்ன சொன்னாலும் கேட்டுக் கொண்டிருப்பா.

அதுவும் நான் சொன்னா அவவுக்கு கேட்டுக் கொண் டிருக்க நல்ல விருப்பம்...''

"எனக்கு ஒரு காரியம் செய்வியா சம்பா?"

சம்பன் வியப்போடு அவனை ஏறிட்டான்.

''சொல்லுங்க ஐயா...''

''சம்பா... கண்ணாத்தைக்கு கொஞ்சம் சாமான் தருவன் கொடுத்து விடுவியா..."

''சரி ஐயா..."

"ஆருக்குந் தெரியாமல்...''

''சரி ஐயா...'' தயக்கத்தோடு சொன்னான் சம்பன்.

''சம்பனுக்கு நான் இதைவிடப் பெரிய விசிலாகத் தருவன்...''

சம்பனின் முகம் சந்தோஷத்தால் பூரித்தது.

''சரி ஐயா..."

உள்ளேயிருந்து பெரிய பார்சலொன்றைக் கொண்டு வந்தான் குணசிங்கா.

''சம்பா உனக்கு வேறை என்ன வேணும்?"

தலையைச் சொறிந்து கொண்டான் சம்பன்.

''எனக்குத் தெரியாது... நீங்க வாங்கி வாருங்கய்யா"

பார்சலை சம்பனிடம் மிகக்கவனமாகக் கொடுத்தான் குணசிங்கா.

''ஆருக்கும் தெரியக் கூடாது. எனக்கு திரும்பி வந்து சொல்ல வேணும்...''

''சரி ஐயா... நான் அவுக்கெண வந்திடுவன்.''

காட்டுப் பன்றி போல போய்க் கொண்டிருக்கிற சம்பனைப் பார்த்துச் சிரித்தான் குணசிங்கா. அவனது மனம் இப்போது கனத்துப் போய் பரபரப்புற்றிருந்தது.

கொஞ்ச நேரம்தான் ஆகியிருக்கும். சரசரப்புக் கேட்டது. குணசிங்கா வெளியே வந்தான். சம்பன் கொடுத்து விட்ட பார்ஸலோடு நின்றிருந்தான். மனம் பகீரென, வார்த்தைகள் குளறின குணசிங்காவுக்கு.

"என்ன சம்பா?"

பார்சலை நிலத்திலே வைத்தான் சம்பன், விழியில் வெறுப்போடு.

"இதெல்லாம் வேணாமாம்..."

வியர்வையைத் துடைத்துக் கொண்டான் குணசிங்கா.

"யார் சொன்னது?"

"அக்காள்..."

திடுக்கிட்டு விட்டான் குணசிங்கா. சிறிது நேர மௌனத்தின் பின் அவனைப் பரிதாபமாகப் பார்த்தான். சம்பனின் முகம் பயந்து அதைத்து கண்ணீரால் நனைந்திருந்தது. பயந்த முகத்திலே எரிச்சலும்.

"ஆருங் காணவில்லையோ?"

"கண்டது..."

"ஆர்?"

"எல்லாரும்..."

சம்பனை ஓங்கி அறைய வேண்டும் போலிருந்தது குணசிங்காவுக்கு. எரிச்சலும் ஆத்திரமும் ஏறிட அவனைப் பார்த்தான்.

"ஆராவது என்னைத் திட்டினாங்களா?"

"திட்டினாங்கள்..."

"ஆர்?"

"எல்லாரும்..."

"எப்பிடி?..."

சம்பன் அவனை நிமிர்ந்து பார்த்தான். வெறுப்பும் கவலையும் தொனித்தன கண்களில். தன்னுள் எதையோ நினைத்துக் கொண்டு திடுமென்று சொன்னான் அவன்.

"இனி நான் உன்னட்டை ஒரு நாளும் வரமாட்டன். நீ கெட்டஆள்..."

கைக்குள் பொத்திவைத்திருந்த விசிலை அவன் காலடியிலே வீசி எறிந்தான் சம்பன்.

"உன்னை ஆடு அடிச்சுக் கொல்லுகிறது மாதிரிக் கொல்ல வேணுமடா...."

சம்பன் சொல்லி முடித்ததும் குழிமுயலாய் அங்கி ருந்து பறந்து போய் விட்டான்.

ஸ்தம்பித்துப் போய் நின்றான் குணசிங்கா.

## 16

காயான் மரத்தினைத் தாண்டிப் போய்க் கொண்டிருக்கை யிலே ஐயனுக்கு திடீரென்று வித்தியாசமான மோப்பம் மணத்தது. நின்றான். அப்படியே பதுங்கிப் போய் வைரித்த தேக்கமரத்திற்கருகேயுள்ள அடர்ந்த கும் முனைச் செடிப் பற்றைக்குப் பின்னாலே பதுங்கிக் கொண்டான்.

அவனுக்கு நேரெதிரே ஆளளவு உயரத்திலே புடைத்து நின்ற கறையான் புற்று. அதனருகே நன்றா

கப் பருத்த கரடியொன்று. தூரத்திலுள்ள மலைக் குகை யிலிருந்துதான் அது வந்திருக்க வேண்டும். அந்த மலை யருகிலேதான் சிவபெருமானும், பார்வதி தேவியும் கொஞ்சக் காலமிருந்ததாக பட்டங்கட்டி சொல்லியிருந் தார். அந்த மலைக் குகைக்குப் பக்கத்திலுள்ள நீர்ச் சுனையை பார்வதிதேவி நீராடுவதற்காக சிவபெருமானே உண்டாக்கிக் கொடுத்தாராம். நீர்ச்சுனைக்குப் பக்கத் திலே பெரிதாக வளர்ந்த எந்நேரமும் பூச்சொரிந்து கொண்டிருக்கிற நாகலிங்க மரம். அதற்குக் கீழேதான் சிவபெருமானும், பார்வதி தேவியும் சொக்கட்டான் விளையாடிக் கொண்டிருப்பார்களாம். அந்த இடத்திலே இதனால் ஒவ்வொரு பௌர்ணமியன்றும் குருவிக்கல்லு மக்கள் சடங்கு வைப்பதுண்டு.

நாகலிங்கசாமியை இப்போது ஐயன் மனத்தினிலே நினைத்துக் கொண்டு எச்சிலைப் பெருவிரலால் தொட்டு நெற்றியிலே வைத்தான்.

கரடி மிக அபாயகரமான பிராணி. மனித மணத்தை நுட்பமாக உணர்ந்து கொண்டுவிடும். மனிதனைக் கண்டால் அவனைத் தள்ளி வீழ்த்திக் கட்டிப் பிடித்துக் கொண்டு கடித்துவிடும். நகங்களால் பிறாண்டிக் கிழிக்கும். உர் உர்ரென்று உறுமியவாறு கால்களால் அறைந்தே கொன்றுவிடும். மலையனை அப்படித்தான் தொட்டாற் சிணுங்கிப் பற்றையடியினால் ஒரு நாள் கரடி யொன்று அடித்துக் கொன்று விட்டது.

கரடி இப்போது கறையான் புற்றிலேயே கவனமாயி ருந்தது. கால்களால் கறையான் புற்றினைத் தட்டிப் பார்த்தது. பின்னர் தனது பலங்கொண்ட மட்டும் காலால் அறைந்து புற்றினைத் தகர்த்தது. அதன் வாய்ப் புறம் நல்ல வெள்ளையாய்த் தெரிந்தது. கறையான் புற்றின் மேற்புறமாய் தனது அகன்று பருத்த உதடுகளைக்

கோணிப் பிதுக்கியவாறு வைத்து கரடி உறிஞ்சத் தொடங்கியது. கறகறவென்ற சத்தம் மட்டும் இப்போது கேட்டுக் கொண்டிருந்தது.

மனதுள் சிரிப்பு பொங்கியது ஐயனுக்கு. தேங்காய் அளவிலான எறும்புகளும், கறையான்களும் வயிற்றினுள்ளே போய் கரடிக்கு அவதி கொடுக்காதா என நினைத்தான். மீண்டும் சிரிப்புச் சுழித்தது. வாயைப் பொத்திக் கொண்டே குனிந்தான்.

கையளவு தூரத்திலே ஓணான் ஒன்று அவனைப் பார்த்தபடியிருந்தது. ஏனோ தெரியாது. இவனுக்கு ஓணானைக் கண்டால் பிடிக்காது. கல்லால் குத்தி தலையைச் சப்பளித்து விடுவான். இப்போது எதுவுமே செய்ய முடியாது. அவன் மீண்டும் நிமிர்ந்தான்.

புற்றிலிருந்த வாயை எடுத்துக் கொண்டு கரடி இப்போது நிமிர்ந்தது. அதன் வாய்ப் புறமும், நெஞ்சுப் பகுதியும் வெள்ளையாயிருந்தன. வாயிலே காலை வைத்து, வாயில் படிந்திருந்த புற்றுமண்ணைத் தட்டி விட்டு ஆயாசமுற்றாற் போல உட்கார்ந்து ஒருக்களித்து மரத்தோடு சாய்ந்து கொண்டது.

தான் நல்லாக மாட்டிக் கொண்டதை உணர்ந்து கொண்டே தலையில் கையை வைத்தான் ஐயன்.

கரடி பயங்கரமான பிராணி மட்டுமல்ல. வேடிக்கையான பிராணியும். புத்திசாலியான ஜீவனும். மிருகங்களிலேயே பார்த்தாலே சிரிப்பு வருவது கரடியைத்தான். அது சாதாரண வேளையிலேயே போதை மயக்கமுற்றவனைப் போலவே துவண்டு ஆடி ஆடி அங்குமிங்குமாய் அசைந்து நடந்து போகும். நல்ல கள்ளு வெறியேறினால் ஐயனும் ஒரு கொழுத்த கரடி போல என்றுதான் கிட்டி சொல்லுவாள். ஐயன் மோகவெறியோடு அவளை இறுக்கிக் கட்டிக்கொண்டு அணைகையில் வெறியேறிய

குரலிலே, "நீ சரியான ஒரு கரடி...அப்பப்பா..." என்று கிசுகிசுப்பாள் கிட்டி. அப்போது அவனுக்கு மேலும் ஆவேசம் வந்து விடும். அவளோ அதற்கே எதிர்பார்த்திருப்பவள் போல, அவனுள்ளே ஐக்கியமாகிக் கரைந்து போய்விடுவாள், முனுகல் ஒலிகளோடு.

ஐயன் ஓணானைப் பார்த்தான். அதைக் காணவில்லை. ஆனால் கும்முனை இலையொன்றில் அடர்ந்த மயிருள்ள கொழுத்த சிலந்தி கால்களைப் பரப்பிக் கொண்டிருந்தது. என்ன கஷ்டம் வந்தாலும் சிலந்தியையும், பசுவையும் கொல்லவோ கஷ்டப்படுத்தவோ கூடாது. சிலந்தி தன் பாட்டிலேயே போய் விடக் கூடிய அற்பப் பிராணி. அதைக் கண்டால் நன்மையே வரும்.

நிமிர்ந்தான்.

கரடி இப்போது கறையான் புற்றினை மீண்டும் உறிஞ்சத் தொடங்கியிருந்தது. ஐயனுக்கு அலுப்பாய் வந்தது. சின்னக் கரடியாய் இருந்தால் ஏதாவது செய்து கலைத்துவிடலாம். இதுவோ மூன்று மனிதனுக்கு சமமான கரடி.

கரடிக்கும் தனக்கும் ஒரு போதும் சண்டை எதுவும் ஏற்படாமல் போனதற்கு கரடியைப் பற்றி தான் நன்றாக அறிந்திருந்ததே காரணம் என்பதையிட்டு தனிப் பெருமையிருந்தது ஐயனுக்கு. ஐயனுக்கு கரடியைப் பற்றி சின்ன வயதிலேயே சொல்லிக் கொடுத்தவன் அக்கலி.

அக்கலிக்கு சதாநேரமும் கரடிகளைப் பற்றித்தான் பேச்சு. அதனாலே அவனுக்கு கரடியன் என்ற பெயருமுண்டு.

அக்கலியன் நன்றாகப் பழங்கள் சாப்பிடுவான். அதற்கும் கரடிகள்தான் அவனுக்கு உதவி. காட்டில் எங்கே பழம் பழுத்திருந்தாலும் கரடிக்கு அது தெரியும்.

முகர்ந்து முகர்ந்து அந்த இடத்திற்குப் போய் விடும். அடர்காட்டுக்குள்ளே போனால் அக்கலிக்கு கரடிகளின் அடிச்சுவடு தேடி அலைவதுதான் வேலை. கரடியை மணந்தே பிடித்து விடுவான் அவன்.

இரண்டு நாளாய் இரவு பகலாய் நடந்து காடு மாறிய கரடியைப் பின் தொடர்ந்திருக்கின்றான் அக்கலி. அப்போதோன் கரடியைப் பற்றி தான் மேலும் பல புதிய விஷயங்களைத் தெரிந்து கொண்டதாக ஐயனிடம் சொல்லியிருக்கின்றான்.

கரடிக்கு மரத்தில் ஏறத் தெரியும். இறங்கத் தெரியாதாம். தொப்பென்றுதான் கீழே குதிக்குமாம்.

''உனக்குத் தெரியுமாடா, குருவியன் காட்டுக்குள்ளாலை உடும்பு தேடி வாறபோது, மரத்திலை இருந்த கரடி திடுமென அவனுக்கு மேலை பாய்ஞ்சு ஆளையே முடிச்சுப் போட்டுது...''

''பாவம்...''

''கரடியைக் கிட்டக் கண்டு விட்டால் என்ன செய்ய வேணும் உனக்குத் தெரியுமோ?"

"தெரியாதண்ணே..."

அக்கலி சிரித்தான்.

''பேசாமல் குப்புற அப்படியே கிடந்திட வேணும். அது உன்னை மணந்து பாத்திட்டு நீ செத்துப் போய் விட்டாய் என்று நினைத்து விட்டு உன்னை சாக்காட்டாமல் விட்டிட்டுப் போயிடும்...''

சிறிது நேரம் யோசித்துவிட்டு தொடர்ந்து கூறினான் அக்கலி:

"ஆனால் எப்படியிருந்தாலும் கரடி தன்னை ஏமாத்திறதெண்டு நினைச்சால் பிறகு ஆரையும் விட்டு விடாது. சரியான வெறிபிடிச்ச மிருகம்..."

"அடேயப்பா..."

"தேனெடுக்கிறது எப்படி என்றதை நாங்க கரடியிட்டையிருந்துதான் தெரிஞ்சு கொள்ள வேணும்... எந்தத் தேன் கூட்டையும் கரடி முரட்டுத்தனமாக அடித்துப் பிடுங்கிக் குடித்து விடும். கொட்டிட வருகிற தேனீக்கள், கரடியின் ரோமத்துள்ளை எதுவும் போய் என்னவும் செய்ய முடியாது. தேனீக்கள் எவ்வளவு கொட்டினாலும் உசுப்பிவிட்டு தேனடைகளை உறிஞ்சிக் குடித்து விடும் கரடி. அதற்கு எதிலுமே திகட்டுமளவிற்குத்தான் குடிக்க வேண்டும். பல வேளைகளிலும் அதற்குப் போதை தலைக்கேறிவிட மரக் கொம்பரிலிருந்து தலை கீழாக குப்புறவாக விழுந்து அப்படியே கொஞ்ச நேரத்திற்குக் கிடக்குமாம் கரடி. அப்படிக் கிடந்த கரடியொன்றின் கடவாய்ப் பல் ஒன்றினை தான் பிடுங்கி வந்ததாக ஒரு பல்லினை நெடு நாட்களாக காட்டி வந்திருக்கிறான் அக்கலை. பின்னர் அதை தனது மனைவியின் கழுத்திலே நாரில் கட்டி அணிவித்து விட்டான். அதிலே அவளுக்கு தனிப்பெருமை.

...கரடி இப்போதுமெல்ல உறுமிக்கொண்டே காலால் கறையான் புற்றின் அடிப்புறத்தைத் தட்டுவதைக் கண்டான் ஐயன். இனி எல்லாம் முடிந்து விட்டது என்பது அந்த அடியின் அர்த்தம். அந்த அடிச்சத்தம் ஓய குழி முயல் ஒன்று கும்முனைச் செடியைத் தாண்டிக் கொண்டு பாய்ந்து சென்றது.

கரடி அங்குமிங்கும் கால்களை ஊன்றிக் கொண்டே குர்குர்ரென்று சத்தத்துடன் அங்கிருந்து போகத் தொடங்கிற்று.

ஐயன் கும்முனைச் செடிப் பற்றைக்குள்ளிருந்து ஒற்றையடிப் பாதையோரமாக நடக்க ஆரம்பித்தான்.

கிளாக் கொடியிலே மெதுவாக வயிற்றில் கவ்விய குட்டியோடு தாவிப் போய்க் கொண்டிருந்தது கருங் குரங்கு. அந்த அதிர்விலே கானாக் கோழிகள் வீரிட்டுக் கொண்டு சிதறிப் பறந்தன.

காட்டுப் பூக்கள் தேக்க மரத்தோடு சொரிந்து கிடந் தன. அந்த மணத்தின் கமகமப்பிலே சிறிது நேரம் லயித்துப் போய் நின்றான் ஐயன். திடீரென—எட்டி எட்டிப் பார்ப்பது போல மஞ்சள் வண்ணத்திலே செழுமையாக தலையாட்டிக் கொண்டிருக்கின்ற காட்டுச் செவ்வந்திப் பூக்கள்—ஐயனின் மனதினிலே நினை வொன்றைப் பளீச்சிட்டன.

சோளன் மணிகளையும், தேனையும் மட்டுமல்ல குருவிக்கல்லுக்கு வந்திருந்தோர் விரும்பிக் கேட்டது. சூரிய காந்திப் பூ விதைகளையும் தேவையென்று கேட்டி ருந்தனர்.

ஐயன் விறுவிறுவென்று அந்தப் பூக்களின் பக்க மாகச் சென்றான். அவனுக்கே அதிசயம் தாளமுடிய வில்லை.

எத்தனை சூரிய காந்திப் பூக்கள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு குழந்தையின் தலையளவு பரிமாணத்தில். மஞ்சள் வண்ணம் கண்ணைப் பறித்தது. அவற்றின் நடுவே விழுந்து உருண்டு புரள வேண்டும் போல ஐயனின் மனதினுள்ளே சந்தோஷம் ஊறிப் பெருகிற்று. ஒரு பெரிய பூவைப் பறித்து அதை கையினால் சுழற்றிக் கொண்டே உரத்த குரலிலே பாடத் தொடங்கினான். தலையும் பாட்டுக்கேற்ப ஆடிற்று.

அக்கலையோ அக்கலையோ பூவு பாரு பூவு பார்
அடுத்த மரப் பக்கமாடு பூவு பாரு பூ பார்
இக்கலையோ இக்கலையோ இந்தப் பூவு பார்

இசும்பி மாரு போலப் போல இந்தப் பூவு பார்
இசும்பி மாரு போலவல்லா இந்தப் பூவு பார்
இசும்பி அடி இந்தப் பூவை மாரில் போடு வா
இசும்பி அடீ இந்தப் பூவை மாரில் போட வா

இசும்பி உனக்கு நாகலிங்கப் பூவுதரலாம்
இசும்பி மாரில் நாகலிங்கம் பூவு தரவா
இசும்பி வாடி இசும்பிவாடி இந்தப் பூவு பார்
இசும்பி வந்தா இந்தப் பூவு... இந்தப் பூவு தா...

சூரிய காந்திப் பூவின் இதழ்கள் அவன் பூவைச் சுழற்றிய வேகத்திலே தனித்தனியாய் கழன்று இப்போது காம்பு மட்டுமே எஞ்சியிருந்தது. சுழற்றுவதை நிறுத்தி விட்டு, ஐயன் அந்த இடத்திலிருந்த இரு குறிஞ்சா மரங்களினை தொடுத்து கிளாக்கொடியை நீளவாக்கில் மூன்று பட்டாக அடையாளம் கட்டி விட்டு அங்கிருந்து குருவிக்கல்லுப் பக்கமாக நடக்க ஆரம்பித்தான்.

## 17

கிட்டி கவலையோடு உட்கார்ந்திருந்தாள். குணசிங்கா சிலவேளைகளில் தங்களிடமிருந்து சோளன் வாங்குவதை நிறுத்திக் கொண்டு விடுவானோ என்ற அச்சமும் மன தினுள் கனத்துக் கொண்டிருந்தது. கண்ணாத்தைக்கு சீக்கிரமே சோறு கொடுத்திட வேண்டுமென்றுதான் சதா அவள் சிந்தனை. அவளுக்காகப் பார்த்து ஒதுக்கிய காணி நிலமும், இன்னும் கன்னியாகவே இருக்கின்றது. சோளன் விதையை ஊன்றுமுன் கண்ணாத்தைக்கு சோறு கொடுத்து சடங்கை முடித்து விட வேண்டும்.

சுரைக் குடுவைகளின் திடுமுடென்ற உரசல் சத்தம் கேட்டதும் பாலைக்குற்றியிலிருந்து கிட்டி எழுந்தாள்.

எதிரே கண்ணாத்தை சுரைக்குடுவைகளுடன் வந்து கொண்டிருந்தாள். அவளின் பின்னாலே தலையில் பெரிய பூசணிக்காயோடு சம்பன். அவனுக்கு இரண்டு புறங்களிலும் வாலைக்குலைத்துக் கொண்டே முண்டனும், சுணங்கனும்.

கண்ணாத்தை அடர்ந்து கருத்த புருவப் பக்கத்துக்கு மேலாக கையை உயர்த்தி பெருவிரலால் வியர்வையைச் சுண்டியெறிந்தாள். முகத்திலே கவலை மிதந்திருந்தது. சுரைக் குடுவைகளை பாலைக் குற்றி ஓரமாக ஒதுக்கமாக வைத்து விட்டு கிட்டிக்கு அருகாக வந்தாள்.

"...புளியடிப் பக்கமா அனித்தையும், கசுவம் அக்காவும் ஓடுறாங்க...பொன்னாளக்கா சாகக் கிடக்கிறாளாம். புளியடிமுனி பிடிச்சு அவளை உலுப்பிக் கொண்டிருக்குதாம்..."

"என்ன?" அதிர்ந்து போய்க் கேட்டாள் கிட்டி. "பாவம், தாயில்லாதவள். நானொருக்கால் பார்த்துக் கொண்டு வாறன்...சடங்கு வைச்சால் பேயெல்லாம் ஓடிப் போயிடும். கண்ணாத்தா...நீ பிள்ளையைப் பார்த்துக் கொள்..."

பதிலுக்கு நில்லாமல் விறுவிறுவென்று அங்கிருந்து விரைந்து போனாள் கிட்டி.

ஐயனும் இன்னும் ஐந்துபேரும் காட்டினுள்ளே பதுங்கிப் பதுங்கி அலைந்து திரிந்தனர். அவர்களின் பின்னே மோப்பம் பிடித்தவாறே சென்று கொண்டிருக்கிற எட்டு வேட்டை நாய்கள்.

"ஐயா... நல்ல பதமான காட்டுப் பன்றி வேணுமெண்டு ஏஜண்டுத் துரை ஆளனுப்பியிருக்கிறாரடா... இந்த முறை அவர் கட்டாயமாக உனக்குத் துவக்குத்

தந்திடுவார்... நல்ல பன்றியாய் விடியற்காலமை கொண்டு வந்திடடா..."

பட்டங்கட்டி சின்னையரின் கட்டளையை அப்படியே ஏற்றுத் தலையசைத்தான் ஐயன். பட்டங் கட்டியர் நீலனைப் பார்த்து அதட்டுகிறாற் போல, "எடே நீலா, ஐயனுக்கு ரெண்டு சாராயப் போத்தல்கள் கொண்டுவந்து கொடடா" என்று சொல்லி விட்டு, "சாராயத்தைக்குடிச்சுவிட்டு வீட்டிலையே படுத்திருக்கிற தில்லை. காட்டிலைதான் குடிக்க வேணும்... அதுவும் கொஞ்சங் கொஞ்சமாய்... பிறகு காட்டிலை வெறி போட் டிட்டுப் படுத்தால் அலியன் யானைகளோ, கரடியோ மிதிச்சுக் கொன்று போடும்..." எனச் சொல்லி முடித்தார்.

ஐயனுக்கு குபுக்கென்று சிரிப்பு வந்தது. சிரிப்பை அமுக்கிக் கொண்டே, "சரி ஐயா" என்றான்.

பிறகு தன்னுள் தானே நினைத்துக் கொண்டே கூறினான்.

"ஐயா... பன்றி வேட்டை என்றால் கொஞ்சம் லாம் பெண்ணையும், சீலைத் துணிகளும் கொண்டு போறது நல்லது..."

"என்ன வேணுமோ அதெல்லாம் தந்திடுவன்... நீ காலமை பன்றியைக் கொண்டு வந்தால் சரி. அல்லாமல் இந்தப் பக்கம் நீ வரக் கூடாது..."

"சரி ஐயா..."

ஐயன் கிட்டியிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டான். புறப்படுகையில் குழிமுயலின் காலடையாளங்கள் குளக் கரைச் சேற்றடிப் பக்கமாகச் சிதறியிருந்தன. குழி முயலின் காலடையாளங்கள் கண்டு போனால் போகிற காரியம் அனேகமாக நிறைவேறிவிடுமென்பது குருவிக் கல்லின் மரபானதால் ஐயனுக்கு அளவற்ற சந்தோஷம் உண்டாயிற்று.

"நாகசாமியே... எனக்கு பன்றி கிட்ட வேணும்... அப்பத்தான் எனக்கு துவக்கு வரும் சாமி. துவக்கு வந்தால் கட்டாயமாக சாமிக்கு நான் சடங்கு வைச்சுத் தருவன். இரங்கு சாமி..."

ஆகாயத்தைப் பார்த்துக் கை கூப்பினான் ஐயன்.

...வனத்தான் ஐயனை மெதுவாகச் சுரண்டினான். கிழக்குப் பக்கமாகத் தெரிகின்ற அரிகண்ட மரத்தின ருகில் உள்ள குளத்திலே ஏழெட்டு பன்றிகள் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தன. கொழுத்த, ஒன்றுக் கொன்று இளமையான காட்டுப் பன்றிகள்.

ஐயன், அவை நிற்கின்ற இடத்தின் பின்னணியினை நோட்டம் விட்டான். கிழக்குப் பக்கம் குளம். தெற்குப் பக்கம் பரவியிருக்கின்ற புல்வெளி. மேற்குப் புறம் நாக தாளிச் செடிகளும்,வீழ்ந்து கிடக்கின்ற பாலை மரங்களும். தெற்குப் புறம் மெதுவாக உயர்ந்து இரண்டொரு பாறை கள் குகை வடிவமிட்டிருந்தன. அவற்றை மூடி பன்னா மரங்களும், கிளாக் கொடிகளும் பிணைந்தபடியே. காட்டுச் சூரியகாந்திப் பூக்கள் பாறை வாயிலில் பற்றை யாய் பூத்திருந்தன.

காட்டுப் பன்றிகளை நேருக்கு நேராக மோதிக் கொல்ல முடியாது. மூர்க்கமான மிருகம். வேட்டையாடு பவர்களைக் கண்டால் பயங்கரமாக உறுமியபடி கலைக்கத் தொடங்கிவிடும். திடீரென பின்னாலிருந்து கலைத்தால்தான், அவை கதிகலங்கிப் போய் பயந்து ஓடத் தொடங்கும்.

அணியானின் காதுக்குள் ஐயன் கிசுகிசுத்தான்.

"தண்ணியிருக்கிற பக்கமும், மேய்ச்சல் தரையாலும் பன்றிகள் ஒருநாளும் ஓடமாட்டுது... பாலை மரப் பக்கத்

தாலை அடைப்பு வைச்சது போலையிருக்குது. அதுவும் தடையாயிருக்கும். கல்லுக் குகைப் பக்கமாகத்தான் கலைக்க வேணும்... குகைக்குள்ளை நுழைஞ்சிட்டால் பிறகு பன்றி பிடிக்கிறது லேசானதடா... நீயும் குமுக் கனும் ஒருபக்கமும், வனத்தானும் சின்னவனும் குளப் பக்கமுமாய் போய் சத்தம் போடுங்க.... அரவஞ் சத்த மில்லாமல் போகவேணும்... நானும் பாலயனும் பின்னாலை போய் குகைப் பக்கமாய் கலைக்கிறம்..."

மெதுவாக அவர்கள் பதுங்கிப்போய் இடம் பெயர்ந்து சென்றதும், ஐயன் உரத்த குரலில் சத்த மிட்டுக் குளப்பக்கமாச ஓடத் தொடங்கினான்.

"டே முண்டா எட்டிப் பிடியடா..."

தன்னைப் பின் தொடர்கிற வேட்டை நாய்களோடு அதேவேகத்திலே ஓடிக் கொண்டு பன்றிகளை மேல் குகைப் பக்கமாக விரட்டினான் ஐயன்.

பன்றிகள் கதி கெட்டு ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டே உறுமலோடு ஓடிப்போய் பாறைக் குகை யினுள் புகுந்து கொண்டன. அவை நுழைந்த வேகத்தில் காட்டுச் செவ்வந்தி பூக்கள் இழுவுண்டு நசிந்து சின்னா பின்னமாயின.

ஐயனின் முகத்திலே பெருமிதம் மலர்ந்தது.

"நினைச்சபடியே நடந்திட்டுதடா... கற்பாரைச் சுற்றிய நாயளை விடடா. பன்றிக் குட்டியை விட்டிட்டு கொழுத்ததாக இரண்டை மட்டும் பிடிச்சிடுவம்..."

நாய்கள் கற்பாறையினை வளைந்து வளைந்து ஊளையிட்டபடி மோப்பம் பிடித்தன. அணியனும், குமுக் கனும் பாறைகளைச் சுற்றிப் பார்க்கப் போயினர். இந்தக் கற்பாற்குகைக்கு வேறு வாசலிருந்தால் அதை

மூடிவிடவேண்டும். அல்லது விழிப்பாக காவல் நிற்க வேண்டும்.

பாறையின் இருபுறங்களிலேயும் வழிகளிருந்தன. ஒன்று சிறியது. மற்றது சூரியகாந்திப் பூப் பற்றைகள் செறிந்த வழி. எப்போதும் அடைத்து மூடிவிட்டு, பெரிய வழியை முக்கால் வாசிக்கு தீயைக் கொளுத்தி உட்பக்க மாகப் போட்டு விடவேண்டும். இடைவிடாமல் அதனை எரித்துக் கொண்டேயிருந்தால் புகை, கற்குகைக்குள் மண்டிப் போய், மெலிதான கற்குகை நீக்கல்களால் வெளியேறிக் கொண்டிருக்கும். அந்த இடங்களைக் கண்டுபிடித்து அவற்றுக்குள்ளும் நெருப்பைக் கொளுத்தி விடவேண்டும். புகையின் நமைச்சல் பொறுக்க முடியாமல், பன்றிகள் வெளியே வருவதற்கு முயற்சி செய்து வழிதேடித் தெரியும். அந்தவழி, சின்ன வாசலாக இருக்கும். சின்ன வாசலிலே வேட்டை நாய்களோடு, ஐயன் ஆறுபேரோடு கொஞ்சம் கல்லின் துருத்தலான மேற்புறத்தில் உட்கார்ந்திருந்தான்.

"பெரிய வாசல் பக்கமாக இன்னும் கொஞ்சம் லாம்பெண்ணையை ஊத்தின சீலையையும், தேக்கஞ் சுள்ளிகளையும் அள்ளிப் போட்டு நெருப்பைக் கொளுத்திப் போடு... குப்பை கஞ்சல்களையும் வாரி அதுக்கு மேலை அள்ளிப் போடு. குமுக்கா, முதலிலே குட்டிப் பன்றிகள்தான் வரும். அதையெல்லாம் காட்டுக் கத்தியாலை வெட்டிப் போடாதை. நல்ல கொழுத்ததாய், சினைப் படாததாய் பார்த்து இரண்டுக்கு விலாவிலை குத்து. அல்லது கழுத்துப்புறமாக காயம் உண்டாக்கு..."

நாய்கள் திடீரென்று குரைத்தன.

நீண்ட கிளாத் தடியிலே கூரான இரு கத்திகள் உறுதி யோடு பிணைத்துக் கட்டப்பட்டிருந்தன. கற்பாரின் ஓரப்பக்கமாயிருந்த பாறையில் உட்கார்ந்திருந்த வனத்

தான் அந்தக் கத்தி பொருத்திய கம்பினைச் சரியாக பாறை வாயிலுக்கு நேராக வைத்திருந்தான். சரியான பன்றி, வாசலுக்கு வந்தால் அந்தக் கத்திகள் கணக்காக பன்றியின் மேற் கழுத்தில் அப்படியே ஏறி கீழ் கழுத்து வழியாக நிலத்திலே இறங்கி ஊன்றிக் கொண்டுவிடும். அது நடைபெறுகின்ற, அதே நேரத்தில் இருமருங்கிலும் நிற்கிறவர்கள் கழுத்துப் பக்கத்திலும், கால்களிலும் வளைகத்திகளால் ஓங்கி வெட்டிவிட வேண்டும். கண் விழித்து மூடிட மூன் நடைபெற வேண்டிய துரித அதிர் தாக்குதல் இது.

உள்ளே நிறைந்த புகை மண்டலம், சிறிய வாசல் வழியாக இப்போது வெளியேவழியத் தொடங்கலாயிற்று.

ஐயன் உரத்துக் குரலிட்டான்.

''பன்றி வருகுதடா...''

'சர்சர்' ரென்ற ஓசை திடீரென வாசலில்.

'உர்உர்' ரென்ற உறுமல் வாசலை அதிர்த்திற்று.

''பன்றி வந்திட்டுதடா...''

நாய்கள் உஷாராயின.

''வனத்தான் கத்தியை இறக்கடா...''

''சரி... காலை வெட்டு... கழித்திலை அப்படியே நீளப்பாடாக இறுக்கி குத்தி இழு...ஆ...கவனம். சரியான கொழுத்த பன்றி முஞ்சையாலை இடிக்கப் பார்க்குது. பயப்படாமல் முஞ்சையையும் வெட்டடா...''

கொழுத்த பன்றி சினத்தோடு எகிறி உருண்டது. குள்ளக் கால்களை அறைகிறாற் போல எற்றியது. உடலைச் சிதறி மூர்க்கத்தோடு சீறிற்று. ஐயன் கணக்காக அதன் கழுத்துப் புறத்திலே காட்டுக் கத்தியினை வீச்சாக குத்தி இறுக்கி அமுக்கிப் பிடித்துக் கொண்டான். பிடி தவறினால் நிச்சயமாக கூரான முஞ்சையால் குத்தி

ஐயனின் நெஞ்சைக் கிழித்து விட்டுத் தான் அடுத்த வேலை பார்க்கும். உண்மையில் இது இரண்டு உயிர் களுக்கான ஜீவ மரணப் போராட்டந்தான்.

கத்திப் பிடியை விடாமல், பன்றியின் எகிறலைக் கட்டுக்குள் கொண்டு வர முயன்று கொண்டிருந்த ஐய னுக்கு மூச்சிரைத்தது. பன்றியை அணைந்து தள்ளி விடுவது மிகவும் இலேசாயிருக்கும். ஆனால் இந்தப் பன்றியோ முட்களைச் சிதறி, முதுகை எவ்வி எவ்வி உயர்த்தி பின்னங் கால்களால் தாக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறது. ஆக்ரோஷமாக உறுமியவாறே அவனை நோக்கி முகத்தைத் திருப்ப முயற்சித்துக் கொண்டிருந்தது அந்தக் காட்டுப் பன்றி இப்போது.

''டே...ஆராவது கத்தியைக் கொண்டு வாருங்கடா...''

சொல்லி முடிக்க முன் பன்றி எவ்வி உதறியது. கத்தியின் கைப்பிடியில் இறுகியிருந்த ஐயனின்கை, பிடி மானத்தை இழந்து போக அவன் கற்பார் ஓரமாக முதுகு அடியுண வீழ்ந்தான். வீழ்ந்தவனால் உடனே எழுந் திருக்க முடியவில்லை. நாரியைக் கைகளால் பிடித்துக் கொண்டே கெட்ட வார்த்தையால் வைது மற்றவர்களை அவசரமாகக் கூப்பிட்டான்.

கழுத்திலே காட்டுக் கத்தி இறுக்கி ஆழப் பதிந்து போனதால் துன்பமும் ஆத்திரமும் கொண்ட பன்றி பலத்த உறுமலுடன் தலையை சரித்துக் கொண்டே விழுந்து கிடந்த ஐயனை நோக்கி வேகமாகப் போயிற்று. கொஞ்சந் தூரந்தான் இடைவெளி. ஐயன் ''நாகசாமீ'' என்று காடே அதிரும்படி உரத்து தீனமான குரலிலே கத்தினான்.

வேகத்தோடு போன பன்றி திடீரென்ற மரணாவஸ் தையோடு கத்தியவாறே பின்னங் கால்களிரண்டும் இரத்தம் சீறி நிலத்திலே தனித்தனியே விழ, புரண்டு

உடலைத் துடித்தவாறு முன்னங் கால்களை மட்டும் பிறாண்டுகிறாற் போல ஆட்டிக் கொண்டிருந்தது. வனத்தானின் காட்டுக் கத்திதான் அப்படி வீச்சோடு வெட்டியது.

''வனத்தான் நல்ல வேலை செய்தாயாடா...பொல்லாத மிருகமடா... என்ரை கையாலைதான் இது சாக வேணுமடா...''

பன்றி இரத்தச் சேற்றினுள் உலுப்பிக் கொண்டே கடைசிப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தது. அதனால் எதையுமே நகர்த்திட முடியவில்லை. உர்உர்ரென்றபடியே உருண்டுருண்டு திமிறிற்று.

ஐயன் அதன் அருகே சென்றான். பன்றி முன்னங் காலினை உலுப்பிக் கொண்டே உறுமிற்று. ஐயன் குபுக்கென்று பாய்ந்து அவனது கழுத்திலே பதித்திருந்த கத்திப் பிடியைப் பிடித்து பலங்கொண்ட மட்டும் இழுத்தான். இரத்தம் சுர்ரென்று சீறியடித்தது. பன்றி விலுக் விலுக்கென்று உடம்பை உலுப்பிக் கொண்டே அதிர்ந்து உறுமிற்று. கடைசித் தடவையாய் ஐயன் பிடியை அசைத்து விட்டு ஒரே இழுவையாக இழுத்தான். கத்தி வெளியே வந்து விட்டது.

பன்றி 'ஊர் ர்ர்' என்றவாறே மூச்சிழந்து போயிற்று.

எல்லாமாக மூன்று பன்றிகளை அவர்கள் வேட்டையாடி விட்டனர். இருவருக்கு உடலெல்லாம் நல்ல சிராய்ப்பு. முண்டனுக்கு இடது கண்ணில் பன்றி முள்ளு ஏறி, அது அனுங்கிக் கொண்டிருந்தது. ஐயனுக்கு முதுகெங்கும் இலேசான சிராய்ப்பு. நாரியும் விண்வீண்ணென வலித்துக் கொண்டிருந்தது

வெளவால் கந்தனின் மகள் பொன்னாள் மூச்சிரைத்துக் கொண்டிருந்தாள். நேற்றிலிருந்து இரத்த வாந்தியெடுக்

கிறாள். முனிச்சேட்டையாயிருக்கலாம் என்பதே எல்லோரது அபிப்பிராயமும்.

கிட்டி அவளைக் கட்டிக் கொண்டு அழுதாள். எவ்வளவு இருந்தாலும் அவள் தாயில்லாத பெண். பொன்னாள் மீதிருந்த வெறுப்பெல்லாம் இப்போது கிட்டியின் மனதிலிருந்து கரைந்து போயிருந்தது. ''நாகசாமி நாகசாமி" என்று புலம்பிக் கொண்டிருந்தவள் திடீரென்று எழுந்து வெளியே ஓடினாள்.

சிறிது நேரத்தின் பிறகு கையிலே கொஞ்சம் அலரிப் பூக்களோடு அங்கே களைக்கக் களைக்க விரைந்து வந்தாள் கிட்டி.

"மயிலக்காள் கொஞ்சம் பச்சைத் தண்ணி எடுத்துக் கொண்டு வா. நல்ல ஏனமாயிருக்க வேணும்."

பூக்களை பொன்னாளின் நெற்றியிலே வைத்து, "நாகசாமி நாகசாமி..." என்று கொஞ்ச நேரம் கண்களை மூடிக் கொண்டு முணுமுணுத்தாள் கிட்டி.

மயிலக்காள் புதிய சிரட்டை ஒன்றினைக் கொண்டு வந்து கிட்டிக்கு அருகே பயபக்தியோடு வைத்தாள்.

கிட்டி கைக்குள்ளே இதுவரை பொத்தி வைத்திருந்த மண்ணை அப்படியே அந்தச் சிரட்டை நீரினுள் கொட்டினாள். பின்னர் இரண்டு பூவிதழ்களையும் அதனுள் போட்டு "நாகசாமி நாகசாமி...வாருமையா..." என்று பயபக்தியோடு கூறினாள். பின்னர் அந்தத் தண்ணீரை பொன்னாளின் வாய்க்குள் ஊற்ற முயன்றாள்.

பொன்னாள் மூச்சுவிடவே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். நெஞ்சு ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. வாயை மெதுவாக திறக்க வைத்து, சிரட்டை நீரை ஊற்றினாள் கிட்டி. பாதி நீர் வெளியே வழிந்து ஓடிற்று.

பின்னர் சில கணங்கள் கால்களை விலுக் விலுக் கென்று உதைத்துக் கொண்டாள் அவள். மெல்ல அவளின் மூச்சு அடங்கி உறுப்புகள் செயலிழந்து போக, கிட்டி, "நாகசாமீ..." என்று பரிதாபகரமாகக் கூவி அழுதாள்.

இனியென்ன. காட்டுக்குப் போன ஆண்களெல்லாம் திரும்பி வந்ததும்; பொன்னாளைக் குளிப்பாட்டி பாயிலே வளர்த்தி அந்தக் குடிசைக்கு தீயை வைத்து விட வேண்டும். பின்னர் சின்னதாக ஒரு சடங்கு. அல்லா விட்டால் சூரிப்பேயும், கொத்திப் பேயும் பொன்னாளையும் கூட்டிக் கொண்டு குருவிக் கல்லுப் பக்கம் இரவிரவாகச் சிரித்துக் கொண்டு திரிவார்கள். பிறகு குமரான பெண்களெல்லாம் அந்தப் பக்கத்திலே திடீர் திடீரென்று செத்துப் போகத் தொடங்கி விடுவார்கள்.

பொன்னாளிடம் கொஞ்சச் சோளந் தானியம் மட்டுமே சேமிப்பாயிருந்தது. அதை வைத்து மட்டும் சடங்கு செய்து விட முடியுமா? குறைந்தது இரண்டு கோழிச் சேவலாவது வேண்டும். பிறகு வாழைப் பழம். ஒரு கலயம் கள்ளு. சாமிப் பிட்டு.

மயிலக்காள் கவலையோடு இதைப் பற்றி கிட்டியிடம் கேட்ட போது கிட்டி அமைதியாகவே கூறினாள் :

"அதெல்லாம் கஷ்டமில்லை. நானே எல்லாம் தருவன். எனக்கு அவளை ஒரு மோளா நினைச்சுக் கொள்ளுறன்...குற்றங் குறையெதுவுமில்லாமல் பொன்னாளின்ரை சடங்கு செய்ய வேணுமக்காள்..."

## 17

இம்முறை குணசிங்கா லொறியிலே குருவிக் கல்லுப் பக்கத்துக்கு வராதது பட்டங்கட்டி சின்னையாவுக்கு

மிகுந்த கவலையைக் கொடுத்தது. நல்ல சுறுசுறுப்பான அவன், என்ன விஷயம் சொன்னாலும் அதனை உடனேயே புரிந்து கொள்ளக் கூடியவனென்பதால் அவன் மீது இன்னும் பிரியமிருந்தது பட்டங்கட்டி சின்னையாவுக்கு.

கிட்டி இதனை ஐயன் சொல்லக் கேட்டதும் உடனே முகம் மாறிப்போனாள். மனதினுள்ளே கவலை தத்தளிக்க மௌனமானாள். அன்றைக்கு நடந்த சம்பவத்தை ஐயனுக்கு அவள் சொல்லவில்லை. ஆனால் ஐயனுக்கும் தெரியுமென்று குணசிங்காவிற்குச் சொல்லும்படி அவள் சம்பனிடம் கூறிவிட்டிருந்தாள்.

ஐயனுக்கு அது தெரிந்திருந்தால்?

கிட்டிக்கு மனம் பதைபதைத்தது.

உடனேயே ஐயன் காட்டுக் கத்தியைத் தூக்கிக் கொண்டு போய் ஆடுவெட்டுகிறாற்போல குணசிங்காவின் கழுத்தினைச் சீவிக் கொண்டு, தனியாக அவனின் தலையைக் கையிலே உருவி வந்திருப்பான். அந்தக் காட்சியை நினைத்ததும் கண்ணை மூடிக் கொண்டாள் கிட்டி. உடம்பின் ரோமங்களெல்லாம் சிலிர்த்தன.

குணசிங்கா வராமற்போனதும் நன்மைக்குத்தான். அவன் வந்தால் இந்தச் சம்பவமும் நினைவிலே தோன்றி மனதை ஓயாமல் கஷ்டப்படுத்திக் கொண்டிருக்கும். எப்படியும் சோளன் விதை எறிய முதலே கண்ணாத்தைக்கு 'சோறு கொடுத்து' முடித்து விட வேண்டும். இது தவறிப் போனால் சோளன் அடித்த பிறகு தான் 'சோறு கொடுப்ப'தைப் பற்றி பேச முடியும்.

கிட்டி, தேக்கங்குற்றியில் உட்கார்ந்து யோசனையில் ஆழ்ந்திருந்த போது, திடீரென்று தன்னை இரண்டு கைகள் பின்னாலிருந்து சுற்றிவளைத்ததும் திடுக்கிட்டுப்

போனாள். பின்னர் அந்தப் பழக்கப்பட்ட ஸ்பரிசத்தை உணர்ந்தவாறே, ஐயனின் கைகளை தன்னிலிருந்து பிரித்துக் கொண்டே, கோபிக்கிற பாவனைக் குரலிலே, "என்ன இது, தேன்குடிச்ச கரடியாட்டம் சந்தோஷமாய் வந்திருக்கிறாய், காரியத்தைச் சொல்லு" என்றாள்.

ஐயன் கைகளை அவளிடமிருந்து எடுக்காமல் அவள் கழுத்தினுள்ளே தன் முகத்தை அழுத்திக் கொண்டான்.

"என்னென்று சொல்லு?"

"எனக்கு நாளைக்குத் துவக்கு வருமென்று பட்டங் கட்டியர் சொல்லியிருக்கிறார்."

"அப்படியா?"

மிகுந்த பெருமையோடு கிட்டி வியந்தாள். அவன் அவளிலிருந்து விலகிப் பக்கத்திலே வந்து உட்கார்ந்து கொண்டான் இப்போது.

"என்னட சோளன் காசிலை இருந்துதான் இதை வாங்கியிருக்காம். துவக்குக் கிடைச்சால் எவ்வளவு நல்லது. சேனை காக்கலாம். மிருகஞ் சுடலாம்..."

"இந்தத் துவக்காலை பயமில்லையோ?"

ஐயன் சிரித்தான்.

"எதுக்கடி பயம்? இனி இந்த இடத்திலை என்னை ஆரும் அசைக்க முடியாது...கொத்தி, முனிப்பேய் எல்லாத்தையும் இந்தத் துவக்காலை ஓடஓடக் கலைக்கப் போகிறன் பார்..."

கிட்டியின் முகத்திலே மிக வியப்பு. எல்லையில்லாத சந்தோஷமும் மனதினுள்ளே பரவிற்று, தனது கணவனின் பிரமிக்கத்தக்க புதிய வலிமையினை எண்ணி அளவே யில்லாத பெருமையடைந்தவளாய் உணர்ச்சி வயப்பட்டு

அவனது பரந்த தோளிலே சாய்ந்து கொண்டாள். கொஞ்ச நேரம் மௌனமாயிருந்துவிட்டு கிட்டி சொன்னாள்; குரலிலே கழிவிருக்கமாய்.

"உனக்கு முதலிலை துவக்கு வந்திருந்தால் பொன்னாள் அநியாயமாகச் செத்திருக்க மாட்டாள் தானே..."

"என்னத்துக்காக அப்பிடிக் கேட்கிறாய்...?"

"இல்லை... நீ தானே சொன்னாய், துவக்கு கையிலை இருந்தால் எந்தப் பேயையும் கலைச்சுவிடலாமெண்டு. அதுதான் சொன்னனான். நீ துவக்கு, கையிலை கிடைச்சதும் இந்தப் பக்கத்திலையுள்ள பேய்களை யெல்லாம் ஓடப் பண்ணிவிடு..."

ஐயன் பெருமையோடு மனைவியைப் பார்த்தான். துப்பாக்கி ஒன்றைப் பிடித்திருப்பது போல பாவனை செய்து விட்டுச் சிரித்தான்.

"ஏஜண்டுத்துரை ஒவ்வொரு முறையும் இந்தப் பக்கம் துவக்கோடை வாறபோது அதைப் பார்த்துப் பார்த்து நான் ஏங்காத ஏக்கமில்லை. பட்டங்கட்டிய ருடையதோ பழைய துவக்கு. ஆனால் அவர் அதைத் தொட்டுப் பார்க்கக் கூட விட மாட்டார்...நாகசாமி உதவியாலை இப்ப துவக்குக் கிடைக்கப்போகுது... இதாலை என்ன சுட்டாலும், அதை முதலிலை நீதானடி சாப்பிட வேண்டும்..."

ஐயன் கிட்டியின் தோள்களில் மீண்டும் கை போட்டான்.

அவன் தன்னைப் பார்க்கின்ற பார்வையின் அர்த்தத்தை உணர்ந்து கொண்டு சுற்றுமுற்றும் நோக்கினாள் கிட்டி.

கானாங் குருவியொன்று புன்னை மரத்தின் கீழே அங்குமிங்குமாய்ப் பரவிப் பறந்து இரை தேடிக்

கொண்டிருந்தது. அ ண் ட ங் கா க ம் சோம்பலோடு கழுத்தைச் சரித்து கானாங் குருவியையே பார்த்தவாறிருந்தது. வெகு தொலைவிலிருந்து கன்றைத் தேடுகின்ற தாய்ப் பசுவின் உருக்கமான அழைப்பாக 'ம்ம்ம்ப்பா...'

அவன் கைகளின் சேஷ்டை எதில் போய் முடியுமென்பதனை கிட்டி அறிவாள். உடலில் வருடிய அவனது கைகளை மெதுவாக எடுத்தாள். மார்புச் சேலையைச் சரியாகக் கட்டிக் கொண்டே அவனை குளிர்மையாகப் பார்த்தாள். அவனோடு முரட்டுத்தனமாக நடந்து கொண்டால் மிக மூர்க்கமான கரடியாகி விடுவானென்பதை நன்றாக அறிவாள் அவள்.

"அதெல்லாம் பிறகு... இப்ப வே ணா ம்... கண்ணாத்தைக்கு சோறு குடுக்கிறதை எப்ப வைக்கிறது? போயொருக்கால் நாலைஞ்சு பேரோடை பெரியானைக் கேட்டுக் கொண்டு வந்திடு... அப்பதான் கண்ணாத்தாவினட சேனையையும் பார்க்கலாம். எங்க சேனையையும் பார்க்கலாம்..."

கிட்டி சொன்ன வார்த்தைகளை அவதானமாகக் கேட்டுக் கொண்டிருந்த ஐயன், "இப்போ வளர் பிறையோ?" என்றான்.

கிட்டி சொன்னாள், சந்தோஷம் பொங்குகிற குரலில்.

"ஆ...இன்றைக்கு ஏழாம் பிறையாயிருக்க வேணும். கன்னட்டி சொன்னவன். பட்டங்கட்டியர் அவனுக்கு சொன்னவராம்..."

"ஆ... அப்ப நாளைக்கே நான் பெரியானைக் கேட்டிடுவன். அவன் நான் கேட்டா தட்டிச் சொல்ல மாட்டான். கண்ணாத்தையினட கலியாணத்துக்கு நல்ல சடங்கு வைக்க வேணும்... காடெல்லாம் துளாவி அவளுக்கு நான் பழம், தேன், இறைச்சி எல்லாங் கொண்டு வருவன்... பார்"

அவனது சந்தோஷம் கிட்டியை மிகவும் பரவசப் படுத்திற்று. இவ்வளவு காலமாக அவள் கேட்ட எதையுமே ஐயன் நிறைவேற்றி வைக்கத் தவறியதில்லை. சந்தோஷமாக அவன் ஒப்புக் கொண்டு விடுவான். சில வேளைகளில் குடித்தானென்றால்தான் முரடாகி விடுவான். அதுவும் அவளது மோகாவேச அணைப்பினில் தணிந்து போய் விடும். அவளது மனதினிள்ளே சிரிப்புச் சுழித்தது இப்போ.

''என்னடி அப்பிடி ஒரு மாதிரிப் பார்க்கிறாய்?''

ஐயனின் குரல் தளத்தளத்தது. அவளது தோளிலே கையைப்படர விட்டான்.

''............''

''என்னடி, என்னென்று சொல்லு...''

''ஒன்றுமில்லை...''

''சொல்லு?''

''நீயொரு நல்ல மனிஷன் என்று நினைச்சன்...''

''ஓ... அது மட்டுமாடி...வேறை ஏதும் இல்லையாடீ''

''...நீ நல்ல கரடியும்...''

சொல்லிவிட்டு அவள் வெட்கப்பட்டுச் சிரிக்க, அவன் மூர்க்கம் வாய்ந்த கரடியாக மாறிப் போனான் அவ்விடத்திலேயே.

## 18

கிட்டிக்கு ஐயன் சொன்னதைக் கேட்டதும் சந்தோஷம் தாங்க முடியவில்லை. கையிலிருந்த குழந்தையை இனம் புரியாத சந்தோஷத்தோடு கட்டிக் கொண்டு கொஞ்சி னாள். ''கண்ணாள்'' என்று சத்தம் போட்டுக் கூப் பிட்டாள்.

கண்ணாத்தை மான் குட்டிபோல உள்ளேயிருந்து துள்ளிக் கொண்டு வந்தாள். அவளைப் பார்க்க கிட்டிக்கு பெருமிதமாயிருந்தது. 'கரப்புக்குள் நிற்கின்ற கன்னிக் கோழியைப் போல என்ன செழிப்பாயிருக்கிறாள் இவள். கருகருத்து அடர்ந்த இவளுக்குள்ள புருவங்கள் மாதிரி குருவிக் கல்லிலே வேறு யாருக்கு இருக்கிறது?... இவள் பெரியானுக்கேற்ற நல்ல பொம்பிளை. அவனும் ஒரு பொலிகாளை மாதிரி. நல்ல உழைப்பாளி. இரண்டு பேரும் சேர்ந்தால், எங்களைப் போல நல்லாயுமிருக் கலாம். பத்துப் பன்னிரெண்டு பிள்ளைகளும் பெற்று சந்தோஷமாயுமிருக்கலாம்.'

"என்னம்மா?"

"இந்தா பிள்ளையைப் பிடி. நித்திரையாக்கி வளர்த்து"

"சரீ..."

கண்ணாத்தை குழந்தையை வாங்கிக் கொண்டு உள்ளே போக, எதையோ நினைத்துக் கொணடு மீண்டும் அவளைக் கூப்பிட்டாள் கிட்டி.

"என்னம்மா..."

"கண்ணாள்.... உனக்குச் சோறு குடுக்கப் போறம்..."

கிட்டி மகளைப் பார்த்தாள்.

லேசான வெட்கம் முகத்தில் படர, அவள் மௌனமாய் நின்றாள்.

"என்ன பேசாமல் நிற்கிறாய்?"

"சரியம்மா..."

"பெரியான்தான் உனக்குப் புருஷன்..."

"சரியம்மா"

''சரி. நீ போய் குழந்தையை நித்திரையாக்கி வளர்த்து...''

கண்ணாத்தை குழந்தையோடு உள்ளே போனாள்.

கிட்டி, பாலைக் குற்றியில் உட்கார்ந்து யோசனை யிலே ஆழ்ந்து போனாள். சோறு கொடுத்து- சடங்கு வைப்பதென்பது சாதாரணமான விஷயமல்ல. இறைச்சி, தானியங்கள், பழவகை, கள்ளு... அதுவும் தனது மகளின் சடங்கை இரண்டு நாட்களுக்காவது கொண்டாட வேண்டுமென்று ஐயனின் மனதிலே கனத்த ஆசையிருந்தது. இனிமேல் அவன் குழி முயலாகி விடுவான். ஆளை ஓரிடத்தில் பிடிக்கவே முடியாமற் போய் விடும்.

## 19

குழந்தையோடிருந்த கண்ணாத்தை தனது மூத்த தங்கச் சியான உம்மிணியைப் புதிதாகவே பார்ப்பவள் போல நோக்கினாள். உம்மிணிதான் எவ்வளவு வளர்ந்து விட்டாள், நன்றாக முற்றிக் கொழுத்த சோளன் பொத்தி போல.

சுருட்டைத் தலைமயிரை வாரி இழுத்தள்ளி, உச்சிக் கொண்டையாகக் கட்டியிருந்தாள் உம்மிணி. நெடுங் கழுத்துக்கு அது அழகாயிருந்தது. அவளுக்கும் சிறிது பிளந்த செவ்வுதடுகள். சிரிக்கையில் பளீச்சென்று தெரிகிற பற்கள், சிறு கடுகுப் பூக்கள் போல பளபளப் பதனை கண்ணாத்தை பெருமையோடு பார்த்தாள்.

''என்ன அக்காள் வெளிப்பனாப் பார்க்கிறாய்?''

''இல்லையடி...நீ பார்த்திருக்கவே பூசணிப் பழம் போலை வளர்ந்திட்டாய் ... பெண் வளர்த்தி என்றால்

பேய் வளர்த்தி என்று சேனாதி சொல்லுறது எவ்வளவு உண்மை பார்..."

கண்ணாத்தை வியப்போடு கூறியவாறு, தனது தம்பியின் தலையை வருடி விட்டாள். குழந்தை சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தது.

"இனி நான் செய்த வேலையெல்லாம் நீதான் செய்ய வேணும். தான் உனக்கு வேலைகள் சொல்லித் தந்தது மாதிரி, நீ இளையவளுக்கு எல்லாம் சொல்லிக் கொடுக்க வேணும்..."

"சரி அக்காள்..."

"நான் உனக்கு புதிசாய் ஒரு சுரைக் குடுவை செய்து தருவன். இதுக்காக பெரிய சுரைக் காயொன்றை சேனையிலை விட்டு வைச்சிருக்கிறன். எவ்வளவு தேனும் அந்தக் குடுவைக்குள்ளை எடுக்கும்..."

"சரி அக்காள்..."

"சம்பன் இப்பவெல்லாம் நல்லா வேட்டையாடுகிறான். உதுரனும், விண்ணனும் நல்லாகத் தேனெடுப்பாங்கள். எந்தக் காட்டுக்குள்ளை போனாலும் நீ இவங்களோடைதான் போ. கறுவலும் முண்டனும் காடெல்லாம் தெரிஞ்ச நாய்கள். ஆனால் இரண்டுக்கும் வயதாகிப் போச்சு. வல்லியரிட்டை இரண்டு நாய்க் குட்டி வாங்க வேணும். வல்லியருக்கு குழிமுயல் பிடிச்சுக் குடுத்தா நாய்க் குட்டியள் தந்திடுவார்..."

"நான் நாளைக்கே குழிமுயல் பிடிச்சிடுவன் அக்காள்..."

கண்ணாத்தை அலட்சியமாகச் சிரித்தாள்.

"என்ன அக்காள்...ஏன் சிரிக்கிறாய்?

"யோசிக்காமல் பேசாதையடி. காட்டுப் பூனை மாதிரி வளர்ந்தாலும் எலிக்குஞ்சு மாதிரிப் பேசுகிறாய்..."

"ஏன் அக்காள்?"

"நிலவு காலத்திலை குழிமுயல் பிடிக்கலாமாடி?"

உம்மிணி நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

"சரிதான் அக்காள்..."

"குழிமுயலைப் பிடிக்கிறது இடக்கலானதடி. அதுக்கு காது சரியான கூர்மை. சருகு விழுகிறது கூட அதுக்குத் தெரியும். பற்றைப் பக்கமாய் அதை ஒரு நாளுங் கலைச்சுப் பிடிக்கேலாது...அதை மேட்டிலையிருந்து பள்ளத்துக்கு நாயை விட்டுக் கலைக்க வேணும்...வேகமான மிருகம்..."

கண்ணாத்தையின் கண்களிலே, இப்போது அவளையறியாத பரவசம். வேட்டையைப் பற்றி நினைக்கின்ற போது மிதமிஞ்சிய சந்தோஷம், அவளினுள்ளே பொங்கிப் பிரவகிக்கும்.

"ஆனால் எந்தப் பொழுதாயினும் சினைப்பட்ட மிருகத்தைக் கொன்றிடாதை. பிறகு உனக்கு பிள்ளை பிறக்காது. வயிறழிஞ்சு போவாய்..."

"ஒரு நாளும் நான் அப்பிடிச் செய்ய மாட்டன் அக்காள்...பிறகு நாகசாமியே கோபங்கொண்டிடுவார்..."

"அது சரிதானடி....நாங்க அம்மாவைப் போலை நிறையப் பிள்ளை பெத்தால்தான் நல்லது...சேனைக்கும், வேட்டைக்கும் உதவி..."

பிச்சன் குளத்துள் மூழ்கித் துழாவி நீந்திக் கொண்டிருந்த உதுரனும், விண்ணனும் கரையில் நின்ற பட்டிமாடு

களை இடையிடையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். இரண்டு பசுக்கள் அந்த மாடுகளிடையே சினைப்பட்டிருந்தன. அவை இந்த நிலவுகாலத்துள் எப்போதாவது ஒரு நாள் கன்று ஈன்றுவிடும். கன்று ஈனுகிறபோது எப்போதும் பசுவுக்குப் பக்கத்திலே ஒரு ஆள் நின்று அதன் இளங்கொடியை வெட்டி எடுக்க வேண்டும். அல்லாவிடில் பிரசவ எரிச்சலில் பசு அதைத் தானே தின்று விடும். அப்படித் தின்றதென்றால் உச்சிச் சூரியன் படுகிற நேரத்திலே பசுவும் செத்துப் போய்விடும். பட்டியொன்றிலே நிறைகன்றுத் தாய்ச்சி செத்துப் போவதென்றால் எவ்வளவு பெரிய இழப்பாகி விடும்...

"டே அண்ணன்...நேற்று விண்ணாக்கன் வாய்க்கால் பக்கம் போய்க் கொண்டிருந்தன்...பரவைக் கடல் பக்கமாக ஒற்றை வெளவால் பறந்து போச்சுது...எங்கையோ நல்லா பழம் பழுத்திருக்க வேணும்...அந்தப் பக்கம் நல்ல மாமரங்களிருக்கு......அந்திக்கு அந்தப் பக்கத்திலை போய்ப் பார்ப்பமா?"

குமுக்கென்று தண்ணிரினுள் அமுங்கி எழுந்து, வாய்க்குள்ளிருந்த நீரைச் சீறி உமிழ்ந்து விட்டுப் பதில் சொன்னான் உதுரன்.

"போய்ப் பார்ப்பமடா......ஆனா நீ கண்டபடி விண்ணாக்கன் வாய்க்கால் பக்கம் போகாதை. சரியான தாட்டான் முதலையொன்று அங்கை அடிக்கடி தட்டுப் படுகுதாம். உன்னைப் பிறகு இழுத்துக் கொண்டு போய் தாழிக்குள்ளை வைச்சு கொஞ்சங் கொஞ்சமா சப்பித் தின்டிரும்..."

"நான் ஒரு நாளும் அங்கை போகமாட்டனடா"

மீண்டும் குமுக்கென்று தண்ணீரினுள் அமுங்கி எழுந்த உதுரன் கரையோரப் பக்கமாகப் பார்த்தான். பட்டி மாடுகள் எவ்வித சலனமுமின்றி அசை போட்ட

வாறு கிடந்தன. பொட்டல் மரங்களெல்லாம் சோம்பலோடு கிடந்தன அமுங்கிய கிளைகளோடு.

"சரி இனிப் போதும், போவம் வா..."

கோவணத்தைக் கழற்றிப் பிழிந்து உதறியவாறே புன்னைமரத்தின் பின்னே பற்றையாய்க் கிடந்த நாயுருவிச் செடிகளிலிருந்து பச்சைக் காய்களையும், சிவப்புப் பழங்களையும் ஒன்றாய்ப் பிடுங்கி வாய்க்குள்ளே போட்டுக் கொண்டான் உதுரன்.

அப்போதுதான் தற்செயலாக அந்தக் காலடிச்சுவடுகளைக் கண்ணுற்றான் உதுரன்.

மெதுவாக அழுந்தியும், இன்னுஞ் சில வெகு அழுத்தமாயும் பதிந்துள்ள மரைகளின் கால் அடையாளங்கள்.

"மரைகள் இந்தப் பக்கம் வரத் தொடங்கியிருக்குது. தாயும், குட்டிகளும் மேய்ச்சலுக்கு வருகுதுகள் போலை. காலடையாளம் அப்படித்தான் சொல்லுது..."

முணுமுணுத்துக் கூறிய உதுரன் பின்னர் உரத்துச் சத்தமிட்டு விண்ணனை அழைத்தான்.

கோவணத்தை இறுக்கிக் கட்டியவாறே அவன் நின்ற பக்கமாக வந்த விண்ணன், உதுரனை கேள்வியான முகத்தோடு ஏறிட்டான்.

"விண்ணா, இந்தப் பக்கம் நல்லாக மரைமேயுதடா..."

விண்ணனின் முகத்தில் சந்தோஷம் பூத்தது.

"அண்ணாடே...அக்காளுக்கு மரைவத்தல் என்றால் நல்ல விருப்பமடா......ஒரு மரைப் பிள்ளையரைப் பிடிப்பமா?..."

உதுரன் தலையைச் சொறிந்தவாறு யோசித்தான்.

"நீ சொல்லுறது சரிதான். ஆனால் நானும் நீயும் சம்பன் அண்ணனும் சேர்ந்து மரைவேட்டையாடுவமடா. மரைவேட்டைக்கு நல்ல பலப்பான கயிறும் காட்டுக் கத்தியும் அல்லவோ தேவைப்படும்...அதை உடனை தேட வேணுமடா..."

## 20

பட்டங்கட்டியர் கொடுத்த துப்பாக்கியைக் கையில் வாங்கிய ஐயனின் கண்கள் கலங்கின. துப்பாக்கியைக் கண்களிலே ஒற்றிக் கொண்டான். பின்னர் தனக்குப் பக்கத்தில் நின்ற கிட்டியிடம் துப்பாக்கியைக் கொடுக்க, அவள் மிகவும் பயபக்தியோடு அவனிடமிருந்து அதை வாங்கிக் கொண்டாள். ஐயன் திடுமென பட்டங் கட்டி சின்னையாவின் கால்களிலே நெடுஞ்சாண் கிடையாக விழுந்தான்.

பட்டங்கட்டி சின்னையா கண்கள் மின்னிடப் புன்னகை செய்தார். பிறகு ஆதரவான குரலிலே கூறினார்.

"ஐயா எழுந்திரடா. இதெல்லாம் என்னடா... என்னடா இது?"

ஐயன் முழங்கையிலும், நெஞ்சிலும் ஒட்டியிருந்த மண் துகள்களைத் தட்டிவிட்டான்.

"ஐயாவாலைதானே எனக்கு இந்தத் துவக்குக் கிடைச்சிருக்குது...என்ரை பிள்ளைகுட்டி, பேரப்பிள்ளை களெல்லாம், ஐயா செய்த உதவியை மறவாமல் கொண்டாடுவார்கள் ஐயா..."

"சும்மா அடைக்கோழி கறகறக்கிற மாதிரி, என்னென்னவெல்லாமடா நீ சொல்லுகிறாய்?" என்று

பூரிப்போடு கூறினார் பட்டங்கட்டி: "ஆனால் எட ஐயன்...ஒவ்வொரு நாளும் அந்திநேரமா நீ என்னட்டை வந்திடு. நான் உனக்கு துவக்குச் சுடுகிறதை சரியாகச் சொல்லித் தாறன்...என்னடா?"

"சரி ஐயா..."

ஐயன் சொல்லி முடிய கிட்டி முன்னே வந்தாள் பட்டங்கட்டி சின்னையாவைப் பார்த்துக் கும்பிட்டாள்:

"என்னடி தளப்பமா வந்திருக்கிறாய்... என்ன வியளம்? கன்னியாய் இருக்கேக்குள்ளை கண்ட மாதிரித் தான் இப்பவும் குலுங்கிக் கொண்டிருக்கிறாய். இந்த வருஷம் புள்ளையொன்றும் இல்லையோடி...?"

கிட்டி வெட்கப்பட்டாள்.

"ஐயாவுக்கு என்னைக் கண்டால் எப்பவும் அந்நாளிலையிருந்தே இதுதான் கதை..."

"இல்லையடி கிட்டி...உன்னைக் காணுகிற போது எனக்கு அப்பிடி ஒரு கதைகதைக்கச் சொல்லுது... என்னடா ஐயா, நான் சொல்லுறது சரிதானேயடா..."

ஐயன் புன்னகை செய்தான்.

"ஐயா சொன்னால் அது சரிதான்...பிறகு மறுப்பில்லை..."

பட்டங்கட்டி சின்னையா அட்டகாசமாகச் சிரித்தார்.

"சரியடி, மாம்பழக்காறி. என்னடி கேட்க வந்தனி...',

கிட்டி கைகளைக் கட்டிக் கொண்டாள்.

"ஐயா நாளக்கு நாகசாமிக் கல்லிலை இந்தத் துவக்கை வெச்சு இத்தினி சடங்கொன்று செய்யப் போறம். நீங்களும் வரவேணும்..."

"சரியடி...நீ கேட்கிற போது மறுப்பனோடி.. ஆனா நான் கேட்கிறது தருவியோடி...?"

"சொல்லுங்க ஐயா..." என்று ஆர்வத்தோடு உடனேயே கேட்டாள் கிட்டி. "என்ன வேணுமென்றாலும் சொல்லுங்க ஐயா..."

பட்டங்கட்டி சின்னையா, அவளை ஆராய்வது போல ஊடுருவினார். "நான் உன்னட்டை என்னடி கேட்கிறது. அந்த நாளெல்லாம் போச்சுதடி...அதொரு காலம். நீ ஒரு சாராயப் போத்திலும், பன்றிக் கருக்கலும் எனக்குத் தரவேண்டும். தருவியாடி பெட்டை..."

ஆறுதலாகச் சிரித்தாள் கிட்டி.

"இவ்வளவுதானே ஐயா...கட்டாயம் தந்திடுவம்..."

"சரி பார்த்திடுறன். அல்லாட்டில் உன்னை இங்கை வேலை செய்யிறதுக்கு இழுத்துக் கொண்டு வந்திடுவனடி. ஐயன் உனக்கு அது சம்மதமோடா?"

ஐயன் பணிவோடு அவரைப் பார்த்தான்.

"நாங்கள் ஐயாவுக்கு எந்தக் காலத்திலும் அப்படிச் செய்யவே மாட்டம். சொல்லுமாறி அப்படிச் செய்தா நாகசாமியே எங்களுக்கு கஷ்டம் தருவார்..."

பட்டங்கட்டி சின்னையா நரைரோமம் அடர்ந்த நெஞ்சினைத் தடவியவாறே இடிச்சிரிப்புச் சிரித்தார்,

"அதெல்லாம் ஒரு கதைக்கடா, சொன்னனான்... கிடாய் மாடா"

கிட்டி பிறகும் "ஐயா" என்றாள்.

"சொல்லடி..."

"இன்னொரு விஷயம் சொல்ல ஐயாவுக்கு காணிக்கை கொண்டு வந்திருக்கிறம்..."

வியப்போடு கிட்டியைப் பார்த்தார் பட்டங்கட்டி சின்னையா.

"என்னடி அது சந்தோஷ காரியம்?"

ஐயன் அவசர அவசரமாக—பன்புல்லில் இழைத்த சிறு பெட்டியொன்றை எடுத்து வந்து அதைக் கிட்டியிடம் கொடுத்தான். கிட்டி அந்தப் பெட்டியை மிகுந்த மரியாதையோடு பட்டங்கட்டி சின்னையாவின் கையிலே கொடுத்தாள்.

பெட்டியினுள்; வெற்றிலை, தானியங்கள், சில பூக்கள்.

"ஆருக்கு உன்னட மோளுக்கோடி சோறு கொடுக்கிறாய்..."

"சரி ஐயா..."

"உன்னைப் பார்த்தாலே கன்னியாய் இருக்கிறாயடி. உனக்கும் மோளாக ஒரு கன்னியோ? சந்தோஷம்தான்... ஆர் ஆம்பளை? எப்ப சோறு குடுக்கிறது?"

"அவன்பெரியான் தானய்யா... பவுர்ணமியிலன்றுதான் சோறு குடுக்கிறம் ஐயாவும் வரவேணும்..."

மீண்டும் சிரித்தார் பட்டங்கட்டி சின்னையா.

"நான் இல்லாமல் உன்னட இடத்திலை நீ ஏதாவது செய்து போடுவியோடி கொழுத்த பெட்டச்சி..."—பிறகு கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு சத்தம் போட்டார் அவர்: "டே நீலா..."

நீலன் ஓடி வந்து கைகளைக் கட்டிக் கொண்டு நின்றான்.

"டே... பெட்டகத்தை திறந்து என்னர வல்லபத்தை எடுத்துக் கொண்டு வாடா... இந்தாடா திறப்பு... இடறிக் கொண்டு நில்லாமல் ஓடிவாடா... கிட்டி நல்லாளைத் தானடி மோளுக்கு எடுத்திருக்கிறாய்..."

ஐயன் கிட்டியை பெருமையோடு பார்க்க, கிட்டி அர்த்த புஷ்டியோடு சிரித்தாள்.

சேலையில் தைக்கப்பட்ட சிறிய பையினுள் கையை விட்டு பட்டங்கட்டி சின்னையா பத்துப் பத்து ரூபாவாக ஐந்து நோட்டுகளை எடுத்தார்... வெற்றிலைக் கொடியிலிருந்து ஐந்து வெற்றிலை பிடுங்கிக் கொண்டு வரும்படி நீலனுக்குச் சொன்னார். நீலன் பத்துப் பதினைந்து வெற்றிலைகளைப் பிடுங்கிக் கொண்டு வந்தான்.

"டே கொன்னை வாயா ஏனடா இவளவு...?"

நீலன் தலையைச் சொறிந்தான்.

"அதுதானடா உனக்கு பொம்பிளையே இல்லாமலிருக்கிறாய்... சுக்காவடி மனிஷா..."

கிட்டிக்கு சிரிப்பு பொங்கியது. அந்த வார்த்தைகளின் அர்த்தம் மிகமோசமானது. பொங்கிய சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

ஐந்து வெற்றிலையுள்ளும் பணத்தை வைத்து மடித்து, "இந்தாடி நாகசாமியைக் கும்பிட்டுக் கொண்டு இதை வாங்கிக் கொள்... சோறு குடுக்குறதை நல்லாகச் செய்துமுடி...நல்ல காரியம். அது நல்லாவே நடக்கும்"

கிட்டி வெற்றிலை மடிப்புகளை வாங்கி ஐயனிடம் கொடுத்தாள். ஐயன் துப்பாக்கியை இடது கைக்குள் பிடித்து, வலது கையினால் வெற்றிலை மடிப்புகளை வாங்கிக் கொண்டான். பிறகு இருவருமாய் பட்டங்கட்டி சின்னையாவைக் கும்பிட்டுவிட்டு அங்கிருந்து புறப்பட்டனர்.

மரத்தின் மேலிருந்து, உதுரன் கையிலிருந்த சுருக்குக் கயிற்றினை அரவமின்றி கீழே தண்ணீர் குடித்துக் கொண்டு நின்ற மரையின் கழுத்தினை நோக்கி வீசினான். சொல்லி வைத்தாற்போல அந்தச் சுருக்கு மரையின் நெடுங்கழுத்தில் விழுந்தது. உடனேயே திடுக்கிட்டு கழுத்தை ஆட்டிக் கொண்டு அங்கிருந்து விரண்டது மரை. அது கயிற்றிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்

வதற்காக கொம்பினால் பக்கத்திலே நின்ற புன்னை மரங்களை மோதிக் குத்தியது. 'ம்ம்ப்பா' என்ற பின்னங் கால்களை உதறிக் கொண்டு அந்தக் குளப் பகுதியே அதிரும்படி சத்தமிட்டது...

"கழுத்திலை சுருக்கு நல்லாக இறுகி விட்டுதடா..."

சம்பன் புதர் மறைவிலேயிருந்து கத்திக் கொண்டே காட்டுக் கத்தியுடன் வெளியே வந்தான். அவனுக்குப் பக்கத்திலே. இன்னொரு புறத்திலிருந்த வந்த விண்ணன் சம்பனைக் கட்டிக்கொண்டு, தவித்துக் கொண்டு இழு படுகின்ற மரையைப் பார்த்து "ஹோ ஹோ" வென்று சத்தம் போட்டான்.

மரை பின்னங் கால்களினை எற்றியவாறு அவர் களை முட்ட முயன்றது. இவர்கள் அதற்குப் போக்குக் காட்டிக் கொண்டிருந்தனர். அதே வேளையில் உதுரன் சின்னச் சலசலப்புக் கூட இல்லாமல் புன்னை மரத்திலி ருந்து கீழே இறங்கி, இவர்கள் நின்ற பக்கமாகப் பார்த்துக் கொண்டு பெருமிதத்தோடு வந்தான்.

"வாடா அண்ணா, எல்லாரையும் கூட்டிக் கொணந் திடலாம். அக்காளுக்கு நாகசாமி நல்லாக இறைச்சி தந்திருக்கிறார்..."

உதுரனைக் கையமர்த்தினான் சம்பன்.

"அப்பிடியில்லையடா அண்ணன்... இது சம்பறகுச்சி மிருகம். அவுட்டுக் கொண்டு பாஞ்சிடும். என்ன மிருகத்தைப் பிடிச்சாலும் அது பாஞ்சிடாமல் பண்ண பின்காலை வெட்ட வேணும்..."

உதுரன் தலையசைத்தான்.

"அந்த மாதிரித்தான் செய்திடு...போய் வெட்டடா... சரியா கெண்டையிலை அழுத்தி ஒரேயடியிலை வெட்டிப் போடு... தவறிப் போனியானா முஞ்சையை மிறுகம் உடைச்சு விட்டிடும்..."

பெரியானுக்கும், கண்ணாத்தைக்கும் என்று ஒதுக்கிவிட்ட கன்னி நிலத்தில் சின்னக்குடிசை போட்டுக் கொண்டு நின்றான் ஐயன். கிட்டியும் உதுரனும் சம்பனும் பற்றையாய் நின்ற நாயுருவிச் செடிகளையும், இக்கிரிகளையும் பிடுங்கிக் கொண்டிருந்தனர்.

கிட்டி, காட்டுச் செடியொன்றினை உருவி எறிந்தவாறே சொன்னாள்: ''இந்தச் சடங்காலை மூன்றுநாளாக கொஞ்சமும் படுக்கேல்ல, கை காலெல்லாம் பிச்சுப் பிச்சு நோகுது''

உதுரன் தாயை அன்போடு பார்த்தான்.

''நீ அதிலை போயிரு...நாங்க புடுங்குறம்...''

கிட்டியினுள்ளே சந்தோஷம் நெகிழ்ந்தது.

''போடா பூசணிக்காய்க்கந்தா, விடிஞ்சால் அக்காள் இந்த இடத்துக்கு வர வேணுமடா...இன்னுங் கொஞ்சத்திலை எல்லாம் முடிஞ்சிடும்...பேந்தென்ன?''

சம்பன் புன்னகை செய்தவாறு கிளாத் தடிகளைக் கொண்டு போய் குடிசைக்குப் பக்கத்தில் போட்டான். கிட்டி, கிளாநார்களை அள்ளிக் கொண்டே குடிசைக்குள்ளே போனாள்.

கானாக் கோழி போல அவளைப் பின் தொடர்ந்து சென்றான் ஐயன். பின்னாலிருந்து அவளை இறுகக் கட்டிக் கொண்டான். அவள் அதை எதிர் பார்த்திருந்தவள் போலகொஞ்சநேரம் பேசாமல் நின்றாள், பிறகு அவனது கையை மெதுவாக தன்னிலிருந்து விடுவித்துக் கொண்டு அன்போடு அவனைக் கட்டிக் கொண்டாள். அவனை நிமிர்ந்து பார்க்காமலே, அவனது தோளைச் சுரண்டியபடியே, ''கரடி... இம்முறை நாகசாமியாலை கண்ணாத்தை யோடை எனக்கும் புள்ளை கிடைக்கும்'' என்று கிசுகிசுத்தாள். மறுகணமே ஐயனுக்கு சந்தோஷம் தாள முடியவில்லை. உரத்துச் சிரித்தேன். (1979) □

# மாயை

ஏற்கனவே நான் பெங்களூருக்குப் போயிருந்தமையினால் நண்பன் மகாலிங்கத்தின் வேண்டுகோளைத் தட்டிக் கழிக்க முடியவில்லை. அவனுக்கு ஆபீஸில் லீவு எடுக்க முடியாத நெருக்கடியென்பதனால்தான் என்னை அவ்விதம் வற்புறுத்திக் கொண்டிருந்தான். அவனுடைய தங்கை அமெரிக்காவிலிருந்து, அந்த விஷயத்தினை உடனே கவனித்து தனக்கு பதில் அனுப்புமாறு எழுதிய கடிதத்தை பல தடவைகள் எனக்கு காட்டிவிட்டான் மகாலிங்கம்.

"அந்தப் பெண் எப்படி இருப்பாள்?"

எனது கேள்வியைக் கேட்டதும் குறும்பாகச் சிரித்தவாறு, "அவள் கலியாணம் ஆனவளப்பா..." என்று கூறிவிட்டு மேஜையிலிருந்த கவருள்ளிலிருந்து, புகைப்படமொன்றினை எடுத்து என்னிடம் கொடுத்தான். அழகாகவே இருந்தாள் சங்கரி. இயல்பாகவே தோன்றினாள். இதழ்க்கடையிலே புன்னகை பதுங்கியிருந்தது.

அழகான மூக்கு. கண்கள் அரைகுறையாக மூடினாற் போல.

"போட்டோவைக் கொடய்யா ... அவ பார்த்தா உன்னை அப்படியே கொதறிப் பிச்சுடுவா"

"அப்படியான பொண்ணா?"

"ஒரு கதைக்குச் சொன்னேன். நான் நேரில் பார்த்ததில்லை. ஆனா ஒரு மாதிரியான பொண்ணாயிருப்பான்னு கீதா எழுதியிருந்தாள். நமக்கென்ன அதைப் பற்றியெல்லாம். நேரே போ. விஷயத்தைச் சொல்லு. என்ன தாராளோ அதை வாங்கி வந்திடு...உன் ரோல் அவ்வளவுதான்..."

"சரிப்பா."

மகாலிங்கம், எவ்வளவோ சொல்லியும் கேட்காமல் என்னோடு ரயில்வே ஸ்டேஷன் வரை கூடவே வந்தான். ஒரு பை நிறைய பழங்கள், பிஸ்கட்டுகள், பிளாஸ்க்கில் பால், வேறு சின்னச் சின்னப் பொட்டலங்கள் சகிதம் வந்தவன்– என்னை எங்கோ தொலை தூர நாட்டிற்கு அனுப்புகிறாற் போல பேசிக் கொண்டிருந்தான். அதுவும் பல வருஷங்களுக்கு நான் அங்கு இருக்கப் போகிறாற் போலஅவனது வார்த்தைகள் என்னை உணரச்செய்தன. இவன் இப்படித்தான். கள்ளங்கபடமற்ற நட்பு. இப்படி நேசிக்கப்படுவதனை விட பெரிய விஷயமென்ன இருக்கிறது. உண்மையாக நேசிப்பதும் நேசிக்கப்படுவதும் எத்தனை சந்தோஷமான பேறு. இத்தகைய நண்பன் ஆதலால்தான், நானும் ஒரு பெண்ணைச் சந்தித்து வருவதற்காக பெங்களூர் போக சம்மதம் தெரிவித்திருந்தேன்.

சங்கரி 'மாதர் விடுதலை இயக்க'த்தில் தீவிர ஈடுபாடு கொண்டவளென்றும் சர்வதேச ரீதியான மாதர் விடுதலை

இயக்கக் கூட்டங்கள் பலவற்றிலும், இந்தியாவைப் பிரதி நிதித்துவப் படுத்திக் கலந்து கொண்ட குழுக்களோடு சென்றிருக்கிறாளெனவும், இன்றைய பிரபல அரசியல் வாதிகளுக்கெல்லாம் நன்கு பரிச்சயம் பெற்றவளென்றும் அவளைப் பற்றிய சிறிய முன்னுரையொன்றினை மகாலிங்கம் எனக்குக் கூறிய போது என் மனதிலே லேசான மிரட்சி ஒன்று ஏற்பட்டதென்பதையும் இங்கே நான் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும்.

பெங்களூரில் அஜந்தா ஹோட்டலில் 'ரூம்' எடுத்துக் கொண்டேன். போய்ச் சேருவதற்கு இரவு எட்டுமணி யாகிவிட்டது. குளித்துச் சாப்பிட்டு விட்டு படுத்தவன் ஆறரை மணிக்கு தான் எழுந்திருந்தேன். ஜன்னல் வழியாக வெளியே பார்த்தேன். உறக்கமில்லாதிருக்கிற பரபரப்பும் வேகமும் கொண்ட பெண்ணாகவே எப் போதும் நான் பெங்களூரை உணர்கின்றேன். இதோ இப் போதும் அதே பரபரப்பும், சுறுசுறுப்புமாய் சிலிர்த்து நட மாடுகிற பெண்.

அதிகாலையிலேயே திடுமென ஒருவரது வீட்டுக்குப் போவது நல்ல விஷயமில்லை. அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருப்பார்கள். அல்லது எங்களைச் சாப்பிடச் சொல்லிக் கேட்பார்கள். அந்த நேரம் போதிய உணவு இல்லாதிருக்கலாம் பிறகு எல்லோரும் அரைவயிற்றுக்குத் தான் சாப்பிடவேண்டும். அதைவிட காலையில் அவர் களது பல வேலைகள் இன்னொருவரின் திடீர் வருகை யினால் தடைப்பட்டுப் போகலாம். எல்லாவற்றிற்கும் பொதுவாக பத்துமணிக்குப் போவதே உசிதமென நினைத்தேன். சங்கரியின் டெலிபோன் நம்பரும் கையிலிருந்தது. எதற்கும் ஒன்பது மணிக்கு டெலி போனில் முன்னறிவிப்புக் கொடுக்கலாமென நினைத்துக் கொண்டேன்.

காலைக் கடன்களை மெதுவாகச் செய்து முடித்து விட்டு உண்டேன். ஒன்பது மணிக்கே போன் எடுத்தேன். நீண்ட நேரமாக மணி அடித்தது. நான் ரிஸீவரை வைத்து விடலாமா என்று யோசித்த கணத்திலே மறுபுறத்திலிருந்து, "யேஸ், சங்கரி ஸ்பீக்கிங்" என்ற குரல் என் காதுகளிலே வந்தது. என்ன குழைவான இனிமை வாய்ந்த மயக்கமூட்டுகின்ற குரல். அந்தப் புகைப்படம் நினைவிலே தோன்றிற்று. கணநேரத் தடுமாற்றத்தின் பின் என்னை அறிமுகம் செய்தேன்.

அவளது ஆங்கிலம், 'ராணியின் ஆங்கிலம்'. எனக்கு இப்போது இங்கிலீஷ் தடுமாறினாற் போல உணர்ந்தேன்.

"எங்கே தங்கிறாய்?"

சொன்னேன்.

மறுகணமே செல்லமாகக் கடிந்து கொண்டாள்.

"நீ நேரே என்னுடைய வீட்டுக்கு வந்திருக்க வேண்டும். என்னை ஏன் நீ இப்படி 'இன்சல்ட்' பண்ணினாய்?"

என்னையறியாமலே, "இல்லைங்க" என்று தமிழிலேயே சொல்லிக் கொண்டு சலனப்பட்டேன். போன் பண்ணிவிட்டு இராத்திரியே அவளது வீட்டிற்குச் சென்றிருக்கலாம்தான். என்ன செய்வதுநான் ஒரு'ரிசர்வ் டைப்'. மூன்று நிமிஷ நேரத்திற்குள்ளே அவளது வார்த்தைகள் என்னை மிக நேயத்தோடு நட்புரிமை பாராட்டி அவளிற்கு மிக அருகாகக் கொண்டு போய் விட்டாற் போலொரு பிரமை.

"என்னோடேயே காலை உணவு சாப்பிடுகிறாய்..."

அவள் உரிமையோடு கூறினாள். நான் காலை உணவை முடித்துக் கொண்டதை சொல்லி முடியு முன்,

"முட்டாள்"என்று சாவகாசமாகச் சொன்னாள். எனக்குப் பதில் சொல்லத் தோன்றவில்லை. "சரி பத்துப் பதினைந்துக்கு வந்து விடு" என்று பேச்சை முடித்தாள்.

நான் மீண்டும் தலைவாரிக் கொண்டேன். கண்ணாடியைப் பார்த்துக் கொண்டேன். அணிந்திருந்த ஷேர்ட்டைக் கழற்றி விட்டு புதிய ஷேர்ட்டை மாட்டினேன். என்னென்ன அவளோடு பேசிக் கொள்ள வேண்டுமென்பதை மனதினுள் ஒத்திகை பார்த்துக் கொண்டேன். ஏனெனில் பலவேளைகளிலும் 'இங்கிலீஷ்' எனது காலை வாரி விட்டு வேடிக்கை பார்ப்பதுண்டு. சங்கரி என்ன சரளமாகவும், பாவனையோடும் ஆங்கிலம் பேசுகிறாள்!

புறப்படுவதற்காக வெளியே வந்தவன் மீண்டும் அறைக்குள் போனேன். பூட்ஸ்களை கழற்றி நன்றாக அழுத்தித் துடைத்தேன். கைகளைச் சுத்தமாகக் கழுவி, மீண்டும் கண்ணாடிக்கு அருகாகப் போனேன். என்னையே பார்த்துப் புன்னகை செய்து விட்டு மீண்டும் தலை வாரியபின் வெளியே நடந்தேன்.

## 2

பஸ்ஸர் குக்கூ என்று வினோதமாக ஒலியிட்டது. யாரும் வரவில்லை. இரண்டு நிமிஷங்களின் பின்னர் மீண்டும் கொஞ்சம் தயக்கத்தோடு அழுத்தினேன். ஒரு நிமிஷங் கழிய கதவு திறந்தது.

எனக்கு அவளைக் கண்டதும் கூச்சமாயிருந்தது. நேராக நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. நைட்கவுனில் இருந்தாள். "சொன்ன நேரத்துக்கே வந்து விட்டாய்..." என்றவாறு கையை நீட்டினாள். எனக்குச் சங்கடமாயிருந்தது. கையை நீட்டினேன். குலுக்கிக் கொண்டாள்

"உள்ளே வா" என்றவாறு முன்னே சென்றாள். நான் பின் தொடர்ந்தேன். அவளுடைய அறைக்குள்ளே சென்றாள். கட்டிலில் உட்கார்ந்து கொண்டாள். எதிரேயுள்ள சோபாவை எனக்குக் காட்டினாள். கட்டில் தாறுமாறாகக் கலைந்திருந்தது.

"என்னை நீ தான் இன்று தூக்கத்திலிருந்து எழுப்பினாய். அதுவும் ஒரு தடவையல்ல. இரண்டு தடவைகள்" என்றாள்.

நான் ஒன்றும் பேசவில்லை. வீட்டின் உள்ளே நுழைகிற போது எனக்கே கூச்சமாயிருந்தது. நவீன பாணியிலமைந்த புத்தம் புதிய வீடு. ஆனால் இந்த அறை; அதுவும் அவளது படுக்கை அறை...

வரவேற்பறையிலேயே என்னை உட்கார வைத்து இவள் பேசியிருக்கலாம்.

அறையைப் பார்த்தேன். மெல்லிய மஞ்சட் சுவர்கள். கட்டிலில் புத்தம் புதிய விரிப்பு. ஆனால் கசங்கிப் போயிருந்தது. தலையணைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக. கட்டிலின் கீழே புத்தகங்களும் சஞ்சிகைகளும் இறைந்து கிடந்தன. சுவர் மூலையில் கசக்கியெறியப்பட்ட காகிதங்கள். கட்டிலடியில் ஆஷ்டிரேக்குள்ளும், வெளியேயும் எரிந்து எஞ்சிய சிகரெட் துண்டு துணுக்குகள். ஆரஞ்சுப் பழத்தோல்களும், பாதியே உரித்த வாழைப் பழமும் 'மனுஷி' பத்திரிகையில் போடப்பட்டிருந்தன. வாழைப் பழக் கசிவு 'மனுஷி' அட்டையில் சிந்தி ஈரமுறியிருந்ததைப் பார்க்க எனக்கு என்னவோ போலிருந்தது.

கட்டிலிலேயே போட்டிருந்த டன்ஹில் சிகரெட் பெட்டியை எடுத்த சங்கரி, "நீ சிகரெட் பிடிப்பாயா?" என்று என்னிடம் கேட்டாள். எனக்குள் அதிர்ச்சி நடுங்கிற்று. மெல்லவே அவளை நிமிர்ந்து நேராகப் பார்த்தேன்."

தோள்களைக் குலுக்கிக் கொண்டே மீண்டும் கேட்டாள். சிகரெட் பெட்டியை என்னிடம் நீட்டினாள்.

''நான் சிகரெட் பிடிப்பதில்லை...''

அவள் என்னை வியப்போடு பார்த்தாள். பிறகு அந்தப் பெட்டியிலிருந்து சிகரெட் ஒன்றினை உருவி வாயில் பொருத்தினாள். சிகரெட் லைட்டரை வெகு இலாகவமாக ஏற்றி நளினமாகவே சிகரெட்டைப் பற்ற வைத்து புகையை ஊதினாள்.

''நீ மிகவும் அதிசயமானவன்...'' என்று கூறிக் கொண்டே என்னைப் பார்த்த பார்வை, நீ ஒரு காட்டு வாசி, நாகரிகம் தெரியாத மடையன் என்று சிரிப்பது போலிருந்தது.

பிறகு என்னைப் பற்றி விசாரித்தாள். தன்னைப் பற்றிச் சொன்னாள். எம்.ஏ.சோஷியாலஜி. அதே துறையில் பி.எச்டிக்கு தயாராகிக் கொண்டிருக்கிறாள். தனது மேற்பார்வையாளன், தன்னோடு படுக்கிற எவளுக்கும் கண்ணை மூடிக் கொண்டு பி.எச் டிக்கு சம்மதம் கொடுக்கக் கூடியவன் என்று கொச்சையாக சொல்லி விட்டு சிகரெட் புகையை ஊதித் தள்ளினாள். புகை நாற்றம் எனக்கு வயிற்றைக் குமட்டிற்று. தலை வேறு லேசாகக் கனத்து வலிக்கிறாற் போலிருந்தது. அவள் அடுத்த சிகரெட்டைப் பற்ற வைத்தாள்.

''மாதர் விடுதலை இயக்கங்களோடு ஏதாவது தொடர்புகள் உண்டா?'' என்று பேச்சைத் தொடங்கினாள் சங்கரி.

நான் எனக்கு அவற்றோடு எவ்வித தொடர்புமில்லையெனக் கூறியதும் அவள் எரிச்சலோடு என்னைப் பார்த்தாள்.

“உண்மையிலே சொல்லப் போனால் நீங்களெல்லாம் மோசமான ஆண்கள். மேலாதிக்க குணம் படைத்தவர்கள். பெண்களின் தோள்கள் மேல் உட்கார்ந்திருக்கிறவர்கள்...அவர்களின் சுதந்திரங்களை எல்லாம் பறித்தெடுப்பதையே குறியாகக் கொண்டவர்கள்...”

அவள் ஆங்கிலத்திலே பொரிந்து தள்ளி ‘பாஸ்ரட்’ என்பது போன்ற கெட்ட வார்த்தைகளோடு இகழ்ந்து முடித்தாள்.

இந்தப் பேச்சு வார்த்தைகளை வெளியே யாராவது கேட்டுக் கொண்டு நின்றிருந்தால் வெகு நிச்சயமாக சங்கரி என்னைத்தான் திட்டித் தீர்க்கிறாள் என்று நினைத்திருப்பார்கள்.

சிகரெட் பெட்டியினை மீண்டும் எடுத்து ஒரு சிகரெட்டை உருவி எடுத்தவாறே வெற்றுப் பெட்டியை கசக்கி, அறை மூலைப் பக்கமாக வீசினாள் சங்கரி. சிகரெட்டை அவதானமாகப் பற்றியபோது அவள் தணிந்து போயிருப்பதை உணர்ந்தேன்.

“மன்னித்துக் கொள். நான் கொஞ்சம் உணர்ச்சிவசப் பட்டுவிட்டேன்” என்றவாறு சிகரெட் சாம்பலை தட்டினாள் சங்கரி. பின்னர் எழுந்து போய் மேஜை ஓரமாயிருந்த சிறிய சூட்கேஸ் ஒன்றினைத் தூக்கினாள்.பளீங் என்றொரு பாட்டில் சத்தம். சின்னப்பாட்டிலொன்று சூட்கேஸின் பின்னாலிருந்தது; சூட்கேஸ் தட்டுப்பட்டு விழுந்து உடைந்து சிதறியிருந்தது.

“நேற்றுத்தான் இது கைக்கு வந்தது. பாரின் விஸ்கி. பாதிகூடக் குடிக்கவில்லை. அதற்குள் அநியாயமாக உடைந்து போயிற்று...த்சொ...த்சொ...”

கவலையோடு அவள் கட்டிலில் வந்து உட்கார்ந்து கொண்டாள். அவளை நிமிர்ந்து பார்க்கவே எனக்கு

வெட்கமாயிருந்தது. அவளணிந்திருந்த 'நைட் கவுன்' அவள் நடந்து செல்கின்ற போதிலே பளீச்சென்று அவளின் அங்கங்களை தெரியப்படுத்திக் கொண்டிருந்தது.

நான் மீண்டும் அறையினை நோட்டம் விட்டேன். இடது புறத்திலிருந்த கூடையொன்றிலிருந்து மெதுவாக வெள்ளைப் பூனையொன்று எழுந்து உட்கார்ந்து மீசை மயிரைக் கால்களினால் தடவியவாறு சோம்பல் முறித்துக் கொண்டு 'மியாவ்' என்றது.

சூட்கேசைத் துளாவிக் கொண்டிருந்த சங்கரி அந்தப் பூனையைப் பார்த்து "கமான் டார்லிங்" என்றாள். டார்லிங் என்னை ஒரு அற்பனைப் போல பார்த்துக் கொண்டு கட்டில் பக்கமாக நடந்து சென்றது. அது நடந்து செல்கின்றபோதே துர்நாற்றமொன்று தொடர்ந்து போவதை உணர்ந்த எனக்கு மீண்டும் வயிற்றைக் குமட்டிற்று.

அவள் டார்லிங்கை மடியில் தூக்கிவைத்து அதன் தலையினை வருடிக் கொடுத்தாள். பிறகு திடுமென எதையோ நினைத்துக் கொண்டு பூனையை மெதுவாகக் கட்டிலில் தூக்கிவைத்துவிட்டு எழுந்தாள். நானோ தலையைக் குனிந்து கொண்டேன்.

அவள் மேஜையிலிருந்த புத்தகங்களைத் துழாவினாள். மேஜையிலிருந்த ஆஷ்டிரே ஒன்று புத்தகங்களால் தள்ளுண்டு நிலத்தில் எகிறி விழுந்தது. டொண் டொணாரென்ற சத்தத்துடன் அந்த ஆஷ் டிரே துண்டு துண்டாய் உடைந்து சிகரெட் துண்டுகளும் சாம்பலும் நிலத்தில் பரவிச் சிந்தின.

புத்தகங்கள் சிலவற்றை தூக்கி மேஜையின் கீழே போட்டுவிட்டு, அதன் கீழிருந்து சிகரெட் பெட்டியினை எடுத்தாள் சங்கரி.

மீண்டும் கட்டிலில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

சிகரெட்டைப் பற்ற வைக்கிறபோது முகத்திலே திருப்தி மலர்ந்திருந்தது. புன்னகையோடு என்னைப் பார்த்தாள் சங்கரி.

"நீ மிகவும் வெட்கப்படுகிறாய்... என்ன... நான் சொல்வது சரிதானே..."

எனக்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. புன்னகை செய்தவாறே, "நான் மத்தியானமே திரும்பலா மென்றிருக்கின்றேன். நீங்கள் கீதாவுக்கான புத்தகங் களையும், குறிப்புகளையும், சீக்கிரமாக தந்தால் நல்ல தல்லவா?" என்றேன்.

சங்கரி தோள்களைக் குலுக்கிக் கொண்டு சிகரெட்டை இறுதியாக உறிஞ்சி விட்டு எஞ்சிய துண் டினைக் கட்டிலின் கீழே போட்டாள்.

"என்ன பேச்சுப் பேசுகிறாய் நீ? பெங்களுருக்கு வந்து விட்டு உடனேயே திரும்பிப்போய்விடலாம் என்றா நீ நினைக்கிறாய்? எனக்கு எவ்வளவு அவமானம் இது... நீ என்ன செய்கிறாய், இன்றைக்கு மத்தியானம் என்னோடேயே சாப்பிடப்போகின்றாய், ... உன்னிடம் தந்து விட வேண்டிய சில தஸ்தாவேஜுகளை நான் மிஸ். டில்குஷியிடம்தான் வாங்கித் தரவேண்டும். ஆகவே நீயும் நானும் சாப்பிட்டுவிட்டு டில்குஷியிடம் செல்லப் போகின்றோம். டில்குஷி, ஸ்ரீராமபுரத்திலே இருக்கிறாள். அவளுக்கும் போன் செய்கிறேன்..."

சங்கரி போன் செய்ய எழுந்தாள். பின்னர் என்னைப் பார்த்து விஷமந்தொனிக்கச் சொன்னாள்.

"என்ன... நான் எழுந்ததும் நீ தலையைக் குனிந்து கொள்கிறாய்... என்னிடம் நீ பிடுங்கிச் செல்வதற் கேற்ற ஏதாவது சமாச்சாரம் இருக்கிறதென்றா நீ

நினைக்கிறாய்...? என்னைப் பொறுத்தவரை அப்படி ஒன்றுமில்லை. இப்படியெல்லாம் நீ செய்து கொள்ளாதே. இதுதான் என் போன்றவர்களை மிகவும் சங்கடப் படுத்துகின்ற விஷயம்... அநாகரிகமாய் நடக்காதே."

எனக்குத் திக்கென்றது. அசடு வழிய அவளைப் பார்த்தேன். அவள் சொல்லிவிட்டு டெலிபோன் இருக்குமிடத்திற்கு நடந்து சென்றாள். எனக்கு மீண்டும் கூச்சம் வந்தது. அவளின் உடல்வாகு, நைட் கவுனுள் அடங்காமல் தெரிந்தது. நான் குனிந்து கொண்டேன்.

திரும்பி வந்தவாறே சங்கரி வெகு சாவதானமாகக் கூறினாள். "நான் இன்னமும் பல் துலக்கவில்லை. ஐந்து நிமிஷத்தில் பல் துலக்கி குளித்துவிட்டு வந்து விடு கிறேன். இன்றைக்கென்று பார், எங்கள் வீட்டு வேலைக் காரியும் வரவில்லை. பரவாயில்லை நானே உனக்கு காப்பி கலக்கித் தந்து விடுகிறேன்... இப்போதே கலக்கி தரவா... பாவம் நீயும் வந்து ஒன்றரை மணி நேரத்துக்கு மேலாகி விட்டது... உனக்கு பால் காபி வேண்டுமா? சர்க்கரை அதிகமாகவா, குறைவாகவா?"

எனக்கு அவள் சொன்ன வார்த்தைகளின் பிற்பகுதி காதிலேயே விழவில்லை. இன்னமும், தான் பல் துலக்க வில்லை என்று சொன்னதுதான் நினைவுதனிலே ஆணி யடித்து நின்றது. இவ்வளவு நேரமும் பல்லே துலக் காமல்தானா இவள் என்னோடு பேசிக் கொண்டிருந் தாள். இவ்வளவு சிகரெட்டுகளையும் பிடித்துப் புகை விட்டாள்? எனக்கு வயிற்றைக் குமட்டியது. ஒரு ஓங்காளம் வயிற்றினுள்ளே திரண்டு தொண்டையினுள் ளிருந்து அவசரமாய்க் கிளம்பிற்று.

நான் சடாரென்று எழுந்தேன். நெஞ்சைத் தடவி அமுக்கியவாறே "பாத்ரூம் எங்கே?" என்று தடுமாறிய

வாறே கேட்டேன். அவள் வியப்போடு என்னைப் பார்த்துவிட்டு டாய்லட்டைக் காட்டினாள்.

கதவைச் சாத்திக் கொண்டேன். லேசாக மூச்சுவிட்ட வாறே வாஷ் பேஸினுள் கவிழ்ந்தேன். ஆக்க்...

பின்னர் குழாயைத் திறந்து நீரையடித்து வாஷ் பேஷினை சுத்தமாக்கி விட்டேன்.

இப்போது லேசானவிடுபாடு. நிமிர்ந்தேன். அழகான மாபிள் பதித்த டாய்லட். சுடுதண்ணீர், தண்ணீர் பைப்புகள், குளியல் தொட்டி, கழிவிருக்கை. வாஷ் பேஷினை இப்போதுதான் கவனித்தேன். நிறைய ரோமங்கள் சவர்க்கார நுரையோடு. சிகரெட் துண்டுகள். இடது மூலையில் அவளின் அழுக்கான உள்ளாடைகள். அருவருப்பாக நெடிமணத்தது.

வாயை நன்றாக அலம்பிக் கழுவிக் கொண்டு கழிப் பிருக்கைக்கு சென்றேன். குப்பென்ற கெட்ட நாற்ற மடித்து மூளையில் அறைந்தது. சுவாசத்தினுள் எரிச்சலும் அருவருப்பும். மீண்டும் ஓங்காளித்து விடுவேன் போலிருந்ததால் வெளியே வந்தேன்.

கட்டிலில் உட்கார்ந்து ஏதோ யோசனையோடு சிகரெட்டைப் பற்றிக் கொண்டிருந்தாள் சங்கரி. பூனை இடது தொடையில் உல்லாசமாகத் தூங்கிக் கொண் டிருந்தது.

அப்போது குழந்தையொன்று அழுகின்ற சத்தம் கேட்டது. சங்கரி சிகரெட் துண்டைக் கட்டிலடியில் போட்டு காலால் நசித்துவிட்டு, முணுமுணுத்தவாறே சென்றாள். "ரஞ்சனி வராதது எவ்வளவு கஷ்டமாகிப் போய்விட்டது. புருஷனுக்கு லீவென்று வந்துவிட்டால் இரவு பகலாக அவனோடேயே படுத்துக்கிடந்து விடுவாள். மோசமான பெண்...இதை என்ன செய்ய?"

நான் அவள் எழுந்து சென்றதும் அறையைச் சுற்று முற்றுமாய் பார்த்தேன். என்ன அழகாக வடிவமைத்துக் கட்டப்பட்ட அறை. ஆனால் இப்போது ஒழுங்கற்ற அசுத்தமான அறை. இந்தப்புத்தகங்களை உரிய இடத்திலே அடுக்கிவைத்து, பெருக்கித்தள்ளிப் பளீச் சென்று மாற்ற பத்து நிமிஷங்களேபோதும். அறை வாசலில் துடைப்பம் சார்த்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதை எடுத்து அறையைப் பெருக்கினால் என்ன என்று யோசித்தேன். பிறகு எனக்குள் நானே சிரித்துக் கொண்டேன் எனது யோசனைக்காக.

உள்ளேயிருந்து குழந்தையொன்றை அலாக்காகத் தூக்கிக் கொண்டு வந்து கட்டிலில் படுக்க வைத்தாள் சங்கரி. குழந்தையின் முகத்தைப் பார்த்தேன். ஜலதோஷம். மூக்குச்சளி கன்னமெல்லாம். சிவந்த முகத்தில் கொசுக்கடியின் புள்ளிகள். செழுமையான ரோஜாப் பூவை சேற்றினுள் தோய்த்தெடுத்தாற் போன்ற குழந்தையை கழுவி விட்டு கொஞ்சிடத் தோன்றிற்று.

"பொறு. பால் கொண்டு வருவேன்..."

அவள் எழுந்தாள். குழந்தை புரண்டு படுத்தது. அதன் காலடியிலிருந்த பூனையும் அசையாமல் உறங்கிக் கிடந்தது. எனக்கு மனதினுள் முட்கள் புரண்டன.

நான் யோசித்துக் கொண்டிருக்கையில், அந்த அறையைத் தாண்டி வாட்டசாட்டமான இளைஞன் ஒருவன் உள்ளே சென்றான். பின்னர் சூட்கேஸ் ஒன்றினோடு திரும்பி அந்த அறையினுள் வந்து இரண்டொரு புத்தகங்களை எடுத்து சூட்கேஸினுள் வைத்தான். கட்டிலிலே துயின்று கொண்டிருக்கின்ற குழந்தையைப் பார்த்ததும் முகம் மலர்ந்தது அவனுக்கு. கட்டிலில்சென்று உட்கார்ந்தவாறே அந்தக் குழந்தையின் தலையை வருடினான். பின்னர் கன்னத்திலே குனிந்து முத்தமிட்டு விட்டு எழுந்தான்.

சங்கரி அப்போது அறைக்குள் வந்தாள். அவனுக்கு என்னைப் பற்றிக் கூறிவிட்டு, அவனை எனக்கு அறிமுகம் செய்தாள்.

''ஹீ இஸ் மை ஹஸ்பெண்ட்...''

நான் என் பிடரியில் ஏதோ தாக்கினாற்போல அதிர்ந்தேன். என்னையறியாமல் மறுகணமே சுதாரித்துக் கொண்டேன். புன்னகை செய்தேன்.

''நியூடெல்லியில் டெப்யூட்டி டைரக்டர். ஆசாமிக்கு லீவு முடிந்து விட்டது. இன்று டெல்லி பயணம். சரி... சரி...நீ உடனேயே புறப்படலாம்...... ஏற்கனவே தாமதம்... காப்பி சாப்பிடவில்லை நீ?''

குரலிலே மிகுந்த நேயம் தொனித்திட அவன் என்னிடம் சொல்லிக்கொண்டு புறப்பட்டான்.

சங்கரி கட்டிலிலேயே உட்கார்ந்திருந்து பூனையின் தலையைத் தடவிக் கொண்டிருந்தாள்.

அப்போது போன் வந்தது. சங்கரி எடுத்தாள். முகத்தில் சின்னதாகக் கோபம் படர்ந்தது.

''டில்குஷி சாயந்தரம் பம்பாய் போக வேண்டுமாம். உடனே வரச் சொல்கிறாள். இரண்டு நிமிஷமே பொறு. நைட்கவுனைக் கழற்றி எறிந்து விட்டு ஜீன்சுக்குள் புகுந்து கொள்வதுதான்...''

சொன்னபடியே இரண்டு நிமிஷத்துள் வந்து விட்டாள். தலையை லேசாக வாரி, ஜீன்சோடு.

சிகரெட் பெட்டியை எடுத்து, எஞ்சிய சிகரெட் ஒன்றை வாயில் பொருத்தி லாவகமாக பற்ற வைத்தபடி என் அருகே வந்தாள் சங்கரி.

எனக்கு திடீரென வயிற்றைக் குமட்டியது. கொஞ்சம் பின் வாங்கினேன். ஆனால் குமட்டலைத் தவிர்க்க முடியவில்லை. ☐

(*1985*)

